Issued: 15-3-2007

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
14 மே ...
சென்னை-600 008
எழும்பூர்

761
03.07.07
6
3/7/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 18, 2006—தொகுதி 11—எண் 2

Friday the 18th August, 2006 —Volume 11—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Assembly Secretariat, Chennai - 600 009

V 11, 2006
Pt - II 2
227427

[Price Rs. 3.00

**18–8–2006**

## உள்ளடக்கம்


பக்கங்கள்

1. **வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 325-35

2. **உரிமை மீறல் பிரச்சினை—**

எதிர்க்கட்சித் தலைவர் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள அறிக்கை 359-371
371-39

3. **அறிவிப்பு—**

நல்லிணக்க நாள் உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல் 371

4. **அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 393

5. **மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
(ஆ) கோரிக்கை எண் 47 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை- இந்து சமய அறநிலையத் துறை ... 394-507

| | |
|---|---|
| * மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன் | 394,425,454,461 478-491,492, 494-496 |
| மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் | 410,425, 468-478 493-494 |
| திரு. இ.ஏ.பி. சிவாஜி | 425-432 |
| * திரு. அருள் அன்பரசு | 399,416-417 432-441,498,504 |
| திரு. கே.வீ. ராமநாதன் | 395,412,442-448 496,50[illegible] |
| செல்வி கே. பாலபாரதி | 409,423,448-454 501,506 |
| * திருமதி பி. பத்மாவதி | 403,455-462,499 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 399,411, 463-468,498,502 |

6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** ... 507-508


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 2, விய - திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 18, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் [த]லைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

நன்றாகச் சிந்தித்த பிறகே செயலில் இறங்க வேண்டும்; இறங்கிய [பி]றகு சிந்திக்கலாம் என்பது தவறு.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள். வினா வரிசை [எ]ண் 41, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், [மா]ண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் [அ]வர்கள்.

1—

#### மின் மாற்றிகள்

***1641 — டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் [கீ]ழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

[2006 ஆகஸ்ட் 18

பள்ளிப்பட்டு, பொதட்டூர்ப்பேட்டை, ஆர்.கே. பேட்டை பகுதிகளில் ஏற்படும் மின் தடையை நீக்கவும், மின் மாற்றிகளைப் பழுதுபார்க்கவும் அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் வரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு, பொதட்டூர்ப்பேட்டை பகுதியினைச் சார்ந்த கே.எம். கண்டிகை, குமாரமங்கலம், கே.எம்.ஆர். குப்பம், மேலப்புடிபேட்டை, கண்டிகை, ஈதலங்குப்பம் ஆகிய இடங்களில் உள்ள மின்மாற்றிகள் பழுதடைந்ததால், மின்தடை ஏற்பட்டது. எனவே, வேறு மின்மாற்றிகள் மாற்றப்பட்டு, மின்சாரம் வழங்கப்பட்டது. மேலும் 20-4-2006, 10-5-2006 ஆகிய தினங்களில் மழையினால் ஏற்பட்ட மின்தடைகள் உடனுக்குடன் பழுது நீக்கப்பட்டு, மின்னோட்டம் சரி செய்யப்பட்டது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971-ல் தமிழரசுக் கட்சியின் சார்பிலே என்னுடைய சிறிய தகப்பனார் திரு. இ.எஸ். தியாகராஜன், சட்டப் பேரவையிலே இருந்தபோது நிறைவுபெற்ற அத்தமனூர்பேட்டை துணை மின் நிலையம் 33/11 என்ற திறன் உடையதாக இருந்தது. பிறகு 1996-லே நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, அன்பிற்கினிய அமைச்சர், பாசத்திற்குரிய அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் வந்துதான் அதை மாற்றி, உயர்திறன் உள்ளதாக ஆக்கினார்கள். 110 என்ற அளவிலே அந்தத் துணை மின் நிலையத்தை மாற்றி அமைத்தார்கள். அதோடுமட்டுமல்லாமல், என்னுடைய பகுதியிலே, இருளாக இருக்கக்கூடிய பகுதியிலே, மிகுந்த கவனம் கொண்டு, எனக்காக, என்னுடைய தொகுதிக்காக விடியங்காடு, கொளத்தூர், விளக்கணாம்படிபுதூர், மேலப்புடி என்ற 4 இடங்களிலே புதிய துணை மின் நிலையங்களை அவர்கள் அளித்தார்கள். அதை நான் நன்றியோடு இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், கடைவாலாக இருக்கின்ற என்னுடைய பள்ளிப்பட்டுத் தொகுதி, மிகவும் கடைசியில் இருப்பதால், tail end என்று சொல்லப்படுகிற அங்கே, power supply மிகவும் மோசமாக இருந்தது. அந்த நிலையையெல்லாம் மாற்றி, அவர்கள் உதவி செய்தார்கள் என்பதை நான் இங்கே நன்றியோடு குறிப்பிட வேண்டும். அதேநேரத்திலே, தற்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மின்மாற்றிகள் எல்லாம் மாற்றப்பட்டு, இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அவை போதுமானவையாக இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்று சொன் [illegible] ளர்களும், விவசாயிகளும் தொழிலைப்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227427
சென்னை-600 008
[illegible]



2006 ஆகஸ்ட் 18]

பெருக்குவதன் காரணமாக, அங்கே மேலும் மின்சாரம் தேவைப்படுகிறது. ஆகவே, புதிதாக புச்சிரெட்டிப்பள்ளி என்ற கிராமத்திலும், பாலாபுதூர் என்ற கிராமத்திலும் புதிய துணை மின் நிலையங்களை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அதேபோல, 1962-ல் போடப்பட்ட மின் கம்பிகள் இன்னும் மாற்றப்படாமல் இருக்கின்றன. அவற்றை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள், அவருடைய தொகுதியிலே ஏற்கெனவே அமைக்கப்பட்ட துணை மின் நிலையங்களைப்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர் இப்போது இங்கே குறிப்பிட்டதைப்போல, துணை மின் நிலையங்களை, நாம் தேவையான அளவிற்கு அமைத்தபிறகும், பொதட்டூர்ப்பேட்டையிலே, குறிப்பாக அவருடைய பகுதியில் பல இடங்களிலே நெசவாளர்கள் அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற காரணத்தினால், அதை இந்த அரசு பரிசீலனை செய்து, துணை மின் நிலையங்களில் உள்ள உயர் அழுத்த மின்மாற்றிகளின் திறனை உயர்த்துவது என்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விளக்கணாம்படிபுதூர் என்ற இடத்திலே இருக்கக்கூடிய 5 M.V.A. transformer-விருந்து, 8 M.V.A. ஆகவும், கே.ஜே.பேட்டையிலே, கூடுதலாக ஒரு 16 M.V.A. transformer-ஐ அமைக்கவும், மேலப்புடியில் கூடுதலாக 8 M.V.A. transformer-ஐப் புதியதாக அமைக்கவும், அரசு முடிவு செய்திருக்கிறது. இந்தப் பணிகள் இன்னும் 3 மாத காலத்திற்குள்ளாக முடிவடையும்.

முற்பகல் 9-35

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்கள் பகுதியின்பால் மிகுந்த அக்கறை உள்ளதற்கு, மிகுந்த நன்றியை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேநேரத்திலே, overhead lines என்று சொல்லப்படுகின்ற, வீடுகளுக்கு மேலாகச் செல்கின்ற கம்பிகளை மாற்றியமைக்கும்போது, அதற்கான செலவை, அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் ஏற்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் மின்சாரத் துறையின்மூலமாக இருக்கிறது; அதை மாற்ற வேண்டும். பல கிராமங்களில் இந்த நிலைமை இருக்கிறது. நாங்கள் வாக்குச் சேகரிக்கச் சென்ற பல இடங்களிலே, இதைக் கண்கூடாகப் பார்த்தோம். ஆகவே,

overhead lines என்று சொல்லப்படுகின்ற, அந்தக் கம்பிகளை அரசாங்கத்தின் செலவிலே, மின்சாரத் துறையின் சார்பிலே செய்வதற்கு ஏதாவது வழிவகை இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விருமபுகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, overhead lines-ஐ, யாராவது மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டால், ஒவ்வொருவரும் கேட்கின்ற நோக்கிலே அதை மாற்றிக் கொடுப்பதற்கு மின்வாரியத்திற்கு ஏராளமான செலவு ஏற்படுகிறது. எனவேதான், overhead lines ஐ மாற்றித்தா வேண்டுமென்று யார் கேட்கிறார்களோ, அவர்கள் அதற்கான, தொழிலாளர்களுக்கான கட்டணத்தை மட்டும்தான் செலுத்த வேண்டும் என்று மின்சார வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, அதற்கான கட்டணத்தைமட்டும் செலுத்தினால் போதும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையிலே பல்வேறு புதிய யுக்திகளையெல்லாம் கையாண்டு வரக்கூடிய இந்த வேளையிலேகூட, தமிழ்நாட்டின் பல பகுதிகளில், குறைவான மின் அழுத்தத்தால், வீடுகளிலே மின்சார விளக்குகள் சரியாக எரிவதில்லை. அதிலும் குறிப்பாக, என்னுடைய மேட்டூர் தொகுதியிலே, மின் உற்பத்திக் கேந்திரமாக இருக்கிற அந்தப் பகுதியிலேகூட, கோனூர் ஊராட்சியிலே புதுவேலங்குளம், வீரனூர், இன்னும் நங்கவல்லி ஒன்றியத்தினுடைய பல ஊர்களிலே, கொளத்தூர் ஒன்றியத்தின் சில ஊர்களிலே — கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு சென்றபோதுகூட சொன்னார்கள் — அங்கே வீடுகளில் எரியக்கூடிய விளக்குகள் மின்மினிப் பூச்சிகளைப் போல எரிகின்றன. குழந்தைகள் படிக்க இயலவில்லை. ஆகவே, இப்படித் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற, குறைந்த மின்னழுத்தம் இருக்கக்கூடிய அந்தப் பகுதிகளில் மின்மாற்றிகளை உருவாக்கவும், கம்பிகளை மாற்றவும் உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் கேட்டதைப்போல, மின் அழுத்தம் குறைவாக இருப்பதற்குக் காரணம், அங்கே இருக்கக்கூடிய மின்மாற்றிகள் மட்டுமல்ல; பல இடங்களிலே





புதிய மின் நிலையங்களையே உருவாக்க வேண்டும். 1996-லிருந்து 2001 ஆம் ஆண்டு வரையில், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், 350 துணை மின் நிலையங்களைத் தமிழ்நாட்டிலே அமைத்தோம். அதனாலே line loss மற்றும் இப்படிப்பட்ட பிரச்சினைகள், தமிழ்நாட்டிலே எழாமல் இருந்தன. மீண்டும் தமிழகத்திலே மின் உற்பத்தியினுடைய தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் பல பகுதிகளிலே, ஏன், குறிப்பாகத் தமிழ்நாட்டிலே இருந்துகொண்டிருக்கின்றன. இதையெல்லாம் எண்ணிப்பார்த்துதான், முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு இந்த ஐந்தாண்டுக் காலத்திலே புதிய துணை மின் நிலையங்கள் 300 கட்டுவது என்றும், அவற்றிலே முதற்கட்டமாக, இந்த ஆண்டு, 60 துணை மின் நிலையங்களைக் கட்டுவது என்றும் முடிவு செய்து, அதற்கான இடங்கள் எவையெவை எனத் தேர்ந்தெடுக்கப்படும்போது, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியும் தேர்ந்தெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையிலே ஒரு மின்மாற்றி உண்டு. ஆனால், அதற்கு ஒரு stand-by வேண்டுமென்பது நீண்டகாலக் கோரிக்கை. இப்பொழுதும் எழுதிக் கொடுத்திருக்கிறோம். அதுகுறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை உடனடியாக நிறைவேற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் இழப்பு, line loss எவ்வளவு ஏற்படுகிறது; அதைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை அறிய விரும்புவதுடன், மற்ற மாநிலங்களில் அந்த இழப்பு எவ்வளவு ஏற்படுகிறது என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, line loss — மின் இழப்பு—என்பது, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் குறைவாக இருக்கிறது. டெல்லி போன்ற இடங்களிலே, 40 சதவீதம் line loss இருக்கிறது;ஆந்திராவிலே 28 சதவீதம் இருக்கிறது; கர்நாடகாவிலே 25 சதவீதம் இருக்கிறது; இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நோக்கில், தமிழ்நாட்டில் 18 சதவீதம்தான் line loss ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, நம்முடைய தமிழகத்தில், அதை 15 சதவீதமாகக் குறைக்கவேண்டும் என்று மின் வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அப்படி line loss ஐ 3 சதவீதம் குறைத்தால், மின் வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 450 கோடி ரூபாய் மிச்சமாகும். அதற்காக, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 1,60,000 transformer-களில், 1,00,000 transformer-களிலே meter பொருத்தி, எங்கெங்கே உண்மையிலேயே line loss ஏற்படுகிறது; எங்கெங்கே மின்சாரத்தைத் திருடுகிறார்கள் என்பதைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளில் மின் வாரியம் ஈடுபட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-40

**42—**

## மானூர் குடிநீர்த் திட்டம்

***663— திரு. ஆர். ஞானதாஸ்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்டம், சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகரங்களுக்கான மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகரங்களுக்கு, தாமிரபாணி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட, மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டமானது, சிவகாசி மற்றும் திருத்தங்கல் நகராட்சிகளில் வாழ்கின்ற மக்களுக்கும், 63 கிராமங்களில் வசிக்கின்ற மக்களுக்கும் பயனுடைய திட்டம். சிவகாசி தொகுதி வறட்சிக்கு இலக்காகும் பகுதி. அடிக்கடி குடிநீர்த் தட்டுப்பாடு அங்கு ஏற்படுகின்றது. ஜூலை மாதமே நிறைவேற்றி முடிக்கப்படும் என்று கூறப்பட்ட திட்டம் இது. எனவே, அரசு இந்தத் திட்டத்தை விரைவில் முடிக்க முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி நகரத்தைப் பொறுத்தவரையிலே, இப்போது நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு 62 லிட்டர் ஆகும். தற்போதைய குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தக்கூடிய வகையில், 8 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் தாமிரபரணி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு, மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து சிவகாசி நகராட்சிக்குக் குடிநீர் வழங்கக்கூடிய திட்டம், தற்போது செயலாக்கத்தில் இருந்துகொண்டு இருக்கிறது. நான் மாவட்டத்தினுடைய ஆய்வுப் பணியை மேற்கொள்ள வந்தபோதுகூட, நேரடியாக அந்தப் பணியைப் பார்வையிட்டு இருக்கிறேன். தற்போது 92 சதவிகிதப் பணிகள் முடிவடைந்து இருக்கின்றன. எனவே, அனைத்துப் பணிகளையும் 31-8-2006-க்குள் முடிக்கக்கூடும் என்பதை நான் தெரிவித்து, அப்படி முடிக்கிற நேரத்தில், நிச்சயமாக 90 லிட்டர் தண்ணீர், நபர் ஒருவருக்கு, நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் குடிநீர்ப் பிரச்சினையைச் சரிசெய்ய, கலந்தாய்வுக் கூட்டத்திற்கு வந்த, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்கள், உலக்கையருவித் திட்டத்திற்கு ரூ.25 இலட்சம் ஒதுக்குவதாக அங்கே அறிவித்தார்கள். அந்தத் தொகை ஒதுக்கப்பட்டுவிட்டதா? இந்தத் திட்டம் உடனடியாக நடைமுறைக்கு வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர், கலைஞர் அவர்கள், கடந்த முறை முதலமைச்சராக இருந்தபோது, தலைமைச் செயலக வளாகத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்காக, துரைப்பாக்கம் என்கிற பகுதியில், குடியிருப்பு மனைகள் ஒதுக்கப்பட்டு, சற்றேறக்குறைய 680 குடியிருப்புகள் அங்கே உருவாகியிருக்கக்கூடிய நிலையில், அந்தப் பகுதி மக்களுக்குக் குடிநீர் இல்லாமல், எந்த வாய்ப்பும் இல்லாத நிலையில், தனியார் லாரிகள் மூலமாகத் தண்ணீர் வாங்கிப் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் ஊதியத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் தண்ணீருக்காகச் செலவிட வேண்டிய நிலையில், நம்முடைய தலைமைச் செயலக ஊழியர்களின் ஒரு பகுதியினர் இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிக்குக் குடிநீர் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி விருதுநகர் மாவட்டம், சிவகாசி மற்றும் திருத்தங்கலைப் பற்றியது. எனவே, உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், அதுகுறித்து விளக்கமாகப் பதில் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**43—**

## கொள்ளிடம் குடிநீர்த் திட்டம்

***1450—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



அரியலூர் தொகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும்

(அ) கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) கொள்ளிடத்தை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் உட்பட, இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

முற்பகல் 9-45

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், 44 கோடி ரூபாயிலே, புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை இப்போது அறிவித்திருக்கிறார்கள். அதிலே, அந்தக் கொள்ளிடக் கரையோரம் இருக்கிற ஊராட்சிகளை ஒதுக்கிவிட்டு, அதற்கு அப்பாலே 60 கிலோமீட்டர், 70 கிலோமீட்டர் உள்ள கிராமங்களுக்கு வழங்குவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கொள்ளிடக் கரையோரம் இருக்கின்ற திருமானூர், வடுகபாளையம், கீழக்கொளத்தூர், விழுப்பனங்குறிச்சி, சுள்ளங்குடி, ஏலாக்குறிச்சி, கோவிலூர், சின்னப்பட்டாக்காடு, அழகியமணவாளபுரம், காமரசவல்லி, கோமான், துருவாடி, தூத்தூர் ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கிய கிராமங்களைமட்டும் ஒதுக்கிவிட்டு, அதேபோல, பார்ப்பனஞ்சேரி, மறவனூர், மல்லூர் போன்ற ஊராட்சிகளையும் ஒதுக்கிவிட்டு, மற்ற ஊராட்சிகளையும் உள்ளடக்கிய கிராமங்களுக்குக் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இதிலே தேவையில்லாத பிரச்சினைகள் எங்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வரும். தண்ணீர் கொடுத்தால், M.L.A. கொடுத்தார் என்று சொல்லமாட்டார்கள். தண்ணீர் கொடுக்கவில்லையென்றால், "இந்தச் சட்டமன்ற உறுப்பினர்தான் நம்முடைய தொகுதியை, ஊரை ஒதுக்கிவிட்டார்; ஏனென்றால், நமக்கு ஓட்டு குறைவாகப் போய்விட்டது" என்று சில பேர் சொல்வார்கள். சில விஷமிகள். இன்னும், சில விஷமிகள் என்ன சொல்வார்கள் என்றால், "அவர்கள் ஜாதிக்காரர்கள் இந்த ஊரில்

இல்லை. ஆகையினால், இந்தத் திட்டம் நம்முடைய ஊருக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள்" என்று சொல்வார்கள். இப்படித் தேவையில்லாத பிரச்சினைகள் எங்களுக்கு வரும். ஆகவே, ஒதுக்கப்பட்ட ஊராட்சிகளையும் உள்ளடக்கிய கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் சட்டமன்றத் தொகுதியில், அரியலூர் மற்றும் திருமானூர் ஒன்றியங்கள் இருக்கின்றன. அரியலூர் ஒன்றியத்தில் மொத்தம் 185 குடியிருப்புகள் இருக்கின்றன. இவற்றில் 17 குடியிருப்புகள், நரியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதம் இருக்கக்கூடிய 168 குடியிருப்புகள், செந்துறை, வேப்பூர் மற்றும் திருமானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, ரூ.44.12 கோடி மதிப்பீட்டில், கொள்ளிடத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன், பணிகள் தொடங்கப்படவிருக்கின்றன. எனவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், குடிநீர் இல்லாத கிராமங்களுக்கு, நிச்சயமாகக் குடிநீர் வழங்கக்கூடிய அந்த நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்குரிய அந்தப் பணிகளையெல்லாம் இன்றைக்குப் போர்க்கால நடவடிக்கையாக எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. அமரமூர்த்தி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமானூர் ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளையும் உள்ளடக்கிய கிராமங்களுக்கு, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 1996-லே முதல்வராக இருந்தபோது, அந்த நரியனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தந்தார்கள். அந்தக் குடிநீர்த்





திட்டத்திலே, ஒப்பந்தக்காரர்கள் சரிவர வேலை செய்யாததால், இன்னும் பல கிராமங்களுக்குத் தண்ணீர் போகவில்லை. ஆகவே, நேரடியாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. து. அமரமூர்த்தி:** குடிநீர் வடிகால் வாரியமே, அந்தக் குடிநீர் வழங்குகின்ற பொறுப்பை எடுத்து, நேரடியாக எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தந்த விடையின் அடிப்படையிலே, அதற்கான ஆணை, குடிநீர் வழங்கல் துறையின்மூலமாக, 5-6-2006 அன்று வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து நிச்சயமாக, உங்களுடைய எண்ணப்படி, வேகமான பணியிலே அரசு தன்னை ஒப்படைத்துக்கொண்டு, இந்தப் பணியை முடித்துத்தர நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு, பாலாறு அருகே திருப்பாற்கடல் எனும் இடத்திலே, குடிநீர் அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, pipe line மூலம் திருத்தணி நகருக்குக் குடிநீர் கொண்டுவந்து, நிரந்தரமாகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குண்டான ஆய்வு செய்யப்பட்ட நிலையில், பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படாத நிலையிலே உள்ளன. பணிகளைத் துரிதப்படுத்தி, திருத்தணி நகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைக்கு இந்த அரசு முற்றுப்புள்ளி வைக்குமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியைப் பொறுத்தவரையில், அரியலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிய கேள்வி. இருந்தாலும், மக்களுடைய அன்றாடப் பிரச்சினையாகக் குடிநீர்ப் பிரச்சினை இருக்கிற காரணத்தால், உறுப்பினர் அவர்கள் ஆர்வத்தோடு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக, உறுதியாக, ஏற்கெனவே

என்னுடைய மானியக் கோரிக்கையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு, குடிநீர்த் திட்டப் பணிகளுக்கெல்லாம், பல்வேறு வகைகளில், பல பணிகளுக்கு ஒதுக்கீடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன; அந்தவகையிலே, நிச்சயமாக உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அந்தக் கருத்தினை ஏற்றுக்கொண்டு, உறுதியோடு அந்தப் பணியையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**44—**

## பேருந்து வசதி

***443 திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா

தேனி தொகுதி, சின்னமனூரிலிருந்து சீலையம்பட்டி, வேப்பம்பட்டி வழியாக அண்ணா நகர் வரை பள்ளி, கல்லூரி நேரங்களில் நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னமனூர், சீலையம்பட்டி, வேப்பம்பட்டி ஆகிய கிராமப் பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவியர்க்குப் பயணம் செய்ய போதுமான பேருந்து இணைப்பு வசதிகள் உள்ளன.

சின்னமனூரிலிருந்து சீலையம்பட்டி, வேப்பம்பட்டி வழியாக அண்ணா நகருக்குத் தற்போது நேரடியாகப பேருந்து வசதி கிடையாது. ஆனால், பகுதி பகுதியாக, அண்ணா நகர் பகுதிக்குச் செல்வதற்குப் பேருந்து வசதிகள் உள்ளன. சின்னமனூரிலிருந்து காமாட்சிபுரம் வழியாக அண்ணா நகருக்கு 32 தனி நடைகள் உள்ளன. சீலையம்பட்டியிலிருந்து அண்ணா நகர் செல்ல 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சின்னமனூர் சென்று அங்கிருந்து மேலே





குறிப்பிடப்பட்டுள்ள 32 தனி நடைகளைப் பயன்படுத்தி அண்ணா நகர் செல்லலாம். சீலையம்பட்டி, மதுரை கம்பம் பிரதான சாலையில் உள்ளதால், ஐந்து நிமிடத்திற்கு ஒரு பேருந்து சின்னமனூர் செல்லும் வசதி உள்ளது. வேப்பம்பட்டியிலிருந்து காமாட்சிபுரம் வழியாக சின்னமனூருக்கு இயக்கப்படும் 12 தனி நடைகள்மூலமாக, காமாட்சிபுரம் சென்று, மேலே குறிப்பிட்ட பேருந்தின் 32 தனி நடைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இருப்பினும் புதிதாகப் பேருந்துகள் இயக்கப்படும்போது, உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது சின்னமனூரிலிருந்து காமாட்சிபுரம் வழியாக அண்ணா நகர் வரை, பேருந்துகள் 32 வழித்தடங்கள் இயக்கப்படுகின்றன என்று கூறியிருக்கின்றார். அது ஒரு வழித்தடம்; நான் கேள்வி கேட்டிருக்கின்ற வழித்தடம், சீலையம்பட்டி, வேப்பம்பட்டி வழியாக அண்ணா நகர் செல்வதற்குப் புதிய வழித்தடமாகக் கேட்டு இருக்கின்றேன். இந்தப் பகுதியில் mini பேருந்துகள் இயங்கி வருகின்றன. பல்வேறு காலங்களில் mini பேருந்துகள் பழுதடைந்த காரணத்தினால், சரிவர செல்லாமல் இருக்கின்றன. அந்தப் பகுதிப் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, பள்ளி மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அமைச்சர் அவர்கள், அந்தப் பேருந்தினை இயக்குவதற்கு முன்வர வேண்டுமென்று பேரவைத் தலைவரின்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பேருந்துகள் வாங்கிய பிறகு, நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுமையும் பள்ளி, கல்லூரி நேரங்களில், பள்ளி, கல்லூரி மாணவிகள் சென்று வரக்கூடிய இந்தச் சூழலில், மகளிர் பேருந்துகளைக் கூடுதலாக விடவேண்டும். குறிப்பாக, வேலூர் மாவட்டத்தில் ஒரே ஒரு மகளிர் பேருந்துதான் விடப்பட்டது. அதுவும் தற்காலிகமாக

நிறுத்தப்பட்டிருக்கிறது. கல்லூரி நேரங்களில் காலையும் மாலையும் இரண்டு நேரங்களிலும் மகளிர் பேருந்துகளை விடுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டா என்பதனைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றது. ஒரே நேரத்தில் கல்லூரிகளும், பள்ளிகளும் இயக்கப்படுவதால், ஒரே நேரத்திலே அனைத்துப் பள்ளி மாணவர்களும் செல்லக்கூடிய நேரத்தில் சிரமமான சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. அதனால்தான் நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட, பள்ளி, கல்லூரிகளின் நேரத்தை மாற்றியமைத்தால், இன்னும் அது சௌகரியமாக இருக்கும் என்பதைக்கூட அறிவித்திருக்கிறார்கள். எனினும், ஆங்காங்கே விடப்பட்ட மகளிர் பேருந்துகள், பல இடங்களில் நிறுத்தப்பட்டிருப்பதை நாங்களும் அறிவோம்; விரைவில் அவற்றையெல்லாம் மீண்டும் இயக்க, நாங்கள் ஆவன செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று கேட்காமலே விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கியவர் நம்முடைய தலைவர் கலைஞர் என்று சொன்னால், அது மிகையாகாது. தேர்தல் அறிக்கையிலே சொன்னபடி, நெசவாளர்களுக்கும் இன்றைக்கு இலவச மின்சாரத்தை வழங்கியிருக்கிறார்கள். அதேவேளையில், தமிழ்நாட்டில் இருக்கின்ற தனியார் பள்ளிகள் வேண்டுமானால், இலாப நோக்கில் செயல்படுகிற வேளையில், அவர்களாலே மின் கட்டணம் செலுத்த முடிகிறது; ஆனால், அரசுப் பள்ளிகள் இலாப நோக்கு இல்லாமல் செயல்படுகின்ற சூழ்நிலையில், அவர்களாலே அந்தக் கட்டணத்தைச் செலுத்த இயலாமல், அந்தப் பள்ளிகள் இரவு நேரங்களிலே பாதுகாப்பற்ற சூழ்நிலையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாமல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். மூலக் கேள்வி, போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்டது. போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்ட கேள்வி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.



**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட வந்தவாசியிலிருந்து செப்டாங்குளம் வரை இயக்கப்பட்டு வந்த பேருந்து, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடர்ந்து ஐந்தாண்டுக் காலமும் ஓடிக் கொண்டிருந்த நகரப் பேருந்து, கடந்த ஐந்தாண்டுக் காலங்களில் நிறுத்தப்பட்டிருக்கிறது. வேறு திசையில் மாற்றப்பட்டிருக்கிறது. அது மீண்டும் இயக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியில் எந்தெந்தப் பகுதிக்குப் பேருந்து விடவேண்டுமென்று கோரிக்கையை, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவே என்னிடம் தந்திருக்கிறார்கள். அது அதிகாரிகளிடம் தரப்பட்டிருக்கிறது. ஆய்வுக்குப் பிறகு, அவையெல்லாம் ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9.55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதிக்கு உட்பட்ட, கேரள எல்லையில் உள்ள, வாளையாறு பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த 96 என்ற எண்ணுள்ள பேருந்து, மூன்று மாத காலமாக நிறுத்தப்பட்டுவிட்டது. அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அதைப்போலவே, மதுக்கரை ஒன்றியம், போடிப்பாளையத்தில் 31, 47-ஏ என்ற இரண்டு எண்களுடைய பேருந்துகள், காலையும் மாலையும், அருகிலுள்ள ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள சீரப்பாளையத்திற்கு வந்தால், அங்குள்ள மாணவ மாணவிகளுக்கு வசதியாக இருக்கும். இப்பேருந்துகள் இயக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனியாக இதைப்பற்றி எழுதித் தருவார்களேயானால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**45—**

## சிற்றுந்து

***2000—திரு. கே.வீ. ராமநாதன்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பவானி தொகுதி, பூனாச்சியிலிருந்து, சொட்டைப்பாறை வழியாக குருவாரெட்டியூர் செல்ல சிற்றுந்து வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பவானி தொகுதியிலுள்ள பூனாச்சியிலிருந்து, சொட்டைப்பாறை வழியாக குருவாரெட்டியூர் கிராமத்திற்குச் சிற்றுந்து ஓட்ட அனுமதிச் சீட்டுக் கோரி, தனியார் அனுமதி கோரும்பட்சத்தில் உரிமம் வழங்கப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, பவானியிலிருந்து குறிச்சி வழியாக குருவாரெட்டியூர் வரை சென்று கொண்டிருந்த அந்தப் பேருந்து, கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டது. இதை இயக்க வேண்டுமென்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உடனடியாக ஒரு வார காலத்திற்குள்ளாக இயக்கி, அது இப்போது ஓடிக் கொண்டிருக்கின்றது. அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, பவானியிலிருந்து மேட்டூர், தருமபுரி, கிருஷ்ணகிரி வழியாகச் சென்னைக்குச் செல்வதற்கு, இதுவரை விரைவுப் பேருந்து இயக்கப்படவில்லை. அந்த வழியாக புதிய வழித்தடத்தில், விரைவுப்





பேருந்தினை அமைச்சர் அவர்கள் இயக்குவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே நேரடியாக என்னிடம் சொல்லி, அவர் சொன்ன வழித்தடத்திலே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இதையும் அவர் எழுத்துமூலமாகத் தருவாரேயானால், பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் பகுதியிலேயிருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பெங்களூருக்குச் சென்று வசிக்கின்றனர். போளூரிலேயிருந்து, பெங்களூருக்கு, அரசுப் போக்குவரத்துக் கழகம் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருந்தது. அது, இரண்டு ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், அங்கே, அந்த depot-டிலே, சரியான பராமரிப்பிலே பேருந்துகள் இல்லாத காரணத்தினால், நிறுத்திவைக்கப்பட்டன. எனவே, இப்போது இருக்கின்ற இந்த அரசு, 2,000 பேருந்துகளுக்கு மேலாக, இப்போது புதிய பேருந்துகளை விடுகின்ற காரணத்தினால், போளூரிலேயிருந்து பெங்களூருக்குப் புதிய பேருந்துகள் விடப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே ஒரு கேள்விக்குப் பதில் சொல்கின்றபோது, விரைவுப் போக்குவரத்துக் கழகங்கள்மூலம், விரைவாகப் புதிய பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறேன். இப்போது 200 புதிய பேருந்துகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதோடு, வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற பேருந்துகள், அவற்றையெல்லாம் தனியார் பேருந்துகளைப் போலவே, நல்ல சிறந்த பேருந்துகளாக ஓட்டுவதற்காக, அருகில் இருக்கின்ற ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம் போன்ற மாநிலங்களில் இயக்கப்படுவதைப்போல, தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து, புதிய பேருந்துகளாக ஓட்டுகின்ற திட்டம் இருக்கிறது. சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்த பிறகு, அரசாணை வெளியிட்ட பிறகு, பொது

tender விட்டு, விரைவிலே அவை இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் town bus களில் மட்டும் பள்ளி மாணவர்களுக்கு இலவச bus pass வழங்கப்பட்டு வருகிறது. Town bus இல்லாத பகுதிகளில், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களில் mofussil bus-கள் ஓடுகின்றன. அந்த mofussil bus களிலும், அனைத்துப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலவசமாக bus pass வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். அதேநேரத்தில், P.T.C. மட்டும் 50 கிலோ மீட்டர் தூரம் extend பண்ணியிருப்பதைப்போல, மற்ற மாவட்டங்களிலும் Town bus-களுக்கு 50 கிலோ மீட்டர் தூரம் உயர்த்த வேண்டும். அந்த நீட்டிப்பைத்தர அரசு முன்வருமா என்று இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகள் இல்லாத பகுதிகளில், அந்தப் பகுதிகளில் இருக்கின்ற பள்ளி மாணவர்கள் செல்கின்ற வகையிலே, மற்ற பேருந்துகளிலும் அனுமதிக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அதை உங்களுக்கு பதிலாக நான் தர விரும்புகிறேன். சென்னையைப் பொறுத்த அளவில், சென்னை அருகிலே புதிய நகரங்கள் ஆங்காங்கு உருவாகி இருக்கின்றன. அந்த நகரங்கள் உருவாகியிருக்கின்ற இடங்களுக்கு, இந்தப் பேருந்து வசதி வேண்டுமென்று நீண்டகாலமாக மக்களிடமிருந்து கோரிக்கை வந்து, அதனால்தான் 40 கிலோமீட்டர் தூரம் போகலாம் என்று இருந்த நகரப் பேருந்துகளை 50 கிலோமீட்டர் வரை செல்லலாம் என்று இன்றைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற நகரங்களிலே 30 கிலோமீட்டர் வரை சென்றுகொண்டிருந்த நகரப் பேருந்துகள், இப்பொழுது 35 கிலோமீட்டர் வரை செல்லலாம் என்று 5 கிலோமீட்டர் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூரிலேயிருந்து திருப்பதிக்கு தினந்தோறும் 30, 40 பயணிகள் செல்கின்றார்கள். அதேபோல, ஆத்தூரிலேயிருந்து பழனிக்கும் தினமும் 20, 30 பயணிகள் செல்கின்றார்கள். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது விடவிருக்கின்ற சொகுசு bus-களை இந்த இரண்டு தேவஸ்தானங்களுக்கும் விடுவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற பேருந்துகளுக்கு inter-state permit என்று அவர்களோடு நாம் ஒப்பந்தம் செய்யக்கூடிய காலம் வந்திருக்கிறது. விரைவிலே அவர்களோடு பேசி முடிவு செய்து, திருப்பதி, பெங்களூர் போன்ற நகரங்களுக்குச் செல்கின்ற பேருந்துகளெல்லாம் விட, இந்த அரசு முயற்சி எடுக்கும். அதேபோல, நான் ஏற்கெனவே பலமுறை செல்லியிருக்கிறேன்; புதிய பேருந்துகள் வருகின்றபோது, நிறுத்தப்பட்ட விரைவுப் பேருந்துகள், விரைவுப் பேருந்துக் கழகத்தின்மூலமாக மீண்டும் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், எந்தப் பகுதியிலிருந்து, எந்தப் பகுதிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், அதிலே வசூல் சரியாக இருக்கவேண்டும்; ஏற்கெனவே பாதிக்கப்பட்டு போக்குவரத்துக் கழகங்கள் கொஞ்சம் நஷ்டத்தில் இருக்கின்றன. எனவே, விடப்படுகின்ற பேருந்துகள் வசூல் சரியாக இருக்குமானால், அந்தப் பகுதியை ஆய்வு செய்து, உடனடியாக இயக்குவதற்கு அரசு முயற்சி எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**46—**

### நீதிமன்ற வளாகம்

***612 திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 18

*(அ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சிவகங்கையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் எதுவும் அரசிடம் இல்லை. (ஆ)எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையிலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்காக இடம் ஏற்கெனவே அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தால் அந்த நீதிமன்ற வளாகத்தைக் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு கேட்டு, தமிழக முதன்மைச் செயலாளருக்கு ROC 1239/5, D/D2 என்ற எண்ணிட்டு, 30-6 2005 ஆம் தேதியன்று கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில், அந்தக் கடிதத்திற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத சூழ்நிலையில், சிவகங்கை மாவட்டத்திலே இருக்கிற வழக்கறிஞர்களும், பொதுமக்களும், அந்த மாவட்டக் குற்றவியல் நீதிமன்றமும், சார்பு நீதிமன்றமும் பல்வேறு இடங்களில் பிரிந்து பிரிந்து, ஒரு furlong தூரத்தில் இருப்பதால், மிகுந்த சிரமங்களுக்கு ஆட்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, தேவையறிந்து, மக்களுக்குத் தேவையான காலத்தில் உதவிகளையும், திட்டங்களையும் அறிவிக்கிற நமது முதல்வர் அவர்கள், சிவகங்கை மக்களுடைய நீண்டகால கோரிக்கையான, ஒருங்கிணைந்த நீதிமன்ற திட்டத்தை நிறைவேற்றித் தந்து, அந்த மக்களுடைய ஆவலைப் பூர்த்தி செய்வார்களா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சிவகங்கையிலே ஒரு நீதிமன்றம் கட்டுவதற்காக 10 கோடி ரூபாய் அளவிலே திட்ட மதிப்பீடு எல்லாம் தயார் செய்யப்பட்டு, மைய அரசிடமிருந்து நிதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



2006 ஆகஸ்ட் 18]

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, மைய அரசிடம் தொடர்பு கொண்டு, நீதிமன்ற ஒருங்கிணைந்த வளாகங்கள் கட்டுவதற்காக இந்த அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது. விரைவில் நிதி வரும். நிச்சயமாக ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு போரவைத் தலைவர் அவர்களே. ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து நிதி எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கின்றார்கள். கடந்த 2004 ஆம் ஆண்டே, 61 ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்காக, நம்முடைய தமிழக அரசினுடைய அம்மா அவர்களுடைய அரசிடமிருந்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இதுவரை மத்திய அரசிடமிருந்து நிதி வரவில்லை. என்னுடைய மேலூர் தொகுதியிலே இருக்கின்ற நீதிமன்றக் கட்டடங்கள் எல்லாம் 10 அடி அகலமும் 15 அடி நீளமும் கொண்டதாக இருக்கின்றன. ஒரு குற்ற வழக்கு வருகின்றபோது 60, 70 சாட்சிகள் அதிலே விசாரிக்க வேண்டிய சூழ்நிலையில் அங்கே அழைக்கின்றபோது, உள்ளே ஒரு 20 பேர்தான் நிற்கக்கூடிய அளவிலே அந்தக் கட்டடம் இருந்துவருகின்றது...

முற்பகல் 10 05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள், சாமி.

**திரு. ஆர். சாமி:** ஆகையால் கூடிய விரைவிலே இந்த ஆண்டே, அந்த ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மேலூரிலே கட்ட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்கு மத்திய அரசு, இந்திய அளவிலே இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும், ஒரு தொலைநோக்குத் திட்டத்தைத் தயார்செய்து, Centrally Sponsored Scheme என்று அவர்கள் பாதி நிதியைக் கொடுத்து, பாதி நிதியை மாநில அரசும் கொடுத்து, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 10 ஆண்டுகள் அளவிற்கு கட்டப்பட வேண்டிய நீதிமன்றங்களை, 10 ஆண்டுகளுக்குள் கட்ட வேண்டுமென்று, ஒரு கால நிர்ணயம் செய்து, அதற்காக ஒரு தொலைநோக்குத் திட்டத்தைத் தயார்செய்து, ஒவ்வொரு மாநில அரசும் அனுப்ப வேண்டுமென்ற

மத்திய அரசினுடைய கோரிக்கைக்கு ஏற்ப, இந்த அரசு, மாநில அரசு, ஏறத்தாழ 200 கோடி ரூபாய்க்கும் அதிகமான அளவில், 61 ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கும், குடியிருப்புகள் கட்டுவதற்குமான திட்ட மதிப்பீட்டை அனுப்பியிருக்கிறது. அது நிலுவையில் இருக்கின்ற நேரத்திலே, ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த ஒரு மாத காலத்திற்குள்ளாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மத்திய அரசிடமிருந்து அந்த நிதியைப் பெறுவதற்குரிய நடவடிக்கையை விரைவாக எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு, அதற்கு நினைவூட்டல் கடிதமும் நாங்கள் அனுப்பியிருக்கின்றோம். விரைவில் பெறுவோம்; கண்டிப்பாகக் கட்டித்தருவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை நகராம் என்பது, மாவட்டத்தினுடைய தலைநகராம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த மாவட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இப்போது அங்கு நீதித் துறைக்கு உதவியாக, மக்களுக்கும் வழக்குரைஞர்களுக்கும் உதவியாக, உடனடியாக அந்த வளாகத்தைக் கட்டித்தர வேண்டும். நீண்ட நாளாக அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையாக இது இருக்கிறது. இந்த அரசு, இதனை உடனடியாகச் செய்துதருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையில் சிவகங்கை மாவட்டத் தலைநகராமாக இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசு நிதி வரப்பெற்றவுடனே, அதற்கு நிச்சயம் முன்னுரிமை அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பெ. துரைசாமி.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சிவகங்கையைக் குறித்தது என்றாலும்கூட, சங்ககிரியில் அமையவுள்ள நீதிமன்ற வளாகத்தைக் குறித்துக் கேட்கிறேன். சங்ககிரியில்



நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற குற்றவியல் நீதிமன்றம் ஓர் இடத்திலும், உரிமையியல் நீதிமன்றம் ஓர் சார்பு நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஓர் இடத்திலும் இன்றைக்கு வாடகைக் கட்டடத்திலே இயங்கிக் கொண்டு வருகின்றன. வழக்கை நடத்த வருபவர்களுக்கு மிகுந்த சிரமமாகவும் இருக்கிறது. இந்த இரண்டு நீதிமன்றங்களுக்குமிடையில் இரண்டு கிலோ மீட்டர் அவர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. இது நீண்ட காலக் கோரிக்கையாக இருப்பதாலும், 15 ஆண்டுக் காலம், சார்பு நீதிமன்றமும், உரிமையியல் நீதிமன்றமும் தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதாலும், நமது அரசு முன்னுரிமை வழங்கி, ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் அமைய, நிதி ஒதுக்கீடு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே இடத்திலே ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுகின்ற குறிக்கோள், அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிச்சயமாக எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தாலுகா, வள்ளியூரிலே ஒரு குற்றவியல் நீதிமன்றம் அரசுக் கட்டடத்திலும், உரிமையியல் நீதிமன்றம், வாடகைக் கட்டடத்திலேயும் இயங்கி வருகிறது. தற்போது, நம்முடைய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாங்குனேரி--ராதாபுரம் தாலுகாவிற்குச் சொந்தமான சார்பு நீதிமன்றம், பாளையங்கோட்டையிலே இயங்கி வந்ததை, வள்ளியூரிலே நடத்துவதற்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். அப்பகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்து, இந்த மூன்று நீதிமன்றங்களையும், ஏற்கெனவே குற்றவியல் நீதிமன்றம் இயங்கி வருகின்ற அரசுக் கட்டடத்திற்கு அருகில் இடம் இருப்பதால், அந்த இடத்திலேயே கட்டுவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டே நிதி ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை வருகின்ற காலத்திலே அரசு பரிசீலிக்கும்.

[2006 ஆகஸ்ட் 18

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 47. மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**47—**

## புதிய கட்டடம்

***613—திருமதி மு. சந்திரா:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*

*(அ) இராஜபாளையம் நகரில் நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், அதற்காகப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்குத் தகுதியான நிலம் தேர்வு செய்யும் பணி, இராஜபாளையம் வழக்கறிஞர்கள் சங்க உதவியுடன் நடைபெற்று வருகிறது. இடம் தேர்வு செய்து, நீதித் துறைக்கு உரிமை மாற்றம் செய்தபின், நீதிமன்றக் கட்டடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும். (ஆ) எழாது.

*(முற்பகல் 10-10)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் தொகுதியில், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று கேட்கப்பட்டதற்கு, 'ஆம்' என்று சொல்லியிருக்கிறீர்கள். அது எப்போது கட்டித்தரப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக இந்த அரசு அந்த ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதற்கு நிலத்தைத் தேர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்.



2006 ஆகஸ்ட் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூரில், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட வேண்டுமென்பதற்காக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, கடந்த ஐந்தாண்டுக் காலமாக அதிலே எந்தவித முயற்சியும் எடுக்காத காரணத்தால், வழக்கறிஞர்கள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்று, இன்றைக்கு நீதிமன்றமே ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஆகவே, இந்த அரசு, இந்த ஆண்டே அதைச் செயல்படுத்த முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வருகின்ற நிதி ஆண்டிலே மத்திய அரசு நிதி உதவி கிடைத்தவுடனே, நிச்சயமாகக் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய கடந்த ஆட்சியிலே, தருமபுரியிலே அமர்வு நீதிமன்றம் ஆரம்பிப்பதற்காக உத்தரவிடப்பட்டது. உயர் நீதிமன்றமும் அனுமதி வழங்கியிருக்கிறது. அது, இதுநாள்வரை அங்கே ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. தற்போது அமர்வு நீதிமன்றம் ஆரம்பிப்பதற்குண்டான உத்தேசம் அரசிடம் இருக்கிறதா என்பதை அமைச்சர்வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இதற்கென்று தனி வினா எழுப்பவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன்.

[2006 ஆகஸ்ட் 18

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் சுமார் 300 வழக்கறிஞர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். அங்கு அமர்வு நீதிமன்றம் உள்ளதால், வழக்கறிஞர்களுடைய நீண்ட நாள் குறையான, அவர்களுக்கு chamber கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கோரி வருகிறார்கள். எனவே, அரசு அதைக் கட்டித்தர முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த அரசு முதற்கட்டமாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கும், வழக்கறிஞர்கள் அமர்வதற்கான அறைகள், கடந்த காலத்திலே எந்தெந்த மாவட்டங்களில் கட்டப்படாமல் இருக்கின்றனவோ, அவற்றை முன்னுரிமை அடிப்படையிலே கட்டுவதற்கும் நிச்சயமாக அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**48—**

## சிறப்புத் திட்டங்கள்

***931 – திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காகவும், வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்வதற்காகவும் என்னென்ன திட்டங்களை அரசு உருவாக்கியுள்ளது?

(ஆ) இதற்காக மத்திய அரசிடம் நிதியுதவி பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?



)06 ஆகஸ்ட் 18]

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ)

ாண்புமிகு ... ன்னியாகுமரிக்கு ரூ.372.72 இலட்சம் நிதி உதவி செய்யப்பட்டு பல்வேறு ணிகள் நடைபெற்று வருகின்றன. 2006–2007 ஆம் ஆண்டு சுற்றுலா மம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரியை மேம்படுத்துவதற்கு தி உதவி வழங்க, மைய அரசு முன்வந்துள்ளது. இதற்கான ிட்டங்களைத் தயாரிக்கும்படி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் லைவர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். விரைவில் ிட்டங்கள் தயாரிக்கப்படும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்வதற்கு என்னென்ன திட்டங்களை அரசு உருவாக்கி உள்ளது என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறார்கள். லைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட 'அய்யன் ிருவள்ளுவர் சிலை' ஒன்றே, அதற்குப் போதும் என்று கருதுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ிருமதி லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. கன்னியாகுமரி மாவட்டத்தின் குமரி ான்று அழைக்கப்படக்கூடிய சுற்றுலாத் தலத்தில் சர்வதேசப் பயணிகள் வந்து, அந்தச் சுற்றுலாத் தலத்தைக் கண்டுகளிக்கக்கூடிய வகையிலே, விமானப் போக்குவரத்து வசதி செய்துதரப்படுமா? அதைப்போன்று, கல்லால் செதுக்கிவைக்கப்பட்டு, கண்கவரும் காட்சியாக இருக்கக்கூடிய சிதரால் ஜெயின் மலைக் கோயில் அபிவிருத்திப் பணிகளுக்கு மத்திய அரசும், மாநில அரசும் நிதி ஒதுக்கீடு செய்து, அந்த வேலை என்பது முடிவடைந்திருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில், வட இந்தியப் பயணிகள்கூட வந்து செல்கின்றார்கள். அவர்கள் வந்து போவதற்கு வசதியாக திக்குறிச்சி–வள்ளக்கடவு என்ற பாலம் அமைத்துத் தரப்படுமா? அதேபோன்று, குமரியின் குற்றால நீர்வீழ்ச்சியான திற்பரப்பில், rope car அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திற்பரப்பு நீர்வீழ்ச்சியைப் பொறுத்தமட்டில், சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று முடியக்கூடிய நிலைமையில் இருக்கிறது. விமான நிலையத்தைப் பொறுத்தமட்டில், இந்தத் துறைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும்கூட,

உறுப்பினருடைய கருத்துகள் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லப்படும் என்ற உறுதியையும் தெரிவித்துக்கொண்டு, பாலத்தைப் பொறுத்தமட்டில் இந்தத் துறையோடு தொடர்பில்லாத கேள்வி; எனவே, அந்தத் துறையினுடைய அமைச்சரிடத்தில் உறுப்பினருடைய கருத்துக்கள் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் ஊராட்சி ஒன்றியம், சோமூரில், காவிரி ஆறு, அமராவதி ஆறு ஆகிய இரு ஆறுகள் கூடுகின்ற திருமுக்கூடலூரில், சுற்றுலா மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டம் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலே வெளிநாட்டுப் பயணிகள் அதிக அளவில் வருகிறார்கள். பல இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். ஆகவே, சுற்றுலா வளர்ச்சித் திட்டங்கள்மூலம், என்னென்ன பணிகள் செய்யப்பட இருக்கின்றன என்பதையும், திருவண்ணாமலை மலைக்கு, rope car வசதி செய்துதா கோளாவைப்போல, மலம்புழா dam போல, தனியார் முன்வந்தால், அரசு அனுமதி அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, rope car திட்டத்தைப் பொறுத்தமட்டில், தனியார் முன்வந்தால் முதல்வர் கலைஞரோடு கலந்துபேசி முடிவு எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் திருவண்ணாமலையைப் பொறுத்தமட்டில், சுற்றுலாத் துறையின் சார்பாக அதிகமான பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. நம்முடைய முதல்வர் கலைஞர்



அவர்களும், தமிழகத்தைப் பொறுத்தமட்டில், சுற்றுலாத் துறையை முதல் மாநிலமாக ஆக்க வேண்டுமென்று அறிவுரையும் வழங்கி இருக்கிறார்கள். நிச்சயமாக உறுப்பினரவர்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. லட்சுமணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**49—**

### சுற்றுலாத் தலம்

***1609—திரு. ச. லட்சுமணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதியில் மூணாறு அருகிலுள்ள Top Station என்ற பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது சுற்றுலாத் துறையின்மூலமாக எந்த ஒரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால், அங்கே வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, நிலச் சீரமைப்பு, பொருட்கள் பாதுகாப்பு அறை, போக்குவரத்து வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சுற்றுலாத் துறையின்மூலமாக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. ச. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், போடி தொகுதியில் அமைந்துள்ள அந்த Top Station, மூணாறு வழியாகச் செல்வதாக உள்ளது. அந்தப் பகுதியிலே, தற்பொழுது எந்தவித அடிப்படை வசதியும் இல்லை. அங்கே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். ஆகவே, அடிப்படை வசதிகளைச் செய்துகொடுத்து, அங்கு ஒரு—telescope—தொலைநோக்கியை அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். இதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமான சுற்றுலாப் பயணிகள் அங்கு வருகை தருவதாக இருந்தால், telescope வசதிகளைச் செய்வதற்கான முயற்சிகளில் துறை ஈடுபடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகைப் பகுதி என்பது, ஆண்டிற்கு ஐந்து இலட்சம் யாத்திரிகர்கள் வரக்கூடிய பகுதியாகும். வேளாங்கண்ணி ஆலயமும், நாகூர் தர்காவும், சிக்கல் சிங்காரவேலர் ஆலயமும் அமைந்திருக்கக்கூடிய பகுதியாகும். எனவே, அப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கும் சாத்தியக்கூறு உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தாலுங்கூட, நாகை மாவட்டத்தில் சுற்றுலாத் திட்டங்கள் பல அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. அங்கே தனியாக அறிவிக்கவேண்டிய தேவை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் என்றாலே எல்லோருக்கும் நினைவுக்கு வருவது அண்ணா பிறந்த ஊர்; கோயில்களுக்குப் பெயர்பெற்ற ஊர்; பட்டுச் சேலைகளுக்குப் பெயர்பெற்ற ஊர். இவ்வளவு சிறப்புகள் நிறைந்த இந்தக் காஞ்சி மாநகரிலே, சுற்றுலா மையம் ஒன்றும், சுற்றுலாப் பூங்கா ஒன்றும் அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.



*முற்பகல் 10–20*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லாமல் இருந்தாலும்கூட, சென்னையைத் தலைமையிடமாக வைத்துக்கொண்டு, காஞ்சிபுரம் பகுதிகளில் சுற்றுலா இடங்களைப் பார்ப்பதற்காக bus வசதிகள், இந்தத் துறையின்சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டு, தினந்தோறும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடு) யார்? (குறுக்கீடு) அமைதியாக உட்காருங்கள். அனுமதித்தால் பேச வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**50—**

## Telescope வசதி

***1357—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி, பாலமதி மலையில் telescope வைத்துப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் தொகுதி, பாலமதி மலையில் telescope வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் தொகுதியில் இருக்கக்கூடிய பாலமதி மலையில் ஓர் அழகிய குழந்தை முருகன் கோயில் இருக்கிறது. எங்களுடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அருள் அன்பரசுகூட, ஒரு குட்டிச் சாமியாராக, இன்று அறநிலையத் துறையிலே பேசுவதற்காக உடைதரித்து அழகாக இங்கே வந்திருக்கிறார். இவரேகூட அந்த இடத்தில் வரக்கூடிய அளவிற்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கக்கூடிய அந்த மலையில், telescope ஒன்றை வைக்கவேண்டும். அமைச்சர் அவர்கள், telescope வைக்கக்கூடிய திட்டம், எப்போதுமே இல்லை

[2006 ஆகஸ்ட் 18

என்று சொன்னார். அது வனப் பகுதியாக இருக்கிற காரணத்தாலே, வேறு யாரும் கொண்டுபோய் அங்கே அதனை வைக்க முடியாது. telescope-னுடைய cost ஒன்றேகால் இலட்சம் ரூபாய் அல்லது ஒரு இலட்சம் ரூபாய்தான். ஆகவே, ஒன்றேகால் இலட்சம் ரூபாய் அல்லது ஒரு இலட்சம் ரூபாயைக் கொடுத்து வாங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே telescope வைப்பதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் சார்பாக எப்போதுமே telescope வைப்பது இல்லை. அப்படி வைப்பது என்றாலும், சுற்றுலாத் துறையின் சார்பாக அவர்கள் வைப்பார்கள். அந்த வனப் பகுதியிலே, telescope வைக்க வேண்டுமேயானால், வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படி, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டும். ஒருவேளை சுற்றுலாத் துறை telescope அமைப்பதற்கு, அங்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதாகக் கணித்து, அங்கு telescope வைப்பதற்கு முன்வருவார்களேயானால், அந்த வேண்டுகோளை மத்திய அரசிடம் அனுப்பி, அனுமதி பெற்று அதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பாலமதி மலையிலிருந்து பார்த்தால் பக்கத்தில் இருக்கக்கூடிய, வேலூர், சத்துவாச்சாரி போன்ற பகுதிகளையும், அதேபோல பாகாயம் வரை இருக்கக்கூடிய பகுதிகளையெல்லாம் அங்கே காண முடியும்; மிக அழகான தோற்றம். அங்கே அமைச்சர் ஒருமுறை நேரடியாக வந்துபார்த்தால், அதனுடைய பொலிவு அவருக்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே, ஏலகிரி மலையிலே வனத் துறையே ஒரு telescope-ஐ வாங்கி வைத்துக்கொண்டு, கோடை விழாவிற்கு மட்டும், அவ்வப்போது அதைக் காட்டுவதற்கு, எடுத்துவருகிறார்கள்; மீதி நேரத்தில் கொண்டுபோய் வைத்துக்கொள்கிறார்கள். மத்திய அரசினுடைய அனுமதி இதற்கெல்லாம் தேவையில்லை என்று கருதுகிறேன். அமைச்சர் ஒருவேளை அதைச் சரிபார்த்து, உண்மையிலே அப்படி இருக்குமானாலும்கூட, நம்முடைய மண்ணின் மைந்தர்தான், நம்முடைய தமிழகத்தைச் சார்ந்தவர்தான் வனத் துறை அமைச்சராக இருக்கிறார். உடனடியாக அங்கே அமைப்பதற்குகூட, ஒன்றேகால் இலட்சம் ரூபாயிலே ஒரு telescope-ஐ வாங்கி, கோட்டை மலைப் பகுதியிலாவது அல்லது பாலமதி முருகன் கோயில் பக்கத்தில் இருக்கக்கூடிய ஒரு குன்றிலாவது, telescope-ஐ வைப்பதற்கு, அமைச்சர் அவர்கள் ஆவன செய்தால், வேலூர் மக்கள் அங்கு சென்று, பொழுதுபோக்கக்கூடிய ஒரு நல்ல இடமாக அது அமையும். ஆகவே, மக்களுடைய அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்றாற்போல், அமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு telescope-ஐ அங்கே வாங்கிவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 18]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பாலமதி மலையிலிருந்து பார்த்தாலே, பக்கத்தில் உள்ள எல்லாம் தெரியும் என்று சொல்லியிருக்கிறார். பிறகு, telescope தேவையில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில், நம்பிக் கோயில் என்று உள்ளது. நம்பிச் செல்கின்றவர்களுக்கெல்லாம் வாழ்வு தருகின்ற நம்பிக் கோயிலுக்குச் செல்வதற்குப் பாதை அமைப்பதற்கு, வனத் துறை இடம் அளிக்கவில்லை. தனியார் T.V.S. நிறுவனம், அதற்குப் பாதை அமைக்கத் தயாராக இருந்தும், வனத் துறை அதற்கு அனுமதி வழங்கவில்லை. எனவே, அமைச்சர் அனுமதி வழங்குவதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டப்படி, மத்திய அரசினுடைய சட்டப்படி, பாதை அமைப்பதற்கெல்லாம் அனுமதி வழங்குவதற்கு அதில் இடமில்லை. மிக முக்கியமாக, அந்தப் பாதை அமைக்க வேண்டுமேயானால், மத்திய அரசிடம் அனுமதி பெற்று, அந்தப் பாதை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

*(முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார், நீங்கள்தான் கேட்டுவிட்டீர்களே, உட்காருங்கள். திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரம்ப நன்றி. பிச்சாவரம் வனப்பகுதி பரவலாக்கப்படும் என்று உங்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறியுள்ளீர்கள். அதற்கு

[திருமதி செல்வி ராமஜெயம்] [2006 ஆகஸ்ட் 18
மிக்க நன்றி. அந்த இடத்திலே telescope உருவாக்கித் தாப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் பகுதி, சதுப்புநிலக் காடுகள் நிறைந்த பகுதி. அங்கே சதுப்பு நிலக் காடுகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதுவரை அங்கே telescope அமைப்பதற்கான அந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை. வேண்டுமானால் எதிர்காலத்தில் அதுபற்றி யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோழவந்தான் தொகுதியிலே சரந்தாங்கி என்ற கிராமத்திலேயிருந்து, bus செல்லுகின்ற வழியிலே, இடையிலே இரண்டு பக்கமும் Highways துறை road-ம், ஊராட்சி road-களும் இருந்தாலும், இடையிலே forest-க்குச் சொந்தமான சாலையும் இருக்கிறது. அந்தச் சாலையை ஊராட்சியோ அல்லது Highways துறையோ அமைப்பதற்குத் தடையில்லாச் சான்று வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் தயாராக இருக்கின்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அந்த வினாக்களுக்குப் பதில் அளித்திருக்கின்றேன். இதுபற்றிப் பல்வேறு கோரிக்கைகள் வந்த காரணத்தால், மத்திய அரசுக்கு எழுதிய நேரத்தில், 3-1-2005-லே மீண்டும் ஓர் ஆணையை மத்திய அரசில் பிறப்பித்திருக்கின்றார்கள். அப்படிப் பிறப்பிக்கின்ற நேரத்தில், எது எதற்கு விதிவிலக்குத் தரலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், காவல் நிலையங்கள், துணை மின் நிலையங்கள் என இதுபோன்ற முக்கியமான பணிகளுக்கு அங்கே விதிவிலக்கு அளிக்கலாம் என்று சொல்லியிருக்கின்றார்களேயொழிய, அந்த ஆணையில்கூட சாலைகளுக்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்று சொல்லவில்லை. அதனால்தான் அந்தத் தடைகள் இருக்கின்றன. தேவையான இடங்களில் அந்த வேண்டுகோள் வருமேயானால், மத்திய அரசுக்குத் தனியாக எழுதி, அதற்கு அவர்களிடம் அனுமதிபெற்று அனுமதிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2006 ஆகஸ்ட் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமை மீறல் பிரச்சினை

### எதிர்க்கட்சித் தலைவர் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன், (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முன்னாள் முதல்வரும், இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினரும், இந்த மாமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவருமாக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஜெயலலிதா அவர்கள், நேற்று ஓர் அறிக்கையை எல்லாப் பத்திரிகைகளுக்கும் அளித்து, நேற்று மாலை பத்திரிகை, அதைப்போல இன்றைய காலை பத்திரிகைகளிலெல்லாம் அதுபற்றி வெளிவந்திருக்கிறது. அந்தப் பத்திரிகைகளில் ஏற்கெனவே... *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள், அவர் சொல்லவேண்டியதை முதலில் சொல்லட்டும். *(கூச்சல்-குழப்பம்)*

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது அவை உரிமை மீறல் பற்றியது. ஏற்கெனவே, நான் இந்த அவை கூடுவதற்கு முன்னாலே, ஒரு மணி நேரத்திற்கு முன்னாலே, இந்த அறிவிப்பைக் கொடுத்திருந்தேன். பேரவை விதி 219-ன்படி இந்தப் பிரச்சினையை நான் எழுப்புகின்றேன். இது அதிமுக்கியத்துவம் வாய்ந்தது என்பதல்ல, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இது அவை உரிமை மீறிய செயல். இது அவை உரிமை மீறிய செயல் என்ற காரணத்தாலே இதைக் கொடுத்திருக்கிற, எனக்கு எழுப்புகின்ற உரிமை உண்டு. இது அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்கின்ற பிரச்சினையில் எழுப்பப்படவில்லை. விதி 219-ன்கீழ் எழுப்புகின்றேன். *(கூச்சல்-குழப்பம்)*

[2006 ஆகஸ்ட் 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், கேளுங்கள் (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் (கூச்சல்–குழப்பம்) பேரவை விதி 219-ன்கீழ்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் கத்துவது? முதலில் அவையில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கற்றுக்கொள்ளுங்கள்.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** அவை உரிமை மீறல் பற்றிய அறிவிப்பைக் கொடுத்திருக்கின்றார். அவை உரிமை, எந்தவகையில் மீறப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்வதற்கு, அவருக்கு வாய்ப்பு வழங்கவேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார்? சின்னசாமியா: திரு. சின்னசாமி, எச்சரிக்கின்றேன். இந்தமாதிரியெல்லாம் நடந்துகொண்டால், நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) அவையில் ஓர் அமைச்சர் பேசிக் கொண்டிருக்கின்றார்; இடையில் நீங்கள் மறித்துப் பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உட்காருங்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவரைப் பேசச்சொல்ல எனக்குத் தெரியும் நீங்கள் முதலில் உட்காருங்கள். யார் யாரை எப்பொழுது பேசச்சொல்ல வேண்டுமென்பது எனக்குத் தெரியும். முதலில் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள். நீங்கள் எல்லோரும் ஒன்றாக எழுந்து நின்றாலும் இங்கு ஒன்றும் நடக்காது. கட்டாயப்படுத்த முடியாது என்பது தெரியுமல்லவா? எல்லோரும் எழுந்து நின்று ஒன்றும் செய்துவிட முடியாது. முதலில் நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி, (குறுக்கீடுகள், தற்சமயம்...



2006 ஆகஸ்ட் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு முதலில் ஒன்றைச் சொல்கின்றேன். அவையில் இல்லாதவரைப்பற்றிப் பேசக்கூடாதுதான். ஆனால், அவையின் நடவடிக்கையை வெளியில் இருக்கின்றவர் பேசலாமா?

முற்பகல் 10–30

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை. தினந்தோறும்... (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியில் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், அரசியல் விமர்சனங்கள் செய்வதற்கு உரிமை இருக்கின்றது. அந்த அடிப்படையில்தான், சபையில் நீங்கள் உத்தரவு போட்டு, இந்த வார்த்தையை, இந்தச் சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்று சொல்லி இருந்தீர்களானால், அதைச் சொல்லமாட்டார்கள். ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் உரிமை மீறப்பட்டிருக்கிறதா, மீறப்படவில்லையா என்பதைக் கேட்டு, அதற்குப் பிறகுதான் முடிவெடுக்க முடியும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** விதி மீறல்; இங்கே, சபையை நடத்துவதில் விதிகள் மீறப்பட்டிருக்கின்றன. அதற்குக் கடந்தகாலங்களில் இருந்த உதாரணங்களைக் குறிப்பிட்டு, கோடிட்டுதான், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தச் சட்டமன்றத்தினுடைய கண்ணியத்தையும், மரியாதையையும் காப்பாற்றுவதற்காகத்தான், அந்த அறிக்கையை விடுத்தார்களேயொழிய... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், அரசியல் ரீதியாக ஓர் அறிக்கை விடுவதுபற்றி, உரிமை மீறல் பிரச்சினை அவையிலே வரக்கூடாது; வராது என்ற அடிப்படையிலே, இங்கே கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். 2005 செப்டம்பர் 28 ஆம் தேதி இந்த அவையில் அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்த மாண்புமிகு திரு. சந்தானம் அவர்கள், ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்கள். எது குறித்து என்றால்,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 ஆகஸ்ட் 18

இன்றையதினம் எப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டு, அதன்மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன், ஓர் உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறாரோ, அதைப்போல, அன்று அவர் சொல்கிறார்:

"இந்தச் சட்டமன்றத்திலே சொல்வதற்குப் பதிலாக, வெளியிலேயிருந்து 26-9-2005 ஆம் நாளிட்ட 'முரசொலி' இதழில், இதற்குப் புறம்பாக, 'பல்வேறு நிலைகளிலே இந்தச் சட்டமன்றத்திலே பொய்யான தகவல்கள் தரப்படுகின்றன; உண்மைக்கு மாறான செய்திகள் இந்தக் கொள்கைக் குறிப்பிலே இருக்கின்றன; அதற்குப் போதிய நிதியாதாரங்கள் ஒதுக்கப்படவில்லை; இது தமிழக மக்களை ஏமாற்றுகின்ற ஒரு வேலை' என்கின்ற அளவிற்கு அந்தப் பத்திரிகையிலே விமர்சனம் செய்து, அதிலும், 'ஒய்யாரக் கொண்டையிலே தாழம்பூவாம்' என்று சொல்லி, இந்த மன்றத்தின் மாண்பையும், மரபையும் சீர்குலைக்கிற அளவிற்குச் செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இந்த மன்றத்தினுடைய உரிமையை மீறியதாக நான் கருதுகின்றேன்"

என்று அவர் சொல்லி, அதற்குப் பிறகு அன்றைய பேரவைத் தலைவர் என்ன ஆணை பிறப்பித்திருக்கிறார் என்றால்,

"இந்தப் பிரச்சினையில் மேலெழுந்தவாரியாக அவை உரிமை மீறல் இருப்பதாகக் கருதுவதால், இதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 226-ன்கீழ் அவை உரிமைக் குழுவிற்கு இப்பிரச்சினையை அனுப்புகிறேன்"

என்று ஒரு முன்னுதாரணம் உள்ளது. 2005 ஆம் ஆண்டு, இப்போதைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அப்போது இங்கே உட்கார்ந்து கொண்டிருந்தபோதே எழுப்பப்பட்டு, அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எனவேதான், அரசியல் கட்சித் தலைவர்கள், குறிப்பாக, இந்த அவையிலே உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள், வெளியிலே இருக்கின்ற பத்திரிகைகளிலே செய்திகள் வெளியிட்டால், அதை எழுப்புவதற்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சொல்ல வேண்டிய கருத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள்.



2006 ஆகஸ்ட் 18]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளைச் சரியாகப் படிக்காமல், என்ன பிரச்சினை நான் எழுப்புகிறேன் என்றுகூட கவனிக்காமல், இது என்ன அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையா என்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்... (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** இங்கே பேசிக் கொண்டிருப்பதைத் தடுப்பது, என்னுடைய உரிமையை மீறுகிற ஒரு செயல் என்பதை நான் இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** பின்னர் என்ன? (குறுக்கீடுகள்) அதிமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை... (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே அவர் என்ன சொல்ல வருகிறார் என்றே தெரியாமல், நீங்கள் பதில் பேசக் கூடாது. உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடு) முதலிலே என்ன சொல்ல வருகிறார் என்று தெரிந்துகொள்ளுங்கள். முதலிலே உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முதலிலே என்னைப் பேச அனுமதியுங்கள். (குறுக்கீடுகள்) I want right to speak. I want right to speak. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** These people cannot obstruct me like this. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** No, நான் என்னுடைய point-ஐத்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய point-ஐப் பேசிக் கொண்டிருக்கிறார். திரு. ஞானசேகரன், நீங்கள் சொல்லவேண்டிய கருத்தை மாத்திரம் சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** உறுப்பினர்கள், எனக்கு advice பண்ணாதீர்கள் இப்போது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலிலே. மற்ற எல்லோரும் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் சொல்லவேண்டிய கருத்தை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லவேண்டிய கருத்தை மாத்திரம் சொல்ல வேண்டும்.

*(முற்பகல் 10-35*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய செய்திகளைப் பார்க்கிறபோது, இந்த அவைக்கு இருக்கின்ற இறையாண்மை, எப்படி இங்கே கேலிக்கூத்தாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த அவைக்குக் கொண்டுவர விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'ஒட்டுமொத்தமாக அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்களை, 120, 121 ஆகிய விதிகளை மீறி, சட்டப் பேரவைத் தலைவர் அடிக்கடி வெளியேற்றம் செய்கிறார்' என்று உங்களுடைய தீர்ப்பையே விமர்சித்து இருக்கிறார்கள். விதி 120, 121-களிலே சொல்கிறபோது, Member என்று குறிப்பது, ஒரு தனிப்பட்ட நபராக இருக்கிறபோது, அவரை Member என்று குறிப்பிடுவார்கள். ஒரு Member-ஐ வெளியேற்றுகிற ஓர் உரிமை படைத்திருக்கிற பேரவைத் தலைவர் அவர்களுக்கு— 'Member', அதாவது எப்போதுமே சட்டத்திலே, 'he' is equal to 'she'—ஏனென்றால் 'he' என்றுதான் எல்லாச் சட்டத்திலும் வரும். அது she-யையும், அதாவது பெண்ணையும் குறிக்கும். ஆண் என்று குறிப்பிட்டால், அது பெண்ணையும் குறிக்கும் என்று நாம் பொருள்கொள்ள வேண்டும். அதேபோல, இதிலே ஓர் உறுப்பினரை நீக்குகிற அதிகாரம் படைத்திருக்கிற தங்களுக்கு— நிச்சயமாக, இந்த அவை உறுப்பினர்கள் யாராவது அல்லது ஒட்டுமொத்தமாக பல பேர் சேர்ந்து, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பார்களேயானால், அவர்களை வெளியேற்றுகிற அதிகாரம் பேரவைத் தலைவருக்கு உண்டு. இந்தச் சட்டமன்றத்திலே பலமுறை அப்படிப்பட்ட தீர்ப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. பலமுறை நானே, 1991-லிருந்து 1996 வரை, சட்டமன்ற வரலாற்றிலே இல்லாத அளவிற்கு அதிகமான முறை ஒட்டுமொத்தமாக, எங்களுடைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களோடு





அப்போதிருந்த சபாநாயகரால் வெளியேற்றப்பட்டேன். ஏன்? 2001-2006 வரை பார்ப்போம் என்று சொன்னாலும்கூட, இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற உறுப்பினர் முதலமைச்சராக இருந்தபோது, 27 முறை இங்கே ஒட்டுமொத்தமாக, ஒரு கட்சியின் உறுப்பினர்களையே வெளியேற்றிய வரலாறு, இந்த அவையிலே, இங்கே இருந்திருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இது ஏதோ, நேற்றோ, இன்றோ, புதியதாக உங்களால் உருவாக்கப்பட்ட மரபல்ல. ஏன்? 2001-2006-லே பார்த்தோம் என்று சொன்னால், ஆகஸ்ட் மாதம், அதேபோல, செப்டம்பர் மாதம், மார்ச், ஏப்ரல், மே, அக்டோபர், ஜனவரி என்று 27 முறை இப்படி நடைபெற்றிருக்கிறது. ஆனால், அறிக்கையிலே சொல்கிறபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறார்கள்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவையினுடைய... *(குறுக்கீடுகள்)* சொல்கிறேன், கேளுங்கள். அவர் முதலில் சொல்லட்டும். *(குறுக்கீடுகள்)* சொல்கிறேன், கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எழுந்திருந்தால், உடனே எல்லோரும் எழுந்துவிடுவதா? *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் சட்டமன்றத்தினுடைய உரிமையைக் காப்பாற்றுவதற்காக, அந்த உரிமையை நிலைநாட்டுவதற்காக, உரிமை மீறிய செயல் எது நடைபெற்றாலும், அது உரிமை மீறிய செயல் என்பதை உறுப்பினர் எவராக இருந்தாலும், எடுத்துச் சொல்ல அனுமதிக்கப்பட்டால், எடுத்துச் சொல்ல உரிமை உண்டு. இப்போது திரு. ஞானசேகான் அனுமதிக்கப்பட்டு, அந்த உரிமை மீறலை விளக்கிப் பேசுகிறார். பேசுகிறபோது ஆதாரங்களைக் கொடுத்துப் பேசுகிறார். ஆகவே, அவர் பேசுவதைத் தடுப்பது, உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருவதைத் தடுக்கின்ற ஒரு முயற்சியாக அமைகிறது என்பதை நான் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் சொல்கிறேன், கேளுங்கள். ஓர் உறுப்பினர் பேசும்போது, அவரைப் பேசவிடாமல் தடுப்பது மரபல்ல, தெரிகிறதா? அதனால் நீங்கள்... *(குறுக்கீடுகள்)* அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். *(குறுக்கீடு)* என்ன சொல்ல வேண்டும்? கொஞ்சம் பொறுங்கள், திரு. ஞானசேகரன். என்னவென்று சொல்லுங்கள். *(குறுக்கீடு)* திரு. ஞானசேகரன், கொஞ்சம் பொறுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடம் ஓர் உறுப்பினர், உரிமை மீறல் பிரச்சினையைப்பற்றிக் கடிதம் கொடுத்திருந்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர் என்ன உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கின்றாரோ, அதைப்பற்றிப் பேசுவதற்கு உங்களிடம் முதலில் அனுமதி பெற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெற்றிருக்கிறார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எங்கே கேட்டார்? கேட்கவே இல்லையே, அவர்? அவர் கேட்கவே இல்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்டார்; என்னிடம் அனுமதி வாங்கித்தான் அவர் பேசுகிறார். *(குறுக்கீடு)* No, no, no.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** After getting my permission only, he is speaking in the House.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கேட்க வேண்டும். நீங்கள் அதற்குப் பின்னால், அனுமதி கொடுக்க வேண்டும். அவர் எழுந்து பேச ஆரம்பித்து, 'நீங்கள் பேசுங்கள்' அப்படி என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் அனுமதி வாங்கியதற்குப் பிறகுதான் அவர் பேசுகிறார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** முதலில் அனுமதி வாங்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி வாங்கிவிட்டார்கள். அனுமதி வாங்கிவிட்டுத்தான் பேசுகிறார்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 219-ன்படி ஏற்கெனவே, அவை கூடுவதற்கு ஒரு மணி நேரம் முன்னாலே உங்களிடம் இந்த அறிக்கையைக் கொடுத்து, நான் என்ன பேசப் போகிறேன் என்கிற ஓர் அறிக்கையை விளக்கமாகக் கொடுத்து, உங்களிடம் அனுமதி பெற்றுதான் பேசிக்கொண்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இது தெரியாமல், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இங்கே நான் அனுமதி பெறவில்லை என்று சொல்வது மிகவும் வருத்தமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் உங்கள் கருத்தை மட்டும் சொல்லுங்கள். Don't blame others. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள் முதலில். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, அந்த அறிக்கையிலே...*(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சி கொறடா உட்காருங்கள். Let him say. *(குறுக்கீடு)* நான் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே ஒன்றுமே இல்லை. I am not yielding. I am not yielding. I am not yielding. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** No. There is no point of order. I am not yielding. I am not yielding. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடு)* எதிர்க்கட்சிக் கொறடா, முதலில் உட்காருங்கள். Let him say. *(குறுக்கீடு)* திரு. சிவபுண்ணியம், நீங்கள் உட்காருங்கள். திரு. ஞானசேகரன், Don't blame others. What do you want to say, kindly tell.

**திரு. சி. ஞானசேகரன்:** Yes, Yes. Just I am telling my points only. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அறிக்கையிலே பேசுகிறபோது, போகிற போக்கில்... *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள், *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், முதலில் உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

[2006 ஆகஸ்ட் 18

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அறிக்கையிலே, இரண்டாவது பத்தியிலே, எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறபோது, நம்முடைய... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. Jayakumar, உட்காருங்கள் முதலில். *(குறுக்கீடுகள்)* Repeatedly I am telling you, please sit down. *(குறுக்கீடுகள்)* Repeatedly I am telling you, please sit down.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிக்கொண்டிருக்கிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I will take action against you.

**திரு. சி. ஞானசேகரன்:** அனுமதி வழங்கி இருக்கிறீர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** Point of order, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. சுதர்சனம் உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடு)* Please sit down. *(குறுக்கீடு)* திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். *(குறுக்கீடு)* Let him say, உட்காருங்கள். *(குறுக்கீடு)* அவர் சொல்லிவிட்டட்டும் முதலில். அதற்குப் பிறகு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* No interference. Please sit down. Let him say. *(குறுக்கீடுகள்)* அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையை நடத்துவதில் தலையாய உரிமை, சட்டப் பேரவைத் தலைவருக்குத்தான். தலைவர் ஆணையிட்டு ஒருவர் பேசுகிறபோது, அதுவும் உரிமைப் பிரச்சினை அடிப்படையிலே பேசுகிறபோது, அவர் எழுந்து பேசுகிறபோதெல்லாம் குறுக்கிடுவது, தடுப்பது, obstruction என்று சொல்லக்கூடிய ஒரு காரியம் ஆகும். அது இந்த அவையினுடைய உரிமையை மீறுகிற ஒரு செயல். எனவே, அப்படி மீறினால், அவைத் தலைவர் அவர்கள், இந்த அவையை நடத்த முடியாத நிலை ஏற்படுவதன் காரணமாக, இந்த அவையை நடத்துவதற்காக, திட்டவட்டமாக ஒரு கட்டளை இடவேண்டிய அவசியம் ஏற்படும். அந்த அவசியத்தை எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*



2006 ஆகஸ்ட் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்.... *(குறுக்கீடு)* நான் சொல்கிறேன் கேளுங்கள். துணைத் தலைவர், சொல்லுங்கள், என்ன? *(குறுக்கீடு)* நான் என்ன சொல்கிறேன் என்றால், முதலில் அவர் பேசட்டும். *(குறுக்கீடு)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமை மீறல் பிரச்சினையோ, கவன ஈர்ப்புத் தீர்மானமோ, ஒத்திவைப்புத் தீர்மானமோ எந்த ஓர் உறுப்பினரும், உங்களிடம் கடிதம் கொடுத்தால், அவர் இங்கே எழுந்து, 'அந்தத் தீர்மானத்தின்மீது நான் பேசவேண்டும்' என்று உங்களிடம் அனுமதி கேட்பார்கள். அதற்குப் பின்னால் நீங்கள் அனுமதி கொடுப்பதும், கொடுக்காததும் உங்களுடைய உரிமை; உங்களுடைய தீர்ப்பு. அப்படி இருக்கும்போது அவர் எழுந்து பேச ஆரம்பித்தவுடனேயே, நீங்கள் எந்தவகையில் அவர்களுக்கு அனுமதி கொடுத்தீர்கள்? அவர் அனுமதி உங்களிடம் கேட்டாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** He has already obtained permission. *(குறுக்கீடு)* நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். துணைத் தலைவர், என்னிடம் அனுமதி பெற்றுத்தான் அவர் பேசிக்கொண்டு இருக்கிறார். அவருடைய பேச்சைத்தான் நீங்கள் குறுக்கீடு பண்ணுகிறீர்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். நான் ஏற்கெனவே permission கொடுத்து இருக்கிறேன் அவருக்கு. என்னிடம் கேட்டு, பேசச் சொல்லி நான் கொடுத்து இருக்கிறேன் permission. உட்காருங்கள், *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் எழுப்புகிற அந்தப் பிரச்சினை, உரிமைப் பிரச்சினையாக தங்களால் ஏற்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்ற நிலையிலேயே அவர் எழுப்புகிறார். எழுப்புவதற்கு அவர் அனுமதி பெற்று இருக்கிறார். அந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கு அவர் அனுமதி பெற்று இருக்கிறார். அந்தப் பிரச்சினை, உரிமைப் பிரச்சினைதானா என்பதை நீங்கள்தான் முடிவு சொல்ல இருக்கிறீர்கள். முடிவு சொன்னதற்குப் பின்னால்தான், அது உரிமைப் பிரச்சினை ஆகும். ஆனால், உரிமைப் பிரச்சினை எழுப்புவதற்கே தடை செய்கிறமுறையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் குறுக்கிடுவது முறையல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள், பொறுங்கள். கொஞ்சம் பொறுங்கள். *(குறுக்கீடுகள்)* அதாவது, அவர் என்ன சொல்ல வருகிறார் எனக் கேட்டுவிட்டு, உரிமைப் பிரச்சினை என்ன என்று அவர் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு அனுமதிக்க வேண்டுமா, அனுமதிக்க வேண்டாமா என்று நான் முடிவு எடுக்க வேண்டும். நீங்கள் அவரைப் பேசவே விடமாட்டேன் என்கிறீர்களே! No, No, it is not the proper way. Sit down. நீங்கள் பேசுங்கள், திரு. ஞானசேகரன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of order. *(குறுக்கீடுகள்)* Point of order. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியில்லை Sir. First, what he wants to say, he must tell. *(குறுக்கீடு)* உட்காருங்கள் முதலில்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்குத் தாராளமாக அனுமதி அளித்து, அவர்களுடைய கருத்துகளைக் கேட்பதற்கு, நீங்கள் வாய்ப்பும் கொடுக்கிறீர்கள். அவர்களும் எடுத்துச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், கடந்தகால ஆட்சியில், மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, சில விளக்கங்களைத்தான் கேட்டோம். ஆனால், அந்த விளக்கங்களைக்கூட கேட்பதற்கு அனுமதிக்கப்படாமல், அன்றைய பேரவைத் தலைவர் என்ன உத்தரவிட்டார் என்றால், "அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய உறுப்பினர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அனைவரையும் அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆதாரங்களையெல்லாம் படித்து முடித்ததற்குப் பிறகு, பொறுமையாக இருந்து விளக்கம் கேட்பதற்குத் தயாராக இருக்கிற உறுப்பினர்கள் இருக்கலாம். அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிற முடிவிலே இருந்தால், அவர்கள் அவையைவிட்டு வெளியே அகற்றப்படுவார்கள்" என்று அப்போது ஒரு தீர்ப்புக் கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், அவர் கருத்தைச் சொல்கிறார் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் எதிர்க்கட்சிக்காரர்களுக்கும் இதன்மீது ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால், உங்களுடைய அனுமதி பெற்று கேள்வி கேட்கலாம்.





ஆனால், அன்றையதினம் பேரவைத் தலைவர், அப்படித் தீர்ப்புக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அவையிலேயிருந்த எங்கள் அத்தனை பேரையும் 27-9-2005 அன்று அகற்றினார்கள் என்பதையும் நான் உங்களுடைய பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

*(முற்பகல் 10-45*

## 3. அறிவிப்பு

### 'நல்லிணக்க நாள்' உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *(குறுக்கீடு)* உட்காருங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நல்லிணக்க நாளை முன்னிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று 18-8-2006 காலை 11-00 மணிக்குத் தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்திற்கு அருகில் உள்ள, இராணுவ அணி வகுப்பு மைதானத்தில், 'நல்லிணக்க நாள்' உறுதிமொழிப் பிரமாணம் செய்துவைக்கவுள்ளார்கள். அந்நிகழ்ச்சியில், பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும்வகையில், பேரவை காலை 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும் 11-15 மணிக்குக் கூடி, எஞ்சிய அலுவல்களை மேற்கொள்ளும். ஆகவே, இப்போது பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. மீண்டும் 11-15 மணிக்குக் கூடும்.

*பின்னர், பேரவை முற்பகல் 10-46-க்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*(முற்பகல் 11-15*

*முற்பகல் 11-15 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில், பேரவை மீண்டும் கூடியது.*

## 2. உரிமை மீறல் பிரச்சினை-தொடர்ச்சி

### எதிர்க்கட்சித் தலைவர் பத்திரிகைகளுக்கு அளித்துள்ள அறிக்கை-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு தம்பிதுரை அவர்கள், ஒரு

[திரு. சி. ஞானசேகரன்] [2006 ஆகஸ்ட் 18

நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தபோது, விதிகள் 68, 69-ன்படி அவர்கள் கொடுத்ததைத் தாங்கள், எப்படி ஒரு மனைவிமீது கணவனுக்குச் சந்தேகம் என்று வந்துவிட்டால், பிறகு '14 நாட்கள் பொறுத்துதான் நீ அவளைப் பிரிய வேண்டும்; அதுவரை நீ அவளோடு வாழ்' என்று சொல்வதைப்போல இருந்துவிடக்கூடாது என்பதற்காக, உங்கள் மீதே ஒரு குற்றச்சாட்டு என்று வருகிறபோது, 'நான் ஒரு நிமிடமும் இந்த Chair-ல் இருக்கமாட்டேன்' என்று தாங்கள் உடனடியாக அதை விவாதத்திற்கு எடுக்க வேண்டுமென்று, இந்த அவையிலே அதை அப்போதே எடுத்தீர்கள். அதாவது, Natural Justice. Criminal Law-ல், Natural Justice எப்படி வரும் என்று சொன்னால், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத்தான் அந்த 14 நாட்கள்... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொறடா, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாராவது ஒருவர், குற்றம் சொல்கிறவர்களுக்கு... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லுங்கள்; அதாவது, *(குறுக்கீடுகள்)* திரு. ஞானசேகரன். *(குறுக்கீடுகள்)* கொறடா. *(குறுக்கீடுகள்)* திரு. செங்கோட்டையன், *(குறுக்கீடுகள்)* திரு. செங்கோட்டையன், அவருக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள்; சொல்வதைக் கேளுங்கள். அவருக்குப் பேச உரிமையைக் கொடுப்பது நாங்கள்; நீங்கள் அல்ல; உட்காருங்கள் முதலில். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவரின் அனுமதியோடு அவர் பேசிக் கொண்டிருக்கிறார். எந்த வார்த்தை அவைக் குறிப்பில் இருக்க வேண்டும், எந்த வார்த்தை அவைக் குறிப்பில் இருக்கக்கூடாது என்பதை நான் முடிவெடுக்க வேண்டும். யாரைப் பேசச் சொல்ல வேண்டும், யாரைப் பேசச் சொல்லக்கூடாது என்கின்ற முடிவை எடுப்பதும் பேரவைத் தலைவர்தான் எடுக்க வேண்டும். இதிலே, செங்கோட்டையனோ அல்லது பன்னீர்செல்வமோ யாரும், 'அவரைப் பேச விடுங்கள், இவரைப் பேச விடுங்கள்' என்று என்னை வற்புறுத்தக் கூடாது. உட்காருங்கள் முதலில். அதாவது... *(குறுக்கீடுகள்)* சொல்கிறேன் கேளுங்கள். ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும் என்றால், *(குறுக்கீடுகள்)* சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எனக்குத் தெரியும். எனக்குத் தெரியும். *(குறுக்கீடுகள்)* பொள்ளாச்சி ஜெயராமன், ஜெயக்குமார், தம்பிதுரை, எல்லோரும் உட்காருங்கள். நீங்கள், *(குறுக்கீடுகள்)* திரும்பத் திரும்ப அவை நடவடிக்கைக்கு இடைஞ்சல் செய்து கொண்டே இருக்கிறீர்கள்.



2006 ஆகஸ்ட் 18] [பேரவைத் தலைவர்]

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய அவ்வளவு பேரும் அவை நடவடிக்கைக்கு இடையூறு செய்துகொண்டே இருக்கிறீர்கள். இப்போது நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். *(குறுக்கீடு)* என்ன? நீங்கள் சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் உரிமை மீறல் பிரச்சினைபற்றி தங்களுக்கு அவர் கடிதம் கொடுத்துள்ளார். அதை அனுமதித்துள்ளீர்கள். என்ன உரிமை மீறப்பட்டிருக்கிறது என்பதை மட்டும்தான் அவர் சுருக்கமாகப் பேச வேண்டுமே தவிர, *(குறுக்கீடுகள்)* இருங்கள். நான் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. என்னங்க? 'நீங்கள் சொல்லக்கூடாது' என்றால், பின்னர் யார் சொல்வது? அறிவித்து, விதி 68-இல் தம்பிதுரை அவர்கள் கொடுத்தது... *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், அவர் சொல்வதைக் கேளுங்கள். அவர் என்ன பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்று நான் முடிவெடுக்க வேண்டும். நீங்கள் முதலில் உட்காருங்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, அன்று நடந்த நிகழ்ச்சிகளை தயவுசெய்து, மாண்புமிகு கொறடா போன்றவர்கள்—போன தடவை நீங்கள்

இல்லை—நடந்ததை எல்லாம் ஞாபகப்படுத்திப் பாருங்கள். Record இருக்கிறது. (குறுக்கீடுகள்) Sir, நீங்கள் உட்காருங்கள். நான் பேசிய பிறகு பேசுங்கள். (குறுக்கீடு) நான் பேசிய பிறகு பேசுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அன்றைய நிகழ்ச்சியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், என்ன? நீங்கள் சென்ற முறை அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். அவை மரபு உங்களுக்குத் தெரிந்திருக்கும். திரும்பத் திரும்ப நீங்கள் இடையூறு செய்துகொண்டே இருக்கிறீர்கள்.

*(முற்பகல் 11-20*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, 2005 செப்டம்பர் 28 ஆம் தேதி, திரு. சந்தானம் அவர்கள், இதுபோல ஓர் உரிமை மீறல் பிரச்சினையை இங்கே எழுப்புகிறபோது, அன்றைய சபாநாயகர் அனுமதிகூட வழங்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று சொன்ன வாசகம்: "திரு. சந்தானம் ஏதோ பேசவேண்டும் என்கிறார்" என்று சொல்லிவிட்டு, பேச அனுமதித்துள்ளார். அவர் பேசிய பக்கங்கள் மட்டும், கிட்டத்தட்ட 6 பக்கங்கள். இதிலே பதிவாகி இருக்கின்றன. ஓர் உரிமை மீறல் பிரச்சினை. அதுமட்டுமல்ல; அந்த உரிமை மீறல் பிரச்சினையிலே அன்றைய கொறடா, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொறடாவாக இருந்த புகழேந்தி அவர்கள், எப்படி இதை அனுமதிக்கிறீர்கள் என்று கேட்ட காரணத்திற்காகவே அவரை வெளியேற்றியவர் சபாநாயகர், அன்று இருந்த சபாநாயகர். இவ்வளவு பேர் இருக்கிறீர்கள்; எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, அவரைப் பேச allow பண்ண வேண்டும் இல்லையா? சந்தானம் மட்டுமல்ல. அன்றைய முதலமைச்சர் அவர்கள் சொன்ன வாக்கியம். அவர்கள் சொன்னதை அப்படியே படிக்கிறேன்:

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள், 'யார் வேண்டுமானாலும் என்ன கருத்து வேண்டுமானாலும் தெரிவிக்கலாம்; அதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது' என்று சொல்கிறார். யார் வேண்டுமானாலும் என்று சொன்னால், அது பொதுமக்களைக் குறிக்கின்ற ஒரு சொல்லாகும். அப்படி அல்ல. இப்போது நான் முதலமைச்சராக இருக்கிறேன். எனக்கும் எல்லாவிதமான உரிமைகளும் உண்டு. ஆனால், இந்த அவைக் கூட்டத் தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, ஏதாவது



அறிவிப்புச் செய்ய விரும்பினால், கருத்துக் கூற விரும்பினால், இந்த அவைக்கு வந்துதான் நான் தெரிவிக்க வேண்டுமே தவிர, வெளியே தன்னிச்சையாக நான் கட்டுரை எழுதி வெளியிட முடியாது. வெளியே தன்னிச்சையாக நான் பேட்டி கொடுக்க முடியாது. ஆகவே, இந்த அவைக்கு வந்து கருத்துத் தெரிவிக்க வாய்ப்பு இல்லாதவர்கள், ஏதாவது கருத்துக் கூறினால் அதைப்பற்றி நாங்கள் கவலைப்படப்போவதில்லை. அதைப்பற்றி இந்த அவையிலும் விவாதிக்கப்போவதில்லை. ஆனால், இந்த அவையின் உறுப்பினராக இருக்கின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர், வேண்டுமென்றே இந்த அவை நடவடிக்கைகளைப் புறக்கணித்து, இந்த அவையில் நடக்கின்ற நிகழ்ச்சிகளைப்பற்றி, இங்கே நடக்கின்ற அலுவல்களைப்பற்றி வெளியே அவதூறாகக் கட்டுரை எழுதி அவர் வெளியிட்டார் என்றால், அதைப்பற்றி இங்கே குறிப்பிட்டாக வேண்டும்." *(மேசையைத் தட்டும் ஒலி)*'

இதை யாரும் சொல்லவில்லை. அன்றைய முதலமைச்சர், செல்வி ஜெயலலிதா அன்று சொல்லிய வரிகள்தான் இவை பூராவும். அப்பொழுது, மாண்புமிகு இன்றைய முதல்வர் அவர்கள், ஓர் உறுப்பினர்தான். எதிர்க்கட்சித் தலைவராகக்கூட இல்லை. அந்த உறுப்பினர் சொன்னதற்கே இந்த அளவிற்கு விளக்கம் கொடுத்து, 10 பக்கங்கள் ஒருவரைப் பேசவிட்டு, முதலமைச்சர் எது வேண்டுமானாலும் சொல்லலாம் என்று சொல்லுகிறபொழுது, சபாநாயகராக இருக்கிற இவர்மீது, ஒரு குற்றத்தைச் சுமத்தியிருக்கிற ஓர் எதிர்க்கட்சித் தலைவர்; சாதாரண உறுப்பினர் அல்ல. அவர் சொல்லுகிறபொழுது, அதற்கான உரிமை மீறலைப் பேசுகிறபொழுது, பேச விட்டுவிட்டு, கொறாடாவாக இருப்பவரோ, எதிர்க்கட்சித் துணைத் தலைவரோ பேசுங்கள். உங்களுக்கு அனுமதி வழங்கப்படும். ஆனால், பேசுகிறபொழுதே குறுக்கே, குறுக்கே எழுந்து நின்றால், நீங்கள் கலவரம் விளைவிப்பதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு, இங்கே இருக்கிறீர்கள் என்பதுதான் உண்மை. சொல்லுங்கள். சட்ட நடவடிக்கைகளைப்பற்றிப் பேசுங்கள். பேச விட்டுவிட்டு, அப்புறம் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், சொல்கிறேன், கேளுங்கள். Suo motu -வாகவே அனுப்ப முடியும். நான் சொல்கிறேன், கேளுங்கள். முதலில் உங்களுக்குத் தெரியும். நீங்கள் அமைச்சராக இருந்தீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன்.

(குறுக்கீடு) முதலில் உட்காருங்கள், நான் சொல்கிறேன். Suo motu-வாகவே என்னால் இதை Privilege Committee-க்கு அனுப்ப முடியும். தெரியும் அல்லவா? முதலில் நான் அவரிடம் என்னவென்று கேட்டுவிட்டு, பிறகு முடிவு எடுக்கிறேன். பிறகு பார்த்துக்கொள்வோம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) See, இதோ பாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், கேளுங்கள். அந்த உறுப்பினர் பேசுவதை ஒட்டுமொத்தமாக நீங்கள் எல்லாரும் தடுக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அந்த உறுப்பினர் பேசுவதை ஒட்டுமொத்தமாக எல்லாரும் தடுக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அதை ஏற்றுக்கொள்ள முடியாது. திரு. ஞானசேகரன் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒருவர் குற்றம் சாட்டுகிறவர்; மற்றொருவர் குற்றம் சாட்டப்படுகிறவர். இரண்டு வகை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சொல்லிவிடுகிறேன். குற்றம் சாட்டப்பட்டவர் பேரவைத் தலைவராகிய நீங்கள், அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே. உங்களுக்குத்தான் 14 நாட்கள் அவகாசம் தேவைப்படுமேயொழிய, குற்றம் சாட்டுகிறவர்கள், அவர்களிடம் ஆதாரம் இருக்குமேயானால், அன்றே அவர்கள் இதுகுறித்து தாராளமாகச் சொல்லியிருக்கலாம். ஆதாரமே இல்லாமல் இப்படி ஒன்றைச் சொல்லிவிட்டு, பிறகு எனக்கு 14 நாட்கள் வேண்டும் என்று கோருவது Natural Justice-ல், அதற்கான Constitution-இலே, 179-வது ஷரத்தில் அப்படிச் சொல்லவில்லை. ஆகவே, அப்படித் தாங்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்கிறேன் கேளுங்கள். அவரைப் பேச விடுங்கள். முதலில் உட்காருங்கள். அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே உள்ளவர்கள் எழுப்புகிற ஒவ்வொரு பிரச்சினைக்கும், எதிர்க்கட்சியினருடைய அனுமதி பெற வேண்டுமென்று யாரும் எதிர்பார்க்க முடியாது. அவைத் தலைவருடைய அனுமதிதான் வேண்டுமேதவிர, மற்றவர் அனுமதி



அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவதாக, எதிர்க்கட்சியினர், இங்கே எடுத்துச் சொல்லப்படுகிற ஒவ்வொரு காரியத்திற்கும் உடனடியாக மறுப்புச் சொல்லி, அதன்மூலமாக உறுப்பினர் பேச்சைத் தடைசெய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். இந்த அறிக்கையிலே வந்த அந்தச் செய்திகளை வைத்துதான், அந்தச் செய்திகளுக்குத்தான் திரு. ஞானசேகரன் அவர்கள் மறுப்பைச் சொல்லி, உரிமைப் பிரச்சினை எழுப்புகிறார். அறிக்கையிலே அந்தச் செய்தி வராவிட்டால், திரு. தம்பிதுரை அன்றைக்கு எழுப்பிய அந்தப் பிரச்சினையையும், அதற்கு உடனடியாக இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்பட்ட பிரச்சினையையும், இப்போது திரு. ஞானசேகரன் எழுப்பமாட்டார். அறிக்கையிலே அதைக் கண்டித்து வந்திருக்கிற காரணத்தால், இந்த அறிக்கை எப்படியெல்லாம் அவையினுடைய உரிமையை மீறி இருக்கிறது என்பதை விளக்குவதற்காக, திரு. ஞானசேகரன் பேசுகிறார். திரு. ஞானசேகரனைப் பேச அனுமதித்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில், ஒருவேளை எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே பிரச்சினையைக் குறுக்கிட்டு குறுக்கிட்டு எழுப்புவார்களேயானால், ஒருவேளை வெளிநடப்புச் செய்து, உடனடியாகத் தங்களுடைய தலைவியிடம் 'நாங்கள் வெளிநடப்புச் செய்தோம்' என்று சொல்லிக்கொள்வதற்காகச் செய்கிறார்களே தவிர, வேறு அல்ல என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) ஜெயக்குமார், உட்காருங்கள். அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன்; அனுமதி இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை, உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இந்த அவையிலே, இந்த அவையே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, அன்றே அந்த விவாதத்தை எடுத்துக்கொள்வதற்கான உத்தரவைத் தாங்கள் வழங்கிய பிறகு, அது ஒரு தீர்ப்பு. இந்த அவையினுடைய தீர்ப்பு தங்களுக்கு அந்த அதிகாரம் உண்டு. அதையே கொச்சைப்படுத்துகிறவகையில் ஓர் அறிக்கையும்,

[திரு. சி. ஞானசேகரன்] [2006 ஆகஸ்ட் 18

அதேபோல, "இங்கே, கடைசி வரிசையிலே சில முன்னாள் அமைச்சர்களை உட்கார வைக்கிறார்" என்றும், "இது சட்டமன்றத்தினுடைய அராஜகம்" என்றும், "இதை நான் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவராக இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கமாட்டேன்; இதற்கு நான் சட்டப்படி ஒரு முடிவு கட்டுவேன்" என்றும் சொல்வது, இந்த அவையினுடைய மாண்பைக் குறைப்பதாகவும், இந்த அவையினுடைய அதிகாரத்திற்குச் சவால் விடுவதாகவும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தாங்கள் எப்படி அனுமதிக்கிறீர்கள்? இது அவையினுடைய உரிமையை மீறிய செயல். தங்களுடைய உரிமையை மீறிய செயல்.

அதோடுமட்டுமல்லாமல், நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்களுக்குப் "பேராசிரியர்" என்று, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் கொடுத்திருக்கிற பட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பட்டத்தை யாராவது, அவர்களுடைய கட்சிக்காரர்கள், மற்றவர்கள் சொல்கிறபோது, அவர் எப்பொழுது பேராசிரியராக இருந்தார் எனக் கேட்பது சரியல்ல. ஏனென்றால், எல்லோருக்கும் ஒரு பட்டம். தலைவர் கலைஞருக்கு, "கலைஞர்" என்ற பட்டம். எங்களுடைய தலைவர் மூப்பனாருக்கு "மக்கள் தலைவர்" என்று பட்டம். மக்களாகக் கொடுப்பது, பெரியவர்கள் கொடுப்பது. அவர்களுடைய தலைவிக்குக்கூட "அம்மா" என்ற பட்டம் கொடுத்திருக்கிறார்கள். யார் கொடுத்தார்கள் என்று ஆராய்ச்சியா பண்ணிக்கொண்டிருக்கிறோம் நாம்? (கூச்சல்-குழப்பம்) அதெல்லாம் ஒன்றும் கிடையாது. இல்லை, அதெல்லாம் நாம் சாதாரணமாக (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், (குறுக்கீடுகள்) இல்லை, இதையெல்லாம் ஓர் அறிக்கையாகக் (குறுக்கீடுகள்) கொடுத்து, இங்கே இப்படி வர்ணிப்பது என்பது, (குறுக்கீடுகள்) உண்மையிலேயே இந்த அவையினுடைய மரபை மீறிய செயலாகும். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இந்த அவையினுடைய உரிமையை மீறி இருக்கக்கூடிய பிரச்சினையைத் தாங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி, தங்களுடைய தீர்ப்புக்கு, எப்பொழுதுமே உள்நோக்கம் கற்பித்து (குறுக்கீடுகள்) எப்பொழுதுமே இப்படி எதையாவது வெளியே அறிக்கை விட்டுக்கொண்டு, பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லிக்கொண்டு...(குறுக்கீடுகள்)



2006 ஆகஸ்ட் 18]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** அவர்கள் இங்கேயிருந்து இந்தப் பிரச்சினையை அவர்கள் இதே அவையிலே இதை எப்படியெல்லாம், பொதுவாக, ஒட்டுமொத்தமாக அவர்களை வெளியேற்றியதற்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. ஜெயக்குமார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் சட்ட அமைச்சராக இருந்தவர். உங்களுக்கு rules எல்லாம் தெரியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கௌல் & ஷக்தரிலே, இந்தப் பேரவையைப் பொதுவாக எப்படி நடத்துவது என்பதற்குச் சில வழிமுறைகளைச் சொல்லியபடி, நீங்கள் கொடுக்கிற ஒவ்வொரு தீர்ப்பும் எந்த மன்றத்தாலும் கேள்வி கேட்க முடியாதது என்கிற ஒரு இறையாண்மையைத்தான், இந்தச் சட்டமன்றம் பெற்றிருக்கிறது. இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையில் நீதிமன்றம் தலையிடவே முடியாது என்பதுதான் உண்மை. அப்படியிருக்கிறபொழுது, தங்களுடைய, அதாவது இங்கே ஒட்டுமொத்தமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களை வெளியேற்றியதைக் குறித்தும், தாங்கள் அன்றே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்ததைக் குறித்தும், அதேபோல முன்னாள் அமைச்சர்களைப் பின்னாலே உட்கார வைத்திருக்கிறீர்கள் என்பதைக் குறித்தும், ஒரு தீர்ப்பை எதிர்த்து, இப்படி வெளியே பிரச்சினை, அதாவது விமர்சனம் செய்து கொண்டிருப்பது என்பது, அவை உரிமை மீறிய ஒரு செயல் ஆகும். தங்களுடைய judgement க்கு, தீர்ப்புக்கு, உள்நோக்கம் கற்பிக்கக்கூடிய ஒன்று. ஆகவே, தாங்கள் இதைப் பரிசீலித்து, உரிமைக் குழுவிற்கு அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டு அமர்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். சொல்லுங்கள். (குறுக்கீடு) என்னுடைய முடிவைச் சொல்கிறேன். சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். பேசத்தான் சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கவில்லையே! (குறுக்கீடு) இடையிலே

எல்லாம் தலையிட முடியாது. (குறுக்கீடு) நீங்கள் பேச அனுமதிக்கிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? இடையிலே இவ்வாறு குறுக்கிட்டுப் பேச allow பண்ணமாட்டேன். குறுக்கிட allow பண்ணமாட்டேன் முதலில், பேசுவதாக இருந்தால் பேசுங்கள்; இல்லை என்றால் உட்காருங்கள். பிறகென்ன?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, வெளியே இருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்வரிசையிலே உட்கார்ந்து கொண்டு, இந்த மாதிரி comments அடிக்கிற வேலையெல்லாம் இருக்கக்கூடாது. (குறுக்கீடுகள்) தெரிகின்றதா? திரு. விசுவநாதன், முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள், எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்களை, முதலிலே கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, திரு. மணி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியை நாங்கள் எப்படி நடத்த வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். அதை நீங்கள் சொல்லித்தர வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் பார்க்கிறோமே! (குறுக்கீடு) உட்கார்ந்து கொண்டு பேசுகிறார்கள். எழுந்து நின்று பேசினால்தானே தெரியும், யார் என்று!

*முற்பகல் 11-30*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞானசேகரன் அவர்கள் ஓர் உரிமை மீறல் பிரச்சினையைப், பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியைப்பற்றி, என்ன விமர்சனம் நடைபெற்றிருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டினார்கள். நாங்கள், இதற்கு முன்னாலேயே சபையிலே, 'எங்கள் உரிமை மீறப்பட்டிருக்கிறது' என்று உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்தபோது, அதை நீங்கள் அனுமதிக்கவில்லை. நாங்கள் எங்கே ஐ.நா. சபைக்கா கொண்டு சென்று அந்தப் பிரச்சினையை எடுக்கமுடியும், இங்கே நீங்கள் அனுமதிக்காத காரணத்தால்? நாங்கள் கேட்கிறோம், அன்றைக்கு நாங்கள்





எல்லாம் பல்வேறு உரிமை மீறல் பிரச்சினைகளை உங்கள்மீது கொண்டுவந்தபோது, அவற்றை நீங்கள் அனுமதிக்கவில்லை. ஆகவேதான், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற மாண்புமிகு அம்மா அவர்கள், இந்தச் சபை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, விதிகளுக்கு மாறாக, சபை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அவர் சுட்டிக்காட்டியிருக்கிறாரே தவிர வேறல்ல. அப்படிச் சுட்டிக்காட்டுகிறபோது, அவர் அங்கே அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கிற செய்தியைச் சுட்டிக் காட்டி, இந்தச் செய்தி வந்திருக்கிறது என்று சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற உறுப்பினர்களுக்கு notice நீங்கள் முதலிலே அனுப்ப வேண்டும், உரிமைக் குழுவிற்கு அனுப்புவதற்கு முன்னால். அந்த விதிமுறைகள் இருக்கிறது. அந்த விதிமுறைகளை நீங்கள் பின்பற்றியிருக்கிறீர்களா என்பதை நான் இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு) இருங்கள் திரு. ஞானசேகரன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்—சொல்கிறபோது, அவர்களுக்கு ஏதோ அனுமதி அளிக்கவில்லை என்று சொன்னார்கள். இதே முதலமைச்சரின்மீதே அவர்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் அவர்கள் சொன்ன உரிமைப் பிரச்சினைக்கு, இதே அவையிலே அனுமதி அளித்தவர்—அந்த உரிமை மீறல் பிரச்சினைபற்றிப் பேசுவதற்குச் சொல்லி, அதை நிராகரித்து இருக்கிறார்—நடந்திருக்கிற வரலாறு. தயவுசெய்து, மாண்புமிகு உறுப்பினர், இதே அவையிலே ஒரு வாரத்திற்கு முன்புவந்த செய்தியைக்கூட மறந்துவிட்டுப் பேசக்கூடாது. உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள், முதலமைச்சர்மீது கொடுத்த உரிமை மீறலுக்கே அனுமதி அளித்திருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, இந்த விதியைக் கேட்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சித் தலைவர்மீது உரிமைப் பிரச்சினையை திரு. ஞானசேகரன் அவர்கள் எழுப்பி இருக்கிறார்கள். காரணங்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய

எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், 'அவர்களுடைய அறிக்கையிலே இந்தச் சபையிலே நடந்த சம்பவங்களைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்' என்று சொல்லியிருக்கிறார். அதோடு நிறுத்தி இருந்தால் பாவாயில்லை. இதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடருவேன் என்றும் அந்த அறிக்கையிலே இருக்கிறது. இந்த அவையிலே நடக்கின்ற நிகழ்ச்சிகளைக் குறித்து, உச்ச நீதிமன்றத்திற்கும் போகமுடியாது; உயர் நீதிமன்றத்திற்கும் போகமுடியாது. எல்லா அதிகாரமும் படைத்தவர் சட்டப் பேரவைத் தலைவராகிய நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், ஒரு முதலமைச்சராக இருந்தவர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் இந்த அவையினுடைய மரபுகளைத் தாண்டி, நாங்கள் நீதிமன்றத்திலே வழக்குத் தொடருவோம் என்று மிரட்டுவது என்பது, indirect-ஆகப் பேரவைத் தலைவரை மிரட்டுவதாகும். ஆகவேதான், இந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்; தீர்ப்பு தலைவர் அவர்கள் தருவார்கள். (கூச்சல்--குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய verdict -ஐச் சொல்லுகிறேன்: முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய verdict- ஐச் சொல்லுகிறேன். உட்காருங்கள். உட்காருங்கள். I will tell you the ruling. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். உங்களைக் கேட்டாகிவிட்டது. ஒவ்வொன்றுக்கும் பேசிக்கொண்டிருக்க முடியாது. நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசிக்கொண்டே இருக்க முடியாது.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவையையோ, பேரவைத் தலைவரையோ அவமானப்படுத்துவதை நான் ஒருநாளும் ஒத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் சொல்லுகிறபோது, அவை உறுப்பினர்களுக்கு, அதாவது notice கொடுக்க





வேண்டும் என்று சொன்னார். அதிலே '220 proviso-- provided further that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice and deal with the matter as he deems fit.' அவை நடந்து கொண்டிருக்கிறபோது அவை உறுப்பினர்கள்மீது உரிமை மீறல் கொண்டு வந்தால், அதைத் தாங்கள் waive பண்ணலாம். அதை நீங்கள் நிராகரித்து உடனடியாக அதை எடுத்துக்கொள்ளலாம் என்று 220 விதி மிகத் தெளிவாகச் சொல்கிறது அவை நடந்துகொண்டிருக்கிற காரணத்தால். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள் திரு. மணி. (குறுக்கீடுகள்) சீக்கிரம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையைக் கிளப்புகிறார். கடந்த முக்கால் மணி நேரமாக அ.தி.மு.க. உறுப்பினர்கள், அவரைப் பேசவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நடவடிக்கை என்பது, அவருடைய பிரச்சினையிலே தலையிடுவது; சபையை நடத்த விடாமல் செய்வது; அவர் பேசுவதற்கு முட்டுக்கட்டைப் போடுவது என இந்த அவையினுடைய நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள், தொடர்ந்து இதுதான் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், (கூச்சல்-குழப்பம்) நான் பேசுகிறேன், இடையிலே பேசக்கூடாது தயவுசெய்து. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், திரு. விசுவநாதன், பேசவேண்டுமென்றால், என்னிடம் அனுமதி கேட்டுக்கொண்டு பேசவேண்டும். சும்மா உட்கார்ந்துகொண்டு பேசுவது முறையல்ல. தெரிகிறதா? (குறுக்கீடுகள்) முதலில் உட்கார்ந்துகொண்டு பேசுவது தவறு. நீங்கள் எல்லோரும் அமைச்சராக இருந்தவர்கள்; முதலில் விதியை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். உட்காருங்கள் முதலில் (குறுக்கீடுகள்) விதி எனக்குத் தெரியும், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் விதியைத் தெரிந்துகொண்டு பேசுங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர்கள்தான், நீங்கள் எல்லோரும் அமைச்சராக இருந்தவர்கள்தான், இந்த அவையினுடைய விதியை நிறைய தடவை மீறுகிறீர்கள். அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) கேளுங்கள். (குறுக்கீடுகள்) என்மீது நீங்கள் குற்றச்சாட்டுச் சொல்லி, முடிவு என்ன

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 18

ஆனது என்று தெரியும். அதற்கு அப்புறம் நீங்கள் பேசாமல் இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. மணி, சொல்லுங்கள்.

முற்பகல் 11-35

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. தொடர்ந்து குழப்பம் விளைவிக்கிறது. உதாரணத்திற்கு நான் கோடிட்டுக்காட்டுகிறேன். இப்பொழுதுகூட, இந்த நாட்டில் அமைதி வேண்டுமென்ற அடிப்படையில் நல்லிணக்க உணர்வை உண்டாக்கக்கூடிய வகையில், உறுதிமொழி எடுக்கச் சென்றோம். அந்த உறுதிமொழி எடுக்கக்கூடிய நிகழ்ச்சியிலேகூட, அ.தி.மு.க. உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. (குறுக்கீடுகள்) வரவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். Sir, அவர் பேசிக் கொண்டிருக்கையில், என்ன Sir இது? (குறுக்கீடுகள்) No, No. (குறுக்கீடுகள்) No, No. உட்காருங்கள். எல்லோரும் முதலில் உட்காருங்கள். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டுமென்றால், என்ன காரணத்திற்காக நீங்கள் வரவில்லை என்பதைச் சொல்லிவிட்டுப் போங்கள். அவ்வளவுதானே? (குறுக்கீடுகள்) பின்னர் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) பின்னர் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வரவில்லை என்று சொல்கிறார். (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், முதலமைச்சர் அவர்கள் சென்ற பல்வேறு உறுதிமொழி நிகழ்ச்சிகளில், தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க. எல்லா எதிர்க்கட்சிகளும் கலந்துகொண்டோம். ஆனால், ஓர் ஒற்றுமையை மதிக்காத, இந்த நாட்டில் அமைதி நிலவுவதை விரும்பாத கட்சியாக அ.தி.மு.க. இருந்துகொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல. (குறுக்கீடுகள்) கடந்த ஐந்தாண்டுக் காலத்தில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. பொள்ளாச்சி ஜெயராமன், திரு. வைத்தியலிங்கம், திரு. ஜெயக்குமார், அவையினுடைய நடவடிக்கைகளுக்கு நிரம்ப இடையூறு செய்கிறீர்கள். நான் கட்டாயம் நடவடிக்கை, serious-ஆக எடுப்பேன். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். திரு. மணி, பேசுங்கள்.



2006 ஆகஸ்ட் 18]

**திரு. ஜி.கே. மணி:** இன்னொன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஆளுங்கட்சியாக இருந்த நேரத்தில், இந்தச் சபையை எப்படி நடத்தினார்களோ, அதேமாதிரி இப்பொழுதும் நடத்த வேண்டுமென்று நினைக்கிறார்கள். எப்படி முடியும்? நான் ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தை மட்டும் சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** கடந்த ஐந்தாண்டு கால இந்தச் சட்டமன்ற நிகழ்வு என்பது, கூண்டோடு வெளியேற்றுவதும், குண்டுக்கட்டாகத் தூக்கிப்போடுவதும் போன்ற நிகழ்வுகள்தான் இந்தச் சட்டமன்றத்திலே நடந்துகொண்டிருந்தன. ஆனால்—அப்படிப்பட்ட நேரத்தில்— பேசுவதற்கு இப்போது உரிமை கொடுக்கப்படுகிறது; அ.தி.மு.க.-வினர் முழுவதும் பேசுகிறார்கள்; முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர்கூட, 2 மணி 5 நிமிடங்கள் பேசினார். கடந்த காலங்களிலே பேச வாய்ப்புக் கொடுக்கப்பட்டதா? கொடுக்கப்படவில்லை. இப்படி எல்லா உரிமைகளையும் பெற்று, இந்தச் சபையை நடத்தவிடாமல் செய்வது, இன்னும் சொல்லப்போனால் அ.தி.மு.க. இதைப்பற்றிப் பேசுவதற்கு அருகதையே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) வெளிப்படையாகச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உண்மை. பேசவே கூடாது. (குறுக்கீடுகள்) பேசக் கூடாது. எப்படிப் பேச முடியும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது... (குறுக்கீடுகள்) முதலில் உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி, பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. சார்பிலே துணைத் தலைவரோ அல்லது கொறடா அவர்களோ பேச அனுமதி கேட்டால், நீங்கள் அனுமதிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

[2006 ஆகஸ்ட் 18

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேச அனுமதி எங்கே கொடுக்கப்பட்டது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** கொடுத்துதான் இப்பொழுது பேசினீர்கள்! (குறுக்கீடுகள்) இப்பொழுது பேசினீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைராஜ், கொஞ்சம் அமைதியாக இருக்கமாட்டீர்களா? (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆனால், இந்த அவையினுடைய கவனத்திற்கு ஒரு செய்தியைக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய எதிர்க்கட்சிக் கொறடா இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சில விளக்கங்களைக் கேட்டார். ஆனால், கொறடாவிற்குப் பின்னாலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர், திருத்தணி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. அரி அவர்கள், அடிக்கடி எழுந்து கூச்சல் போடுகிறார். எல்லோருமாக எழுந்து கூச்சல் போடுகிறார்கள். அவரைப்பற்றி மட்டும் ஒரு செய்தியை நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கையிலே இருப்பது 13 7 1990 தேதியிட்ட 'மாலை முரசு' பத்திரிகை. திரு. அரியைப்பற்றி, அவர்கள் படத்துடன் போட்டிருக்கின்ற செய்தியைச் சொல்கிறேன். "திருநாவுக்கரசு வீட்டில் மாட்டப்பட்டிருந்த ஜெயலலிதா படங்களைக் கழற்றி, வெளியே கொண்டுவந்து, ரோட்டில் போட்டு, மிதித்து, உடைத்த காட்சி" என்று செய்தி போட்டுள்ளார்கள். உடனே, "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகையிலே, புரட்சித் தலைவி அவர்கள் அறிவிக்கிறார்கள்; குப்பங்கண்டிகை கிராமம், கோ. அரி, என்பவரைப் பொறுப்பிலேயிருந்து நீக்கி வைப்பதாக அறிக்கை விட்டிருக்கிறார்கள். நான் ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு காலத்திலே ஒரு கட்சிக்கு எதிராகச் சில பேர் செயல்பட்டிருப்பார்கள்; பிறகு அந்தக் கட்சியேகூட அவர்களை அங்கீகரித்து, வாய்ப்புக் கொடுத்திருக்கும். இதையெல்லாம் எண்ணிப் பார்த்து, முன் வரிசையிலே இருக்கக்கூடிய கட்சித் தலைவர்கள் பேசுகின்ற நேரத்தில், அவர்கள் பேசுவதற்கு இடமளிக்காமல் அனைவரும் சேர்ந்து, எழுந்து பேசுவது, இப்படிக் குறுக்கிடுவது என்பது முறைதானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, என்னுடைய findings-ஐக் கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)



2006 ஆகஸ்ட் 18] [பேரவைத் தலைவர்]

முடியாது. உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் ஒன்றைச் சொல்கிறேன், கேளுங்கள். அதாவது இங்கேயுள்ள அமைச்சர்கள் எல்லாம், எல்லோருமே கடந்தகாலத்திலே எப்படி நடந்தது என்பதைச் சொன்னார்கள். நான் rules-படியே.... (குறுக்கீடுகள்) இதைப் பாருங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-40

**திரு. கோ. அரி:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே அனுமதியில்லாமல் பேசாதீர்கள். (குறுக்கீடு) திரு. அரி, (குறுக்கீடு) திரு. அரி, அனுமதி இல்லாமல் பேசக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நான் விதிப்படி நடந்துகொள்ளுங்கள் என்று சொல்கிறேன். விதிப்படி (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். நீங்கள் சொல்வது எதுவுமே அவை record-இலே பதிவாகாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் என்னுடைய தீர்ப்பைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி அவர்கள், அது என்னுடைய படமல்ல, யாருடைய படத்தையோ காட்டுகிறார்கள் என்று சொல்கிறார்கள். என்னிடத்திலே இருப்பதைத் தங்களிடத்திலே ஒப்படைக்கிறேன். நான் கொடுத்த இந்தத் தகவல், நான் பேசிய பேச்சு, தவறானது என்று சொன்னால் (குறுக்கீடுகள்) இல்லை, என்மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவருவதற்கு மாண்புமிகு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடு)

*(மாண்புமிகு அமைச்சர், ஒரு பத்திரிகையை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் அளித்தார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி. (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) சும்மா எழுந்து எழுந்து நிற்காதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) சும்மா காரணம் இல்லாமல் சப்தம் போட்டுக்கொண்டிருக்கக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. அரி, ஒரு வார்த்தையிலே சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அது உண்மையில்லை என்று சொல்லிவிட்டீர்கள். அவ்வளவுதானே?

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

***திரு. கோ. அரி:** இது என்னுடைய அரசியல் வாழ்விலே களங்கம் கற்பிக்கின்ற பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையில்லாத ஒரு குற்றச்சாட்டை இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விசாரணை செய்து, என்னுடைய அரசியல் சூழ்ச்சியாளர்களால் அன்றைக்கு நான் வேறொரு அணியைச் சார்ந்தவர்களோடு இருந்தேன் என்பதாக, இருந்தேன், என்று சொல்வதைவிட... அவர்கள் அம்மாவினுடைய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். அமைதியாக இருங்கள்.

**திரு. கோ. அரி:** அம்மா அவர்களுடைய ஆதரவாளர்களாக இருக்கும்போது அவர்களுடன் நான் இருந்தேன் என்பதாகக் குற்றமாகச் சாட்டி, நான் தொடர்ந்து அம்மா அவர்களின் அணியிலே இருக்கக் கூடாது என்பதற்காக என்னுடைய அரசியல் சூழ்ச்சியாளர்கள் செய்த சதி. அந்தப் படம் என்னுடைய படம் அல்ல. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரூபித்தால், (குறுக்கீடு) என்னுடைய M.L.A. பதவியை இராஜினாமா செய்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது என்ன சொல்கிறீர்கள், திரு. அரி? (குறுக்கீடு) திரு. அரி.

**திரு. கோ. அரி:** என்னுடைய M.L.A. பதவியை இராஜினாமா செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, அதுதான் உங்கள் உள் கட்சி சண்டையிலே வந்தது என்று சொல்கிறீர்கள், அவ்வளவுதானே?

**திரு. கோ. அரி:** ஆமாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. கோ. அரி:** என் photo கிடையாது. (குறுக்கீடு) அது என் photo கிடையாது.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக இருந்தால், ஏன் அன்றையதினம் அவர் அ.தி.மு.க.-விலே இருந்து நீக்கப்பட்டார்? (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். உங்களைப்பற்றித் தவறான செய்தி வந்தது அல்லவா? இதுவரைக்கும் நீங்கள், ஏதாவது notice கொடுத்திருக்கிறீர்களா? நீங்கள் வழக்கறிஞர்; Notice ஏதாவது கொடுத்திருக்கிறீர்களா? Paper-லே வந்திருக்கிறது அல்லவா? Damages Suit ஏதாவது போட்டிருக்கிறீர்களா? (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. கோ. அரி:** கேளுங்கள், ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு அம்மா அவர்கள்... (குறுக்கீடுகள்) ஒரு நிமிஷம் பேச விடுங்கள். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியிலே எங்களுக்குள்ளே இருக்கின்றவர்கள், சில பொய்யான தகவல்களைச் சில நேரங்களிலே கொடுக்கும்போது, நடவடிக்கை எடுக்கப்படுவது, காலங்காலமாக நடைபெற்றிருக்கிறது. அந்தவகையிலே, எங்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். நடவடிக்கை எடுத்த பின்னாலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் முறையிட்டதன்பேரில், அவர்கள் அழைத்து உடனடியாகப் பேசி, அது நான் இல்லையென்று மீண்டும் அந்த இயக்கத்திலே சேர்க்கப்பட்டு, தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறேன் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். சொல்லிவிட்டீர்கள். கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். அதாவது, என்னுடைய finding-ஐச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) திரு. மணி, சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ.க. மணி, இப்போது சொல்லுங்கள்.

[2006 ஆகஸ்ட் 18

*முற்பகல் 11-45*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள்மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் உண்மையில்லாத காரணத்தால், ஏதோ அவசரக் கோலத்தில் அது கொடுத்தது என்ற காரணத்தினால், அதை விவாதிப்பதற்குக்கூட எடுத்துக்கொள்ளாமல், உடனே அனுமதித்த நேரத்தில், வெளிநடப்பு என்ற பெயரால் வெளியேறிவிட்டார்கள். ஆகவே, விவாதிப்பதற்கே தகுதியில்லாதவர்கள், இப்போது மீண்டும் அந்தப் பிரச்சினையைக் கிளப்புவது, (குறுக்கீடுகள்) அறிக்கை விடுவது எந்தவகையிலும் பொருத்தமில்லை. அதைத்தான் இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, நீங்கள் வழுவில்லாதவர்கள். அப்பழுக்கு இல்லாதவர்கள்; உடனடியாக அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, தன்மான உணர்வோடு இருந்த காரணத்தினால்தான், நீங்கள் இறங்கிச் சென்றீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை முன்னவர், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு, ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இந்தப் பேரவையிலே கொண்டுவந்த தீர்மானம் தோல்வியடைந்தது. அதைப் பேசவே முடியாது. ஆக, இப்படிப்பட்ட பேரவைத் தலைவர் அவர்கள்மீது, களங்கம் கற்பிக்கவேண்டும் என்கின்றவகையில், இந்தச் சட்டமன்றத்திற்கு இருக்கிற அதிகாரத்தை, பேரவைத் தலைவர் அவர்களுக்கு இருக்கிற அதிகாரத்தை, உரிமையை மீறக்கூடியவகையில், வெளியிலே அறிக்கை கொடுப்பது, இந்தச் சட்டமன்றத்தை அவமானப்படுத்துகிற, கொச்சைப்படுத்துகிற செயல் என்கிற காரணத்தாலேதான், இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, பா.ம.க. சார்பிலே வலியுறுத்தி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையினுடைய மரபையும் (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே, அவையினுடைய மரபு (குறுக்கீடுகள்) அவைத் தலைவருடைய உரிமை, இதையெல்லாம் பாதுகாக்கிறவகையிலே (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுத்தாக வேண்டியிருக்கிறது. Suo motu-வாக நடவடிக்கை எடுக்க எனக்கு அதிகாரம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) எடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் இங்கே privilege issue, raise பண்ணியிருக்கிறார். அவர் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். அதன்மேலே என்னுடைய முடிவைச் சொல்கிறேன். 26-5-2006 அன்று... (குறுக்கீடுகள்) No, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, உட்காருங்கள் முதலிலே.



2006 ஆகஸ்ட் 18] [பேரவைத் தலைவர்]

26-5-2006 அன்று சட்டமன்றப் பேரவையில், பேரவை விதிகளைத் தொடர்ந்து மீறி, முறையற்றுப் பயன்படுத்தி, பேரவை அலுவல்களை நடைபெறாது இடைமறித்ததன் காரணமாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என பலமுறை எச்சரித்த பின்னரும், தொடர்ந்து எனது கட்டளைக்கு மாறாகச் செயல்பட்டுக் கொண்டிருந்ததன் காரணமாகவும், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் பேரவையில் இருந்து வெளியேற்றுமாறு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அத்தீர்மானம் பேரவையினால் நிறைவேற்றப்பட்டது. அதன் அடிப்படையில், அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவையிலிருந்து வெளியேற்றுமாறு நான் பேரவைக் காவலர்களுக்கு ஆணையிட்டேன்.

முந்தைய ஆட்சியில், பல்வேறு சமயங்களில், இதுபோன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட பெயரைச் சொல்லித் தீர்மானம் நிறைவேற்றாமல், ஒட்டுமொத்தமாக, ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதாகக் கூறி, உறுப்பினர்களை அவையைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

உதாரணமாக, 10-4-2003 அன்று, அன்றைய அவை முன்னவர், திரு. சி. பொன்னையன் அவர்கள் கீழ்க்கண்டவாறு தீர்மானம் கொண்டு வந்துள்ளார்கள்:

“அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு செயல்படுகிற, அரசியல் மேடையாக இந்த அவையை மாற்ற முயற்சிக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களை அவையைவிட்டு வெளியேற்ற வேண்டும்” என்று.

அதேபோன்று, 15-3-2005 அன்று, “அவையின் கண்ணியத்தைக் குறைக்கின்றவகையிலும் பேரவைத் தலைவர் அவர்களை அவமானப்படுத்துகின்றவகையிலும், அவையிலே குழப்பம் விளைவித்து கலாட்டா செய்கின்ற தி.மு.க.-வினரை அவையைவிட்டு வெளியேற்ற வேண்டும்” என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டு உள்ளனர். இதுபோல, 7-3-2005 மற்றும் 27-9-2005 ஆகிய நாட்களிலும் ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்பட்டு உள்ளனர். எனவே, முந்தைய ஆட்சியில் பின்பற்றிய முன்னுதாரணங்களின் அடிப்படையில்தான், 26-5-2006 அன்று தீர்மானம் முன்மொழியப்பட்டு, அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டனர்.

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 18

கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், பலமுறை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டுள்ளனர். எனவே, இதில் எந்த விதி மீறலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன் எழுப்பியுள்ள மற்ற பிரச்சினைகள் குறித்து ஆய்ந்து அறிக்கை அனுப்புமாறு பேரவை விதி 226-ன்கீழ் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த அலுவலுக்குப் போகலாம். (கூச்சல் குழப்பம்) (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன் எழுந்து நிற்கிறார்; (குறுக்கீடு) இவர் எதற்கு எழுந்திருக்கிறார்? அவரை இவர்தான் தூக்கிப் பிடித்திருக்கிறாரா? உட்காரச் சொல்லுங்கள் முதலில் அவரை. (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் இருந்த மாதிரிகளைக் காட்டி, அன்றைய தினம் அனைவரும் வெளியேற்றப்பட்டார்கள் என்று ஓர் உதாரணத்தைக் காட்டுவது, விதிகளை நம் கையிலே வைத்துக் கொண்டிருக்கிறபோது, அந்த விதிகளின் அடிப்படையில் நீங்கள் நடந்துகொள்ள வேண்டுமென்றுதான் நாங்கள் வலியுறுத்தினோமே தவிர, பல உதாரணங்களைக் காட்டி, அதை வைத்து நாங்கள் இப்போது அனைவரையும் வெளியேற்றினோம் என்று சொல்வது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய, வெளியே வந்திருக்கிற பத்திரிகைச் செய்தியை வைத்து நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்புவதைக் கண்டித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களாகிய நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள்.



## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

## தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 26 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### (ஆ) கோரிக்கை எண் 47 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - இந்து சமய அறநிலையத் துறை

---

### (அ) கோரிக்கை எண் 26 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006-2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ரூ. 33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ. 108,50,00,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல்.

வெட்டுத் தீர்மானம் எண் 5602, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7221, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2358, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.





**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,50,00,000/-ல், ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5812, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் குடிசை மாற்று வாரியத்தின்மூலம் புதிய வீடுகள் கட்ட வேண்டியதின் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6680, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொழிப் போர்த் தியாகிகளுக்கு இலவச வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,50,00,000/-ல், ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7343, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் உள்ள கூரை வீடுகளை மாற்றி, கல் வீடுகளாகக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7811, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, கண்டாச்சிபுரம் மற்றும் அரகண்டநல்லூர் போன்ற முதல்நிலை சிறப்பு பேரூராட்சிகளில் நகர்ப்புற வளர்ச்சித் துறைமூலம் கடன் வழங்கி, அதிக மாடி வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7836, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் வீட்டு வசதி வாரியத் திட்டத்தைக் கிராமங்களுக்கும் விரிவுபடுத்திக் கூடுதலாக வீடுகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8358, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள அனைத்து ஏழை மக்களுக்கும் வீடு கட்ட ரூ.10,000/- மானியத்துடன் ரூ.50,000/- வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8948, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நகர்ப்புறங்களில் வீட்டு வசதிக் குடியிருப்பு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9043, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில், தேசூர், பெரணமல்லூர், சேத்துப்பட்டு ஆகிய இடங்களில் அரசே குடியிருப்புகளைக் கட்டி, விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5999, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் நகரத்தில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தருவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2850, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3268, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5420, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மர்னத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01 000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6381, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் குடிசை மாற்று வாரியம் புதிய வீடுகள் கட்டி வழங்குவது போல, காங்கேயம் தொகுதியில் தரமான முறையில் குடிசை மாற்று வாரியம்மூலம் வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 0398, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2793, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2005 ஆம் ஆண்டு, சென்னை மாநகரத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பழுதடைந்த வியாசர்பாடி, முல்லை நகர் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளைப் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3125, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3508, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7662, திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3904, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இயற்கைச் சீற்றம், ஜாதிக் கலவரம் இவற்றால் பாதிக்கப்பட்டு, வீடிழந்தவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வழங்கப்பட்ட கடன் இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2133, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி Phase III பகுதியில், பொது மக்கள் வசதிக்காக (public purpose) வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான காலியாக உள்ள இடத்தில், park அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1830, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை தொகுதி, ஆழியாறு பகுதியில் வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3339, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1992-ல் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கால் தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் கரை புரண்டு ஓடியதால் வீடுகள் பெரிதும் அழிந்தன. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்ட கிராமியக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திலிருந்து வீடு கட்ட வாங்கிய கடன் ரூ.10,000 தள்ளுபடி செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3334, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3441, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி ஓட்டப்பட்டியில் கட்டப்பட்டுள்ள அரசுக் குடியிருப்புகளை விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2027, திருமதி பி. பத்மாவதி.

*** திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகரங்களில் நெருக்கடியாக வாழும் ஏழை எளிய மக்களுக்கு அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1983, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதியில் உள்ள போளூர், களம்பூர் பெண்ணாத்தூர், கணியம்பாடி போன்ற ஊர்களில் நடுத்தர மக்கள், ஏழைகள் பயன்பெறும்வகையில், வீடுகள் கட்டித்தர (கடனாக) அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5585, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5654, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், ராசிபாளையத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் 0 கட்டித்தர அரசு முன்வர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9294, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6504, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை எல்லீஸ் நகர், வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் உள்ளவர்களுக்கும், இதுபோன்று தமிழகம் முழுவதும் குடியிருப்பவர்களுக்கும் முழுத் தொகையும் கட்டி முடித்த பிறகும் பத்திரம் கிடைக்காத நிலையை மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6914, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8467, திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8214, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8543, திரு. டி. மூர்த்தி.



**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதி, மறைமலை நகர் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புப் பகுதிகளுக்கு வாரியம் அதிக தொகை நிர்ணயித்துள்ளது. அதனைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8790, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8308, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1962, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் அரசு ஊழியர்களுக்கு வாடகை வீடு மற்றும் ஏழை மக்களுக்குச் சொந்த வீடு கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9170, திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6260, திரு. ரா. வரதராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8705, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூரின் வளர்ச்சிக்கு ஏற்ப அடிப்படை வசதிகளை நிறைவேற்ற, விரிவான master plan வகுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6500, திரு. செ. சின்னச்சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6870, திரு. ஏ.கே. போஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8457, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3374, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வாங்கப்பட்ட வீடுகளுக்கு வட்டி என்பது பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ள நிலையில், வட்டியைத் தள்ளுபடி செய்து கடன் சுமையில் இருந்து மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2949, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டத்தில் விளவங்கோடு மற்றும் கல்குளம் தாலுகாக்களில் 1992-ல் தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் ஏராளமான வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. அவர்களுக்கு விளவங்கோடு மற்றும் கல்குளம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்மூலமாக வீடு கட்ட வழங்கப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையில் அவர்கள் இருப்பதால், அக்கடன்களை இரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2939, திரு. ந. சுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2903, திரு. வி.பி. கலைராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3170, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகரில் காந்தி நகர், பொன்னையாபுரம் பாலன் நகர், எம்.ஜி.ஆர். நகர், சுக்கன் நகர் மற்றும் காட்டுப்பரமக்குடி ஆகிய இடங்களில் மக்கள் வசிக்கக்கூடிய வீடுகளை மராமத்து செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2651, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5750, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6303, திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6018, திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9289, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின்மூலம் கடன் பெற்று, வீடு கட்டித் திருப்பிச் செலுத்த இயலா நிலையிலுள்ளவர்களின் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்திடவும், இந்நிர்வாகத்தினர் கடன் பெற்றவர்களை இழிவுபடுத்தும் நோக்கத்தில் ஜப்தி நடவடிக்கை, ஏல அறிவிப்பு, தண்டோரா போடுதல் முதலியவற்றால் கம்பைநல்லூர், பாப்பிரெட்டிப்பட்டி பகுதிகளில் நிகழ்ந்த தற்கொலை சாவுகள் மற்றும் சிறு வயது பிள்ளைகள் வீட்டில் ஒரு நாள் முழுவதும் வாடும் நிலையில், வீட்டைப் பூட்டி மொரப்பூர் பகுதியில் கடும் அச்சுறுத்தலும் பதற்றத்தையும் ஏற்படுத்தியதைக் கைவிடவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5458, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5491, திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4871, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி நகரப் பகுதியில் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் இருப்பவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவுடன் வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4443, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2484, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5136, திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8148, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Tentative மற்றும் வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்து, ஏற்கெனவே செலுத்தப்பட்டுவிட்ட பணத்திற்கு வீடுகளை வீட்டு வசதி வாரியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.346,84,35,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.33,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8069, திரு. ஆர். ஞானதாஸ், இருக்கையில் இல்லை.

முற்பகல் 11–55

## (ஆ) கோரிக்கை எண் 47 – தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47, தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,84,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.8.5,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1848, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் உள்ள முடீஸ் அருள்மிகு முருகன் சுப்பிரமணியர் திருக்கோவிலிலும், மாரியம்மன் கோவிலிலும் நவீன கழிப்பிடங்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/–ல், ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7529, திரு. சு. சிவராஜ்.



**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் ஒன்றியம், ரிஷிவந்தியம் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் உடனுறை முத்தாம்பிகை அம்மன் ஆலயத்திற்குக் குடமுழுக்கு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/–ல், ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3242, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/–ல், ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6357, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காங்கேயம் தொகுதி, தாங்கல் வட்டமலைக் கோவிலைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/–ல், ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9436, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் அறநிலையத் துறையின்கீழ் உள்ள கோயில்களைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2362, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4125, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி பேரூராட்சியில் உள்ள முருகன் கோவிலுக்கு ஆண்டுதோறும் ஆடி மாதம் பல்லாயிரக்கணக்கான மக்கள் காவடி எடுத்துவந்து, தரிசித்து முடி காணிக்கை செய்து வருகிறார்கள். முடி காணிக்கை செலுத்திவிட்டு வருவோர் குளிக்க தண்ணீர் அறவே இல்லை. எனவே, இங்குள்ள குளத்தைத் தூர் எடுத்து ஆழப்படுத்தி பக்தர்களுக்குக் குளிக்க வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4359, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள ஆலய ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5839, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6616, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டுக் கோயில்களில் நுழைவுக் கட்டணத்தை இரத்து செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7878, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் தமிழிசையை வளர்க்க குழு ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2812, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6503, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3847, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரம், பெரியசிங்களாந்தி, மணிகண்டேஸ்வரர் ஆலயம் திருப்பணி முடிவடைந்து குடமுழுக்கு விழா நடைபெறாமல் உள்ளது. மேற்கண்ட கோயிலுக்குக் குடமுழுக்கு விழா நடத்தவேண்டியதன அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9086, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்றாயப் பெருமாள் கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் அமைந்துள்ள (ஓமலூர் தொகுதி, செல்லப்பிள்ளைக்குட்டை ஊராட்சியிலுள்ள) ஹைடெக் (இரும்பு) தொழிற்சாலை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6915, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7511, திரு. க. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3236, திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3313, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3954, திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3930, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், சாப்டூர் சாகம், சுந்தரமகாலிங்கம் கோயில் மேம்படுத்தப்பட்டு சாலை வசதி செய்து தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5881, திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5555, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7565, திரு. செ. சின்னச்சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1982, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதி, சோளிங்கரில் உள்ள அருள்மிகு ஸ்ரீலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் பழனி தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்திலுள்ள rope car திட்டம்போல செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1996, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற படவேடு அம்மன் கோயிலைச் சுற்றி கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் 20-30 ஆண்டுகளாக வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள். (சுமார் 200 குடும்பங்கள்) அவர்களுக்கு அரசு அந்த இடத்திற்குப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3846, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களைப் பள்ளிக் கூடங்கள் கட்டுவதற்கு இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2180, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்து சமய ஆலயங்களில் உள்ள ஓதுவார், அர்ச்சகர் ஆகியோரின் சம்பளத்தை உயர்த்தி அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1964, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, திருமணஞ்சேரி சுகந்த பரிமளேஸ்வரர் ஆலயம் பழுதடைந்து உள்ளதால் அதைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்சசி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8834, திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8341, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு முழுவதும் உள்ள அறநிலையத் துறைக்கு உட்பட்ட கோயில் நிலங்களில் கல்வெட்டு வைத்து அதில் நில சர்வே நம்பர், கிராமம், கோவில் விவரங்கள், விவரப் பட்டியல் வைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8199, திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3418, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்போருக்கு அந்த இடங்களைக் குறிப்பிட்ட விலை நிர்ணயித்து, அவர்களுக்கே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9214, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9147, திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9290 , திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், கடத்தூர் அருகே உள்ள புளியம்பட்டி கிராமத்தில் வசித்து வரும் வீர சைவ மரபினர் எனப்படும் லிங்காயத்து சமூக மக்களின் சமாதியை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை தனது நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்துள்ளது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 85,00,000/-ல், ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8004, திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6302, திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6052, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெடடுத் தீர்மானம் எண் 6040, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை ஒன்றியம், பரமத்தி வேலூர், காவேரி ஆற்றின் கரையோரம் அமைந்துள்ள மிகவும் பழமைவாய்ந்த காசி விசுவநாதர் ஆலயத்திற்குத் திருப்பணி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 85,00,000/-ல், ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7309, திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3011, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிதி வசதி இல்லாமல் உள்ள கிராமக் கோயில்களுக்கு, ஒரு கால பூஜை நடத்திட வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 85,00,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8441, திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2587, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொடக்குறிச்சி தொகுதியைச் சார்ந்த நாகமலை முருகன் மலைக்கோயில் மீது சுற்றுப்பாதை அமைக்க வனத் துறையிடம் அனுமதி பெறுவது குறித்தும், கிராமப்புற கோயில்களுக்கு அரசு உதவித் தொகை வழங்குவது பற்றியும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 85,00,000/-ல், ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6282, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் ஏழை ஆதி திராவிடர் மக்கள் பலர், கோயில் நிலங்களில் நீண்டகாலமாக வசித்து வருகின்றனர். அவர்களுக்குப் பட்டா கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8699 திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "கோயில் நிலங்களில் நீண்டகாலமாகக் குடியிருந்துவரும் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 85,00,000/-ல், ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4417 திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5445, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5498, திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5320, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2796, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மண்டைக்காடு பகவதி அம்மன் திருக்கோயில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். எனவே நெடுங்காலமாக கும்பாபிஷேகம் நடத்தப்படாமல் இருக்கும் சூழ்நிலையை மாற்றி அரசு நிதி ஒதுக்கீடு வழங்கி, விரைந்து கும்பாபிஷேகம் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத் துறை இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.85,00,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5334, திருமதி இளமதி சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2457, திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5138, திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4847, திரு. எஸ்.வி. சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4911, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்துக் கோயில்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்களை எடுத்து, நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 85,00,000/-ல், ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8016, திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8151, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், வடலூர் வள்ளலார் தர்மசாலையில் நிலவிவரும் சீர்கேடுகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 85,00,000/-ல், ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8112, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி தொகுதியில் உள்ள திருவதிகை வீரட்டானேஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ. 32,84,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ. 85,00,000/–ல், ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8594, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் உள்ள பல கோயில்கள் பாழடைந்து, நிர்வாக அமைப்பு சரியில்லாத நிலையை மாற்றி புதுப்பித்து, சரியான நிர்வாக அமைப்பு ஏற்படுத்தி பணி தொடர வழி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ. 32,84,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஓதுக்கப்பெறுகின்ற ரூ. 85,00,000/–ல், ரூ. 100/– குறைக்க வேண்டும்."

நண்பகல் 12–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை* நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை – இந்து சமய அறநிலையத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை** நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியங்களின்கீழ் நடைபெறும் விவாதத்தில் பங்கேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

---

* 509 முதல் 546 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

** 547 முதல் 580 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

நிதிநிலை அறிக்கையை, நீதியை நிலைப்படுத்துகிற ஓர் அரசு ஆணையாக, சமூக நீதியைச் சமன்படுத்துகிற ஒரு சாசனமாக, இந்தியத் துணைக் கண்டமே வியப்போடும், வினாக் குறியோடும், செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் செயலகத்தைத் திரும்பிப் பார்ப்பது மட்டுமல்ல; பாராட்டுகின்ற அளவிற்கு வரியில்லாத நிதிநிலை அறிக்கையை முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வரியில்லாத நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும், வரிக்கு வரி தமிழனைப் பலப்படுத்துகின்ற, தமிழகத்தை வளப்படுத்துகின்ற, வலிமைப்படுத்துகின்ற அறிக்கையாக, வறிய ஏழையெளிய மக்களுக்கும், வசதி படைத்த மேட்டுக்குடி மக்களுக்கும் இடையிலே இருக்கின்ற இடைவெளியை இட்டு நிரப்புகின்ற, ஏற்றத்தாழ்வைச் சமப்படுத்துகின்ற அறிக்கையை வடித்துள்ள, திராவிட முன்னேற்றக் கழகமென்னும் கூட்டுக் குடும்பத்தின் பாட்டுடைத் தலைவராக இருக்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இணைந்து நிதிநிலை அறிக்கையை வழங்கியிருக்கின்ற மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், என்னுடைய அரசியல் பயணத்தின் ஆன்ம பலமாகவும், அடி நாதமாகவும், ஆதார சுருதியாகவும் உள்ள மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், உள்ளாட்சியை மட்டுமல்ல; என்னுடைய உள்ளத்தையும் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) பேரவையில், இந்த என் கருத்துகளைப் பதியவைக்க அனுமதி அளித்திருக்கின்ற தங்களுக்கும், முதல்முறையாக 1996-2001-இல் திருத்தணித் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தத் திருத்தணித் தொகுதி மக்களுக்கு ஆற்றிய பணிகளைத் தொடர்ந்து, திருவள்ளூர் தொகுதி மக்களுக்கும் ஆற்றுவேன் என்ற நம்பிக்கையோடு, எனக்கு ஒரு மகத்தான வெற்றியைத் தேடித்தந்த திருவள்ளூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தோழர்களுக்கும், தலைவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்து, கடுமையாக உழைத்து, பெற்ற வெற்றியைத் தலைவர் கலைஞர் அவர்களின் கரங்களிலே ஒப்படைத்த கழகத் தோழர்களையும், முன்னோடிகளையும் வணங்கி, என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

அறநிலையத் துறை என்பது, தமிழின் தொன்மையை, தமிழரின் பழம்பெருமையை, பண்பாட்டை, நாகரிகத்தை, கலாச்சாரத்தை நானிலத்திற்குக் காட்டும் கண்ணாடி, காலக் கண்ணாடி, கலங்கரை விளக்கம் என்பதை நாம் அறிவோம். அதற்குச் சாட்சியங்களாக



இருப்பவைதான் வடவேங்கடம் முதல் தென்குமரி ஈறாக, தமிழகமெங்கும் இருக்கின்ற திருத்தலங்கள், கோயில்கள், கோபுரங்கள், தடாகங்கள், திருமதில்கள், சிற்பங்கள், ஓவியங்கள். அறநிலையத் துறைக்குச் சொந்தமாக 4 இலட்சத்து, 79 ஆயிரத்து, 138 ஏக்கர் நிலம் இருப்பதாக, கடந்த ஆட்சியில், 2005-2006 கொள்கை விளக்கக் குறிப்பிலே படித்தேன். அந்த 4 இலட்சத்து, 79 ஆயிரத்து, 138 ஏக்கரும் நம்முடைய அறநிலையத் துறையின் முழுக் கட்டுப்பாட்டில், அனுபவத்தில், ஆளுமையில் உள்ளதா என்பதைத் தங்கள்மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய நான் விரும்புகிறேன்.

பிற்பகல் 12-05

இயற்கை நமக்கு அளித்த கொடையாக இருந்தாலும், நம்முடைய மூதாதையர் நமக்கு விட்டுச் சென்றிருக்கின்ற சொத்தாகவும் இருக்கின்ற ஆறுகள், ஏரிகள், குளம் குட்டைகள், கால்வாய்கள், கண்மாய்கள் ஆகியவற்றையெல்லாம் நாம் கட்டிக்காத்து, அடுத்த தலைமுறையிடம் எப்படி ஒப்படைக்க வேண்டியது நம்முடைய கடமையோ, அதேபோன்று அறநிலையத்திற்குச் சொந்தமான நிலத்தில் ஒரு அங்குலம்கூட அளவு குறையாமல், ஒரு சென்ட்கூட அதிலே சேதாரம் ஏற்படாமல், அடுத்த தலைமுறையிடம் ஒப்படைப்பது நம்முடைய தலையாய கடமை மட்டுமல்ல; தார்மீகப் பொறுப்பும் ஆகும் என்பதையும் இந்தச் சபையிலே நான் பதியவைக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"சித்திரச் சோலைகளே - உமை நன்கு
திருத்த இப் பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம்
சொரிந்தனரோ! உங்கள் வேரினிலே"

என்று பாடினாரே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்; ஒரு சோலையை உருவாக்குவதற்கே நம்முடைய தோழர்கள் எவ்வளவோ பேர் இரத்தம் சிந்தியிருக்க வேண்டுமென்று சொன்னால், உலக அற்புதங்களாக, உலக அதிசயங்களாக இருக்கின்ற புராதனச் சின்னங்கள், வான்முட்டும் கோபுரங்களை வடிக்க, திருக்குளங்களை வெட்ட, திருமதில்களை எழுப்ப, நம் முன்னோர்கள் எத்தனை பேர் இரத்தம் சிந்தியிருக்கவேண்டும்; எத்தனை பேர் உயிர்த் தியாகம் செய்திருக்கவேண்டும் என்று எண்ணிப் பார்க்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, அன்று 'பராசக்தி' திரைப்படத்தின்மூலமாக, குன்றின்மீது ஏறி நின்று, குவலயத்திற்கே நம்முடைய கொள்கையைப் பறைசாற்றினீர்களே, 'கோயிலில் குழப்பம் விளைவித்தேன், கோயில்கூடாது என்பதற்காக அல்ல; கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக்கூடாது என்பதற்காக. பூசாரியைத் தாக்கினேன்; அவன் பக்தன் என்பதற்காக அல்ல; பக்தி, பகல்வேஷம் ஆகிவிட்டதைக் கண்டிப்பதற்காக. ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டு, தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறதே மீன்' என்று; நீங்கள் அன்று கோயில்களையும், திருக்குளங்களையும், தடாகங்களையும் வர்ணித்தீர்களே, அந்தக் கோயில்களின் இன்றைய நிலை என்ன? தடாகங்கள் என்று வர்ணித்தீர்களே, அதனுடைய கோலங்கள் என்ன? சுண்ணாம்பும் மண்ணும்கூட, நம்மால் பூசிப் பராமரிக்க முடியாமல் பாதுகாக்க இயலாமல், பல கோயில்களின் சுவர்கள் சிதிலமடைந்து, சிதைந்து கிடக்கின்ற காட்சிகள், திருக்குளங்கள் எல்லாம் வறண்டு, விளையாட்டுத் திடல்களாக மாறிவிட்டிருக்கின்ற துயரமும், கழிப்பறை மைதானங்களாக திருக்குளங்கள் மாறிவிட்ட கொடுமையும், தமிழகம் எங்கும் நீக்கமற நிறைந்த காட்சிகளாக இருக்கின்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, ரிஷிமூலம், நதிமூலம் என்பார்களே, இந்தத் திருக்குளங்களின் வரவுக் கால்களின் மூலத்தை நீங்கள் கண்டுபிடியுங்கள். அவையெல்லாம் அடைபட்டு, concrete சாலைகளாகவும், கட்டடங்களாகவும் இன்று உருமாறியிருக்கின்றன. ஈரடிக் குறளுக்குத் தூரிகை தூக்கி, 'குறளோவியம்' அமைத்து, திருக் குறளுக்கு எங்களுக்கு மூலத்தைக் காட்டியவர் நீங்கள். சங்கத் தமிழ்ப் சலங்கை கட்டி சதிராட விட்டு, அந்த சங்கத் தமிழைச் சாதாரணத் தமிழனுக்கும் மூலத்தைக் காட்டியவர்கள் நீங்கள்.

சிலப்பதிகாரத்தை, இளங்கோவடிகளை, சேரன் செங்குட்டுவனை, சோழனை, பாண்டியனை, பல்லவனை, பாயும் புலி பண்டாரக வன்னியனை, பெரிய மருதுவை, சின்ன மருதுவை, பொன்னர் சங்கரை, தென்பாண்டிச் சிங்கத்தை, தொல்காப்பியரை, காலப் பேழையைப், கவிதைச் சாவியையும், தமிழன் கைகளில் கொடுத்து தமிழ் மூலங்களையெல்லாம் எங்களுக்குக் காட்டியவர் நீங்கள்.

'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்ற அரசாணையின்மூலமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழனும், அன்னைத் தமிழும் சுமந்து கொண்டிருந்த இழிவைத் துடைத்து, ஆண்டவனின் கருவூலத்தை, மூலஸ்தானத்தை,



காட்டிய நீங்கள், இந்தத் திருக்குளங்களின் வரவுக் கால்களின் மூலத்தைக் கண்டு செப்பனிட்டு, வரும் நாட்களில் தமிழகக் கோயில்களில், திருக்குளங்களில், தடாகங்களில் 365 நாட்களும் நீர் நிறைந்திருக்கின்ற காட்சிகளை உருவாக்கித் தரவேண்டும். ஆலயங்களையெல்லாம், பூத்துக் குலுங்குகின்ற பூஞ்சோலைகளாக, நறுமணம் கமழும் நந்தவனங்களாக, ஆன்மீகத்தை மட்டுமல்ல; அமைதியைக் கொடுக்கும் அறச்சாலைகளாக நீங்கள்தான் அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே உங்களைத் தாழ்மையோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா கலந்துகொண்ட நிகழ்ச்சிகள், செய்திகள் எல்லாம் அன்றைய காலத்திலே இருட்டடிப்புச் செய்து, ஆதிக்க சக்திகள் திட்டமிட்டு எப்படி மறைத்தன என்பதை வேதனையோடு நீங்கள் பல்வேறு சமயங்களிலே நினைவுகூர்வீர்கள். 'Anna also spoke' என்று ஆங்கில நாளேடுகளிலே செய்தி வெளியிட்டு அன்று இழிவுபடுத்தி, ஏளனம் செய்த அதே சக்திகள்தான் இன்றும் தலைதூக்கி, நம் கோயில்களில், 'தமிழிலும் அர்ச்சிக்கலாம்' என்ற அறிவிப்பை வைத்து, நம்மை அவமானப்படுத்துகின்றன. இந்த மாமன்றத்தில், மாண்புமிகு உறுப்பினர் இந்தச் செய்தியை அறிவித்ததும், தமிழக ஆலயங்களிலிருந்து அந்த அறிவிப்பை அகற்றிட ஆணையிட்டீர்கள். தமிழ் இனம் உங்களை நன்றியோடு வணங்கிக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் *12-10*

அதேபோன்று, கோயில்களிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளை, ஆலயப் பகுதிக்கு வெளியிலும், தொலை தூரங்களிலும் குடியமர்த்தாமல், துறை சம்பந்தமான பணிகள் தொய்வின்றி நடக்க, கண்காணிக்க, கோயில் வளாகப் பகுதிகளிலேயே அந்த அதிகாரிகள் குடியிருக்கச் செய்யவேண்டுமென்றும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் தணிக்கைப் பிரிவு உள்ளது; கோயில்களில் தவறு செய்த அதிகாரிகள், முறைகேடுகளுக்குத் துணைநின்ற அதிகாரிகள் என்ற விவரம், குறிப்புகள் அங்கே இருக்கின்றன; எனவே, தணிக்கை அறிக்கையை ஆய்வு செய்து, தவறு செய்தவர்கள், அதற்குத் துணைபோனவர்கள்மீது, நீங்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், திருவள்ளூர் மாவட்டத்திலே அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலைச் சார்ந்த, திருப்பாச்சூர், திருவாலங்காடு, நெடும்பரம், மத்தூர் மற்றும் திருத்தணி கோயில்களைச் சுற்றுலாப் பட்டியலிலே நீங்கள் இடம்பெறச் செய்து, பேருந்து

வசதிகளைச் செய்துதர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். கோயில்களில் நிரப்பப்படாத பணியிடங்களை நிரப்ப வேண்டும். அதுவும் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசாமி ஆலயத்திலே, பல பணியாளர் பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அந்தப் பணியிடங்களையும் நிரப்பித் தர வேண்டுமென்றும், கோயில் சொத்தை அபகரிப்பவர்கள்மீது, கைப்பற்றுபவர்கள்மீது, குண்டர் சட்டம் பாயுமளவிற்கு நீங்கள் கட்டாயம் சட்டத்தைத் திருத்தித்தர வேண்டுமென்றும், பக்தர்களுக்குக் கோயில் வளாகப் பகுதியில் தூய்மையான கழிவறைகள் உருவாக்கப்பட வேண்டுமென்றும், இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதி பிரச்சினை குறித்து தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதும், என்னுடைய கடமை என்கின்ற காரணத்தினாலே, அந்த உணர்விலே சில கோரிக்கைகளை இம்மாமன்றத்தின்மூலமாகப் பணித்திட விரும்புகிறேன்.

திருவள்ளூர் மாவட்டமே, தலைவர் முதல்வர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டம். மாவட்டத்தைத் துவக்கியவுடனே, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டி, எழிலார்ந்த கட்டடத்தையும், ஒருங்கிணைந்த திட்ட வளாகத்தையும் உருவாக்கினார்கள். அதா வேகத்தில் திறப்பு விழாவினையும் நடத்தினார்கள். திருவள்ளூர் தலைநகராமாக உயர்ந்தும், இணை வேளாண்மை இயக்குநர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி அலுவலகம், மாவட்டத் தொழில் மையம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், சுகாதாரப் பணிகள் இயக்குநர் அலுவலகம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம், வனத் துறை அலுவலகம், தாட்கோ அலுவலகம், குடிநீர் வடிகால் வாரிய அலுவலகம், கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகம், ஆகிய தலைநகருக்கு அணி சேர்க்கும் இந்த அலுவலகங்கள் எல்லாம் வாடகைக் கட்டடங்களில்தான் இன்று இயங்கி வருகின்றன. அனைத்தையும் ஒருங்கிணைத்துச் செயல்படும்வகையிலே, அந்த மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்திலேயே, அந்த அலுவலகங்களை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியின்கீழ்தான், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கிகள் இயங்குகின்றன. காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து, அசையும் மற்றும் அசையாச் சொத்துகளுடன், திருவள்ளூர் மாவட்டக் கூட்டுறவு வங்கியைத் தனியாகப் பிரித்து, அது செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



திருவள்ளூர் தலைநகராமாக இருந்தும், அங்கு அரசு உயர்நிலைப் பள்ளி ஏதும் இல்லை. ஆண்கள் மேல்நிலைப் பள்ளி இல்லை. அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லை. அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி இல்லை. அரசினர் தொழில் பயிற்சி நிலையம் இல்லை. இவற்றையெல்லாம் திருவள்ளூரிலே அமைத்துக்கொடுத்து, மாவட்டத் தலைநகருக்குப் பெருமையைச் சேர்க்கவேண்டுமென்று தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எதிர் வரிசையிலே இருந்துகூட, கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல், எல்லாமும் கொடுக்கின்ற நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்தக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருவார்கள் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பூண்டி, செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் போன்ற நீர்த்தேக்கங்களினால்தான், இவை உள்ள திருவள்ளூர் மாவட்டம்தான், சென்னை மக்களின் தாகத்தைத் தீர்க்கிறது. அந்த நன்றி உணர்வோடு கோடைக்காலங்களிலே, நீர்ப் பற்றாக்குறையைத் தடுக்க, திருவள்ளூர் மாவட்டத்திலே பெரிய ஏரிகளை, நீர்த்தேக்க ஏரிகளாகத் தரம் உயர்த்தி ஆழப்படுத்தியும், ஆரணி, கொசஸ்தலை, கூவம் ஆறுகளில், ஆங்காங்கே தடுப்பணைகளைக் கட்டியும், மழைக் காலங்களில் வீணாகக் கடலில் கலக்கும் வெள்ள நீரை நிலைப்படுத்தினால், நிலத்தடி நீர் உயரும். நிலத்தடி நீர் உயர்ந்தால், நெல் உயரும். நெல் உயர, விவசாயக் குடி உயரும். விவசாயக் குடி உயர, நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞரின் கோல் உயரும்; அவ்வை மூதாட்டியின் கனவும் நினைவாகும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடைசியாக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் மிகவும் சிறப்பாகச் செயல்பட்ட காரணத்தினாலே, சென்னை இந்திரா நகரில் 44 ground-களைக் கொண்ட 22 plot களை, எந்தவிதமான விலையும் நிர்ணயம் செய்யப்படாமல், 22 plot களையும், கடந்தகால ஆட்சியிலே ஆக்கிரமிப்புச் செய்திருந்தார்கள்; அதையெல்லாம், உடனே நம்முடைய அரசு, பொற்கால ஆட்சி ஏற்பட்டு, இந்த 90 நாட்களில், போர்க்கால நடவடிக்கை எடுத்து, அந்த 44 ground-களையும் கைப்பற்றியிருக்கிறது. இதுபோன்ற துரித நடவடிக்கை எடுத்த இந்த அரசை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதேபோன்று, சென்னை, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள வளசரவாக்கம், திண்டுக்கல்

மற்றும் மதுரை போன்ற பல்வேறு இடங்களில் வாரிய quota-விலுள்ள plot-களை, அரசு quota-வாக மாற்றி விற்பனை செய்திருக்கிறார்கள். இதனால் வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்புக்குக் காரணமானவர்கள், இதில் எத்தனை கோடி கைமாறியது என்பதையெல்லாம் கண்டறிந்து, இந்த அரசு நடவடிக்கை எடுத்து, அதற்குக் காரணமானவர்கள்மீது criminal நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, என் கருத்துகளை இங்கே பதியவைப்பதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. அருள் அன்பரசு. *(குறுக்கீடு)*

***மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவாஜியினுடைய பேச்சு, காலஞ்சென்ற எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பாடிய சுப்ரபாதம்போல் இனிமையாக இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு.

***திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். மாதா, பிதா, குரு, தெய்வம். இது சான்றோர் வாக்கு. எனை ஈன்ற மாதாவையும், பிதாவையும் முதலில் வணங்கி, குருவாகிய அன்னை சோனியா காந்தி அவர்கள், இந்த இளைஞன்மேல் நம்பிக்கை வைத்து, என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய அம்மாவுக்கெல்லாம் அம்மா, அன்னைக்கெல்லாம் அன்னை, வந்த பதவியை வேண்டாம் எனப் புறந்தள்ளி, 'தேசநலன் ஒன்றே என் வாழ்வின் இலட்சியம்' எனச் சொல்லி, 100 கோடி இந்தியர்களின் நெஞ்சமெல்லாம் குடிகொண்டிருக்கும் எனது அருமைத் தலைவி, அன்னை சோனியா காந்திஜிக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் சிரம் தாழ்ந்த வணக்கம்.

மேலும், சோளிங்கரில் குடிகொண்டு, தமிழக மக்களைக் காத்துக் கொண்டும், என்னை இந்த இளவயதில் சட்டமன்ற உறுப்பினராக அருள்பாலித்த அருள்மிகு யோக நரசிம்மருக்கும், அருள்மிகு யோக ஆஞ்சநேயருக்கும், கமலமலர்ப் பாதம் தொட்ட வணக்கம்.



என்னுடைய வெற்றிக்கு ஒத்துழைத்த தானைத் தலைவர், தமிழினத்தின் ஒரே தலைவர், தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இளைய தளபதியும், என்னைப் போன்ற பலகோடி இளைஞர்களின் பகலவன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அன்பு அண்ணன் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் ஒப்பற்ற தலைவர் திரு. கிருஷ்ணசாமி அவர்களுக்கும், மத்திய இணை அமைச்சர்கள் மாண்புமிகு அய்யா ஜி.கே. வாசன் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் மாண்புமிகு ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் சுதர்சன நாச்சியப்பன் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மாண்புமிகு சின்ன அய்யா அவர்களுக்கும், தோழர் தா. பாண்டியன் அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்புமிகு பெரியவர் காதர் மொய்தீன் அவர்களுக்கும், தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகச் சகோதரர்களுக்கும், எனது அருமை அண்ணன், வேலூர் மாவட்டக் காவலரும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், டாக்டர் கலைஞரின் அன்புத் தம்பி, அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், வேலூர் மாவட்டக் கழகச் செயலாளரும், இராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினரும், தளபதியின் அன்புக்குரியவருமான அண்ணன் திரு. காந்தி அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு பேரவை உறுப்பினர், அருமைச் சகோதரர், திரு. ஜகன்மூர்த்தி அவர்களுக்கும் இவர்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாக என்மேல் நம்பிக்கைவைத்து இந்த இளையவனைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய என் சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி மக்களாகிய எனது அருமைச் சொந்தங்கள் அனைவருக்கும் என் சிரம் தாழ்ந்த அன்பு வணக்கங்கள்.

அருள்மிகு யோக நரசிம்மர் கோயில் மலைக்கு, rope car வசதி செய்து தரவேண்டுமென நான் முதன்முதலில் பேரவையில் பதவியேற்கும்போது, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையில், உடனே அதற்கான ஆயத்தப் பணிகளைச் செய்ய உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வருக்கு, எனது கோடானுகோடி நன்றிகள்.

எனது சோளிங்கர் தொகுதியில் பிரசித்திப் பெற்ற அருள்மிகு யோக நரசிம்மர், அருள்மிகு யோக ஆஞ்சநேயர் கோயிலுக்குக் கும்பாபிஷேகத் திருப்பணிகள் நீண்டநாட்களாகச் செய்யப்படாமல் உள்ளன. தமிழக முதல்வர் அவர்கள், மேற்படி கோயில் கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, தமிழகத்தின் பல்வேறு கோயில்கள் கும்பாபிஷேகத் திருப்பணிகளுக்காகக் காத்துக் கிடக்கின்றன. அந்தக் கோயில்களுக்கெல்லாம் உங்களது ஆட்சியிலே கும்பாபிஷேகப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

உலகப் பிரசித்திப் பெற்ற அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயம் சோளிங்கர் தொகுதியில் உள்ளதால், இவ்வரசு சோளிங்கரைச் சுற்றுலா மையமாக அறிவித்து, ஆக்கபூர்வமான பணிகளைச் செயல்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில், தமிழகக் கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கும்பொருட்டு, கோயில் சொத்துக்களைக் கொள்ளையடித்தவர்களையெல்லாம், அபகரித்தவர்களையெல்லாம் நியமித்தார்கள். 'சிவன் சொத்து குலநாசம்' என்பார்கள். அதுபோல் அல்லாமல், தங்களது பொற்கால ஆட்சியில் இந்துக் கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமிக்கும்பட்சத்தில் அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்பளிக்கும்வகையிலும், சென்ற ஆட்சியில் நியமித்ததுபோல் அல்லாமல், அவர்கள் கொஞ்சமாவது ஆன்மீக நாட்டம் உள்ளவர்களாகவும் நியமிக்கப்பட வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அரசுக் கோயில்களில் நிரப்பப்படாமல் உள்ள அதிகாரிகளை உடனடியாக நியமிக்க வேண்டும்.

கோயில் நிலங்களை அபகரித்து வைத்திருப்பவர்களிடமிருந்து அந்த இடங்களையெல்லாம் அரசு பறிமுதல் செய்து, பொதுமக்களுக்குப் பயனளிக்கும்வகையிலே கல்விச் சாலைகளையோ, தொழிற்சாலைகளையோ மற்றும் விளையாட்டு மைதானங்களையோ அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பல வருடங்களுக்கு முன்னாலேயே, 'பராசக்தி' என்ற திரைப்படத்தில், 'கோயில் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை; அது கொள்ளையர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது' என்று முழக்கமிட்ட டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



பிற்பகல் 12-20

இந்தியாவிலே, எங்குமில்லாத அளவிற்கு ஒரு முன்னுதாரணமாக சமத்துவபுரம் கண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை வெளியிட்டமைக்குத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, தமிழகத்தில் கோயில் நிலங்கள், பல்வேறு நபர்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு விடப்பட்டு, அவர்கள் அனுபவத்திலும் இருக்கின்றன. அந்தக் குத்தகைப் பணத்தை முறையாக அவர்கள் செலுத்துவதில்லை. அதனால், அந்தக் கோயில் நிலங்களைக் குத்தகைக்கு விடப்பட்ட நபர்களுக்கே, இன்றைய market மதிப்பிற்கே கிரயம் செய்து கொடுத்தால், பல கோடி ரூபாய் அறநிலையத் துறைக்கு வரும்; அப்படி வரும் உபரியான வருமானத்தை வைத்து, நலிந்த கோயில்களைச் சீரமைக்கலாம் என்பதனை இந்த அவைக்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

என் சோளிங்கர் தொகுதியில் நெசவாளர்கள், விவசாயிகள் அதிகம். சென்ற ஆட்சிக் காலத்தில் நடந்த அவலங்களின் காரணமாக, விவசாயிகளும், நெசவாளர்களும் எலிக் கறி சாப்பிட்டதை, முன்னாள் முதல்வர் மாண்புமிகு அம்மையார் அவர்கள், சட்டமன்றத்திலே, 'அவர்கள் எலிக் கறியைப் பசிக்காகச் சாப்பிடவில்லை; ருசிக்காகத்தான் சாப்பிட்டார்கள்' என்றதைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நினைவிலேகொண்டு, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அவர்களை நாங்கள் சந்தித்து வெளியிட்ட கோரிக்கையின் அடிப்படையில், நெசவாளர்களின் நெஞ்சத்தில் பால்வார்க்கும் நிகழ்வாக, சிட்டா நூலுக்கு முழுமையாக வரி இரத்து செய்ததற்கும், இலவச மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்ததற்கும், கூட்டுறவுக் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ததற்கும், தமிழகத்திலே வாழ்கின்ற இலட்சோப இலட்சம் விவசாயிகள் மற்றும் நெசவாளிகளின் சார்பாக மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கின்ற நம் முதல்வர் அவர்கள், எனது சோளிங்கர் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரியோ அல்லது அரசுப் பொறியியற் கல்லூரியோ தொடங்கி, மாணவ மாணவிகளின் வாழ்விலே ஒளியேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சோளிங்கர் பகுதியை வாலாஜா வட்டத்திலிருந்து பிரித்து, தனி வட்டமாக, சோளிங்கர் வட்டமாக அறிவித்து, அப்பகுதி மக்களின் வாட்டத்தைப் போக்க வேண்டுமாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாக வசதிக்கேற்ப, எனது சோளிங்கர் தொகுதியில் உள்ள காவேரிப்பாக்கம் ஒன்றியத்தை இரு ஒன்றியங்களாகப் பிரித்து அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வேலூர் என்றாலே கல்விக் கண் திறந்த காமராசர் அவர்களுக்கு, காவேரிப்பாக்கம் மிகப் பெரிய ஏரிதான் நினைவுக்கு வரும் என்பார்கள். அந்தக் காவேரிப்பாக்கம் ஏரி, நீண்ட ஆண்டுகளாகத் தூர் வாரப்படாமல் இருக்கின்றது. குறைந்தது பத்து அடி ஆழத்திற்காவது தூர் வாரி, வரும் மழைக் காலத்திற்குள் சீர் செய்துதர வேண்டுகிறேன். அப்படிச் செய்தால், ஏரியைச் சுற்றியுள்ள பல கிராமங்களுக்கு நீர் வரத்து ஏற்பட்டு, விவசாயிகள் பயனடைவார்கள் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, எனது சோளிங்கர் தொகுதியிலே காவேரிப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட பாணாவரம் பகுதியில் உள்ள இரயில்வே level crossing- ஆல், பொதுமக்கள் பல மணி நேரம் காத்துக் கிடந்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நலன் கருதி, அந்த இடத்திலே இரயில்வே மேம்பாலம் ஒன்றை உடனடியாக அமைத்துத்தர இந்த அவையிலே கேட்டுக்கொள்கின்றேன்.

எனது சோளிங்கர் தொகுதியில், பல கிராமங்களில் மின் வெட்டும், குறைந்தழுத்த மின்சாரமும் நீடித்து, பொதுமக்களையும், விவசாயிகளையும், நெசவாளர்களையும் பாதிப்புக்குள்ளாக்கி இருக்கின்றது. மேலும், நீண்டநாட்களாக காவேரிப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட பல கிராமப் பஞ்சாயத்துகளில், Shift Current முறை செயல்படுத்தப்பட்டு, விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, சீரான மின்சாரமும், முழுநேர



மின்சாரமும், மின்வெட்டும் அறவே இல்லாத நிலையையும் ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த அவைக்கு ஒரு முக்கியமான வேண்டுகோளாக, TANSI நில விவகார விஷயமாய் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுவது என்னவென்றால், TANSI வழக்கில் அரசு ஊழியராக இருந்து, முறைகேடாக நிலத்தைக் கையகப்படுத்தியதில் தொடரப்பட்ட வழக்கில், முன்னாள் முதல்வர் அவர்கள், Court கண்டித்ததில், அவர் அந்த இடத்தை, 'நான் அரசுக்கே திருப்பித் தந்துவிடுகிறேன்' என்று சொன்னதன்பேரில், அரசு TANSI இடத்தை மறுபதிவு செய்துகொள்ள பத்திரச் செலவு சுமார் 3 கோடி ரூபாய் செலவாகும் என்று இருந்ததை, இந்த அவையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து, மறுபதிவிற்கு 35 இலட்சம் ரூபாய் செலுத்தி, அரசே பதிவுசெய்துகொள்ளலாமா எனப் பரிசீலனை செய்யப்படும் என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார். ஆனால், இந்த 35 இலட்சம் ரூபாய் பணத்தையும் தவறிழைத்த முன்னாள் முதல்வர் அம்மையாரிடமே வசூல் செய்ய வேண்டும் என்று இந்த அவையில் நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பயங்கரவாத எதிர்ப்பு நாள் எனச் சற்று நேரத்திற்கு முன்னாலே, நாம் உறுதிமொழி ஏற்படுத்திக் கொண்டோம். இன்னும் இரண்டு நாட்களிலே பிறந்த நாளைச் சந்திக்கின்ற அருமைத் த்லைவர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) நினைவில் கொள்ளும்விதமாகப் பின்வரும் செய்தியை மாண்புமிகு அவைக்குச் சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-25

தற்போது, தமிழ்நாட்டிலே தமிழ் ஆர்வலர்கள் என்ற போர்வையில், இந்தியா முழுவதும் தடை செய்யப்பட்ட இயக்கமான, எங்களின் பாசமிகு தலைவர் பாரத ரத்னா, நம்மையெல்லாம் 21 ஆம் நூற்றாண்டுக்கு இனிதே அழைத்துச் செல்ல, கனவு கொண்டிருந்த பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களை, இந்தத் தமிழ் மண்ணிலே படுகொலை செய்த, ஆதரவான அந்த இயக்கத்திற்கு ஆதரவாக சில இயக்கங்களும், சில கட்சிகளும் கூக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த வாரம் ஒரு வார இதழில், தமிழகக்

கட்சியின் ஒரு தலைவர், கனடா நாட்டில் பேசிய உரையை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த உரையில், தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாக அவர் பேசியிருப்பது, எங்களுக்கெல்லாம் மிகுந்த மன வருத்தத்தை அளிக்கின்றது. ஏனெனில், இந்தியாவில் உள்ள அனைத்துக் காங்கிரஸ்காரர்களுக்கும் தலைவராக மட்டுமல்ல; குடும்பத்திலே தாயாகவும், தந்தையாகவும் இருந்த அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையை நினைத்து இந்நாள்வரை மிகுந்த வேதனையில் இருப்பது, உலக அளவில் நிகழ்ந்து வருகிறது. இந்தச் சம்பவம் உண்மையான காங்கிரஸ்காரர் ஒவ்வொருவர் இதயத்திலும் ஆறாத வடுவாக உள்ளது. வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சும்விதமாக, தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசிய (மணியடிக்கப்பெற்றது) அந்தக் கட்சியின் தலைவரைப் பார்த்து ஒன்றே ஒன்றை மட்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** தமிழ்நாட்டிலே 1991 ஆம் ஆண்டு நடந்த ராஜீவ் காந்தி படுகொலை சம்பவம்போல் அவர் வீட்டிலே நடந்திருந்தால், இப்படியெல்லாம் அவர் பேசுவாரா? வெளியில் யாராவது அந்த இயக்கத்திற்கு ஆதரவாகப் பேசினால்தான், அந்தக் கட்சியின் தலைவர் சும்மா இருப்பாரா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் இலங்கைத் தமிழர்கள் பாதிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டோம். அதேநேரத்தில், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான கொள்கையிலும், அவர்கள் நலனிலும் நாங்கள் முன்னிற்கின்றோம். ஆனால், தலைவர் ராஜீவ் காந்தி அவர்களைப் படுகொலை செய்த அந்தத் தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாகப் பேசுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அமைதிப் பூங்காவான தமிழகத்தைக் கலவரப் பூமியாக மாற்ற நினைக்கும் சதிகாரர்களை இனம்கண்டு, இரும்புக் கரம்கொண்டு இந்த அரசு கடும் நடவடிக்கை எடுத்து ஒடுக்குமாறு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

உலக நாடுகளில் தற்சமயம் தீவிரவாதம் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கும்போதும், தமிழகம் மட்டும் அமைதிப் பூங்காவாக, டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் திகழ்வதை இந்த அவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், கடந்த ஆட்சிக் காலத்திலே நல்லவர்களெல்லாம் சிறையிலும், தீயவர்கள்



எல்லாம் வெளியேயும் உலாவிக் கொண்டிருந்ததைத் தமிழகம் அறியும். ஆகவே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்வகையிலே செயல்பட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் நலன் காக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஏழ்மையான இளைஞர்கள், அவர்கள் சார்ந்த துறைகளில் சாதனைகள் புரிய, அவர்களை ஊக்குவிக்கும்விதமாக, பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கிராம அளவிலே சாதனை படைத்த பல இளைஞர்கள், வசதியின்மை காரணமாக, கிராமங்களிலே முடங்கிவிடுகிறார்கள். விளையாட்டுத் துறை, அறிவியல் துறை, கல்வித் துறை ஆகியவற்றிலே சிறப்புடன் மிளிரும் இளைஞர்களை மாவட்டவாரியாகக் கணக்கெடுத்து, அவர்களையெல்லாம் மாண்புமிகு அரசு தத்தெடுத்து உரிய உதவிகள் அனைத்தும் செய்து, வட்ட, மாவட்ட அளவிலே அவர்களது சாதனைகள் மங்கிப் போகாமல், மாநில அளவிலும், (மணியடிக்கப்பெற்றது) இந்திய அளவிலும், ஏன் உலக அளவிலேகூட, இளைஞர்கள் சாதனைகள் படைத்திட, அவர்களை ஊக்குவித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் அருள்வாக்கை முடித்துவிடுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** அய்யா, கன்னிப் பேச்சு; 5 நிமிடம் extend பண்ண வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போதுதான் பேசுகிறீர்களா?

**திரு. அருள் அன்பரசு:** ஆம். எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, இந்த ஆண்டு பிளஸ் 2 தேர்வு வெளியிடப்பட்ட பிறகு, மறுமதிப்பீட்டிற்கு 2,003 மாணவ மாணவிகளும், மறுகூட்டலுக்கு 4,793 பேரும் விண்ணப்பித்தார்கள். மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்த 2,003 மாணவ, மாணவிகளில் 1,215 பேருக்கு mark அதிகரித்தது. அதேநேரத்தில் 324 பேருக்கு மதிப்பெண் குறைந்துபோனது. இதேபோல மறுகூட்டலுக்கு 4793 மாணவ மாணவிகளில் 191 பேரின் மதிப்பெண் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 3 அமைச்சர்கள் பேச வேண்டும்.

**திரு. அருள் அன்பரசு:** 5 நிமிடம். இதையும் சேர்த்தால், 1,406 பேரின் மதிப்பெண் அதிகரித்துள்ளது. இதிலே கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தவர்களில் 541 பேரின் mark-கள் குறைந்து pass என்ற நிலைமையிலிருந்து fail-ஆன சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், சென்ற ஆண்டுவரை மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பெண் அதிகமாக வந்ததால், உயர்ந்த மதிப்பெண் போடப்பட்டுள்ளது; மதிப்பெண் குறையும்பட்சத்தில், முந்தைய மதிப்பெண்ணே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பாதிக்கப்பட்ட, ஒரு வருடம் வீணாக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ள 541 மாணவ மாணவிகளின் வாழ்விலே ஒளியேற்றி, அவர்களின் ஒளிமயமான வாழ்விற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பழநி திருக்கோயில் பஞ்சாமிர்தம் தயார் செய்யத் தேவையான வெல்லம், ஈரோடு, பெரியார் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், கவுந்தப்பாடி மூலம் தரமான முறையில் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில், தரமற்ற சர்க்கரை தனியாரிடம் வாங்கப்பட்டது. எனவே, விவசாயிகள் நலன் காக்க, மீண்டும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலிருந்து அதனை வாங்க வேண்டுமென்று இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-30

அதேபோல, வேலூர் நகரிலுள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் கோயில் சொத்துக்கள், தனி நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டு முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, அந்தச் சொத்துக்களை அவர்களிடமிருந்து மீட்க, ஒரு குழுவை அமைத்து, அதைக் கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கடைசிப் பக்கத்தைப் படித்துவிட்டால் correct-ஆக இருக்கும்.

**திரு. அருள் அன்பரசு:** இதோ ஒரேயொரு பக்கம்தான். அரியலூர் தொகுதி, கீழப்பழுவூர் ஆலந்துறையார் ஆலயத்திற்குச் சொந்தமான



திருமானூரில், விவசாய நிலங்களைக் குறைந்த ரூபாய்க்குக் குத்தகைக்கு எடுத்து, அதிலே கடைகள் கட்டி பெருந்தொகைக்கு வாடகைக்கு விடுவதைத் தடுக்கவும், அதிலே மரம் அறுக்கும் பட்டறைத் தொழிலைத் தடுக்கவும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கொடுமுடியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்கச் செய்து, பல்வேறு அரசு நலத் திட்டங்கள் கிடைக்க ஏதுவாக, இந்து சமய அறநிலையத் துறையின்சார்பில் கோரிக்கை பெற வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நிறைய பேருக்காகப் பேசுகிறீர்கள்போல் இருக்கிறதே? கன்னிப் பேச்சே இப்படி இருக்கிறதே? நன்றி சொல்லுங்கள்.

**திரு. அருள் அன்பரசு:** அவ்வளவுதான்; முடித்துவிட்டேன். தற்பொழுது தமிழக அரசு, தொகுதி மேம்பாட்டு நிதியாக ஒவ்வோர் ஆண்டுக்கும் ரூபாய் ஒரு கோடியே இருபது இலட்சம், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் கொடுத்து வருகிறது. இதில், எனது சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியைப்போல, பல தொகுதிகள் மிகவும் பின்தங்கி உள்ளதால், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், வரும் நிதியாண்டிலிருந்து சட்டமன்றத் தொகுதிக்கு, வருடத்திற்கு 2 கோடி ரூபாயாக உயர்த்தித் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதி மேம்பாட்டுக்கு உதவிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அவ்வளவுதான், முடிந்தது. ஒரே நிமிடம். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அய்யா அவர்களே, இந்தத் தொகை எங்கள் வீட்டுக்குக் கொண்டு செல்ல அல்ல. தொகுதி நலத் திட்டப் பணிகளை மேலும் சிறப்பாகச் செய்வதற்காக என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

மாண்புமிக்க இந்த அவையிலே, இந்த அளவிற்கு, இந்த இளவலுக்குப் பேச வாய்ப்புத்தந்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் பெரியவர், எங்களுடைய தலைவர், சட்டமன்றத் தலைவர் அண்ணன் டி. சுதர்சனம் அவர்களுக்கும், அக்கா யசோதா அவர்களுக்கும் நன்றி சொல்லி, என்னுடைய கன்னிப் பேச்சில் களங்கம் ஏதுமிருந்தால் என்னை மன்னித்து, மாண்புமிகு அவையோர் வாழ்த்தியருள வேண்டுமென்று கேட்டு, நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். ஜெய் ஹிந்த்!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பெற்றெடுத்த தாய், தந்தையான வீரப்ப கவுண்டர்-பேச்சியம்மாளை இந்த மாமன்றத்திலே வணங்கி, கரட்டூர் என்னும் சிறிய கிராமத்திலே பிறந்த என்னை, பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்டச் செயலாளராகவும், மாநிலத் துணைப் பொதுச் செயலாளராகவும் ஆக்கி, 1989 ஆம் வருடம் பாராளுமன்றத் தேர்தலிலே போட்டியிட வைத்தும், 1991 ஆம் வருடம், சட்டமன்றத் தேர்தலிலே போட்டியிட வைத்தும், இன்று சட்டமன்ற உறுப்பினராக்கி, என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த, இடஒதுக்கீட்டு நாயகர், தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்கள் இருக்கும் இடம் நோக்கி, அவருடைய பாதம் தொட்டு வணங்கி, என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இளைஞர்களுடைய எழுச்சி நாயகனாகவும், அமெரிக்காவில் வழங்கிய Luther L. Terry என்ற விருதினைப் பெற்று, இந்திய மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் பெருமைசேர்த்த, மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை அமைச்சர் அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே, எங்கள் இயக்கத்தினுடைய தலைவராகவும், ஓய்வறியா உழைப்பாளியாகவும், தியாகச் செம்மலாகவும் எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய எங்கள் கட்சியின் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்குத் தலைமையேற்று, ஒரு சிறந்த தேர்தல் அறிக்கையை இந்த நாட்டுக்கு அறிவித்து, தேர்தலின்போது எனது தொகுதிக்கு வந்து, நான் வெற்றிபெறவேண்டுமென்று சொல்லி, வாக்குகளைச் சேகரித்து என்னை வெற்றிபெறச் செய்த, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த, நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, வாழ்த்த வயதில்லாவிட்டாலும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அய்யா அவர்களை இந்த மாமன்றத்திலே வணங்கி, தேர்தலின்போது எனது தொகுதிக்கு வந்து, பல்வேறு இடங்களில் வாக்குகளைச் சேகரித்து, 'நான் தலைவர் மகனாக நின்று வாக்கு கேட்கிறேன்; வாக்குகளைத் தாருங்கள்' என்று சொல்லி, என் வெற்றிக்கு அரும்பாடுபட்ட உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அமைச்சர் தளபதி அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்து, மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராக



இருந்து, எனது தொகுதிக்கும், ஈரோடு மாவட்டத்தில் இருக்கின்ற பல்வேறு தொகுதிகளின் வெற்றிக்குக் காரணமாகப் பாடுபட்டு, இன்றைய கைத்தறித் துறை அமைச்சராகவும், எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சராகவும் இருக்கக்கூடிய மரியாதைக்குரிய திரு. என்.கே.கே.பெ. ராஜா அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் முத்தூர் பெ. சாமிநாதன் அவர்களுக்கும், இந்திய தேசிய காங்கிரசினுடைய தலைவர்களில் ஒருவராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர்களுக்கும்...

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ராமநாதன், கன்னிப் பேச்சு; குறுக்கிடக் கூடாது. எட்டு நிமிடங்கள்தான் கொடுக்கிறேன். நான்கரை நிமிடம் நீங்கள் நன்றி சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள்! அது உங்கள் இஷ்டம். எட்டு நிமிடத்தில் நான் முடித்துவிடுவேன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாம்பழம் சின்னத்திலே வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்த பவானி சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே, இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தமிழ் வளர்ச்சிப் பண்பாடு மற்றும் அறநிலையத் துறை, இந்து சமய அறநிலையத் துறை ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியம், நகரப் பகுதியிலே மட்டும் செயல்பட்டு வருகிறது. இதைக் கிராமப் பகுதியிலும் தமிழ்நாடு முழுவதிலும் விரிவாக்கம் செய்ய வேண்டுமெனவும், கடந்த ஐந்தாண்டுக் கால அண்ணா தி.மு.க. ஆட்சியில், குடும்பத்திற்கு ஒரு வீடு கொடுப்போம் என்று சொல்லப்பட்டது. வீடும் கொடுக்கவில்லை; குறைந்தபட்சம் வீட்டு மனைகூட வழங்கப்படவில்லை. தமிழ்நாடு முழுவதும் கிராமப் பகுதியில் தாத்தா காலம், மகன் காலம், பேரன் காலம் என்று மூன்று தலைமுறை, இரண்டு தலைமுறை காலமாக சாதாரணமான கூரை வீடு, குடிசை வீடுகளில் வாழும் குடும்பங்கள் உள்ளன. அவை, மனைப் பட்டா இல்லாமலும், ஒரு விளக்கு மின்னிணைப்பு இல்லாத குடும்பங்களாகவும் உள்ளன. சுதந்திரம் பெற்று 59 ஆண்டுகள் ஆகியும்,

இவ்வாறு மனைப் பட்டா இல்லாத, சாதாரண பாதுகாப்பு இல்லாத குடிசைகளில் வாழும் ஏழையெளிய மக்களுக்கு, அவர்களுடைய அவலங்களைப் போக்குகின்ற அளவிலே, குடிசை வீடுகளுக்கு மாற்றாக cement அட்டை வீடோ, அல்லது concrete வீடோ இலவசமாகவோ அல்லது பாதி அளவு மானியத்துடனோ இந்த அரசு கட்டிக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். குடிசை வீடுகள் இல்லை என்ற புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் எனப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் குடிசை வீடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த ஏழையெளிய மக்கள், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின்மூலம் கடன் பெற்று வீடுகளைப் புதுப்பித்தார்கள். அது வட்டிக்கு வட்டி என்று கூடுதலாகி, பல மடங்கு கடன் சுமை அதிகரித்து, அவதிப்பட்டு வருகின்றனர். தற்போது ஜப்தி என்ற பெயரில், அதிகாரிகள் மக்களைத் துன்புறுத்தி வருகின்றனர். எனவே, இந்த அவல நிலையை மாற்றிட, கூட்டுறவு வசதிச் சங்கத்தின்மூலம் கடன் பெற்றவர்களின் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கின்றேன்.

தற்போது, தமிழகத்தில் உள்ள பல்வேறு கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பலபேர் அபகரித்து அனுபவித்து வருகிறார்கள். இன்னும் பலபேர் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த நிலையைக் கருதி, தமிழகம் முழுவதும் ஆக்கிரமிப்புச் செய்துள்ள அனைத்து நிலங்களையும் திரும்ப எடுத்து, கோயில்களுக்கு ஒப்படைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கிராமப்புறங்களில் நலிவடைந்துள்ள அனைத்து இந்துக் கோயில்கள், இஸ்லாமிய மசூதிகள், கிறித்தவ ஆலயங்கள் வழிபாட்டிற்கும், பராமரிப்பிற்கும் மாதாந்திர மானியத் தொகை வழங்க வேண்டுமெனவும், மின்னிணைப்புப் பெறாமல் உள்ள நலிந்த திருக்கோயில்களுக்கு இலவச மின்னிணைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

கோயில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற மகத்தான அறிவிப்பை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாட்டாளி மக்கள் கட்சி மனதாரப் பாராட்டி வரவேற்கிறது.



பிற்பகல் 12-40

தமிழ்நாட்டில், தமிழர்கள் வழிபடும் ஆலயங்களில், தமிழில் அர்ச்சனை செய்யப்பட வேண்டுமென்ற பாட்டாளி மக்கள் கட்சி கோரிக்கையை ஏற்று நடைமுறைப்படுத்த ஆணை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்து சமய அறநிலையத் துறையிலும், வீட்டு வசதித் துறையிலும் பணியாற்றிவரும் தற்காலிகப் பணியாளர்கள் அனைவரையும் நிரந்தரமாக்கி, ஊதிய உயர்வு வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரில் பெருகிவரும் நெரிசலைத் தவிர்க்க, தன்னிறைவு பெற்ற துணை நகரம் அமைக்க இருப்பதாக அறிவித்திருக்கும் இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன். சென்னை தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டு கிராமத்தில், ரூபாய் 55 கோடி மதிப்பீட்டில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க இருப்பதை வரவேற்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பொது மக்கள் குறை தீர்க்கும் 16 சேவை மையங்களைத் தொடங்க எடுத்துள்ள முயற்சியைப் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வேலை நிதிப் பணியாளர்களுக்கு உரிய பதவி உயர்வும், இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய முறையான சம்பளமும் 18 ஆண்டுகள் கழித்து வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு எட்டு ஆண்டுகளாகக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

40 இலட்சத்திற்கு மேல் ஆண்டிற்கு வருவாய் உள்ள 16 கோயில்களை முதுநிலைக் கோயில்களாக நிலை உயர்த்தி, 1998-ல் அறிவித்தும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் சுமார் ஒரு இலட்சம் திருக்கோயில் பணியாளர்களுக்கு, ஓய்வூதியம் ரூபாய் 750 வழங்குவதாக அரசு அறிவித்துள்ளது. இத்திட்டத்தைத் திருக்கோயில் பணியாளர்கள் ஏற்கும்வகையிலே மாற்றியமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பணியாளர்களுடைய குறைந்தபட்ச சம்பளத்தை உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ராமநாதன், பேச்சு Rope Car மாதிரி மெதுவாகப் போகிறது!

**திரு. கே.வீ. ராமநாதன்:** கன்னிப் பேச்சு துணைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொஞ்சம் வேகமாக ஓட்டுங்கள்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** கொஞ்சம் வேகமாகப் போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** ஐந்து நிமிடங்கள்தான் ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஐந்து நிமிடங்கள்தான் ஆகிறதா? நீங்கள் நன்றிக்கே எட்டு நிமிடங்கள் எடுத்திருக்கின்றீர்கள்!

**திரு. கே.வீ. ராமநாதன்:** என்னுடைய பவானி தொகுதியினுடைய கோரிக்கையை வைக்கின்றேன்.

அதற்கு முன்பாக, தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே பணிபுரியும் சுமார் 2,500 பொறியாளர்களுக்கு மாதச் சம்பளம் 7,520 வழங்கப்படுகின்றது. மின்சார வாரியப் பொறியாளர்களுக்கு மாதச் சம்பளம் 11,050-ம், தமிழக அரசுப் பொறியாளர்களுக்கு 11,810-ம் வழங்கப்படுகின்றது. ஆகவே, நீண்டநாள் கோரிக்கையாகப் போக்குவரத்துக் கழகங்களுடைய பொறியாளர்கள் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றனர். அரசுப் பொறியாளர்களுக்கு இணையான சம்பளம் அல்லது மின் துறை பொறியாளர்களுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதைத் தாயுள்ளத்தோடு நமது தமிழக முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்து, அவர்களுக்கு அதை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய தொகுதியான பவானி, கைத்தறி ஜமக்காளத்திற்குப் பெயர் பெற்றது. சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுடையதாகும். இந்த ஜமக்காளம் உலகப் பிரசித்திப் பெற்றதாகும். மத்திய அரசு, பவானி ஜமக்காளத்திற்குக் காப்புரிமை வழங்கியுள்ளது. இந்தக் காப்புரிமையைப் பயன்படுத்தி, பவானி கைத்தறி ஜமக்காளத்தை உலக market-இல் விற்பனை செய்திடவும், பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடவும், ஜமக்காளத்தினுடைய விற்பனையை அபிவிருத்தி செய்வதற்கு, பவானி ஜமக்காளத்தினுடைய தாத்தை



உலகத் தரத்திற்கேற்ப மேம்படுத்த, பவானியில் ஒரு பவானி கைத்தறி ஜமக்காளத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பவானியைவிட்டு வாருங்கள்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** நெசவாளர்கள், வியாபாரிகள், அதிகாரிகள் கொண்ட தொழில்நுட்ப வல்லுநர்களைக்கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பவானி நகரில் கூடுதுறை சங்கமேஸ்வரார் கோயில், புராதனச் சின்னம் உடையது. வழிபாட்டுத் தலத்தில் தினமும் சராசரியாக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வழிபாடு செய்கின்றனர். சபரிமலை...

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** கொஞ்சம் வாய்ப்புக் கொடுங்கள் துணைத் தலைவரே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்போது அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டாம் என்கிறீர்களா?

**திரு. கே.வீ. ராமநாதன்:** சில காலங்களிலே சபரிமலைக்குச் செல்வோர் நாள் ஒன்றுக்கு பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் வருகிறார்கள். ஆகவே இந்தத் தலத்தை, மத்திய அரசு சுற்றுலாத் தலமாக அறிவித்து, கழிப்பிட வசதி, தங்கும் வசதி போன்றவற்றைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பவானி கூடுதுறைக்கு வடக்கே சுமார் 3 கி.மீ.-க்கு அப்பால் ஊராட்சிக் கோட்டைமலை இருக்கிறது. இந்த மலைக்குச் செல்வதற்கு, concrete படிகளை அமைத்துத் தர வேண்டும் என்றும், மலையைச் சுற்றி கிரி வலம் செல்வதற்கு, விளக்குகள் அமைத்துத் தரவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

பவானி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கவேண்டும் என்று, பவானி தொகுதி மக்கள், நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்து இருக்கின்றனர். (மணியடிக்கப்பெற்றது) வைரமங்கலம், தளவாய்ப்பேட்டையை இணைக்கும் அந்தப் பாலத்தை, இந்த அரசு கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பவானி நகரா

கிராமங்களுக்கு, பி. குமாரபாளையம் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வருகின்றது. இந்த மின்சாரம் போதிய அளவு இல்லாததால் அந்தத் துணை மின் நிலையத்தை... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி. (குறுக்கீடு) உட்காருங்கள். பவானிக்குப் பிறகு பாலபாரதி. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, முடியாது; அவராலே முடியவில்லை, பாவம். (குறுக்கீடு) எங்கே? பவானியில் இருந்து வரவே மாட்டேன் என்கிறாரே! (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ராமநாதன், இன்னொரு நாள் பேசலாம். நிறைய நாட்கள் நடக்கும். இன்னொரு மானியத்தில் பேசலாம். செல்வி பாலபாரதி, பேசுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடிக்க மாட்டேன் என்கிறாரே! (சிரிப்பு)

**திரு. கே.வீ. ராமநாதன்:** பவானி பழைய பேருந்து நிலையத்திலேயிருந்து town bus-களை இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி சொல்லி விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மற்றும் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்க வேண்டும் என்ற எனது வெட்டுத் தீர்மானத்தைச் சென்ற ஆட்சியில், 2005-2006 மானியக் கோரிக்கையின்போது, இதே சபையில், முன்மொழிந்திருந்தேன்; அந்த அரசு அதை நிறைவேற்றவில்லை. ஆனால், இந்த முறை வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிவதற்குத் தேவையில்லாத அளவிற்கு, ஆட்சிக்கு வந்தவுடனேயே நிறைவேற்றிய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் திண்டுக்கல் இராணி மங்கம்மாள் நகரில், வீட்டு வசதி வாரியத்திடமிருந்து பத்திரங்கள் கோரி நடத்திய அனைத்துப் போராட்டங்களுக்கும் வருகை தந்து, அப் போராட்டங்களை முன்னின்று நடத்தி ஊக்கப்படுத்திய மாண்புமிகு எங்களது மாவட்டத்தினுடைய சட்டம் மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



வீட்டு வசதி வாரியத் துறைக்குப் பொறுப்பேற்றவுடனேயே, நேர்மைமிக்க நல்ல அதிகாரிகளை நியமனம் செய்து, அந்தப் பிரச்சினையை ஆர்வத்தோடு தீர்ப்பதற்கு முன்வந்திருக்கக்கூடிய மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

'கோயில்களில் அன்னதானத் திட்டத்தைத் துவக்கியவர்கள் நாங்கள்' என்று கூறி பெருமைப்படுகிறார்கள். ஆனால் 19 ஆம் நூற்றாண்டிலேயே அனைவருக்குமான அன்னதானத் திட்டத்தைத் துவக்கியவர் வடலூர் வள்ளலார் அவர்கள்தான். சாதி, மதம், சமயம், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இல்லாமல் தர்மசாலை நிறுவி, அணையாத அடுப்புமூலம் அன்று அவர் துவக்கிய அன்னதானம்தான், இன்றும் வடலூரில் தொடர்கிறது. சென்ற ஆட்சியிலே தொடர்ந்தார்கள். 'அன்பைத் தத்துவமாகக் கொண்டு பசித்தோர் முகம் பார்த்து, பசித்தோரின் பசி நீக்குவதுதான் கடவுள் வழிபாடு' என்று கூறிய வள்ளலாரின் அறநிலையங்கள், இன்று யாருடைய ஜோதியை ஏற்றுவது என்ற சண்டைச் சச்சரவுகளோடும், அசுத்தமான சுற்றுச்சூழலோடும், அவரின் கோட்பாடுகளுக்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இதுகுறித்து என்னைக் காட்டிலும், அருட் செல்வரான வள்ளலார் அவர்களை, இராமலிங்க அடிகளார் அவர்களை, அருட் பாக்களால் உணர்ந்திருக்கக்கூடிய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அறநிலையத் துறை மூலமாக, ஒரு குழு அமைத்து ஆய்வு செய்வதோடு, மனித நேயத்தையும், மக்களிடையே ஒருமைப்பாட்டையும், மத நல்லிணக்கத்தையும் வலியுறுத்திய வள்ளலாரின் திருச்சபைகள் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும். உலகின் பல நாடுகளிலிருந்து அடிகளாரின் பக்தர்கள் வருவதால், இதனைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து விரிவுபடுத்திட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

அதேபோன்று, 'தமிழிலும் அர்ச்சனை செய்யப்பட வேண்டும்' என்பது, அது தமிழை இழிவுபடுத்துவதாக இருக்கிறது என்ற விவாதம் நடந்தது. ஆனால் சமஸ்கிருத மொழி என்பது, பல்லாயிரம் ஆண்டுக் காலமாக தெய்வ மொழியாக கோயில்களிலே புழங்கிக் கொண்டிருந்தது. சாதாரண கிராமப்புறத்தினுடைய தாழ்த்தப்பட்ட மக்கள்,

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, 'தமிழிலே அர்ச்சனை செய்யப்படுகிறது' என்ற சிறு விளம்பரம், அவர்களுக்கு அறிவுறுத்துவதாக இருக்கும். ஆகவே, 21 வது நூற்றாண்டில் நமது சாதாரண எளிய மக்களுக்கு விளம்பரம் செய்யக்கூடிய வகையிலே, 'தமிழிலும்' என்று இல்லாமல், 'தமிழில் அர்ச்சனை செய்யப்படும்' என்று விளம்பரம் இருப்பது, அவசியமானது; தேவையானது; அது கற்றுக் கொடுக்கக்கூடியது. இது தமிழுக்காக நாம் நடத்திய போராட்டத்தினுடைய அடையாளமாக நிச்சயமாக இருக்கும். ஆகவே, அந்தவகையில் அதை மாற்றி விளம்பரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து குத்தகை விவசாயிகளை வெளியேற்ற அறநிலையத் துறை நடவடிக்கை எடுப்பது, வேதனையாக இருக்கிறது. இந்நடவடிக்கை கைவிடப்படுவதோடு, உழுபவனுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும். நாகப்பட்டினத்தில் புறவழிச் சாலைக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு, விவசாயிகளுக்கு, நட்ட ஈடு தர வேண்டும்.

தமிழகம் முழுவதும் கோயில் நிலங்களில் குடியிருந்துவரும் வாடகைதாரர்களுக்கு ரூ.5 முதல் ரூ.50 வரை இருந்த கட்டணத்தை ரூ.2,500 முதல் ரூ.5,000 ஆக சென்ற அ.தி.மு.க. அரசாங்கம் உயர்த்தியது. இதுகுறித்து, இந்த மாமன்றத்திலே அன்று நாங்கள் கேள்வி எழுப்பியபோது, 'தி.மு.க. அரசு போட்ட உத்தரவு அது; நாங்கள் என்ன செய்ய முடியும்?' என்று கூறினார்கள். ஆனால் உண்மையில் 2001-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய மானியக் கோரிக்கையில், 'இத்தகைய வாடகை உயர்வு சரியல்ல; மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படும்; அதுவரை பழைய வாடகையே வசூலிக்கப்படும்' என்று இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அன்றைக்கே சொல்லியது இங்கே பதிவேட்டிலும் இருக்கிறது; பல பத்திரிகைகளிலும் செய்தியாக வந்திருக்கிறது. ஆகவே, ஏழை மக்கள் தங்களது வீட்டைச் சொந்த செலவிலே கட்டி, சொத்து வரியையும் தாங்களே கட்டி, இதற்குமேல் தரை வாடகை ரூ.5,000 கட்ட வேண்டுமென்றால் எப்படிக் கட்ட முடியும்? ஆகவே, யதார்த்தமான நிலையிலிருந்து முடிவுகள் எடுத்து, இந்தக் கட்டணத்தை ஏற்கெனவே நமது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, அதை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.



அதேபோன்று வாடகை, கடைகளிடமிருந்து 33 சதவீதம் வசூலிக்கப்படுகிறது. உலகமயச் சூழலில், சிறு வியாபாரம் நசுங்கிய நிலையில், இது சாத்தியமானதே அல்ல. மாநகராட்சி, நகராட்சி வாடகையினுடைய கட்டடங்களுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம்தான் கூட்டப்படுகிறது. அவ்வாறு உயர்த்தினாலே போதுமானது. மதுரை கல்மண்டபம், கம்பம், திண்டுக்கல், சென்னை போரூர், கன்னியாகுமரி போன்ற இடங்களில், தமிழகம் முழுவதும் கோயில்களிலே வாடகைக்குக் கடை எடுத்திருப்பவர்கள், மிகச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மேலும், அதிகாரிகள் அவர்களை அச்சுறுத்துகிறார்கள். சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லுகிறார்கள். அதுபோன்ற நடவடிக்கைகளை தயவுசெய்து மாற்றுவதற்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

கோயில் வருமானத்திலிருந்து 40 சதவீதம் அரசாங்கமே எடுத்துக் கொண்டு, தமிழகம் முழுவதும், அர்ச்சகரிலிருந்து முடி வெட்டக்கூடிய ஊழியர்கள்வரை, அனைவரையும் அரசு ஊழியர்களாக்க வேண்டும். பழனி தேவஸ்தானம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கோயில்களில் பணி செய்து ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்க முன்வர வேண்டும்.

திண்டுக்கல் சிறுமலைப் பழங்கள், பழனி அறநிலையத் துறை மூலமாக, பஞ்சாமிர்தத்திற்கு நேரடியாகக் கொள்முதல் செய்யப்பட வேண்டும். Tender மூலமாக, எடுப்பவருக்கு 23 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால், விவசாயிகளுக்கு 19 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. நாங்கள் சொல்வது, நேரடியாக அறநிலையத் துறை 19 ரூபாய் என்று நிச்சயம் செய்தால், பழனி ஆண்டவருக்கும் பயன்படும்; சிறுமலை விவசாயிகளுக்கும் பயன்படும் என்றவகையிலே அறநிலையத் துறை அத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

5 மாவட்டங்களில் உள்ள அறநிலையத் துறை கல்லூரிகளில், தொகுப்பூதிய ஆசிரியர்களைக் காலமுறை ஊதியம் வழங்கி நிரந்தரப்படுத்த முன்வர வேண்டும். ரூ.200 கோடிக்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள பழனி உள்ளிட்ட 400-க்கும் மேற்பட்ட கோயில்களைப் பராமரிக்க திண்டுக்கல் மாவட்டத்திற்குத் தனி மாவட்ட அலுவலகம் துவக்கப்பட வேண்டும். கோடிக்கணக்கான சொத்துள்ள அந்தப் பழனி ஆண்டவரைப் பாதுகாக்க, பழனியில் ஒரு I.A.S. அதிகாரி நியமிக்கப்பட வேண்டும்.

காந்தி கிராமம் ஆர்.எஸ். நகரில் பல இலட்சம் ரூபாய்க்கு வாங்கிய நிலங்களில் வீடுகட்டிக் குடியிருப்பவர்களை, அறநிலையத் துறை வெளியேற்ற முயற்சித்து வருகிறது. திருப்பூர் உள்ளிட்ட பல பகுதிகளிலும் இது தொடர்கிறது. ஆகவே, பல இலட்சம் மதிப்புள்ள வீடுகளைக் கட்டிக் குடியேறிவிட்ட அம்மக்கள் பாதிப்பு அடையாதவாறு பொருத்தமான முடிவு எடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

பெண்கள் சுய உதவிக் குழுக்கள்மூலமாகக் கலப்படமற்ற குங்குமம் தயாரித்து அறநிலையத் துறை கொள்முதல் செய்து, அனைத்துக் கோயில்களுக்கும் வழங்க வேண்டுகின்றேன். அதேபோன்று, தாழ்த்தப்பட்ட மக்களுடைய கோயில் பராமரிப்புக்கு ரூபாய் 25 ஆயிரம் வழங்கப்படுகிறது; அது 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, மதங்கள் இருக்கலாம், மசூதிகள் இருக்கலாம், தேவாலயங்கள் இருக்கலாம், கோயில்களும் இருக்கலாம், கூடவே மனிதன் இருக்க வேண்டும். மனித நேயம் இருக்க வேண்டும், மத நல்லிணக்கம் தழைக்க வேண்டும். அந்தவகையில் அறநிலையத் துறை செயல்பட வேண்டும் என்பது வேண்டுகோள்.

அடுத்ததாக, 'வீடு இல்லாதவன் விலாசம் இல்லாதவன்' என்பது வீட்டு வசதி வாரியத்தின் அலுவலகத்திலே பொறிக்கப்பட்டிருக்கக்கூடிய பொன்மொழி. வீடு இருந்தும் விலாசம் இல்லாதவர்களாக, பணம் கட்டியும், பத்திரம் இல்லாதவர்களாக இருப்பது என்பது வீடு வாங்கியவர்களுடைய புதுமொழியாக இருக்கிறது.

மதுரை கூடல் நகரில் கட்டப்பட்ட வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில், வீடு பெற்ற 60 வயது மூதாட்டி எஸ். மீனாட்சி, 6-8-2006 ஆம் தேதி paper–இல் கூறியிருக்கிறார்: '1901–ல் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு வீட்டைக் கிரயத்திற்கு வாங்கினோம்; ஆனால், இன்றுவரை எங்களுக்குப் பத்திரம் வழங்கப்படவில்லை; பத்திரம் கேட்டால், மேலும் 3 இலட்சம் பணம் கட்டினால்தான் தரமுடியும் என்கிறார்கள்; ஏதோ 50 ஆயிரம் ரூபாய் வரை கேட்டால்கூட பணத்தைக் கட்டலாம்; ஆனால், இலட்சக் கணக்கிலே கேட்டால் எப்படிக் கட்ட முடியும்? என் வீட்டைச் சுற்றியுள்ள பல வீடுகள், இடிந்துபோய் புதர் மண்டிக் கிடக்கின்றன; இங்குக் குடியிருக்க



இப்போது யாரும் விரும்பவில்லை; என் குடும்பத்தார் அனைவரும் வேறு இடங்களுக்குக் குடியிருக்கச் சென்றுவிட்டனர்; (மணியடிக்கப்பெற்றது) நான் மட்டும் தனியாக இங்குள்ளேன்; அரசுதான் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறார். இந்த 60 வயது மூதாட்டியினுடைய வேதனைதான், 40 ஆண்டுக் கால சாதனையை 4 ஆண்டுகளில் செய்து முடித்தோம் என்று சொல்லக்கூடிய அ.தி.மு.க. ஆட்சியினுடைய சாதனையாக கடந்த காலங்களிலே இருந்தது. அன்றைக்கு மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களிடம் பத்திரம் வேண்டுமென்று கேட்டபோதெல்லாம், இல்லை, இல்லை என்று சொன்னார். இப்போது அவர்கள் இங்கே அமைச்சராகவும் இல்லை; இப்போது எதிர்க்கட்சி உறுப்பினராகவுள்ள அவர், இங்கே இருக்கையிலேயும் இல்லை.

இரண்டாவது சாதனையாக, 2001–ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு, 6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீடுகளை 3 இலட்சம் ரூபாய்க்குக் குறைத்துக் கொடுத்தார்கள். அவற்றுக்கெல்லாம் இன்றைக்கு 39 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டுமென்று, ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. அரசாங்கம் notice அனுப்பியது. காலி மனைகளை, காலி இடங்களைக் கடந்த காலங்களிலே காலி செய்திருக்கிறார்கள். இரகசிய விற்பனை நடந்துள்ளது. இராணி மங்கம்மாள் காலனியில் நடந்துள்ள இத்தகைய இடங்கள் விற்பனையின்மீது, உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும். நிர்வாகச் சீர்கேடுகளும், குளறுபடிகளும் நிறைந்த ஒரு துறையாக இந்தத் துறை கடந்த காலங்களில் இருந்து வந்திருக்கிறது. ஒரே சர்வே எண்ணில் உள்ள இரண்டு வீடுகளுக்கு வெவ்வேறு விலை நிர்ணயம். 40 பைசா சதுர அடியில் சில வீடுகளும், 62 ரூபாய் சதுர அடியிலே சில வீடுகளுமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன. திண்டுக்கல், இராணி மங்கம்மாள் காலனியில் பகுதி–1, பகுதி–2–ல் கிரயத்தொகை முழுவதையும் செலுத்திவிட்டார்கள். அவர்களுக்கும் இன்னும் பத்திரம் வழங்கப்படவில்லை. மதுரை எல்லீஸ் நகரில் போட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்படவே இல்லை. சுயநிதித் திட்டத்தில் கூடுதலாக சில இலட்சங்கள் செலுத்தியவர்களுக்கும் இன்னமும் பத்திரம் வழங்கப்படவில்லை. 1989-ல் வருவாய்த் துறைமூலமாக, அனைத்து வழக்குகளும் முடிவுற்று பல மாவட்டங்களில் சதுர அடி ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் எனத் தீர்ப்பாகியுள்ளது. நீதிமன்றம் கூறிய இந்த விலையைக் கணக்கிட்டால், வீட்டு உரிமையாளர்கள் எப்போதோ பணம் செலுத்திப் பத்திரம் பெற்றிருப்பார்கள். ஆனால், வட்டி மேல் வட்டி போட்டு, ஒரு

இலட்சம் கட்ட வேண்டியதற்கு 4 இலட்சம் கட்டுங்கள் என்றால், எப்படி முடியும்? வட்டி முழுவதையும் தள்ளுபடி செய்து அறிவித்தால்தான், இந்தப் பத்திரங்களை அவர்கள் வாங்க முடியும். நில உரிமையாளர்களுக்கு நீதிமன்றம் சதுர அடி என்ன விலைக்குத் தீர்ப்பளித்ததோ, அந்த விலை, தீர்ப்பளித்த தேதிவரையில் கணக்கிடப்பட வேண்டும். வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். அதேபோன்று கூட்டுறவுச் சங்கங்கள்மூலமாக, வீட்டு வசதி வாரியத்திலே பெற்றவர்களுக்கு, இன்றைக்கு 12 சதவிகித வட்டியைக் கடந்த காலத்திலே குறைத்தார்கள். ஆனால், அவர்கள் அசலையும், வட்டியையும் செலுத்தினால்தான், அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னார்கள். இது வட்டிக்கான சலுகை அல்ல. வட்டியையும், அசலையும் வசூலிப்பதற்கான தண்டனையாகவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் கூட்டுறவுச் சங்கங்கள் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகின்றன. ஜப்தி நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன. தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில் வீடுகள் பூட்டப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள், நமது அரசிலே தொடராமல் பார்த்துக்கொள்வதற்கு, நமது கூட்டுறவுச் சங்கம் என்பது வீட்டு வசதி வாரியம் என்பது முன்வர வேண்டும். தேசிய வங்கியைப் போல 7 சதவிகித வட்டியை...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தத் துறையின்மீது மிகுந்த அக்கறை உள்ளவர் என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனால், நம்முடைய அன்பிற்குரிய தலைவருடைய ஆட்சியில் எங்கேயும் ஜப்தி நடவடிக்கை இல்லை என்பதை அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

பிற்பகல் 1-00

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை, இராயப்பேட்டை, வீட்டு வசதி வாரியக் கட்டுப்பாட்டில் உள்ள பீட்டர்ஸ் காலனி குடியிருப்பின் நிலை, நாள்தோறும் மோசமடைந்து வருகிறது. அரசு ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் வசிக்கும் இந்தக் குடியிருப்புகள் பல ஆண்டுகளாகப் பராமரிக்கப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே...



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Madam, பேசி முடித்துவிடுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** ஒரே ஒரு நிமிடம். குடியிருப்பு கட்டப்பட்டது என்ற காரணத்திற்காகவே கடந்த கால அரசு, இந்தக் குடியிருப்பைப் புறக்கணித்துவிட்டது. 10ஆவது block-ன் பின்புறத்தில் 30 அடி அளவிற்கு compound சுவர் இடிந்து விழுந்து பல மாதங்கள் ஆகின்றன; கட்டப்படவில்லை. இதனால் அந்தக் குடியிருப்பு மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர். கட்டடங்களில் வளர்ந்துள்ள அரச மரங்களைக்கூட அகற்றவில்லை. இத்தகைய நிலை மாற்றப்பட வேண்டும்.

1992-ல் தாமிரபரணி ஆற்றில், தண்ணீர் கரைபுரண்டு ஓடியதால், வீடுகள் பெரிதும் அழிந்தன. கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கிராமப்புறக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திலிருந்து பெற்ற கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். தையூரில் தலைமைச் செயலகம் கட்ட வேண்டும் என்று சென்ற அ.தி.மு.க. அரசாங்கம் நிலங்களை ஆர்ஜிதம் செய்து ஆனால், அவை ஏற்கெனவே போக்குவரத்து ஊழியர்கள் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம்மூலமாக கடன் வாங்கிப் பெற்ற இடங்கள் ஆகும். இப்பொழுது, அந்த இடங்களும் கிடைக்காமல், வட்டியும் கட்டிக்கொண்டு, போக்குவரத்து ஊழியர்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி.

***திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மற்றும் வீட்டு வசதி வாரிய நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைகளில் என்னைப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழை உயர்தனிச் செம்மொழி ஆக்கிட, பரிதிமாற் கலைஞர் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியை, பார் போற்றும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெற்றியாக்கி, தமிழ்கூறும் நல்லுலகிற்குப் பெருமையளித்துள்ளார்கள். சமூக நீதி காத்திட, மூட நம்பிக்கையை அகற்றிட, தொடர்ந்து பாடுபட்ட, தந்தை பெரியார் அவர்கள் வழியில் வந்த, நமது மாண்புமிகு

முதல்வர் அவர்கள் நாத்திகர்தான். அதேபோன்று, பேராசான் ஜீவா அவர்கள் வழியில் வந்த நாங்களும் நாத்திகர்கள்தான். எனினும் இந்த நேரத்தில் தமிழ் உரிமை கருதி, இங்கே இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சிதம்பரம் கோயில் திருச்சிற்றம்பல மேடையில், தேவாரப் பண் இசைக்க வந்த தமிழன்பர் ஆறுமுக சாமியார் அவர்களை அங்கிருந்த தீட்சிதர்கள் தடுத்து நிறுத்திவிட்டார்கள். வழக்கும் பதிவு செய்திருக்கிறார்கள். எனவே, தமிழ் தந்த கடவுளாகக் கருதப்படுகின்ற சிவபெருமானையே தமிழில் ஓதுவதற்கும், பாடல் பாடுவதற்கும் முடியவில்லையே என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்வதோடு, இதுபோன்று அனைத்து ஆலயங்களிலும் தேவாரம், திருவாசகம் தமிழில் பாட வேண்டும் என்பதைச் சட்ட ரீதியாகப் பெற்று, உரிமை வழங்கிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அதுபோன்று, அந்த முனைவர்மீது போடப்பட்டிருக்கின்ற வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கோயில்களில் பரிவட்டம் கட்டும் முறையை இரத்து செய்வோம் என்று அறிவித்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் எங்களது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அதேபோன்று, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தை இயற்றி, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அய்யன் திருவள்ளுவர் அவர்கள் வாய்மொழியை, வாழவைத்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே நாங்கள் பாராட்டுகிறோம்.

அதோடுமட்டுமல்லாமல், தத்துவத் துறை, இசைத் துறை, இலக்கியத் துறை ஆகிய சமய அடிப்படைத் துறைகளை ஆய்வு செய்கின்ற தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அர்ச்சகர்களுக்கான அந்தப் பயிற்சியை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதோடுமட்டுமல்லாமல், அப்பயிற்சியில் பெண்களுக்கும் வாய்ப்பளித்து ஆலயங்களில் பெண்களையும் அர்ச்சகர்களாகக் கொண்டுவர வேண்டும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, இன்றைக்கு அறங்காவலர் குழுவில் பெண்களையும், தலித்துகளையும் சேர்த்து, மக்களுக்கு அறிவித்த நமது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



பிற்பகல் 1–05

அதேபோன்று, இப்போது கோயில் என்று சொல்கின்றபோது, கோயிலுக்குச் சொந்தமான ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், திருவாரூர் மாவட்டத்திலே, திருவாரூர், வேதாரண்யம், மன்னார்குடி, நன்னிலம், திருத்துறைப்பூண்டி இதுபோன்ற அனைத்துப் பகுதிகளிலுமே கோயிலுக்குச் சொந்தமான விளை நிலங்களும் இருக்கின்றன; அதேபோன்று மனை நிலங்களும் ஏராளமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட அந்தக் கோயில் நிலங்களில், விளை நிலங்களில், பயிர் செய்கின்ற குத்தகைதாரர்கள், குத்தகையை அளக்கவில்லை என்ற காரணத்திற்காக, வெளியேற்றப்படக்கூடிய நிலை இருக்கிறது. நன்னிலத்திலே திருவாஞ்சியூர் என்ற பஞ்சாயத்து இருக்கின்றது. அந்த திருவாஞ்சியூர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தில் இருக்கின்ற குத்தகைதாரர்கள், அவர்கள் நெல் அளிக்கவில்லை; குத்தகையைச் செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக, அங்கே அவர்களை வயலிலிருந்து வெளியேற்றம் செய்வதற்கானவகையில், கொடி நடப்பட்டது. இயற்கைச் சீற்றம் போன்ற இப்படிப்பட்ட நிலைகள் இருக்கின்றபோது, அதன் காரணமாகத்தான், அவர்களால் செலுத்த முடியவில்லை. குத்தகையைக் கொடுக்க முடியவில்லை. எனவே, இப்படிப்பட்ட இந்தக் காலங்களில் அவர்களுக்குக் குத்தகையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று நிலத்தைவிட்டு வெளியேற்றக் கூடாது. இதற்கென்று தனியாக Revenue Court ஒன்று இருக்கிறது. அது அவ்வப்போது இப்படிப்பட்ட நிலைகளில், தண்ட வரி போல வசூல் செய்துகொண்டிருக்கிறது. அதையும் பரிசீலித்து, தடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, 1974–ல் கேரளாவில், தோழர் அச்சுதமேனன் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அங்கே கோயில் அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களையெல்லாம் எடுத்து, அரசாங்கமே கையிலே எடுத்து, அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்து, அதற்கான தொகையைத் தவணை முறையில் வசூலித்து, அங்கே வங்கிகளில் அதை இருப்பு வைத்து, அதிலிருந்து வருகின்ற வட்டிப் பணத்தைக் கோயிலுக்குத் தேவையான நிர்வாகம் மற்றும் கோயிலுக்குத் தேவையான ஆலய வழிபாடுகளுக்குச் செலவு செய்துவருகிறார்கள். எனவே, இப்படிப்பட்ட இந்த வழிமுறைகளைக்கூட நாம் பின்பற்றலாம் என்பதை இந்த நேரத்திலே இந்த அவையிலே என்னுடைய கருத்தாகப் பதியவைக்க நான் விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு, குத்தகைதாரர்களுக்கு, அதேபோல, நீண்டநாட்களாக, கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு மேலாகக் கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு, இன்னும் பட்டா கொடுக்க முடியவில்லை. பட்டா வழங்க மறுக்கப்படுகிறது. அந்தப் பட்டா இல்லாத காரணத்தினால், உள்ளாட்சித் துறைமூலமாக கிடைக்கக்கூடிய பல்வேறு சலுகைகளும் அவர்கள் பெறமுடியாத நிலையில் இருக்கின்றார்கள். எனவே, அவர்களுக்கு, கோயில் நிலங்களில் நீண்டகாலமாகக் குடியிருப்பவர்களுக்கு, உடனே பட்டா வழங்குவதற்கான முறையிலே அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இப்போது கோயில் என்று சொல்லுகின்றபோது, எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள்; ஒன்றை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஓர் இளம்வயது பெண் கையில் குழந்தையோடு, 'கல்யாணி' என்கின்ற அந்தப் பெண், பஞ்சம், பசி, பட்டினியால், வீடு வீடாகத் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக ஏறி இறங்குகின்றபோது, அங்கேயெல்லாம் பாதுகாப்புக் கிடைக்காமல், இறுதியாக கோயிலிலாவது நமக்குப் பாதுகாப்புக் கிடைக்குமென்று கோயிலை அணுகிச் செல்கின்றபோது, அங்கேயிருக்கின்ற கோயிலில் காமுகனால் விரட்டப்பட்டு ஓடுகிறாள். ஓடுகிறாள் கல்யாணி; வாழ்க்கையின் கடைகோடி எல்லைக்கே ஓடுகிறாள் என்பதை அந்த நேரத்திலே பெண்களுக்கு இருக்கிற அவல நிலையைச் சித்தரித்துக் காட்டிய நமது மாண்புமிகு முதல்வர் அவர்களை, அதோடுமட்டுமல்லாமல், கோயில்கள், குற்றவாளிகளின் இருப்பிடமாக இருக்கக் கூடாது என்பதை, 'பராசக்தி' திரைப்படத்தின்மூலமாக, இந்தத் தமிழக மக்களுக்கு உணர்த்திய மாண்புமிகு முதல்வர் அவர்களை, இந்த நேரத்திலே நான் பாராட்டுகிறேன். அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்குப் புற்றீசல் போன்று எங்குப் பார்த்தாலும் போலி சாமியார்களும், அதேபோன்று போலி பூசாரிகளும் தோன்றி, பெண்களை ஏமாற்றுவதோடு மட்டுமல்லாமல்—நான் சென்ற வாரத்திற்கு முன்புகூட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தேன்; ஒரு 7 வயது சிறுமியை, ஒரு போலி சாமியார், ஒரு பூசாரி கெடுத்துவிட்டதாக வந்த ஒரு பத்திரிகை செய்தியை வைத்துக் கொடுத்தேன். எனவே, இப்படிப்பட்ட இந்தக் கொடுமையான இந்த நிகழ்ச்சியை நடத்துகிறவர்கள், இப்படிப்பட்ட போலியான சாமியார்களுக்கெல்லாம் சட்டத்தின்வாயிலாக, அவர்கள் தப்பிக்க முடியாத கடுமையான தண்டனையைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அவையிலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.



அதேபோன்று, கோயில்களில் விலைமதிக்க முடியாத ஆபரணங்கள், இன்னும் சொல்லப் போனால், நவரத்தினங்கள் என்று சொல்லக்கூடிய வைடூரியம், கோமேதகம், மரகதலிங்கம் என இப்படிப்பட்ட விலைமதிக்க முடியாத நகைகள் எல்லாம் கடந்த காலங்களிலே பல்வேறு கோயில்களிலே காணாமல் போய் இருக்கின்றன. இன்றைக்கு மன்னார்குடியை எடுத்துக்கொண்டால், இராஜகோபாலசுவாமி ஆலயம்; அங்கே இருக்கின்ற செங்கமலத் தாயார் கழுத்தில் இருக்கின்ற வைர நெக்லஸ், வைர நகைகள்; அதுபோன்று நாகப்பட்டினத்திலே நீலாயதாட்சியம்மன்; அங்கேயிருந்த அந்த கோமேதகக் கற்கள்; அதேபோல் திருக்கரவாசலில் இருந்த மரகதலிங்கம் என இப்படி விலைமதிக்க முடியாத பொருட்கள் எல்லாம் கடந்த காலங்களில் காணாமல் போய் இருக்கின்றன. கண்டுபிடிக்கமுடியவில்லை. இதுபோன்ற கோயில் சொத்துக்கள் மக்களுக்குப் பயன் அளிக்கவேண்டும்; அதற்குப் பதிலாக கொள்ளையர்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய அந்த நிலையைத் தடுக்க வேண்டும். நம்முடைய இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள்; இதைப் பாதுகாப்பதற்குப் பெட்டகங்கள் அமைக்கப்படும் என்பதைச் சொல்லியிருக்கிறார்கள், அதை நான் வரவேற்கின்றேன். எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகளெல்லாம் போக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

அதேபோன்று, இன்றைக்கு வீட்டு வசதி வாரியம் சம்பந்தமாகச் சொன்னார்கள். வீட்டு வசதி வாரியத்திலே கடன் பெற்றவர்களுடைய நிலை என்பது மிக மோசமான நிலையாக இருக்கிறது. ஒரு வீடு கட்டுவதற்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலமாக ரூபாய் 28,000 கடன் பெறுகிறார்கள். சாதாரண ஏழையெளிய மக்கள், நலிந்த மக்கள், மிகவும் நலிவுற்ற மக்கள், வீடு கட்டுவதற்காக வீட்டு வசதி வாரியத்திலே கடன் பெறுகிறார்கள். ரூபாய் 28,000 கடன் பெற்றவர்கள், அதைக் காலத்திலே அவர்களால் கட்டமுடியவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள். நலிவுற்றவர்களுக்கு வருமானம் வருவது கஷ்டம்; அதைத் திரும்பக் கட்டுவதிலே சிரமம் இருக்கிறது. ஆனால், வட்டி, அபராத வட்டி என்று சொல்லி 28,000 ரூபாய் பெற்ற ஒருவருக்கு வட்டி கிட்டத்தட்ட 81,615 ரூபாய் 50 பைசா, அதற்குப் பிறகு அபராத வட்டியும் சேர்த்து 93,804.46 பைசா. ஆக, இதற்கு இடையிலே அவர்கள் சிறிது சிறிதாகக் கட்டிய தொகை வேறு 60,893.35 பைசா, ஆனால், இவ்வளவு ஆகியும், அவர்கள் நிறைவு பெறமுடியவில்லை, கட்டி முடிக்கவில்லை, இவ்வளவும் கடனில் இருக்கிறது. ஆக 28,000 ரூபாய்க்கு ஒரு வீடு கட்டுவதற்காகக்

கடன் பெற்ற ஒருவர், இலட்சக்கணக்கான ரூபாய் வட்டியும், அபராத வட்டியும் கட்டவேண்டும் என்று சொன்னால் எப்படிக் கட்ட முடியும் எனவே, இப்படிப்பட்ட நிலைகள் தமிழகம் முழுவதும் இருக்கிறது வீட்டு வசதி வாரியத்தின் பல்வேறு இடங்களில் இருந்துப் இப்படிப்பட்டப் புகார் மனுக்கள் இங்கே குவிந்து இருக்கின்றன எனவே, தயவுசெய்து இதைப் பரிசீலித்து, சாதாரண மக்கள் ஏழையெளிய மக்கள், அப்படிப்பட்ட நிலையில் உள்ளவர்களுக்கு அந்த வட்டி, அபராத வட்டி, அந்தக் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக நான் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்கின்றேன்; அது தமிழகம் முழுவதும் பொருந்தும். மன்னார்குடி அரசு அலுவலர் குடியிருப்பு விற்பனைப் பிரிவின்மூலம் வாங்கப்பட்ட வீடுகளை அங்கீகரித்துக் கடன் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதை அங்கீகரித்த பிறகு, கடன், கிட்டத்தட்ட 6 மாதம், 8 மாதம் கழித்துக் கொடுக்கிறார்கள். திரும்பப் பெறுகின்றபொழுது அந்த இடைப்பட்ட 8 மாதத்திற்கும் சேர்த்து வட்டி, கூட்டு வட்டி போடப்படுகிறது. இதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அதையும் தள்ளுபடி செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று மனை; கோயில் மனைகளில் இருக்கின்ற கடைகள், குறிப்பாக அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில், மதுரையிலே மிகச் சிறப்புவாய்ந்த கோயில்; உலகப் பிரசித்திப் பெற்ற கோயில் எனச் சேர்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள்; அப்படிப்பட்ட அந்தக் கோயிலில்கூட இப்படிப்பட்ட நிலை. நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லுகின்றேன்: 25-4-2000 ல், இதே அவையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசியிருக்கின்றார்கள். அதாவது, அதனுடைய கட்டண உயர்வு என்பது உயர்ந்து கொண்டு செல்கின்றது; அவர்கள் வருமானத்திற்கு மீறி இருக்கிறது; எனவே, திரும்பச் செலுத்த முடியாது என்று பேசியிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அதிலே குறுக்கிட்டு, உண்மையிலேயே இது பரிசீலிக்கக் கூடியதுதான் என்று சொல்லி, அவர்கள் அதை உயர்த்தக் கூடாது என்று தடுத்து நிறுத்தி இருக்கின்றார்கள். ஆனால், கடந்தகாலத்தில் இருந்த அ.தி.மு.க. ஆட்சி, அதைத் தளர்த்திவிட்டு, இன்றைக்கு அது



16 மடங்கு உயர்ந்து இருக்கிறது. சாதாரணமாக, கல் தரையில் இருக்கின்ற அந்தக் கடைகளுக்கு எல்லாம் 16 மடங்கு உயர்ந்து இருக்கிறது. அப்படி உயர்ந்து இருக்கின்ற அந்தப் பட்டியலைப் பார்க்கின்றபொழுது, மிகவும் வேதனையாக இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட அந்த நிலையில் அதையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும்; அது குறைக்கப்பட வேண்டும்; முறைப்படுத்தப்பட்ட முறையிலே அதைக் குறைக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதைப்போன்று சென்னை... (மணியடிக்கப் பெற்றது) ஒன்றே ஒன்று, please...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது அம்மா!

**திருமதி பி. பத்மாவதி:** சென்னை, இராயப்பேட்டை வீட்டு வசதி வாரியக் கட்டுப்பாட்டில் உள்ள பீட்டர்ஸ் காலனி குடியிருப்பு நிலை, நாள்தோறும் மோசம் அடைந்து வருகிறது. அரசு ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் வசிக்கும் இந்தக் குடியிருப்புகள் பல ஆண்டுக் காலமாக...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு திண்டுக்கல் சட்டப்பேரவை உறுப்பினரும், இதே கருத்தைச் சொன்னார்கள். அது அறிவிப்பிலே வருகின்ற காரணத்தினால் இடைமறித்துச் சொல்லவேண்டாம் என்று கருதினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் குடியிருப்புகளையெல்லாம் பழுது நீக்கம் செய்வதற்கு ஒரு கோடி ரூபாயை அனுமதித்து இருக்கிறார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்து விடுங்கள் அம்மா! நான் அடுத்தவரைக் கூப்பிடுகிறேன். நன்றி சொல்லி முடித்துவிடுங்கள் அம்மா, திருமதி பி. பத்மாவதி.

பிற்பகல் 1–15

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று, இந்தக் கோயில்களில் சமையல் செய்கின்ற சமையலர்களுக்கு ஊதியத்தைக் கொடுக்க

வேண்டும். பல கோயில்களில், குறிப்பாக, நமது வியாசர்பாடி, சிவப்பிரகாச சுவாமிகள் திருமடம்--இதை ஒரு குறிப்புக்காகச் சொல்கின்றேன்--இப்படிப்பட்ட அந்த மடங்களில் பணி செய்கின்ற சமையல்காரர்களுக்கு மாதா மாதம் ஊதியத்தை அங்கு இருக்கின்றவர்கள் காலதாமதப்படுத்திக் கொடுக்கிறார்கள். காலத்தில் சேர்வதில்லை; கொடுக்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டுகள் ஏராளமாக வந்திருக்கின்றன. எதிர்காலத்தில் அதையெல்லாம் போக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதோடு இன்னும் பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நிறைய பேசிவிட்டீர்கள் அம்மா! மீதி இருப்பதையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** அவற்றை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை நல்கிய நமது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன், வணக்கம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Point of order, என்ன, இராஜேந்திரன்?

***திரு. ஆ. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது அடிக்கடி மன்னார்குடி என்ற ஊரைக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு மன்னார்குடி கும்பலின்மீதுதான் பல்வேறு வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, ஆலயத்தில் காணாமல்போன நகைகளைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களையும் வழக்கில் சேர்த்து விசாரித்தால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர், 5 நிமிடங்களில் உரையை முடித்துவிடுங்கள். மற்றவற்றையெல்லாம் நீங்கள் எழுதிக் கொடுத்துவிடலாம்.



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், எங்களுடைய கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்களுக்கும் என் நன்றியை நான் முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1967-லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டபோது, பகுத்தறிவுப் பாசறையிலே வந்தவர்கள், எப்படி இந்து சமய அறநிலையத் துறையை நடத்துவார்கள் என்ற ஐயப்பாடு எல்லோர் மனதிலும் எழுந்தது. அன்றைக்கு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, பொறுப்புகள் வேறு என்கின்றவகையிலே சிறப்பாக நடந்துகொண்டார்கள். எங்களுடைய திருத்தணி திருக்கோயிலினுடைய மலைப் பாதையைத் திறந்துவைத்து, அவர்கள் ஆற்றிய உரையை இன்றைக்கும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். அந்தவகையிலே 1968-லே வட்டாரக் குழுக்கள் நீக்கப்பட்டு, ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்ட அந்தக் காரியம், அண்ணாவினுடைய காலத்திலே நடைபெற்றது.

அதேபோல், 1971-லே பரம்பரை முறையிலே அர்ச்சகர்கள், பூசாரிகள் நியமிக்கப்பட்டதை நீக்கி, நியமன முறை கைவிடப்பட்டு, அரசாங்கத்தினால் நியமிக்கப்படுகின்ற முறை வந்தது. அதேபோல, 1996 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. அதைப்போல, 2006 ஆம் ஆண்டு, இந்த ஆண்டு, அந்தக் குழு ஏற்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். அந்தக் குழுவை நியமிக்கின்றபோது, சான்றோர்களாகப் பார்த்து, நீங்கள் நியமிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், இந்தக் குழுதான் வழி நடத்தக்கூடிய, நெறிமுறைப்படுத்தக்கூடிய குழுவாக இருக்க முடியும் என்பதை என்னுடைய தாழ்மையான கருத்தாக இங்கே நான் பதிவுசெய்ய விரும்புகின்றேன். பொதுவாக, கோயில்கள், நிறைய கோயில்கள், வருமானத்தின் அடிப்படையிலே பிரிக்கப்பட்டிருக்கின்றன. தொன்மையான வரலாற்றின் அடிப்படையிலே, தொன்மையான புராதன அடிப்படையிலே இந்தக் கோயில்கள் வகைப்படுத்தப்பட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி வகைப்படுத்துகின்றபோது, அங்கு செய்யப்படக்கூடிய காரியங்கள், நெறிமுறைப்படுத்தி செய்யப்பட வேண்டும். குறிப்பாக, பழனி திருக்கோயிலிலே, ஆறுபடை வீடுகளிலே

வருமானத்தின் அடிப்படையிலே முதலாவதாக இருக்கின்ற பழனி திருக்கோயிலிலே, சென்ற ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஒருசில காரியங்களை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆட்சியாளர்களுடைய விருப்பு, வெறுப்புக்கேற்ப இந்தக் கோயில்களினுடைய கும்பாபிஷேகங்கள் அல்லது பல விதிமுறைகள் மாற்றப்பட்டன. இதையெல்லாம் அந்த அரசாங்கம் செய்தது. குறிப்பாக, நம்முடைய அரசாங்கம் அதை அனுமதிக்கக்கூடாது என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். Guidelines கடுமையாக்கப்பட வேண்டும். எந்த வகையிலே எது செய்யப்பட வேண்டும் என்றவகையிலே இந்தச் சான்றோர்களை வைத்துக்கொண்டு, அல்லது சட்ட நிபுணர்களை வைத்துக்கொண்டு, விதிகள் கடுமையாக்கப்பட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பழனி திருக்கோயிலிலே அபிஷேக மூர்த்தி என்று ஒரு புதிய சிலையை அவர்கள் வைத்தார்கள். இதன் தொடர்பாகப் பல பிரச்சினைகள் எழுந்தன. உள்ளூரிலும் சரி, பக்தர்கள் மனதிலும் சரி, பல பிரச்சினைகள் எழுந்து, பிறகு ஒரு சில மாதங்கள் கழித்து, அந்த அபிஷேக மூர்த்தியை அவர்கள் அகற்றினார்கள். இதிலே உண்மை நிலை என்ன என்பதனை அரசாங்கம் விளக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அங்கிருக்கின்ற நவபாஷாண சிலை என்ற அந்த அருமையான மூலவர் சிலை என்ன நிலையில் இருக்கிறது? சிதிலமடைந்து இருக்கிறதா; அல்லது அது அபிஷேகத்திற்கு ஏற்ற நிலையில் இருக்கிறதா என்பதனை நம்முடைய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், இதுகுறித்த நிறைய ஐயப்பாடுகள் மக்கள் மனதிலே வந்திருக்கின்றன; பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன; அதேபோல, பக்தர்கள் மனதிலே வந்திருக்கின்றன. ஆகவே, அந்த ஐயப்பாடுகளை நீக்கவேண்டிய கடமை, இந்த அறநிலையத் துறைக்கு உண்டு என்று நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலைப் பொறுத்தவரையிலேகூட, அங்கே தமிழ்த் திருமறைகள் பாடுவதற்குத் தடை விதிப்போம் என்று, அங்கே நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றார்கள். இவையெல்லாம் ஏன் ஏற்படுகின்றன என்று சொன்னால், ஆதிக்க சக்திகள் இன்னும் ஆதிக்க சக்திகளாகவே இருப்பதன் காரணமாகத்தான், இவை ஏற்படுகின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.



பிற்பகல் 1-20

14 தனியார் வங்கிகளைத் தேசியமயமாக்கி வரலாறு படைத்தவர்கள், அன்னை இந்திரா காந்தி அவர்கள். தனியார் போக்குவரத்தினை அரசுடைமையாக்கி சாதனை படைத்தவர்கள், நம் மாண்புமிகு கலைஞர் அவர்கள். இப்படிப்பட்ட அரிய காரியங்களைச் செய்திருக்கிற அரசுக்கு சிதம்பரம் நடராஜர் கோயில் பிரச்சினை, ஒரு பெரிய பிரச்சினையாக இருக்காது என்று நான் நம்புகின்றேன்; அந்தத் திருக்கோயிலை அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிலே முழுமையாகக் கொண்டுவந்தால், நிச்சயமாக அங்கே தமிழில் வழிபடுவதற்கு அங்கே நிச்சயமாக எந்த ஒரு தடையும் இருக்காது; இருக்கலாகாது என்ற நிலையை நீங்கள் கொண்டுவர வேண்டுமென்று இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஆசிரமங்களைக் குறித்து நான் இங்கு கூற விரும்புகின்றேன். தனியார் சாமிகள் என்று சொல்லப்படுகிற சிலர், ஆசிரமங்களைத் தொடங்குகிறார்கள். இந்த ஆசிரமங்களைத் தொடங்குவது, மிகவும் பொருளாதார வகையிலே அவர்களுக்கு உதவியாக இருக்கிறது. இந்த ஆசிரமங்கள் அல்லது பக்தியின் பெயரால் கட்டப்படுகின்ற தனியார் நிறுவனங்கள், ஆய்வுக்கு உட்பட வேண்டும்; அரசாங்கத்தின் ஆய்வுக்கு உட்பட வேண்டும்; அனுமதிக்கு வரையறுக்கப்பட வேண்டும்; தணிக்கைக்கு உட்பட வேண்டும். அப்படி உட்படுத்தப்பட்டால்தான், அதிலே தவறுகள் நடக்காது; முறைகேடு நடக்காது என்பதை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

அதேபோல, ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை மீட்பதற்கு Fact Finding Committee என்றவகையிலே, உண்மையை அறிகின்ற ஒரு நிபுணர் குழுவை நியமிக்க வேண்டும். காலங்காலமாக இருக்கின்ற அதே குற்றச்சாட்டுகளை, வருடந்தோறும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் மீட்டபாடில்லை என்றுதான் நான் கருதுகின்றேன். ஆகவே, பல ஆலயங்களுக்குச் சொந்தமான, பல கோடி ரூபாய்க்குச் சொந்தமான அந்த நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றன, எந்த நிலையில் இருக்கின்றன என்பதனை அறிவதற்கு ஒரு நிபுணர் குழுவை, வருவாய்த் துறை மற்றும் இருக்கின்ற சான்றோர்களைக் கொண்டு, அல்லது அலுவலர்களைக் கொண்டு, ஒரு Fact Finding Committee அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, திருத்தணி திருக்கோயிலிலே முன் பாதையை அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்கள் என்று நான் சொன்னேன். அதிலே பின்புறம் இப்போது ஒரு மலைப் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டிலே, அந்தப் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாதை அமைக்கப்படுகின்றபோது, ஆடி கிருத்திகை போன்ற திருநாட்களிலே அந்தப் பாதை மிகவும் பயன்படும் என்று நான் நம்புகின்றேன். ஆகவே, அந்த மலைப் பாதையை மிக விரைவாக முடித்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அறங்காவலர் குழுவை நியமிக்கும்பொழுதுகூட, அரசியல் கலப்பின்றி மிகச் சிறந்தவர்களைக் கொண்டு, அதாவது நெறிமுறைகளைக் கொண்டு வாழ்கிறவர்களை நாம் நியமிக்க வேண்டும். கட்சிக் கண்ணோட்டத்தோடு அல்லாமல், மிகச் சிறப்பான ஒரு முறையிலே அந்த அறங்காவலர் குழுவை நீங்கள் நியமிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். தமிழ்ப் புலவர்கள் ஏறக்குறைய எட்டு ஆண்டுகளாக அங்கே 1,500 ரூபாய் ஊதியத்திலே பணி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பணியை நீங்கள் முறைப்படுத்த வேண்டும்; Regulate செய்ய வேண்டும். Time Scale-ல் அவர்களைக் கொண்டுவர வேண்டும். அப்படிச் செய்தால் நிச்சயமாக அவர்கள் மிகச் சிறப்பான ஒரு காரியத்தை நம்முடைய அறநிலையத் துறைக்கு ஆற்றுவார்கள் என்று இங்கே கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, திருமுருகக் கிருபானந்த வாரியாருடைய நூற்றாண்டு நிறைவு விழா வருகின்ற 25 ஆம் தேதி வருகின்றது. பெரியவர் வாரியார் அவர்களுக்கு, திருமுருகக் கிருபானந்த வாரியார் அவர்களுக்குத் தபால் தலையை, அஞ்சல் தலையை வெளியிட்டுச் சிறப்புச் செய்தது மத்திய அரசு. நம்முடைய மாநில அரசு செய்ய வேண்டிய ஒரு சிறப்பை நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். வாரியாருடைய நூற்றாண்டினை நினைவுகூர்கின்றவண்ணம், அறநிலையத் துறையின் சார்பிலே விழா எடுப்பதோ, அல்லது அந்த விழாவினைக் குறிக்கும் வண்ணம் ஒரு மணிமண்டபம் கட்டுவதோ நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், அறவோர் என்பவர் அந்தணர்



என்றவகையிலே, அந்தணராகவே வாழ்ந்த வாரியார் அவர்களை நினைவுகூர்கின்றவண்ணம், நிரந்தரமாக நினைவுகூர்கின்றவண்ணம், இந்த மணிமண்டபத்தைச் சென்னையிலே அமைக்க வேண்டும். அவர் சிந்தாதிரிப்பேட்டையிலேதான் வாழ்ந்தார். அந்த சிந்தாதிரிப்பேட்டை பகுதியிலே அவருடைய பெயர் என்றும் நிலைக்கும்வண்ணம், அவர் வாழ்ந்த அந்த வீதிக்கோ அல்லது அந்தப் பகுதிக்கோ அவரது பெயரைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, புதிய ஆலயங்களைக் கட்டுவதில் நெறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். புதிய ஆலயங்கள் கட்டுகின்றபோது, அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்றுதான் கட்ட வேண்டுமென்ற வரையறை இருக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், ஏற்கெனவே இருக்கின்ற பழைய கோயில்களைப் பராமரிக்காமல், புதிய கோயில்களைக் கட்டுவது என்பது, அவ்வளவு அறிவுடைமையாகாது என்று பரமாச்சாரியார் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த அறிவுரையை நான் இங்கே நினைவுகூர்ந்து, புதிய ஆலயங்களைக் கட்டுகின்றபோது சில நெறிமுறைகளுக்குட்பட்டு பராமரிப்பதற்கான அந்த funds அல்லது அந்த நன்கொடை அல்லது அந்தப் பண வைப்பு இருக்கிறதா என்ற நிலைமையை ஆராய்ந்து நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், முடியுங்கள். Time 1.25 ஆகிவிட்டது.

பிற்பகல் 1-25

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** அதேபோல, வீட்டு வசதி சார்பிலே அந்தத் துறையின் சார்பாக வந்திருக்கின்ற இரண்டு கோரிக்கைகளை நான் விடுக்கின்றேன். தமிழக வீட்டு வசதி வாரிய வீடுகள் பராமரிப்புச் செய்யப்படாமல் விழுந்து விடுகின்ற நிலையில் இருக்கின்றன என்று பல இடங்களிலேயிருந்து கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அந்தப் பராமரிப்புப் பணிகளை, வீட்டு வசதி வாரியம் செய்ய வேண்டும். அதேபோல, குடிசை மாற்று வாரிய வீடுகளையும் பராமரிப்புச் செய்ய வேண்டும். லஸ் பகுதியிலே இருக்கிற பெருந்திட்ட வளாகத்தின்கீழாக விற்கப்பட்ட மனைகளுக்கு, அந்த வீடு ஒதுக்கியவர்களுக்கு இன்னும் 12 ஆண்டுகளாகியும், கிரயப் பத்திரம் வழங்கப்படுகின்ற செய்தியும்

[டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்] [2006 ஆகஸ்ட் 18

இங்கே வந்திருக்கிறது. ஆகவே வீட்டு வசதித் துறையின் சார்பாக செய்ய வேண்டிய கடமைகளை இந்த அரசாங்கம் செய்யும் என்று நம்புகின்றேன். அதைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் செய்து கொடுப்பார்கள் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன். நல்ல வாய்ப்புக்கு நன்றிகூறி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில், அரளிக்கோட்டை என்னும் கிராமத்தில் பிறந்த என்னை, வளமார் திராவிடத்தின் வரலாற்றுப் பேழையாகத் திகழும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு உறுப்பினராக இரண்டு முறையும், அதேபோல, சிவகங்கை மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராக இரண்டு முறையும் பணியாற்றுகின்ற வாய்ப்பையும் தந்து, நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில், திருப்பத்தூர் தொகுதியில், கழக வேட்பாளராக என்னை நிறுத்தி, வெற்றிபெறச் செய்து, அறநிலையத் துறைக்கு அமைச்சராக்கி, இந்த அவையில் அமர வைத்திருக்கும், நடமாடும் கோயிலாய், நற்றமிழின் முகவரியாய், வரம் தந்த ஆண்டவனாய், எம்மையாளும், எந்நாளும் ஆளும் முதல்வராய்த் திகழும், எங்கள் தமிழ்க் கடவுள், அய்யா கலைஞர் அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கர்ணனுக்குக் கவச குண்டலம் கிடைத்ததுபோல, கலைஞருக்குக் கிடைத்த கவசக் குண்டலமாய், இனமானமும், தன்மானமும், தமிழ் மானமும் காத்து நிற்கும், நிகரில்லா, வரியில்லா நிதிநிலை அறிக்கை தந்திட்ட, எங்கள் இனமானப் பேராசிரியர் பெருந்தகைக்கும் எனது வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

என் உயிராய், உணர்வாய், உருவாய், உதிரமாய், கவியாய், கருவாய், என் குருவாய் வாழும், என்னை வார்த்தெடுத்த சிற்பி, வழி நடத்திச் செல்லும் நாடு போற்றும் நல்லவரே! நாளைய தமிழகத்தின் நல்லாட்சி நாயகரே! எனது வெற்றிக்கு அயராது உழைத்து, சட்டமன்ற உறுப்பினராக்கியது மட்டுமல்லாமல், அறம் வளர்க்கும் துறையாம், அறநிலையத் துறைக்கு அமைச்சராகவும் ஆக்கி, அழகுபார்க்கும்



2006 ஆகஸ்ட் 18] [திரு. கே.ஆர். பெரியகருப்பன்]

தமிழினத்தின் தளபதியே! உங்களுக்கு நானும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது குடும்பத்தினரும் இன்றுமட்டுமல்ல; என்றென்றும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதை நன்றிப் பெருக்கோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எனது வெற்றிக்கு உழைத்த, தியாகத்தால் உருவான, கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், குறிப்பாக, எங்களது நாடாளுமன்ற உறுப்பினர், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர், திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் பேரியக்கம், பாட்டாளி மக்கள் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் போன்ற பல்வேறு அரசியல் கட்சி நிர்வாகிகளுக்கும், வாக்களித்து வெற்றிபெறச் செய்த திருப்பத்தூர் தொகுதி, வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைக் காணிக்கையாக அளித்து என் பதிலுரையைத் துவங்குகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்கின்ற திருமந்திரத் திருமொழியைத் தாரக மந்திரமாகக் கொண்டு, இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தைக் கழக அரசு நடத்த முனைந்தது. அவரது அடியொற்றி, கண் துஞ்சாமல், மெய் வருத்தம் பாராமல், பசி நோக்காமல், தமிழக மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவது என்று கருமமே கண்ணாகச் செயல்பட்டுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள், திருக்கோயில்களைப் பேணுவதிலும், அங்கு சென்று வழிபடும் பக்தர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதிலும், திருக்கோயில்களில் தமிழ் மீண்டும் ஒலிக்கச் செய்வதிலும் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

*"செந்தமிழே! உயிரே! நறுந் தேனே!*
*செயலினை மூச்சினை, உனக்களித் தேனே!*
*நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு*
*நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே!"*

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வைர வரிகளை மனதில் நிறுத்தி, தமிழைச் செம்மொழியாக அறிவிக்கச் செய்து, அதற்கு உலகளவில் சிறப்பு நிலையை ஏற்படுத்தியவர் எங்கள் தலைவர், கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் ஏன் இங்கு சொல்கிறேன்

என்றால், இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்பு, திருக்கோயில்களில் தமிழ்மொழி தன் உன்னத நிலையை இழந்து நின்றபோது ஞானசம்பந்தர் என்ற மகான் பிறந்தார். திருக்கோயில்கள் முழுவதிலும், தன் இன்னிசைப் பாடல்களை ஒலிக்கச் செய்தவண்ணம், தமிழை நிலைநிறுத்தினார்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** தன்னைத் தமிழ் ஞானசம்பந்தன் என்றே, தான் இசைத்த பதிகங்கள்மூலமாகப் பறைசாற்றி, சைவ, சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதிலும், தமிழ் மொழியைத் திருக்கோயில்களில் அதன் பழைய பீடுநிலைக்கு உயர்த்துவதிலும் வெற்றி கண்டார். இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத நேரத்தில், திருக்கோயில்களில், 'தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்று, தமிழை இரண்டாந்தர மொழியாகச் சித்தரிக்கும் நிலைமை சிலரால் உருவாக்கப்பட்டதை அறிந்து, கொதித்தெழுந்து, தமிழகத் திருக்கோயில்களில், 'தமிழ் அர்ச்சனை தலையாய ஒன்றாக விளங்கும்' என்று அறிவிக்கச் செய்ததன்மூலம் தலைவர் கலைஞர் அவர்கள், இந்த நூற்றாண்டின் தமிழ் ஞானசம்பந்தராக விளங்குகிறார் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் இணக்கமுற வாழ்வதற்கு வழிகோல உருவானவை கோயில்கள். சாதி ஏற்றத் தாழ்வுகளைக் கற்பித்து, மக்களைப் பிரித்துவைக்கக் கோயில்கள் பயன்படுத்தப்படுவது, பிற்காலத்தில் எழுந்த நிலை. அடியார்களிடையே சாதி வேறுபாட்டை ஆண்டவன் கண்டதாக புராணங்கள்கூட சொன்னதில்லை. ஆனால், ஆண்டவன் ஒரு சாராருக்கு மட்டுமே உரியவன் என்ற நிலை இடைக்காலத்திலே ஏற்படுத்தப்பட்டது. காலங்காலமாய், சமுதாயத்தின் பெரும்பான்மையினர் சுமந்துவந்த அந்தக் களங்கத்தைத் துடைத்து, "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று இயம்பிய வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாட்டில், திருக்கோயில்களில் சாதிப் பாகுபாடின்றி, உரிய பயிற்சியும், தகுதியும் பெற்ற அனைவரும் பூசை செய்யும் உரிமையைத் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு, தற்போது வழங்கியிருக்கின்றது. அறம் செய்வதைவிட, அந்த அறத்தைத்



தொடர்ந்து காப்பதே மிகவும் உயர்வானது என்பர் பெரியோர். திருக்கோயில்களைக் கட்டியவர்கள் உயர்ந்தோர் என்றால், அவற்றின் நிர்வாகத்தைச் செம்மையாகக் கவனித்து வருபவர் மேலும் உயர்ந்தவர். அந்தவகையில், தமிழகத் திருக்கோயில்களில் நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதற்காக, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்வாயிலாக, மாண்புமிகு முதல்வர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள், 6 கட்டளைகளை அறிவித்துள்ளார்கள். அவை: (1) கோயில்களுக்குத் திருப்பணி ஆற்றி, குடமுழுக்கு விழாக்களை நடத்துதல்; (2) கோயில் சொத்துக்களை முறையாகப் பாதுகாத்தல்; (3) சொத்துப் பதிவேடுகளை உருவாக்குதல்; (4) கோயில் சொத்துக்களை மீட்டல்; (5) கோயில்களின் வருவாயை உயர்த்துதல்; (6) தமிழில் ஆகம நூல்களை வெளியிடுதல். இந்த ஆறு கட்டளைகளின்படி, திருக்கோயில் நிர்வாகம் விரைவாகவும், பொறுப்புணர்வுடனும் நடைபெறும்வகையில், இத்துறை முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

திருக்கோயில் நிர்வாகத்தில் மிக முக்கியப் பொறுப்பு வகிப்பவர்கள், அவற்றின் செயல் அலுவலர்கள் ஆவர். மொத்தம் அனுமதிக்கப்பட்டுள்ள பல்வேறு நிலையிலான செயல் அலுவலர்கள் பணியிடங்கள் 629 ஆகும். இவற்றில், 233 பணியிடங்கள் காலியாக உள்ளன. இவை தவிர, பொது நிர்வாகத்தைக் கவனிக்கின்ற இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள், ஆய்வர்கள், கண்காணிப்பாளர்கள், உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் போன்று மொத்தம் 625 பணியிடங்கள் காலியாக உள்ளன. கடந்த ஆட்சியின்போது, அரசுப் பணிகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கு ஒட்டுமொத்த தடை விதிக்கப்பட்டிருந்த காரணத்தினால், இந்தப் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்படாமல் இருந்தன. இதனால், பல திருக்கோயில்களில் அன்றாட நிர்வாகம் பாதிக்கப்பட்டது. சில செயல் அலுவலர்கள், பத்துக்கும் மேற்பட்ட கோயில்களைக் கவனிக்கக்கூடிய நிலைகூட இருந்து வருகிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், அரசுப் பணியாளர்கள் நியமனத்திற்கு விதிக்கப்பட்டிருந்த ஒட்டுமொத்த தடையை நீக்கி ஆணையிட்டுள்ளதை இந்த அவை அறியும். அதையொட்டி, இதர சுற்றறிக்கைகள் விரைந்தவண்ணம் உள்ளன. எனவே, இத்துறையில் உள்ள அனைத்துக் காலியிடங்களும், முறைப்படி, விரைவில் நிரப்புவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்படுவதைப் பொறுத்தமட்டில், அறங்காவலர்களின் பதவிக் காலத்தை மூன்றாண்டுகளிலிருந்து ஓராண்டாகக் குறைத்து, இந்த அரசு ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது. இந்த அவசரச் சட்டத்தைச் சட்டமாக்கும்வகையில், ஒரு சட்ட முன்வடிவு சட்டப் பேரவையில், 12-8-2006 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்சட்டமுன்வடிவினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்போது, அதுபற்றி விரிவாக எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதற்கு முன்பு, நிர்வாக ஆணையின்மூலமாக மட்டுமே, பெண்கள் அறங்காவலர் குழுவில் சேர்க்கப்பட்டு வந்தனர். ஆனால், அறங்காவலர் குழுவில் பெண்களுக்குக் கட்டாயமாக வாய்ப்பளிப்பது, இந்த அவசரச் சட்டத்தின்மூலம் சட்ட ரீதியாக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அறங்காவலராக இருப்பதற்கு 70 வயது என்ற உச்ச வரம்பு நீக்கப்பட்டு, வயதில் முதிர்ந்த ஆன்றோர் மற்றும் சான்றோர் அறங்காவலர்களாக நியமிக்கப்படுவதற்கு இந்தச் சட்டமுன்வடிவு வழிவகுக்கிறது. இதற்கு ஏதுவாகத்தான் அறங்காவலர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளிலிருந்து ஓராண்டாகக் குறைக்கப்பட்டதேயொழிய, வேறு எந்த நோக்கமும் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.35

திருக்கோயில்களுக்கும், மடங்களுக்கும் சேர்த்து 2,05,050 ஏக்கர் நன்செய் நிலங்களும், 2,53,000 ஏக்கர் புன்செய் நிலங்களும், 20,000 ஏக்கர் மானாவாரி நிலங்களும், ஆக மொத்தம் சற்றொப்ப 4,79,000 ஏக்கர் நிலங்கள் சொந்தமாக உள்ளன. விவசாய நிலங்களைக் குத்தகைக்கு விடுவதன்மூலமும் கட்டடங்களையும், மனைகளையும் வாடகைக்கு விடுவதன்மூலமும் திருக்கோயில்களுக்குக் கணிசமாக வருவாய் வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் ரூபாய் 44 கோடியே 47 இலட்சம் இந்தவகையில் வருவாய் கிடைத்துள்ளது. குத்தகைக்கு விடப்படும் நிலங்களில் சாகுபடி செய்யும் பதிவுசெய்த குத்தகைதாரர்களிடமிருந்து நிலுவைத் தொகை வசூலிக்கவும், தொடர்ந்து குத்தகை செலுத்தாதவர்களை வெளியேற்றவும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்குத் தனித் துணை ஆட்சியர் தலைமையில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், மதுரை ஆகிய ஆறு இடங்களில் முழுநேர வருவாய் நீதிமன்றங்களும், மன்னார்குடி, கும்பகோணம், சேலம், தென்காசி ஆகிய நான்கு இடங்களில் முகாம் அடிப்படையில் வருவாய் நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டுள்ளன.



இந்த வருவாய் நீதிமன்றங்களில் துணை ஆட்சியர் பணியிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் காலியாக இருந்தமையால், மொத்தம் 27,121 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு வருவாய்த் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமித்துள்ளவர்களை வெளியேற்றுவதற்கென, 1959 ஆம் ஆண்டின் சட்டத்திலிருந்த சட்டப் பிரிவுகள் போதுமானவையாக இல்லாத காரணத்தால், 1996 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள், திருக்கோயில் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களை விரைவில் வெளியேற்றும்வகையில் துறை அலுவலர்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கிடும்வகையில், சில சட்டத் திருத்தங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள்; எனினும், திருக்கோயில் நிலங்களில் இன்னும் சுமார் 6,520 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் உள்ளன. இதுதொடர்பாக 811 வழக்குகள் Civil நீதிமன்றங்களிலும் 4,143 வழக்குகள் துறை அலுவலர்களிடமும் நிலுவையில் உள்ளன. சட்ட விதிமுறைகளைப் பின்பற்றி இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1963 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட நில இனாம் ஒழிப்புச் சட்டம் செயல்படுத்தப்பட்டபோது, திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குத் தவறுதலாக தனி நபர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்போது, மேலும் திருக்கோயில் நிலங்கள் பல தனி நபர்கள் பெயர்களில் மாற்றம் செய்யப்பட்டது தெரிய வந்தது. அந்நிலங்களை மீட்டு, திருக்கோயில்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை, நில அளவைப் பதிவேடுகளிலிருந்து கண்டுபிடித்து, அவற்றின் முழு விவரங்களைச் சேகரித்து அளித்திடுவதற்காக, மாவட்ட அளவில் ஓய்வுபெற்ற வருவாய்த் துறை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுவரை நில அளவைப் பதிவேடுகளின் அடிப்படையில், முதல்நிலை சரிபார்ப்பின்போது திருக்கோயில்களுக்குச் சொந்தமானதாக இருக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்ட நிலங்களின் மொத்தப் பரப்பளவு 17,000 ஏக்கராகும். இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பின்பு, இந்த நிலங்களை மீட்பதற்கு விரைவான நடவடிக்கைகள் கடந்தகாலங்களில் எடுக்கப்படவில்லை. இவ்வழக்குகளில், வாதுரைகள் தயாரித்து வருவாய்த் துறை

அலுவலர்களிடமும் Civil நீதிமன்றங்களின்முன்பும் தாக்கல் செய்வதற்கு உதவும்வகையில், ஒவ்வொரு இணை ஆணையர் சரகத்திற்கும் வழக்கறிஞர் குழு ஒன்றை ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

பிற்பகல் 1-40

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், திருக்கோயில்களுக்குச் சொந்தமான சில இடங்களில் கூட்டாக வீடு கட்டி, நீண்டகாலமாக அனுபவித்துவரும் சாமானிய மக்கள்மீது கருணை காட்டவும், அவர்களுடைய அனுபோகத்தை முறைப்படுத்தி அவர்களுக்கு மின் இணைப்பு, குடிநீர் வசதி போன்றவற்றைப் பெற்றுத் தருவதற்கு உதவிடவும் தெரிவித்தார்கள். திருக்கோயில் நிலங்களில் முன்னனுமதியின்றி கூட்டாக வீடு கட்டி, நீண்டகாலமாக அனுபவித்து வருபவர்கள் மாநிலம் முழுவதும் உள்ளனர். இவர்களை வெளியேற்றி, இவர்கள் அனுபவித்துவரும் நிலத்தை மீட்பதற்கு ஆங்காங்கே சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், இவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழையெளிய நடுத்தரப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்பதால், இவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்ற இயலாத நிலை நீடித்து வருகிறது. அதேசமயம், இவர்களைத் தொடர்ந்து இப்படியே நீடிக்க விடுவதால், திருக்கோயிலுக்கு எவ்விதப் பயனும் கிடைப்பதில்லை. இவர்களைத் திருக்கோயிலின் வாடகைதாரர்களாக அங்கீகரித்தால், திருக்கோயிலுக்குக் கணிசமான வருவாய் கிடைக்கும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. திருக்கோயிலின் நேரடிப் பயன்பாட்டிற்குத் தேவையற்ற நிலங்களில், நீண்டகாலமாகக் கூட்டாக வீடு கட்டி அனுபவித்து வருபவர்கள், தங்களை அந்தத் திருக்கோயிலின் வாடகைதாரர்களாகப் பதிவுசெய்து கொள்ளவும், திருக்கோயில் நிர்ணயிக்கும் நியாய வாடகையை நிலுவையின்றிச் செலுத்தவும் முன்வந்தால், இவர்களை வாடகைதாரர்களாக ஏற்றுக்கொண்டு, மின் இணைப்பு, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றிடும்வகையில், இவர்களை வாடகைதாரர்களாக ஏற்றுக்கொள்ளலாமா என்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை, பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள் கட்டுவதற்கும், துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், சாலை விரிவாக்கப் பணிகளுக்கும். இன்னபிற பொது நன்மை பயக்கும் காரியங்களுக்கும் அளித்திட வேண்டுமென்று மாண்புமிகு



உறுப்பினர்கள், இம்மாமன்றத்தில் கோரிக்கை வைத்தனர். இந்து சமய அறநிலையச் சட்டத்தின்கீழ், திருக்கோயில் நிலங்களை, அவை திருக்கோயிலின் பயன்பாட்டிற்குத் தேவையில்லையெனில், திருக்கோயிலின் நன்மையைக் கருத்திற்கொண்டு, விற்பனை செய்யலாம் என்றும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, திருக்கோவிலூர் வட்டம், சித்தலிங்கமடம், அருள்மிகு வியாக்கிரபுரீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு விற்பனை செய்யவும், கும்பகோணம் வட்டம், கொரநாட்டுக் கருப்பூர் அருள்மிகு சுந்தரரேசுவரர் திருக்கோயில் நிலத்தினை ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நில எடுப்பு செய்யவும் அரசு அனுமதி அளித்துள்ளது. அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். சென்னைக்கு அருகே, பூவிருந்தவல்லி நகராட்சிப் பேருந்து நிலையத்தையொட்டி, திருக்கச்சி நம்பி வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் உள்ளது. இந்த நிலத்தைப் பூவிருந்தவல்லி நகராட்சிக்கு ஒப்படைத்து, பேருந்து நிலையத்தை விரிவாக்க வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருந்து வந்தது. Civil வழக்குகள் இருந்தமையாலும், திருக்கோயில் நிர்வாகத்திற்கும் நகராட்சி நிர்வாகத்திற்கும் இடையே இணக்கமான ஒரு முடிவு ஏற்படாததாலும், இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்கவில்லை. ஆனால், இந்த இடத்தை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்கள், நேரடியாகப் பார்வையிட்டு, அடுத்த சில நாட்களில், இரு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி, நல்லதொரு முடிவெடுக்க ஆவன செய்தார்கள். இதையடுத்து, இந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமான 3.55 ஏக்கர் நிலத்தைப் பேருந்து நிலைய விரிவாக்கப் பணிக்கு, பூவிருந்தவல்லி நகராட்சி நிர்வாகத்திற்கு ரூ.4.2 கோடிக்கு விற்பனை செய்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில், திருக்கோயிலுக்கு முன்பணமாக ரூ.2 கோடியை நகராட்சி வழங்கியுள்ளது. பல்லாண்டுக் காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்த இந்தப் பிரச்சினை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நிர்வாகத் திறமையினால் ஓரிரு வாரங்களிலேயே தீர்க்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனை நோக்கும்போது, கம்பராமாயணத்தில், இமைப்பொழுதில் வில்லை எடுத்து, வளைத்து ஒடித்த இராமனின் திறத்தை எடுத்துரைக்கும் கம்பரின்,

"எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்" என்ற வரிகளே என் நினைவிற்கு வருகின்றன. பூவிருந்தவல்லி நகருக்குள் போதிய வருமானம் இல்லாது இருந்த இந்தப் பழம்பெரும் திருக்கோயிலுக்கு 2 கோடி ரூபாயை முதற்கட்டமாக வழங்கச் செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு இத்துறையின் சார்பில் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருத்தேர்கள், ஆங்காங்கே பழுதடைந்துள்ளதாகவும், அவற்றைப் பழுதுபார்த்து, தேரோட்டம் நடத்திட வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளார்கள். நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி திரட்டி, தமிழகத்திலுள்ள பழுதடைந்த திருத்தேர்களைப் பழுதுபார்ப்பதற்கு, கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்ட பட்டியலில் பல திருக்கோயில்கள் விடுபட்டுள்ளன என்பது, மாண்புமிகு உறுப்பினர்களின் உரையிலிருந்தும், அவர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களிலிருந்தும் தெரிகிறது. அந்தத் திருக்கோயில்களின் விவரங்களைச் சேகரித்து, அந்தத் தேர்களையும் பட்டியலிலே சேர்ப்பதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கும்பகோணம், அருள்மிகு சாரங்கபாணி சுவாமி திருக்கோயில் தேர் பழுதடைந்துள்ளதால், கடந்த 21 ஆண்டுகளாக, சித்திரைத் தேரோட்டம் நடைபெறவில்லை என்றும், அந்தத் தேரைப் பழுதுபார்த்து, மீண்டும் தேரோட்டம் நடத்தவேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. இத்தேரினை, ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்த்து, எதிர்வரும் சித்திரைத் திங்கள் சித்திரா பௌர்ணமியன்று தேரோட்டம் நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஓடாதிருந்த திருவாரூர் தேரை ஓட்டிய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் மணிமகுடத்தில், மேலும் அழகு சேர்க்கும் ஒரு வைரக் கல்லாக இது அமையும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 1-45

திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம்பற்றிக் குறிப்பிட்டார்கள். தற்போது, 360 கோயில்களில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இவற்றுள் (குறுக்கீடு) 183 கோயில்கள், அதற்கான செலவைத் தாமே ஏற்றுக்கொள்ளும் நிதி வசதி பெற்றவையாக உள்ளன. மீதமுள்ள 177 திருக்கோயில்கள், அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குப் போதிய நிதி வசதியின்றி உள்ளன.



எனவே, நிதி வசதி படைத்த முதல்நிலை திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து இத்திருக்கோயில்களுக்கு நிதி உதவி வழங்கிதான், இத்திட்டத்தைத் தொடர வேண்டிய நிலை உள்ளது. ஏற்கெனவே, நான் இந்த அவையிலே தெரிவித்தபடி, இந்தத் திட்டத்தை இந்த அரசு நிறுத்திவிடுமோ என்று ஐயப்பட வேண்டியதில்லை. தலைவர் கலைஞர் அவர்கள், நாட்டு மக்கள் நலனுக்காக அர்ப்பணித்த உழவர் சந்தை திட்டம், சமத்துவபுரத் திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களைக் கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்திவிட்டதைப்போல், நாங்கள் செய்யமாட்டோம். அன்னதானத் திட்டம், திருக்கோயில்களில் தொடர்ந்து நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தலைவர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராக இருந்த முந்தைய காலக்கட்டங்களில், திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் துவங்கி, ஆதரவற்ற சிறுவர் சிறுமியருக்கு நல்வாழ்வு அளித்தார்கள். திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதற்கு ஏதுவாக, தமிழ் அர்ச்சனை நூல்கள் அச்சிட்டு வெளியிடப்பட்டன. தெய்வச் சேக்கிழார், திருஞானசம்பந்தர் போன்ற அருளாளர்களுக்கு விழாக்கள் எடுக்கப்பட்டன. தல வரலாறுகளும், தலப் புராணங்களும் மீண்டும் அச்சிட்டு வெளியிடப்பட்டன. சமஸ்கிருத ஆகம நூல்கள் தமிழில் வெளியிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டது. திருக்கோயில்களில் சமய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியர்கள், உள் துறைப் பணியாளர்கள், செயல் அலுவலர்கள், இதர அலுவலர்கள் தங்கள் பணியைத் திறம்படச் செய்வதற்கு உதவும்வகையில், குறுகியகாலப் புத்தொளிப் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால், இத்திட்டங்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் தொய்வடைந்துவிட்டன. இத்திட்டங்கள் அனைத்தையும் மீண்டும் புதுப் பொலிவுடன் செயல்படுத்திட, இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்படிப் பல்வேறு கோரிக்கைகள் வரப்பெற்ற சூழ்நிலையிலும், பலர் இங்கே வெட்டுத் தீர்மானங்களிலே கொடுத்திருக்கின்ற விவரங்களையும் படித்துப் பார்க்கின்ற நேரத்தில், (குறுக்கீடு) இங்கே இந்தத் துறை சம்பந்தமாக 41 அறிவிப்புகள், துறையின் சார்பிலேயும் அச்சிடப்பட்டு, அவை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் இந்த அவையிலே வழங்கப்பட்டிருக்கின்றன. காலத்தின் அருமை

கருதி, நான் அத்தனை அறிவிப்புகளையும் £ இந்த மாமன்றத்தில் அறிவித்ததாகக் கருதி அதை அவற்றை குறிப்பிலே பதிவுசெய்திட வேண்டுமாய் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளமைக் காலத்தில் அரசியலில் ஈடுபட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்தில் வட்டக் கழகத்தினுடைய செயலாளர் என்ற அளவிற்கு உயர்ந்து, என்னுடைய நெஞ்சம் நிறைந்த தலைவர், அன்பிற்குரிய தலைவர், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி, இயக்கப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு, தொடர்ந்து வட்டக் கழகத்தினுடைய செயலாளராக, தலைமைக் கழகத்தினுடைய தணிக்கைக் குழு உறுப்பினராக, அவர்களுடைய ஆதரவால் நான்கு முறைகள் பொறுப்பேற்று, தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராக, மண்டலத்தினுடைய செயலாளராக, கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினராக, ஊராட்சி ஒன்றியத்தினுடைய பெருந்தலைவராக, பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கியின் பெருந்தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, இப்போது சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, இப்படிப் பல்வேறு பொறுப்புகளில் என்னை உருவாக்கி, ஆளாக்கி, இன்றைக்கு இந்த மாமன்றத்தில் இங்கே ஒரு மானியக் கோரிக்கையைத் தாக்கல் செய்கின்ற அளவிற்கு, ஒரு சாதாரண சின்னஞ்சிறு குக்கிராமத்தில் பிறந்த என்னை, ஆளாக்கி வளர்த்திருக்கக்கூடிய எங்களுடைய அன்பிற்குரிய தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

---

£ 581 முதல் 587 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



ரஷ்ய நாட்டை ஆண்ட ஜார் மன்னனுடைய முடியாட்சியை அப்புறப்படுத்தி, அந்த நாட்டினுடைய விடுதலைக்காகப் போராடி, அந்த நாட்டில் மக்களாட்சியை மலரச்செய்த, மாபெரும் தலைவர் மாவீரன் லெனின் அவர்கள், 'நான் கிரெம்ளின் மாளிகையில் இருந்தாலும், சைபீரியாதான் என்னுடைய நினைவிற்கு வருகிறது' என்று சொன்னார்.

அதேபோல நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1971 ஆம் ஆண்டு ஊட்டியிலே மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்தபோது, 'பச்சைப்பசேல் என்ற மலைச்சாரலைப் பார்க்கிறேன்; பூத்துக் குலுங்குகின்ற மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகின்றபோது, வறண்டு கிடக்கின்ற இராமநாதபுரம் மாவட்டம்தான், என்னுடைய நினைவிற்கு வருகிறது' என்றார்கள்.

அதுமட்டுமல்ல, பரமக்குடியில் நடைபெற்ற இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட அந்த பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்திலே பேசுகின்றபோது, இராமநாதபுரத்திற்கு முகவை என்ற ஒரு பெயர் உண்டு. மு.க.வை. முகவை; அந்த முகவையிலேதான், இந்த மு.க.-வும் இருக்கிறேன் என்று பேசினார்கள்.

அதைப்போல, எங்களில் ஒருவராக, எங்கள் மாவட்டத்து மக்களில் ஒருவராக இருந்து, அந்த மாவட்ட மக்கள், குடிதண்ணீருக்காகப் படுகின்ற துன்பங்களை உணர்ந்து, முதலில் 66 கோடி ரூபாய் செலவில் கடந்த ஆட்சிக் காலத்தில், ஆசிய கண்டத்திலேயே மிகப் பெரிய திட்டமான, நம்முடைய கடல் நீரையே எடுத்து, சுத்திகரித்து, 297 கிராமங்களுக்குக் கொடுத்தார்கள். இன்றைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்காக, காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு 671 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, அந்த மாவட்டத்திலே, (மேசையைத் தட்டும் ஒலி) 40 ஆண்டுகளுக்கு பிறகு, மக்கள் வாழ முடியாது என்று வல்லுநர்கள் சொன்ன கூற்றையெல்லாம் முறியடித்து அங்கேயும் இந்த மக்களைத் தொடர்ந்து வாழ வைப்பேன் என்று வீர சபதம் எடுத்து, 671 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்த, எங்கள் அன்பிற்குரிய தலைவர் அவர்களே, நீங்கள் இருக்கின்ற திசை நோக்கி நான் வணங்குகின்றேன்.

எங்களுக்கு இனமான உணர்வை, தன்மான உணர்வை ஊட்டிய அன்பிற்குரிய பேராசிரியர் – பொதுச் செயலாளர் – நிதியமைச்சர் அவர்களுக்கும் வணக்கம்.

எங்களுக்கு அவ்வப்போது நல்ல ஆலோசனை தெரிவித்து வருகின்ற ஆருயிர் அண்ணன் பொருளாளர், மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் வணக்கம். இந்த இயக்கத்தில் ஒரு தலைமுறை இடைவெளி வந்துவிடக் கூடாது; இந்த இயக்கம் வளர்ந்தால்தான் தமிழினம் வாழும், மொழி வாழும், கலை வாழும், கலாச்சாரம் வாழும், பண்பாடு, மனிதநேயம் வாழும்; எனவே, ஒரு இயக்கத்திலே இடைவெளி வந்துவிடக்கூடாது என்று கருதி, எந்த நோக்கத்திற்காகத் தலைவர் அவர்களும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், இந்த இயக்கத்திலே, இளைஞர் அணி என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார்களோ, அவர்களுடைய உள்ளுணர்வுகளைப் புரிந்துகொண்டு, பல்வேறு முறைகள், ஐந்தாறு முறைகளுக்கு மேலாக, தேர்தல் களம் நீங்கலாக, ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் வந்து, கொடியேற்று விழா மூலமாக, தமிழகத்திலேயுள்ள இளைஞர்களைத் தட்டி எழுப்பி, அவர்களுடைய நாடிகளிலே முறுக்கேற்றி, அவர்களுக்கு இன உணர்வை, மொழி உணர்வை, உருவாக்கி, இந்த இயக்கத்திலே கொண்டுவந்து சேர்த்து இந்த இயக்கத்தை ஒரு வலுவான கற்கோட்டையாக உருவாக்கித் தந்திருக்கின்ற, மாண்புமிகு உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கு, எங்களுடைய ஆருயிர் இளவல் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

14 ஆம் தேதி, எங்களுடைய மாவட்டத்திற்கு வந்து, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சித் துறையினுடைய நிர்வாகிகள் ஆகியோரைச் சந்தித்து, கலந்துரையாடி, பிறகு அரசுத் துறையினுடைய அலுவலர்களுடன் கலந்து பேச சென்னைக்கு வந்தார்கள். வருகின்ற வழியில், மக்கள் எல்லாம் வெள்ளமெனக் கூடினார்கள். 'தலைவா, எங்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை; தளபதி அவர்களே, குடிதண்ணீர் தாருங்கள்; நாங்கள் தண்ணீர் கேட்பதாகத் தலைவரிடத்திலே போய்ச் சொல்லுங்கள்; தண்ணீருக்காகக் கஷ்டப்படுகிறோம் என்று சொல்லுங்கள்' என்று சாலையின் இருபுறங்களிலும் நின்று தாய்மார்கள், இருதயத்தின் அடித்தளத்திலே இருந்து அவர்கள் சொன்ன குரலை, நம்முடைய தளபதி அவர்கள் நெஞ்சத்திலே சுமந்துவந்து, தலைவரிடத்திலே சொல்லி, அங்கே வந்து குழு கூடியது, 14 ஆம் தேதி. இங்கே நிதிநிலை அறிக்கை 19 ஆம் தேதி. நான்கு நாட்கள் இடைவெளியில் 671 கோடி ரூபாயில் எங்கள் மாவட்டத்திற்குக் *(மேசையைத் தட்டும் ஒலி)* குடிநீர் கிடைப்பதற்கு வழிவகுத்த, எங்கள் மாவட்டத்தினுடைய மக்களுக்கும்,



தலைவர் அவர்களுக்கும் பாலமாக விளங்கிய, எங்களுடைய அன்புத் தளபதி அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, என்னுடைய பதிலுரையை நான் துவங்குகின்றேன்.

*பிற்பகல் 1–55*

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள், நம்முடைய அன்பிற்குரிய திருவள்ளூர் சட்டப் பேரவை உறுப்பினர், அண்ணன் திரு. இ.ஏ.பி. சிவாஜி அவர்களும், நம்முடைய அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களும் இங்கே அற்புதமான கருத்துகளை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், கடந்த ஒருவார காலமாக மிகக் கடுமையாகச் செயல்பட்டு, எப்படிப்பட்ட கேள்விகள் வரும்; எப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சொல்வார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து, ஏராளமான குறிப்புகளைத் தயாரித்திருந்தேன். அவ்வளவு பெரிய குறிப்புகள். எடுத்தால், ஏராளமான குறிப்புகள்; எத்தனை ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும் கொடுக்கமுடியும். ஆனால், அதற்கெல்லாம் இன்றைக்கு வேலையில்லாமல் போய்விட்டது. எனக்கு ஒரு வருத்தம் உண்டு. காரணம், பழி தீர்க்க வேண்டுமென்ற நோக்கமல்ல. கடந்த சட்டப் பேரவைத் தொடரில், அன்றைக்கு இருந்த, இந்தத் துறையினுடைய நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர், நான் பெயரைக்கூட குறிப்பிட விரும்பவில்லை; இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர், ஒரு தவறான குற்றச்சாட்டை இந்த அவையிலே பதிவுசெய்திருக்கிறார். என்னுடைய ஆருயிர் இளவல், இன்றைய சட்டமன்ற உறுப்பினரும், அதற்கு முந்தைய காலக்கட்டத்திலே இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்த அண்ணன் பிச்சாண்டி அவர்கள் எழுந்து நிற்கிறபோதெல்லாம், அதற்கு மறுதலிக்க வேண்டுமென்று, அவர் எழுந்து நின்ற நேரத்திலெல்லாம் 'ஏ, உட்கார், உட்கார்' என்று சொன்னதுதான், இந்த அவையின் புத்தகங்களிலே பதிவாகியிருக்கிறது. அதெல்லாம் தவறான செய்தி என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லவேண்டுமென்று கருதினேன். அதற்கெல்லாம் வேலையில்லாமல் போய்விட்டது. எனவே,

இன்றைக்காவது இரண்டரை மணிவரை காத்திருக்காமல் அனுப்ப வேண்டுமென்றுதான் கருதுகிறோம். இருந்தாலும் சில செய்திகளை, அறிவிப்புகளைமட்டும் படித்துவிடலாம் என்று கருதினாலும், சில செய்திகளை இங்கே பதிவுசெய்ய வேண்டியிருக்கிறது.

எங்களுடைய அன்பிற்குரிய தலைவர், முதலமைச்சர் அவர்கள், கடந்தமுறை ஆட்சி இழந்ததற்குப் பிறகு, 'சரித்திர சாதனை' என்ற தலைப்பில் 'முரசொலி'–யில் எழுதியிருக்கிறார். அது புத்தக வடிவமாக இருக்கிறது. அது ஒன்றைப் படித்தாலே, மூன்றரை மணி நேரம் இங்கே பதிலுரைக்க முடியும். எனவே, அவற்றிற்குள்ளே எல்லாம் போகாமல், சில செய்திகளைமட்டும் நான் இங்கே எடுத்துச் சொல்லலாம் என்று கருதுகின்றேன்.

பொதுவாக, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், இதுவரை 2,700 கோடி மதிப்பீட்டில் 3,93,684 வீடுகளையும், அடுக்குமாடிக் குடியிருப்புகளையும் மற்றும் மேம்பாடு செய்யப்பட்ட மனைகளையும் உருவாக்கியுள்ளது. கழக ஆட்சியில், சென்னையில், அண்ணா நகர், கலைஞர் நகர், இந்திரா நகர், மறைமலை நகர், கவியரசு கண்ணதாசன் நகர், சாஸ்திரி நகர், திருவான்மியூர் போன்ற பல்வேறு பகுதிகளிலும் மற்றும் மதுரையிலும், வேறு பிற நகரங்களிலும், பெரிய நகரங்களை உருவாக்கி, அனைத்து வசதிகளுடன்கூடிய, அடிப்படைக் கட்டமைப்பினைக் கொண்ட புதிய நகரங்கள் கழக ஆட்சியில் உருவாக்கப்பட்டதால், அந்த நகரங்களின் எழில் மேலும் கூடியது. இதன்மூலம், அந்த நகரங்களின் வீட்டு மனை விலை உயராமல் கட்டுக்குள் வைக்கப்பட்டது. அடுத்துவந்த ஆட்சியாளர்கள், இந்தத் திட்டமிடுதலில் மெத்தனப் போக்கைக் காட்டினார்கள். மக்களின் தேவைக்கேற்ப வீட்டு மனைகளை உருவாக்காமல், தேவையற்ற இடங்களில் வீட்டு மனைகளை உருவாக்கினர்கள். வீடுகளைக் கட்டினார்கள். உதாரணமாக, மதுரை, ஆனையூரில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 710. அவற்றில், இன்றுவரையில் 8 வீடுகளே விற்பனையாகி, மீதமுள்ள 702 வீடுகள் விற்கப்படாமலேயே உள்ளன. அதேபோல, உடுமலைப்பேட்டையில் 316 வீடுகள் கட்டப்பட்டு, அவற்றில் ஒன்றுகூட இதுவரையில் விற்பனையாகவில்லை. இவ்வாறு, தேவையற்ற இடங்களில் வீடுகளைக் கட்டியதனால், அவற்றை விற்பனை செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. இதனால் வாரியத்திற்கு இழப்பு ஏற்பட்டது. இதுகுறித்து அதிகாரிகளுடன் கலந்தாலோசித்ததிலும், நேரில் பார்வையிட்டதிலும், இக்குறைபாடுகள் கண்டறியப்பட்டு,



இவற்றை எல்லாம் களைவதற்கு ஓர் உயர் மட்டக் குழு அமைத்து, அதன் அறிக்கையினைப் பெற்று, குறைகள் விரைவில் தீர்க்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–00

முழு தோராயத் தொகையையும் செலுத்திய பல பேர்களுக்கு, இன்னும் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் மாநில அளவில் மிகுதியாக உள்ளன. அதற்குத் தீர்வு காணுகின்றவகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி, அதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு, அவை களையப்பட்டு, சென்னை அண்ணா நகரில், பெரியார் அரங்கில் 2–8–2006 அன்று ஆயிரம் பேருக்கு முதற்கட்டமாக விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இது, சென்னைவாழ் மக்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதேபோன்று, மாநிலத்தின் பிற பகுதிகளிலும் விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படாத அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், இக் கூட்டத்தொடர் முடிந்தவுடன், அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று, விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆட்சியில் புதிய வீடுகளை, நகரங்களை உருவாக்குவதற்கு எந்தவிதமான திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக, மனைகளின் விலை உயர்ந்து, ஏழை மற்றும் நடுத்தர மக்கள் வாங்க இயலாத நிலை ஏற்பட்டது. அந்தக் குறைகளைப் போக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரைப்படி, சென்னை, மதுரை, கோவை மட்டுமல்லாமல், இதர மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் ஆங்காங்கே உள்ள, இதர நகரங்களில் உள்ள மக்களின் தேவைகளைக் கண்டறிந்து, அதற்கேற்ப திட்டமிட்டு, புதிய வீடுகள் கட்டப்படும்; புதிய மனைகளும் உருவாக்கப்படும்.

சென்னையிலுள்ள மகாகவி பாரதி நகரில், நில ஆக்கிரமிப்பிற்குள்ளான ரூபாய் 8 கோடி மதிப்பிலான வாரியத்தின் நிலத்தை இந்த அரசு உரிய நேரத்தில் எடுத்து, தீவிர நடவடிக்கையால் மீட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், சென்னை, இந்திரா நகரில் முந்தைய அரசால் ஒதுக்கப்பட்ட 20 பெரிய அளவிலான குடியிருப்பு மனைகளை அதிக பயனீட்டாளர்கள் பயன்பெறும்வகையில், 36 மனைகளாகப் பிரித்து,

வாரியத்திற்கு அதிக வருமானம் ஈட்டும்வகையில், அவை எல்லாம் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த இடம், எந்தவிதமான விலையும் – கத்தரிக்காய்கூட கிலோ 10 ரூபாய், 15 ரூபாய் என்று கூவி விற்கின்ற இந்த நாட்டில், ஒரு பிரம்மாண்டமான ஒரு இடத்தை, இந்திரா நகரிலுள்ள இடத்தை எந்தவிதமான rate-ம் — நிலத்தினுடைய மதிப்பை நிர்ணயம் செய்யாமல், சில தனி நபர்களுக்கே அரசாணை பிறப்பிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த அரசாணையை இரத்து செய்து, மீண்டும் அவற்றையெல்லாம் புதிய விற்பனைக்குக் கொண்டுவர உத்தரவிட்டிருக்கிறார்கள். இதன்மூலமாக, பல கோடி ரூபாய் இந்தத் துறையால் கைப்பற்றப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'யானை படுத்தாலும் குதிரை மட்டம்' என்று சொல்வார்கள். அதைப்போல, சோர்ந்து கிடக்கின்ற இந்த வீட்டு வசதி வாரியத்தை எழச் செய்து, பீடுநடை போடச்செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை எடுத்து, மீண்டும் இந்தத் துறையைப் புத்துயிர் பெறச் செய்வோம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்து, குடிசை மாற்று வாரியம். வானமே கூரையாக நடைபாதையிலும், நதி ஓரங்களிலும், கழிவுநீர் செல்லும் பாதைகளிலும், பாதைகளின் அருகிலேயும், சின்ன குடிசைகளில் துவண்டு கிடந்த நலிவுற்ற மக்களுக்கு, அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும் என்று சிந்தித்த முத்தமிழ் அறிஞர் தமிழக முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்ட உன்னத திட்டம்தான், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் திட்டமாகும்.

குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவில் முதன்முதலாக தமிழ்நாட்டில்தான், அதுவும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களாலே துவக்கப்பட்ட முன்னோடித் திட்டமாகும். நெரிசல் மிக்க, சுகாதாரமற்ற நிலையிலுள்ள குடிசைப் பகுதிகளை அகற்றி, அங்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுதல், கள மேம்பாட்டுப் பணிகளைச் செய்ய ஏற்றவாறு குடிசைப் பகுதிகளைத் தேர்வு செய்து, மேம்பாட்டுப் பணிகளைச் செய்தல், இந்த இரண்டு பணிகளையும் செய்ய முடியாத அளவில் உள்ள இடங்களில் வசிக்கும் மக்களை, வேற்று இடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டிக் குடியமர்த்துதல் போன்ற பணிகளை இவ்வாரியம் ஆற்றி வருகிறது.



ஆரம்பத்தில் சென்னையில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. பின்பு அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, தூத்துக்குடி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டத் தலைநகரங்களிலும், அதன் பின்பு, கும்பகோணம், திருப்பூர், சங்கரன்கோவில் போன்ற நகரங்களிலும், இதுவரை ரூபாய் 275.16 கோடி செலவில் 70,146 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிலே, சென்னையிலே மட்டும் கட்டப்பட்ட குடியிருப்புகள் 62,416 ஆகும். இவற்றிலே வாரியம் தோற்றுவிக்கப்பட்ட 1970-லிருந்து, கழகம் ஆட்சியிலே இருந்த 12 ஆண்டுகளில் கட்டப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை 33,403 ஆகும். இதர காலக்கட்டமான 24 ஆண்டுகளில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளின் எண்ணிக்கை 29,552 மட்டுமே.

பிற்பகல் 2-05

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 30 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட, பழுதுபார்க்கத்தக்க பழுதடைந்த வீடுகள், மீண்டும் பழுதுபார்க்கப்படும் என்றும், முற்றிலும் பழுதுபார்க்க முடியாதவகையில் உள்ள குடியிருப்புகள் அகற்றப்பட்டு, அவ்விடத்தில் புதிய குடியிருப்புகள் கட்டப்படும் என்றும் கழகத் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்திருந்தார்கள். அதன்படி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பதவியேற்றவுடனே, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை உள்ள 2,862 அடுக்குமாடிக் குடியிருப்புகள் முழுவதுமாக அகற்றப்பட்டு, அவ்விடத்தில் ரூ.128.110 கோடி செலவில் மொத்தம் 7,320 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ஏற்கெனவே குடியிருந்தவர்களுக்கு வீடுகள் வழங்குவதுடன், கூடுதலாகக் கட்டப்படும் அடுக்குமாடி வீடுகள், சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட 4,488 மீனவக் குடும்பங்களுக்கும், இக்குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த 3 மாதங்களில், மக்கள் பயன்பெறும்வகையில் நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும், அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பழுதுபார்த்து, பராமரிப்புப் பணிகளைச் செய்வதற்காகவும், எங்கள் அரசு ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட

குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு, வட சென்னைப் பகுதியில் 5,400 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.81 கோடி செலவில் அமைக்க 13.69 ஹெக்டேர் அரசு நிலம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நிலக் கிரயமின்றி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தென் சென்னைப் பகுதியில் சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் மறு குடியமர்வு செய்ய, சென்னை ஒக்கியம்-துரைப்பாக்கம் பகுதியில் 5,484 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.81.81 கோடி செலவில் அமைப்பதற்கு 17.81 ஹெக்டேர் அரசு நிலம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு நிலக் கிரயமின்றி வழங்க ஆணையிட்ட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், அதைப் பெற்றுத்தந்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த வாரியம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

மதுரை மாநகரில் உள்ள சுப்பிரமணியபுரம் மற்றும் திடீர் நகர் குடிசைப் பகுதி ஆகிய திட்டப் பகுதிகளில் 696 அடுக்குமாடிக் குடியிருப்புகள், ரூ.10.44 கோடி செலவில் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு, அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால், கடந்த 13-8-2006 ஆம் நாள் நடைபெற்றது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்து, கூட்டுறவு வீட்டு வசதித் துறை. தமிழகத்தில் நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும், குறைந்த, நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கும், நலிவுற்ற ஏழை எளியோருக்கும் வீட்டு வசதி பெற கடன் உதவி வழங்குவது கூட்டுறவு வீட்டு வசதித் துறையாகும். மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் 197 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும், நகர்ப்புறங்களில் 799 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்க இணையத்துடன் இணைக்கப்பட்டு, கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. தமிழகத்தில், மொத்தத்தில் இதுவரை இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ.4,319 கோடியாகும். அத்தொகையில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 11,37,958 ஆகும். இது, அகில இந்திய அளவில் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில், 50 சதவிகிதமாகும்; தமிழகத்தில் மட்டும் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், அகில இந்திய அளவில் கட்டப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கையில் 50 சதவிகிதம், தமிழகத்தில்தான் கட்டப்பட்டுள்ளது.



1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் பெருமளவில் கடன் வழங்க ஏதுவாக, இணையத்தின்மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ள, அரசுப் பொறுப்புறுதியாக, தலைவர் கலைஞர் அவர்களாலே, ரூ.2 ஆயிரம் கோடி வழங்கியதன்மூலம், கடந்த ஆட்சிக் காலத்தில், 1996-2001-ல், 3 இலட்சத்து 7 ஆயிரத்து 565 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 2001, முந்தைய ஆட்சிக் காலத்தில் அரசுப் பொறுப்புறுதி கிடைக்கப்பெறாத காரணத்தால், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும், இணையமும் குறைந்த அளவிலே சொந்த நிதி ஆதாரத்தைக் கொண்டு நிதி உதவி செய்ய முடிந்தது என்பதை நான் குறிப்பிட வேண்டியுள்ளது. இதன்மூலம் கடந்த அ.இ.அ.தி.மு.க. அரசு, கிராமப்புறங்களில் வீடு கட்டுவதைப் புறக்கணித்து இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

பிற்பகல் 2-10

நடப்பாண்டில், இந்த இடையூறுகளைக் களைந்து ரூ.100 கோடிக்குத் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், முதன்மைச் சங்கம்மூலம் வீட்டு வசதிக் கடன்களை வழங்குவதற்காக வழிவகை காணப்பட்டு, அதன்மூலம் 6,000 வீடுகள் கட்டிமுடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தேசிய வங்கிகளில் கடன் பெற்று, கூடுதல் வீடுகளைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு இணையத்திற்கு ரூ.100 கோடியை அரசுப் பொறுப்புறுதி வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையின் பேரிலும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் ஒப்புதலோடும் சில அறிவிப்புகளைச் செய்ய விழைகின்றேன்:

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், இந்த நிதியாண்டில் தமிழகம் முழுவதும் ரூபாய் 166 கோடி திட்ட மதிப்பீட்டில் 2,062 மனைகள், வீடுகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.

வாரியத்திற்குச் சொந்தமான வணிக மனைகளில் அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய வணிக வளாகங்கள் கட்டப்படும்.

முற்றிலும் பழுதடைந்த வீட்டு வசதி வாரிய வணிக வளாகங்கள் அகற்றப்பட்டு, அவ்விடங்களில் புதிய வளாகங்கள் புதிய தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்படும்.

சென்னையில் விற்பனைப் பத்திரம் வழங்கும் விழா நடத்தி, ஆயிரம் ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேபோன்று, அனைத்து மாவட்டங்களிலும் ஒதுக்கீடுதாரர்களுக்கு இடைத் தரகர்களின் குறுக்கீடின்றி விரைவாக விற்பனைப் பத்திரம் வழங்கப்படும். இதன்மூலம், நீண்டகாலமாக ஒதுக்கீடுதாரர்களுக்கு இருந்த குறைபாடு நீக்கப்படும்.

கடந்தகாலத்தில், வீட்டு வசதி வாரியப் பணியாளர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த பதவி உயர்வு இனி வழங்கப்படும்.

வீட்டு வசதி வாரியத்தில் வரன்முறைப்படுத்தப்பட்ட வேலை நிதிப் பணியாளர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் வழங்கப்படும்.

வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திருமண முன்பணம் வழங்கும் சலுகை மீண்டும் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் 30 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டு முற்றிலும் பழுதடைந்த வீடுகளை இடித்துவிட்டு, புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படுமென அறிவித்ததற்கிணங்க, சென்னை நகரில், நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை உள்ள 2,862 அடுக்குமாடிக் குடியிருப்புகளை அகற்றி, அவ்விடங்களில் 7,320 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூபாய் 128.110 கோடி செலவில் அமைக்கப்படும். மேலும், வடசென்னையில் வியாசர்பாடி, பி.எஸ்.மூர்த்தி நகர் மற்றும் தென்சென்னையில் குப்பைமேடு திட்டப் பகுதியில் உள்ள மிகவும் பழுதடைந்த 606 குடியிருப்புகள் அகற்றப்பட்டு, ரூபாய் 8.95 கோடி செலவில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மீண்டும் அமைக்கப்படும்.

நகர்ப்புற குடிசைப் பகுதிகளில், சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலைகள், கழிவுநீர் அகற்றுதல், தெரு விளக்குகள், குடிநீர்க் குழாய்கள் போன்ற அடிப்படை வசதிகளைச் செயல்படுத்துதல் கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டது. கழக அரசு பொறுப்பேற்றவுடன், நடப்பு நிதியாண்டில் 2006-2007-ல் இத்திட்டத்தினை மீண்டும் மாவட்டத் தலைநகரங்களுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுத்த ரூபாய் 10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



சென்னையில் சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் குடும்பங்களுக்கு 18 ஆயிரத்து 174 அடுக்குமாடிக் குடியிருப்புகள், ரூபாய் 300.91 கோடி செலவில் கட்டப்படும். வடசென்னையில் திருவொற்றியூர், தென்சென்னையில் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை மற்றும் ஒக்கியம்-துரைப்பாக்கம் திட்டப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

சென்னை மற்றும் இதர நகரங்களில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில், சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளுக்கென பகுதி இரண்டு திட்டத்தில் ரூபாய் 10.00 கோடியும், மானியமாக ரூபாய் 10.00 கோடியும் ஆக மொத்தம் ரூபாய் 20.00 கோடி இந்த நிதியாண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2006-2007 முதல் 2010 வரையுள்ள காலக்கட்டத்தில், சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்த, மைய அரசின் 12-வது நிதிக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் ரூபாய் 79.10 கோடி செலவிட இவ்வரசு திட்டமிட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டு, சென்னை மற்றும் இதர நகரங்களில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டவும், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும் வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களைக் குடிசைப் பகுதிகளற்ற நகரங்களாக மேம்படுத்த, ஜவகர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின்கீழ், சென்னை மாநகரில் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 151 குடியிருப்புகள், ரூபாய் 1,856.23 கோடி செலவிலும், மதுரை மாநகரில் 60 ஆயிரத்து 257 குடியிருப்புகள், ரூபாய் 1,006.26 கோடி செலவிலும், கோவை மாநகரில் 12 ஆயிரத்து 730 குடியிருப்புகள் ரூபாய் 281.60 கோடி செலவிலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் திட்டம், 2007-ல் தொடங்கப்படும்.

நடப்பு நிதியாண்டில், பகுதி இரண்டு திட்டத்தின்கீழ், திருச்சி, கரூர், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பாதாளச் சாக்கடை வசதிகள் அமைப்பதற்காக, ரூபாய் 60 இலட்சத்தினை, இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-15

மழைக் காலங்களில் குடிசை மாற்று வாரியத்தின் பல்வேறு திட்டப் பகுதிகளிலுள்ள 688 நடுத்தரக் குடியிருப்புகளில், வெள்ள நீர் உட்புகுவதைத் தடுக்கும்வண்ணம், அக்குடியிருப்புகளின் தரை மட்டம், ரூபாய் 50 இலட்சம் செலவில் உயர்த்தப்படுவதற்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் அபராத வட்டிச் சலுகை 30-9-2006 வரை நீட்டித்து வழங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் வீட்டு வசதிக் கடன் தேவையினைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து ரூபாய் 100 கோடி கடன் பெறுவதற்காக, அரசுப் பொறுப்புறுதி வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை குறித்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்துகொண்டு வழங்கிய அரிய கருத்துகளுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 160-க்கும் மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ளார்கள். இங்கே, அவை எல்லாம் புத்தகமாக அச்சடிக்கப்பட்டு இருக்கின்றன. அவையெல்லாம், உரிய முறையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய பதிலுரையில் தந்த கருத்துகளை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை குறித்த மானியக் கோரிக்கை எண் 26-ன்கீழ், ஒதுக்கீடு செய்யக் கோரியுள்ள தொகையினை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கை குறித்த விவாதத்திற்குப் பதில் அளிக்க அனுமதி அளித்த



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லியில் திருக்கச்சி நம்பிகள்வரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான 3.55 ஏக்கர் நிலத்தைப் பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கிய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அனுமதி பெறுவதற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை நான் அழைத்திருக்கிறேன்; உடனடியாக வந்து அடிக்கல் நாட்ட வேண்டும் என்று கேட்டிருக்கிறேன்; அவரும் வருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்; அதற்கும் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரை நான்கைந்து பிரச்சினைகள் இருந்தாலும், ஒரே ஒரு பிரச்சினையைமட்டும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்னையிலே இருக்கின்ற திருவான்மியூர் பகுதியிலே இராஜாஜி நகர் என்ற ஓர் இடத்திலே, 96 ஏக்கர் நிலம் அரசு கையகப்படுத்தியது. அதிலே வசதி படைத்தவர்களுக்கு 12 ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் என்று கடந்த ஆட்சிக் காலத்திலே விதிவிலக்கு கொடுத்துவிட்டார்கள். இப்போது இருப்பது சாதாரண மக்கள் வைத்துக் கொண்டிருக்கின்ற இடம், 10 cent, 20 cent, 50 cent; அதைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 20 ஆண்டுக் காலமாக எந்தவிதமான நஷ்டயீடும் வழங்கப்படவில்லை. N.O.C. போய்க் கேட்கின்றபோது, இதை வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்திவிட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டயீடும் கொடுக்கப்படவில்லை. 20 ஆண்டுக் )மாக. அந்த இடங்களுக்கு, ஒன்று, அரசே எடுத்துக்கொள்வதாக

இருந்தால், இன்றைய விலையில் நீங்கள் என்ன market rate fix செய்கிறீர்களோ, அந்த விலையை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் வசதி படைத்தவர்களுக்குக் கொடுத்ததுபோன்று, N.O.C. அவர்களுக்கும் கொடுத்திட வேண்டும். அது, இந்த ஆட்சியிலே நடைபெறும் என்று நான் நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் அதைச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்து, நேற்றையதினம்கூட நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பளிக்கப்பட்டு, இன்றைக்கு 'Hindu' பத்திரிகையில் அந்தச் செய்தி வந்திருக்கிறது. எனவே, இதுபோன்ற பிரச்சினைகள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன. இந்த நேர்வை, நான் ஏற்கெனவே கேள்வி பதிலில் சொல்லி இருக்கின்றேன். இந்த நிலங்களை முதலில் கையகப்படுத்தி மூன்று வகைகளாகப் பிரிக்கிறோம். திட்டமிடக்கூடிய பகுதிகளையெல்லாம் நிச்சயமாக நாங்கள் எடுத்துத் திட்டமிடுவோம். திட்டமிடுவதற்கு இலாயக்கற்ற பகுதி என்று கருதுகின்ற இடங்கள் எல்லாம் திருப்பிக் கொடுக்கப்படும் என்று சொல்ல முடியாது. அதற்கெல்லாம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு போட்டு — ஏனென்றால், குளிக்க போய்விட்டுச் சேற்றைப் பூசிக்கொள்ள விரும்பவில்லை; ஏதாவது ஓர் இடத்தைத் திருப்பிக் கொடுக்கிறபோது, பணங்களை வாங்கிக்கொண்டு இடங்களையெல்லாம் திருப்பிவிடுகிறார்கள் என்ற கெட்ட பெயர் வந்துவிடக் கூடாது; எனவே இவற்றுக்கெல்லாம், ஒரு வளையத்திற்குள் இருந்து, சில விதிமுறைகளை, உரிய நெறிமுறைகளை வகுத்துக்கொண்டு, அதனடிப்படையில் இவை குறித்து உரிய பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*பிற்பகல் 2–20*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே வரியில் முடித்துவிடுகிறேன். எல்லோருடைய உணர்வுகளையும் புரிந்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே, பல திட்டங்களை அறிவித்தார்கள். ஒரே ஒரு கேள்வி. 25–4–2000 ஆம் தேதியன்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய பதிலுரையிலே, நான் ஒரு கேள்வி கேட்டு, அது பதிலாகச் சொல்லப்பட்டு,



கோயில் மனைகளிலே குடியிருப்பவர்களுக்கு வாடகை, 10 ரூபாயாக இருந்தது, 900 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி ஓர் அரசாணை போடப்பட்டதைப் பரிசீலித்து, நிறுத்த வேண்டுமென்று கேட்டேன். அன்றையதினம், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், 'எனக்கும் அந்தத் தாக்கீது வந்திருக்கிறது; வாடகை உயர்வு அதிகமாக இருக்கிறது என்பதை உணர்கிறேன்; ஆகவே, இந்த அரசாணையை நான் நிறுத்தி வைக்க உத்தரவிடுகிறேன்' என்று 25–4–2000 தேதியன்று இந்த அவையிலே உத்தரவிட்டார்கள். அது 2001 ஆம் ஆண்டு வரையிலும் நடைமுறையிலே இருந்தது; நிறுத்தி வைக்கப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தவுடன், அந்தச் சட்டத்தை அவர்கள் எடுத்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களிடத்திலே நான் கேட்கிறபோது, அதைப்பற்றி ஏறெடுத்துப் பார்க்க மறுத்தார்கள். அன்றைய அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.சி. ராமசாமி அவர்கள், அதைப்பற்றியே தெரியாமல் குழம்பியே போனாரே தவிர, அதற்குரிய பதிலை அவர் சொன்னதே இல்லை. ஆகவே, அதைப்பற்றி அரசு என்ன கருதுகிறது? வாடகையைக் குறைப்பதற்கான முயற்சி எடுக்கப்படுமா? வீட்டு வசதி சங்கத்திலே பெரிய கோரிக்கை என்னவென்றால், வட்டி, அபராத வட்டி தாள முடியாது. ஆகவே, அதைத் தள்ளுபடி செய்து அசலைமட்டும் கட்டவேண்டுமென்றுதான் தமிழ்நாடு முழுமையிலும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். எனவே, அவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு, செயல்படுத்துவதற்கு அரசு முயற்சிக்குமா? அமைச்சர் அவர்கள் பதில் கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள், கடந்த முதலமைச்சரோடு நம்முடைய முதலமைச்சரை ஒப்பிட்டுச் சொன்னார்கள். கடந்தகாலத்தில் முதலமைச்சராக இருந்தவரைப்பற்றியும், தற்போது முதலமைச்சராக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்களைப்பற்றியும் நன்கு தெரிந்தவர். 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்பதைப்போல, இன்றைக்கு நீங்கள் தட்டாமலே, கேள்விகளைக் கேட்காமலே, கோரிக்கைகளை வைக்காமலே முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவிலே அறிவித்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட இந்த முதலமைச்சருடைய ஆட்சியில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, பரிசீலிக்கப்படும்

என்பதையும், நல்ல பதிலும் கிடைக்கும் என்பதையும் சொல்லி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன், என்ன கேட்கப் போகிறீர்கள்?

**திரு. என். நன்மாறன்:** நன்றி சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள். சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** இதுவரையிலும் ஏராளமான அறிவிப்புகள் வந்திருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக நன்றி சொல்ல விரும்பவில்லை. காலையிலேயே மின்சாரத் துறை அமைச்சர், மின்சாரத்தின் வேகத்தோடு நடவடிக்கை எடுப்போம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியை இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மதுரைக்கு வந்து பல்வேறு அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதை இப்போதும் தெரிவித்திருக்கிறார்கள். நன்றி கூறுகிறேன். ஒரே ஒரு வேண்டுகோள். வீட்டு வசதி வாரியத்தால் விதிக்கப்படும் வட்டி, அபராத வட்டி என்பதைத் தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா, பரிசீலிக்குமா என்பதைமாத்திரம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-25*

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம் என்பது, வேறு ஒரு நிறுவனம். ஹட்கோ மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனைப் பெற்று, அது ஒரு margin வைத்துக்கொண்டு கொடுக்கின்றது. இருந்தாலும், ஒரு காலத்தில் 18 சதவீதம், 17 சதவீதம் என்று வட்டி விகிதம் இருந்தது. அதன்பிறகு, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், வட்டி விகிதத்தைக் குறைத்தன. அப்படிக் குறைத்த காலகட்டத்தில், அந்தக் குறைந்த வட்டிக்குக் கடனை எழுப்பி, ஏற்கெனவே அதிகமான வட்டிக்கு வாங்கிய கடனை அடைத்து, வட்டியினுடைய சிரமத்தை, சுமையை, வாரியம் தனக்குத் தானே குறைத்துக் கொண்டிருக்கின்றது. இப்போது நாங்கள் எடுத்திருக்கின்ற முடிவு, இங்கே அது போன்ற விமர்சனங்கள் வராத காரணத்தினாலே சொல்ல வாய்ப்பில்லாமல் போய்விட்டது. பல



இடங்களில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பத்மாவதி அவர்கள் சொன்னதைப் போல, வாங்கியது 60; செலுத்துவது 50. ஆனால், இப்படி இன்னும் பல ஆயிரக்கணக்கான ரூபாய் நிலுவையில் இருக்கின்றது என்று சொல்லுகின்ற பிரச்சினைகள் ஏராளமாக வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் நாங்கள் one time settlement மூலமாகத் தீர்வு காண வேண்டும். எனவே, மாவட்ட வாரியாகச் சுற்றுப் பயணம் செய்து— எல்லா இடங்களிலும் பிரச்சினை இருக்கிறது; ஏற்காடு, சேலம், ஆத்தூர், மதுரை, மதுரை எல்லீஸ் நகர், மதுரை கூடல் நகர், மதுரை ஆனையூர், இராணி மங்கம்மாள் நகர், காரைக்குடியிலே சூடாமணி சொசைட்டி, சுந்தரமூர்த்தி தலைவராக இருந்த கடலூர் சங்கம், இங்கே மஸ்தான் தோட்டம், ஜி.எம். பேட்டை, அதைப்போல, வளசரவாக்கம் இப்படிப் பிரச்சினைகள் இருக்கிற எல்லா இடங்களிலேயும் தீர்வு காணவேண்டும் என்ற முடிவு இருக்கின்றது. எனவே, ஒட்டுமொத்தமாக, அங்கங்கே போய் அந்தந்தப் பிரச்சினைகளினுடைய தன்மைக்கு ஏற்ப அந்த வட்டிகளை எந்த அளவிற்குக் குறைத்துக் கொள்ள முடியும்; எந்த அளவிற்கு அதிலே தீர்வு காணமுடியும் என்று, அந்த one time settlement மூலமாகத் தீர்க்க வேண்டும் என்று வாரியம் முடிவு செய்திருக்கிறது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான ஆதரவும் அன்பும் நமக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வளாகங்கள் பழுதடைந்தால், அதைப் புதுப்பிக்கவும், மிகவும் பழுதடைந்து இருந்தால், அதை இடித்துவிட்டுப் புதுப்பிக்கவும் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறீர்கள். அதுபோல வாடகைக்குக் குடியிருக்கிற குடிசை மாற்று வாரிய வீடுகளையும், வீட்டு வசதித் துறையைச் சார்ந்த வீடுகளையும்—பழுதுபட்டிருக்கின்ற வீடுகள், பல் இளித்துக்கொண்டிருக்கின்றன. வெறும் செங்கல்லாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றன—அவற்றைப் புதுப்பிப்பதற்கு அரசாங்கம், தனியாக நிதியை ஒதுக்கி இருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கூட அறிவிப்பைமட்டும் படித்துவிடலாமா என்று கருதினேன். ஆனால், உறுப்பினருக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக

[திரு. சுப. தங்கவேலன்] [2006 ஆகஸ்ட் 18

இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பது தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் முழுமையாகப் படித்தேன். அதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. எவ்வளவு குடியிருப்புகளை இடித்துவிட்டு—ஒக்கியம்–துரைப்பாக்கம், நம்முடைய நொச்சிக்குப்பத்திலிருந்து சீனிவாசபுரம் வரைக்கும் 2,862 வீடுகளை இடித்துவிட்டு—அதே இடத்தில் 7,320 வீடுகளைக் கட்டப் போகிறோம் என்று ஒவ்வொரு பகுதி வாரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது. சொன்னதைத் திரும்பச் சொல்ல விரும்பவில்லை.

## (அ) கோரிக்கை எண் 26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 26—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.



2006 ஆகஸ்ட் 18]

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானமும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜாண் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. இராம்பிரபு, இருக்கையில் இல்லை.



திரு. இரா. இராம்பிரபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.346,84,35,000/–, மூலதனக் கணக்கில் ரூ.33,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.108,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்; தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227427
சென்னை-600 008
நூலகம்

**(ஆ) கோரிக்கை எண் 47 — தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47—தமிழ் வளர்ச்சி--பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம். இருக்கையில் இல்லை.

திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு.கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன். இருக்கையில் இல்லை.

திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.



**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்,

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர். எம். பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ராஜகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



"தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,84,36,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.85,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 19-8-2006, சனிக்கிழமை, காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

21. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள். [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

22. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

64. மானியக் கோரிக்கை எண் 26–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை–வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

65. மானியக் கோரிக்கை எண் 47–தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

66. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006–2007. (தமிழ்)

67. "தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்" என்கிற சிறு நூல்.

68. "பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம்" என்கிற சிறு நூல்.





# இணைப்பு I

(425 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## மானியக் கோரிக்கை எண் 26

## வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### 1. முன்னுரை

1.1 மக்களின் மகிழ்வான, நலமான வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியத் தேவைகளில் மிகவும் இன்றியமையாதவைகளில் ஒன்றாக அமைவது உறைவிடம் ஆகும். பாதகமான தட்ப–வெப்ப சூழ்நிலையிலிருந்தும், சமூக விரோத சக்திகள் போன்ற அச்சுறுத்தும் அம்சங்களிலிருந்தும் பாதுகாப்பு நல்கி, உடல் நலத்திற்கேற்ற அடிப்படை வசதிகளை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு உறைவிடம் வழங்குவது மிகவும் அவசியமானதாகும். உறைவிடம் வழங்குவது என்பது நல்வாழ்விற்குத் தேவையான வாழ்விடம் மற்றும் போதுமான சுகாதார வசதி, காற்றோட்டமான சூழ்நிலை ஆகியவற்றை உருவாக்குதல் போன்ற கொள்கையினைக் கொண்டது ஆகும். இதனைத் தெளிவுபடக்கூறின், வீடு என்பது வாழ்வோரின் உடல் நலத்தைப் பேணிக் காத்து, மகிழ்ச்சி கொண்ட மனம், அறிவார்ந்த ஆற்றல் மற்றும் வலுவான குடும்ப உறவுகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க வழிவகை செய்யும் இடமாயிருத்தல் வேண்டும்.

1.2 வீட்டுவசதி மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளை வழங்குவது தலையாய முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள வீட்டு வசதிப் பிரிவு (Housing Sector) வலுவாக அமைய, பல்வேறு நீண்டகால மற்றும் குறுகிய காலத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. ஆகவே, தமிழ்நாட்டில் பொதுவாக அனைத்து மக்களுக்கும் மிகச் சிறந்த

[2006 ஆகஸ்ட் 18

சேவைகளையும், குறிப்பாக நலிவுறறோர் அனைவருக்கும் எண்ணற்ற பயன்களையும் வழங்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்தகைய கொள்கைகளின் வடிவம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் ஆகியவற்றின் செயல்பாடுகளால் விளங்கும்.

1.3 தமிழ்நாடு, நகர்மயமாகுதல் மற்றும் நகர்ப்புற வளர்ச்சியில் வியக்கத்தக்கவகையில் முன்னேறியுள்ளது. 1991 முதல் 2001 முடிய உள்ள பத்தாண்டுக் காலத்தில், நகர்ப்புற மக்கள் தொகையின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 0.36 முதல் 2.84 ஆக உயர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் மக்கள் தொகை 6.21 கோடி ஆகும். இதில் 2.72 கோடி மக்கள் 832 நகர்ப்புற மையங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

1.4 அதிவேகமாய் வளர்ந்துவரும் மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டு, நகர்ப்புற மேம்பாட்டினை ஒழுங்குபடுத்தவும், போக்குவரத்து வசதி, குடிநீர் வசதி, கழிவுப்பொருள் அகற்றல் ஆகியவற்றிற்குப் போதுமான வசதிகளை ஏற்படுத்துவதும் மிகவும் அவசியமாக உள்ளது. எனவே, நகர்–ஊரமைப்புத் திட்ட சட்டம் 1971–ல் இயற்றப்பட்டது. அச்சட்டத்தின் பல்வேறு பிரிவுகளைச் செயல்படுத்தும் அமைப்பாக நகர்–ஊரமைப்பு இயக்ககம் இயங்கி வருகிறது. சீரான வளர்ச்சி ஏற்படவும், குடியிருப்புப் பகுதிகளிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் செம்மையான சூழ்நிலைக்கேற்ற நிலைமையினை உருவாக்கவும், உள்ளூர் திட்டக் குழுமங்கள் சட்ட ரீதியான திட்டங்கள் தீட்டுவதற்கும் மற்றும் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும், இயக்குநரகம் வழிகாட்டும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாநிலத்தில் நிதியுதவிகள் சென்று சேருதலுக்கு ஒருங்கிணைப்புப் பணியை செய்கிறது, மேலும் நகர்ப்புறத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய ஏற்பாடும் செய்கிறது.

1.5 2001 ஆம் ஆண்டில் 43 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட சென்னை மாநகரம், இந்தியாவில் உள்ள பெரு நகரங்களில் ஒன்றாகும். சென்னைப் பெருநகரப் பகுதியைச் சுற்றிலும் அதிவேகமாக வளர்ந்துவரும் நகர்ப்புற வளர்ச்சியின் விளைவாக,



2006 ஆகஸ்ட் 18]

மக்களுக்கு வழங்க வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது சவாலாக உள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பு சென்னை மாநகரம், 16 நகராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய சென்னைப் பெருநகர் பகுதி 1,189 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் முதன்மை முன்னோடி நிறுவனமாக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமைந்துள்ளது. இக்குழுமம் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள குடிமைப் பணிகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு ஏற்கெனவே பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும், திட்டங்களைச் செயல்படுத்தியும் வருகின்றது.

## 2006–2007 திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு சுருக்கம்

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| வ. எண் | துறைத் தலைமை அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 2,77,75 | -- | 102,00,00 | 104,77,75 |
| 2 | நகர் ஊரமைப்பு இயக்ககம் | 23,49,27 | -- | -- | 23,49,27 |
| 3 | வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 4,94,42 | -- | 6,50,00 | 11,44,42 |
| 4 | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 210,00,01 | 23,00,00 | -- | 233,00,01 |
| 5 | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 12,81,77 | -- | -- | 12,81,77 |
| 6 | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 92,81,13 | 10,00,01 | -- | 102,81,14 |
| | மொத்தம் .. | 346,84,35 | 33,00,01 | 108,50,00 | 488,34,36 |

**2006-2007 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டங்கள்**

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2006-2007 ஆம் ஆண்டுக்கான திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை** | |
| (1) | கணினிகள் மற்றும் உபரி பாகங்கள் மற்றும் நகல் எடுக்கும் இயந்திரம் வாங்குதல் | 7.50 |
| | **தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்** | |
| (2) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய செயல்பாடுகளைக் கணினிமயமாக்குதல் | 25.00 |
| (3) | தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டு கிராமத்தில் உள்ள 10 இடைக்கால குடியிருப்புகளை மேம்படுத்துதல் | 15.00 |
| (4) | சென்னையில் தாடண்டர் நகர், லாயிட்ஸ் காலனி, பீட்டர்ஸ் காலனியில் உள்ள அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை மேம்படுத்துதல் | 100.00 |
| | **தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்** | |
| (5) | சென்னை நகரில் தாழ்வான இடங்களில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் வெள்ளத் தடுப்புத் திட்டப் பணிகள் மேற்கொள்ளுதல் | 50.00 |
| (6) | திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் மற்றும் கரூர் நகரங்களில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் கழிவுநீர் அகற்று அமைப்புகளை மேம்படுத்துதல் | 60.00 |





| | | |
|---|---|---|
| | **நகர்-ஊரமைப்புத் துறை** | |
| (7) | மின்னணு மேலாண்மை மேம்படுத்துதல் திட்டத்திற்குத் தேவையான வன்பொருள், மென்பொருள் முதலியவை கொள்முதல் செய்தல் | 10.00 |
| (8) | சிவகங்கை மற்றும் திருச்சி மண்டல அலுவலகங்களுக்கு இரு வாகனங்கள் வாங்குதல் | 8.50 |
| (9) | தலைமையகம் மற்றும் 8 மண்டல அலுவலகங்களுக்கு அறைகலன்கள் வாங்குதல் | 5.00 |
| | **வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்** | |
| (10) | வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தலைமை அலுவலகம் மற்றும் 11 மண்டல துணைப் பதிவாளர்(வீட்டுவசதி) அலுவலகங்களுக்குப் புதிய கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குதல் | 6.00 |
| | **மொத்தம் ..** | **287.00** |

## 2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

*2.1.* சென்னை நகர மக்களின் வளர்ந்துவரும் வீட்டு வசதித் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு, 1947 ஆம் ஆண்டு நகர மேம்பாட்டு அறக்கட்டளை (City Improvement Trust) தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் இத்தேவையை மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் பயன்பெறும்வகையில் எல்லா மாவட்டங்களையும் ஒருங்கிணைத்துத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் என்று அரசால் முடிவு செய்யப்பட்டது. அதன்படி 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியச் சட்டத்தின்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை ரூ.2,700 கோடி மதிப்பீட்டில் 3,93,684 குடியிருப்புகளையும் மற்றும் மேம்பாடு செய்யப்பட்ட மனைகளையும் உருவாக்கியுள்ளது.

நாளுக்கு நாள் குடியிருப்புத் தேவை அதிகரித்து வருவதால், மக்களின் தேவைகளை நிறைவேற்றும்வகையில் வீட்டு வசதி வாரியம் கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

**2.2. துணை நகரங்கள்**

சென்னை நகரத்தில் மக்கள் தொகை அதிகரிப்பால் ஏற்படுகின்ற இட நெருக்கடி மற்றும் ஒழுங்குமுறையற்ற வளர்ச்சி ஆகியவற்றைத் தவிர்க்க, சாலை, தெரு விளக்கு, கழிவு நீரகற்றுதல் மற்றும் குடிநீர் வழங்குதல் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகள் கொண்ட தன்னிறைவு பெற்ற துணை நகரம் ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் அரசின் கொள்கையின்படி, துணை நகரமானது சமூகத்திலுள்ள அனைத்து வருவாய்ப் பிரிவினரின் வீட்டு வசதித் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில் அமைக்கப்படும்.

துணை நகரங்களில் அடிப்படைத் தேவைகளான வணிக மண்டபங்கள், கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், சமூகக் கூடங்கள், விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள் மற்றும் வருவாய் ஈட்டும் அமைப்புகள் ஆகியவை அமைக்கப்படும்.

சென்னை நகருக்கு அருகில் ஒரு துணை நகரத்தை 7,000 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவு நிலத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக சுமார் ரூ.500 கோடி மதிப்பில், 1,500 ஏக்கர் நிலத்தில் மேற்கண்ட வசதிகளுடன் ஒரு துணை நகரத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோன்று மதுரை, கோயம்புத்தூர் நகரங்களிலும் துணை நகரங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மதுரை அருகில் சுமார் 1,000 ஏக்கர் நிலப் பரப்பில் துணை நகரம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**2.3. தனிக் குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள்**

சென்னை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களின் பல்வேறு பகுதிகளில் சுமார் ரூ.30.50 கோடி மதிப்பீட்டில் 318 அடுக்குமாடிக் குடியிருப்புகளை உருவாக்க, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது.

கோயம்புத்தூர், தஞ்சாவூர், விருதுநகர், சேலம், தேனி, நாமக்கல், ஈரோடு, பெரம்பலூர், திருச்சி, ஓசூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 600 தனிக் குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும்.



**2.4. புதிய அலுவலகம் மற்றும் வணிக வளாகம்**

மதுரை எல்லீஸ் நகரில் 70,000 சதுர அடி கட்டுமானப் பரப்பில் ரூ. 6 கோடி மதிப்பீட்டில் வாரிய நிதியின்மூலமாக புதிய அலுவலகம் மற்றும் வணிக வளாகம் அமைக்கப்படும்.

**2.5. மனைகள் மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வசம் உள்ள நிலங்களில் சாலை, தெரு விளக்கு, குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சென்னை, விழுப்புரம், மதுரை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் நாகர்கோயில் ஆகிய இடங்களில் சுமார் ரூ. 14.10 கோடி மதிப்பீட்டில் 1,141 மனைகள் மேம்படுத்தப்படும்.

**2.6. தமிழ்நாடு அரசு அலுவலர் பழைய வாடகைக் குடியிருப்புகளை மீண்டும் புதியதாகக் கட்டுதல்**

மிகவும் பழுதடைந்த மற்றும் பாதுகாப்பற்ற அரசு அலுவலர்கள் வாடகைக் குடியிருப்புக்கு மாற்றாக, அவ்விடங்களில் புதிய குடியிருப்புகளைப் படிப்படியாகக் கட்டும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

**2.7. தகவல் தொழில்நுட்பப் பூங்கா**

சென்னை தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டுக் கிராமத்தில் 36 கிரவுண்டு பரப்பளவில் சுமார் 2.50 இலட்சம் கட்டுமான சதுர அடியில் பன்மாடிகள் கொண்ட தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை ரூ. 55 கோடி மதிப்பீட்டில் வாரியத்தின் நிதி ஆதாரத்துடன் உருவாக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**2.8. கூட்டு முயற்சித் திட்டங்கள்**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நகர்ப்புற வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் (HUDCO) மற்றும் ஏனைய சிறந்த தனியார் நிறுவனங்களுடன் இணைந்து கூட்டு முயற்சித் திட்டங்களைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது. இரு நிறுவனங்களுக்கும் ஏற்புடைய வரையறை மற்றும் நிபந்தனைகள் அடிப்படையில், ஒரு கூட்டு நிறுவனம் உருவாக்குவதுபற்றியும் அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**2.9. தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளில் சிறப்புப் பழுதுபார்க்கும் பணிகள்**

சென்னையில் தாடண்டர் நகர், பீட்டர்ஸ் காலனி, லாயிட்ஸ் காலனி ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளுக்குச் சிறப்புப் பழுதுபார்க்கும் பணிகள் மற்றும் தெற்காசிய விளையாட்டுக் குடியிருப்புக் கிராமத்தில் உள்ள மாற்றுக் குடியிருப்புகளுக்கு மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றிற்காக ரூ. 1.15 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.10. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறச் சீரமைப்புத் திட்டம்**

50 சதவீதம் மானியத்துடன் நலிவடைந்த பிரிவினருக்கு உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய வீட்டு வசதித் திட்டத்தினை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. சென்னை அருகில் ரூ. 2,031 கோடி செலவில் 86,000 மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் குடியிருப்புகளை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் உருவாக்க, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தீர்மானித்துள்ளது. இத்திட்டம் 7 ஆண்டு காலக் கட்டத்தில் செயலாக்கப்படும்.

**2.11. பொது மக்கள் குறை தீர்க்கும் பணியில் முனைப்பான செயல்பாடு**

மாண்புமிகு முதலமைச்சர் வழிகாட்டுதலில் உருவான மக்கள் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு, பொது மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தைச் சிறப்பான முறையில் செயல்படுத்த பல்வேறுவகையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதன் அடிப்படையில் கீழ்க்காணும் இரு அம்சத் திட்டம் 3–6–2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது:—

சேவை மையங்கள்

கணினிமயமாக்குதல்

**(அ) சேவை மையங்கள்**

பொது மக்களின் குறைகளைத் துரிதமாகவும், பொறுப்புடனும் களைந்திட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 16 கோட்டங்களில் சேவை மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான 3–6–2006 அன்று, பெசன்ட் நகர் கோட்டத்தில் முதல் சேவை மையம் தொடங்கப்பட்டது.





இச்சேவை மையங்களில் இதற்கென்று தனியாக நியமிக்கப்பட்ட தகவல் தொடர்பு அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர். பொது மக்கள் தங்களது மனுக்களைச் சேவை மையத்தில் கொடுத்து எந்தத் தேதியில் பதில் பெறலாம் என்ற விவரம் அடங்கிய ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ளலாம். இந்தச் சேவை மையங்களின் செயல்பாடுகளை தேசிய தகவல் தொடர்பு மையத்தால் உருவாக்கப்பட்ட மென்பொருள் (Software) மூலமாகக் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) கணினிமயமாக்குதல்**

கீழ்க்காணும் முக்கிய வாரிய நடவடிக்கைகளைக் கணினிமயமாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன:—

விற்பனைப் பத்திரம் வழங்குதல்

நீதிமன்ற வழக்குகளைக் கண்காணித்தல்

நிலம் தொடர்பான பதிவேடுகளைக் கண்காணித்தல்

வாரியச் சொத்து விவரங்களைக் கண்காணித்தல்

கணினிமூலம் வரைபடம் மற்றும் மதிப்பீட்டுப் பட்டியல் தயாரித்தல்.

**2.12. வாரிய ஊழியர்களுக்குக் கணினிப் பயிற்சி அளித்தல்**

தற்போதுள்ள "ஸ்டாண்ட் அலோன்" கணினி முறையை (Stand alone mode) மாற்றி "வெப் பேஸ்டு ஆன்லைன் சிஸ்டம்" (web based on-line system) மூலம் ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட அடிப்படை விவரத் தொகுப்பு (Centralised Database) உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 80 இலட்சம் செலவில் எல்காட் நிறுவனம்மூலம் கணினி மென்பொருள் உபரி பாகங்கள் வாங்கவும் மற்றும் தகுந்த மென்பொருள் உருவாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊழியர்களுக்கு தேசிய தகவல் மையம் (NIC) மற்றும் அண்ணா மேலாண்மைக் கழகம்மூலமாகக் கணினிப் பயிற்சி அளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**2.13. இணைய தளம் (Website)**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கென ஓர் இணைய தளம் உருவாக்கப்பட்டு, விரைவில் செயல்படத் துவங்கும். இந்த

இணைய தளம் வீட்டு வசதி வாரியத்தின் அனைத்து நடவடிக்கை விவரங்கள், மக்கள் சாசன விவரங்கள், விற்பனைக்கு உள்ள வீடு மற்றும் மனைகள் குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்கள், விவரங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இவ்விணைய தளம் மக்கள் குறைகளைப் பதிவு செய்யவும் வழிவகை செய்கிறது.

## 3. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

3.1. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்', குடிசைப் பகுதிகளை மாற்றி அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கவும், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும் என்ற உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், 1970 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் நகரக் குடிசைப் பகுதிகளை மாற்றவும், மேம்படுத்தவும் பல்வேறு திட்டப் பணிகளைக் குடிசைப் பகுதி மாற்று வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

### குடிசைப் பகுதி குறித்த கொள்கைகள்

1. நகரப் பகுதிகளில் நெரிசல் மிக்க சுகாதாரமற்ற சூழ்நிலையில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி, அவ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்.
2. கள மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கேற்றவாறு அமைந்துள்ள குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு, அவ்விடங்களில் கள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.
3. அடுக்குமாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களில் மறு குடியமர்வு செய்யும்வகையில், மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்.

### 3.2. குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்ட நாள் முதல், இத்திட்டத்தை நிறைவேற்றி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, தூத்துக்குடி, தஞ்சாவூர், கரூர், கும்பகோணம், நாகப்பட்டினம், திருப்பூர் மற்றும் சங்கரன்கோவில் ஆகிய நகரங்களில் 70,146 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூ.275.16 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.



### 3.3. சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்

இத்திட்டத்தின்கீழ், ஆட்சேபகரமான பகுதிகளான நதிக் கரைகள், சாலையின் மருங்குகள் மற்றும் பொதுநலத் திட்டங்கள் நிறைவேற்ற தேவையான இடங்கள் போன்ற பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு, மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் அமைத்து மறு குடியமர்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், இத்திட்டத்தின்கீழ் 21,348 அடுக்குமாடிக் குடியிருப்புகள்/வீடுகள் அமைக்க திட்டமிட்டு, அவற்றுள் 14,672 குடியிருப்புகளைக் கட்டி முடித்து, அவற்றை ஆட்சேபகரமான குடிசைப் பகுதியில் வாழும் குடும்பங்களுக்கு வெற்றிகரமாக ஒதுக்கீடும் செய்துள்ளது. மீதமுள்ள குடியிருப்புகள் 2006–2007 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3.4. (அ) மைய அரசின் நிதிக் குழு—சிறப்பு மானியம்—பெருநகரங்களில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், மைய அரசின் பத்தாவது நிதிக் குழுவிடம் ரூ. 54.00 கோடி சிறப்பு மானிய உதவி பெற்று, அதனைக்கொண்டு ஒக்கியம்—துரைப்பாக்கம் பகுதியில் 6,500 அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி, அவற்றை ஒதுக்கீடும் செய்துள்ளது. மைய அரசின் 11–வது நிதிக் குழுவிடம் ரூ. 49.00 கோடி சிறப்பு மானிய உதவி பெற்று, அந்நிதியினைக் கொண்டு, சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று பெருநகரங்களில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய 5,172 அடுக்குமாடிக் குடியிருப்புகள்/தனி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**(ஆ)** தமிழகத்தில் நகரக் குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த, கீழே கூறப்பட்டுள்ள திட்டப் பணிகளை 2006–2007 ஆம் ஆண்டில் செயல்படுத்த, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது:

[2006 ஆகஸ்ட் 18

**நதிக் கரைகளில் வாழும் மீதமுள்ள குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்—சென்னை செம்மஞ்சேரி பகுதியில் 1,404 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்**

சென்னை நகரில் நதிக் கரைகளில் வாழும் மீதமுள்ள 25,149 குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை, சென்னைப் பெருநகரப் பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து மறு குடியமர்வு செய்ய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை செம்மஞ்சேரி பகுதியில் 1,404 அடுக்குமாடிக் குடியிருப்புகளை ரூ.18.25 கோடி செலவில் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அவை முடியும்தறுவாயில் உள்ளன. ஒக்கியம்—துரைப்பாக்கம் பகுதியில், 1,892 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் பாரதி நகர் திட்டப் பகுதியில் 108 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.26.00 கோடி செலவில் அமைக்கும் பணிகள் தற்போது முன்னேற்ற நிலையிலுள்ளன.

சென்னை நகரின் நதிக் கரைகளில் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மீதமுள்ள குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய, ரூ. 28.60 கோடி செலவில் 2,200 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(இ) பன்னிரண்டாவது நிதிக் குழுவின்—சிறப்பு மானிய உதவி**

சென்னை மற்றும் இதர நகரங்களில் 2005–2010 ஆம் ஆண்டுகளில் குடிசைப் பகுதிகளின் மேம்பாட்டிற்காக மைய அரசின் பன்னிரண்டாவது நிதிக் குழு, ரூ. 250.00 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியுதவியினை ஆண்டுவாரியாகக் கீழ்க்கண்டவாறு செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது:

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|
| 2005–2006 | 35.90 |
| 2006–2007 | 69.10 |
| 2007–2008 | 39.18 |
| 2008–2009 | 56.50 |
| 2009–2010 | 49.32 |



2006 ஆகஸ்ட் 18]

இந்நிதியுதவியினைக் கொண்டு, சென்னை மற்றும் இதர நகரங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள்/வீடுகள் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நகரத்தின் பெயர் | செயலாக்கம் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | திட்டச் செலவினம் (ரூ.கோடி) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல் | 9,023 | 150.10 |
| | | இதர அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பங்கு (Dovetailing) | -- | 23.40 |
| | | பழுதடைந்த குடியிருப்புகளைத் திரும்பக் கட்டுதல் | 606 | 8.95 |
| 2 | இதர மாநகரங்கள் | அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல் | 2,750 | 41.25 |
| 3 | இதர நகரங்கள் | அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல் | 1,000 | 15.00 |
| 4 | இதர நகரங்கள் | குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் | 32,000 | 8.00 |
| | | நகர மேம்பாடு (Guided Urban Development) | — | 2.00 |
| 5 | சமுதாய வளர்ச்சிப் பணிகள் | -- | -- | 1.30 |
| | | மொத்தம் .. | | 250.00 |

### (ஈ) தொடங்கப்படவுள்ள திட்டங்கள்

திருநெல்வேலி நகரில் சுத்தமல்லி வடக்குப் பகுதியில் 50 வீடுகள் ரூ. 0.55 கோடி செலவிலும், சுத்தமல்லி தெற்குப் பகுதியில் 116 வீடுகள் ரூ. 1.27 கோடி செலவிலும் மற்றும் மன்னார்குடி நகரில் தொம்பன்குடிசைப் பகுதியில் 80 வீடுகள் ரூ. 1.00 கோடி செலவிலும் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.

மதுரை நகரில், திடீர் நகர்ப் பகுதியில் 480 குடியிருப்புகள் ரூ. 7.20 கோடி செலவிலும், மதுரையில் உள்ள சுப்பிரமணியபுரத்தில் 216 குடியிருப்புகள் ரூ. 3.24 கோடி செலவிலும், சென்னை நகரில் மீர்பக்ஷி அலி தெருவில் 32 குடியிருப்புகள் ரூ. 0.56 கோடி செலவிலும், பெரம்பூர் பாரக்ஸ் சாலைப் பகுதியில் 120 குடியிருப்புகள் ரூ. 2.10 கோடி செலவிலும் மற்றும் அம்பத்தூர் காமராஜ் நகர்ப் பகுதியில் 15 குடியிருப்புகள் ரூ. 0.26 கோடி செலவிலும், ஆகமொத்தம் 167 குடியிருப்புகள் ரூ. 2.92 கோடி செலவில் அமைக்கப்படும். சாயல்குடி நகரில் 200 குடியிருப்புகள் ரூ. 3.00 கோடி செலவிலும், ஒட்டன்சத்திரம் நகரில் 200 குடியிருப்புகள் ரூ. 3.00 கோடி செலவிலும் மற்றும் சேலம் நகரில் 180 குடியிருப்புகள் ரூ. 2.70 கோடி செலவிலும் அமைக்கப்படும். மேற்சொன்ன திட்டப் பணிகளுக்காக இந்நிதியாண்டில் ரூ. 79.10 கோடி செலவிடப்படும்.

### 3.5. (அ) அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதி திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் சென்னை நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளை ரூ. 18.00 கோடி செலவிலும், இதர நகரங்களில் உள்ள குடியிருப்புகளை ரூ. 1.00 கோடி செலவிலும் பழுது பார்த்துப் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 6.00 கோடி இந்நிதியாண்டில் செலவிடப்படும்.

கூடுதலாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுபித்தல் பணிகளுக்காக, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2006–07 ஆம் ஆண்டில் ரூ. 10.00 கோடி செலவிடப்படும்.



இத்திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதியுதவி மாநில அரசால் மானியமாக வழங்கப்படும்.

### (ஆ) சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி

சென்னை நகர சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 2.00 கோடி மானிய உதவியாகப் பெற்று, சென்னை நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.6. நகர சீரமைப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், 363 குடியிருப்புகள் ரூ. 902.40 இலட்சம் செலவில் 2006–2007 ஆம் ஆண்டில் அமைக்கப்படும். சென்னை நகரில் இரண்டு அலுவலக வளாகங்கள் நந்தனம் மற்றும் தேனாம்பேட்டை பகுதிகளில் தோராயமாக ரூ. 50.00 கோடி திட்ட மதிப்பீட்டுச் செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் வாரியத்தின் நிதி நிலைமையினை மேம்படுத்த வெளி நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்றுச் செயல்படுத்தப்படும். இத்திட்டப் பணிகளுக்காக, 2006–2007 ஆம் ஆண்டில் ரூ. 6.00 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3.7. அவசர சுனாமி மறு குடியமர்வு திட்டம் (ETRP) 2004-ல் ஏற்பட்ட சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிவாழ்/ மீனவக் குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டு வசதி

சென்னையில் அவசர சுனாமி மறு குடியமர்வு திட்டம்/12-வது நிதிக் குழுவின் சிறப்பு மானியம் ஆகியவற்றின் உதவியினைக் கொண்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் குடும்பங்களுக்கு

[2006 ஆகஸ்ட் 18

கீழே கூறப்பட்டுள்ள பகுதிகளில் 2006–2007 ஆம் ஆண்டில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டப் பகுதியின் பெயர் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | திட்டச் செலவினம் (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1 | வட சென்னை–அகில இந்திய வானொலி நிலையத்திட மிருந்து பெறப்பட்ட நிலம் | 5,400 | 81.00 |
| 2 | தென் சென்னை–நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை | 7,320 | 138.10 |
| 3 | தென் சென்னை–ஒக்கியம் துரைப்பாக்கம் | 5,454 | 81.81 |
| | மொத்தம் | 18,174 | 300.91 |

12–வது நிதிக் குழுவின் சிறப்பு மானிய உதவியினைக் கொண்டு வட சென்னையில் 1,392 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் 2006–2007–ல் முடிக்கப்பட்டு, இந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | திட்டச் செலவினம் (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1 | இந்துஸ்தான் லீவர் லிமிடெட் நிலம்/ தண்டையார்பேட்டை | 960 | 14.40 |
| 2 | திலகர் நகர் பகுதி 1 | 216 | 3.24 |
| 3 | திலகர் நகர் பகுதி 2 | 216 | 3.24 |
| | மொத்தம் | 1,392 | 20.88 |



2006 ஆகஸ்ட் 18]

**3.8. சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (2006–2007)**

**நகர குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதி திராவிட குடும்பங்கள் பயனடையும்வகையில் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள்**

நகர குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர் குடும்பங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கு நிதி ஆதாரத்தினை ஏற்படுத்த சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வகை செய்கிறது. விவரங்கள் பின்வருமாறு:—

**2006–2007–க்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம்**

செயலாக்கம்—வீடுகள்
செலவினம்—ரூ.கோடி

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்தம் | | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | செயலாக்கம் | செலவினம் | செயலாக்கம் | செலவினம் |
| 1 | நகர குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுப் பணிகள் அமைத்தல் | 20,000 | 10.00 | 5,200 | 2.60 |
| 2 | 12-வது நிதிக் குழு-சிறப்பு மானியம்–அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல் | 3,118 | 69.10 | 811 | 17.96 |
| | மொத்தம் | 23,118 | 79.10 | 6,011 | 20.56 |

**3.9. சென்னையில் சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வியல் ஆதாரங்களை ஏற்படுத்துதல்**

சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு வாழ்வியல் ஆதாரப் பணிகளான சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிகள் அளித்தல் ஆகிய பணிகளை 2006–2007 முதல் 2008–2009 வரை ரூ. 5.05 கோடி செலவில் ஏற்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டப் பணிகளுக்காகக் கீழே கூறப்பட்டுள்ள வாழ்வியல் ஆதாரப் பணிகள் ரூ.1.26 கோடி செலவில் 2006-2007 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

**(அ) சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்**

சென்னை மற்றும் இதரப் பகுதிகளில் 15,000 குடும்பங்கள் பயன்படும் வகையில் 600 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் இந்த நிதி ஆண்டில் 250 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 200 சுய உதவிக் குழுக்களுக்கு சுழற்சி நிதி ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.30,000/- வரையில் ஏற்படுத்த வகை செய்யப்படும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளில் கீழே கூறப்பட்டுள்ள பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் ரூ.38.89 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்:

(அ) உற்பத்தி நோக்குடன் பொருளாதார நடவடிக்கைகள்

(ஆ) மகளிர் நடத்தும் கடைகள்

(இ) மகளிர் சுய உதவிக் குழுக்களால் ஆட்டோ ஓட்டுதல்

(ஈ) குடியிருப்புப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைப் பணிகள் மேலும் வேலைவாய்ப்பு பயிற்சிகள் ரூ. 36.00 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்படும்.

**3.10. எதிர்காலத் திட்டப் பணிகள்**

**(அ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டம்**

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களை 2006-2013 ஆம் ஆண்டிற்குள் குடிசைப் பகுதிகளற்ற நகரங்களாக மேம்படுத்த கீழே கூறப்பட்டுள்ள திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன:

(i) நகரங்களில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் அனைத்து குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மாற்றிடங்களில் மறு குடியமர்வு செய்யும்வகையில் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பணிகள் மேற்கொள்ளுதல்.





(ii) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் ட்சேபகரமற்ற குடிசைப் பகுதிகளை அக்குடிசைப் பகுதிகளில் டிசைகள் நெருக்கமாக அமைந்துள்ள தன்மை மற்றும் தற்போதுள்ள லங்களைப் பொறுத்து அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்க த்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவினம் பின்வருமாறு:

| வ.எண் | நகரத்தின் பெயர் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | மொத்த செலவினம் (ரூ.கோடி) |
|---|---|---|---|
| 1 | சென்னை | 1,11,151 | 1,856.23 |
| 2 | மதுரை | 60,257 | 1,006.29 |
| 3 | கோவை | 12,730 | 281.60 |
| | மொத்தம் | 1,84,138 | 3,144.12 |

இத்திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்கள் மைய மற்றும் மாநில அரசால் 50:50 என்ற விகிதத்தின் அடிப்படையில் அளிக்கப்படும்.

**.11. மிகவும் பழுதடைந்த குடியிருப்புகளை மீண்டும் கட்டுதல்**

சென்னை நகரில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரையில் உள்ள பகுதியில் கட்டப்பட்ட 2,862 அடுக்குமாடிக் குடியிருப்புகள், உப்பங்காற்று சூழலினால் மிகவும் பழுதடைந்துள்ளன.

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்ததன்படி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பதவியேற்றவுடன், இக்குடியிருப்புகளை இடித்துவிட்டு அவ்விடத்தில் நான்கு மாடிக் குடியிருப்புகளை மீண்டும் கட்டித் தரும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இக்குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டவுடன், அவை, முன்னர் இக்குடியிருப்புகளில் வாழ்ந்த குடும்பங்களுக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும்.

[2006 ஆகஸ்ட் 18

சென்னை நகரில் மிகவும் பழுதடைந்த குடியிருப்புகளை அகற்றி மீண்டும் கட்டும் திட்டத்தின்கீழ், பன்னிரண்டாவது சிறப்பு மானிய நிதியுதவியினைக் கொண்டு 2006–2007 ஆம் ஆண்டில் 606 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கீழே கூறப்பட்டுள்ள திட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டு அக்குடியிருப்புகளில் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்:

| வ. எண் | மா.கோ. எண் | திட்டப் பகுதியின் பெயர் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | மொத்த செலவினம் (ரூ.கோடி) |
|---|---|---|---|---|
| 1 | 33 | வியாசர்பாடி | 270 | 3.91 |
| 2 | 148 | குப்பைமேடு | 16 | 0.24 |
| 3 | 39 | பி.எஸ்.மூர்த்தி நகர் | 320 | 4.80 |
| | | மொத்தம் | 606 | 8.95 |

### 3.12. நகர குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு சுற்றுப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின் விளக்குகள், குடிநீர்க் குழாய்கள், கழிவறை வசதிகள், வடிகால் போன்றவை அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2002–2003 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படவில்லை. இத்திட்டப் பணிகள் 2006–2007 ஆம் ஆண்டில் மீண்டும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 20,000 நகர குடிசைவாழ் குடும்பங்கள் பயன்பெறும்வகையில் ரூ. 10.00 கோடி செலவில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

### 3.13.சென்னையில் தாழ்வான பகுதிகளில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வெள்ளத் தடுப்புப் பணிகள்

2006–2007 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின்கீழ் மழைக் காலங்களில் வெள்ள நீர் உட்புகுவதைத் தடுக்கும்வகையில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட 685 தரைத்தள குடியிருப்புகளின் தரை மட்டத்தை ரூ.50.00 இலட்சம் செலவில் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 18]

திருச்சி, கரூர், கும்பகோணம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் உள்ள 1,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் பயனடையும்வகையில் ரூ. 60.00 இலட்சம் செலவில் பாதாளச் சாக்கடை வசதிகள் 2006–2007 ஆம் ஆண்டின் பகுதி–II திட்டத்தின்கீழ் அமைக்கப்படும்.

### 3.14. அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பிக்கும் பணிகளை மேற்கொள்வதன் அவசியம் குறித்து கருத்தில் கொள்ளப்பட்டது. இக்குடியிருப்புகளுக்கு முழுமையான பழுதுபார்ப்புப் பணிகளான, சாய்வான மேற்கூரைகளை அகற்றி சமதளக் கூரைகள் அமைத்தல், மழைநீர்க் கசிவினைத் தடுக்க ஓடுகள் பதித்தல், பழுதடைந்த மாடி முகப்புகளைச் சீரமைத்தல், வெளிப்புறச் சுவர்களுக்கு சிமென்ட் பூசுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள பகுதி–II திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் பெறப்படும் மானியத் தொகையான ரூ.10.00 கோடி இந்தத் திட்டத்திற்கென செலவிடப்படும்.

## 4. கூட்டுறவு வீட்டு வசதி

### 4.1. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள்

தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டு வசதி அளிப்பதில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 1,253 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் நகர்ப்புற மக்களின் சேவைக்கென 799 தொடக்க நிலைக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களும், கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்ய, வட்ட அளவில் 197 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் மட்டும் தற்போது மக்கள் சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. 22 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் ஏற்கெனவே இறுதியாக மூடப்பட்டுள்ளன; மற்றும் 235 சங்கங்கள் கலைக்கப்பட உள்ளன. குறிப்பாக, தமிழக அரசின் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் வீட்டு வசதித் திட்டம், கிராமப்புற ஏழை எளிய மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் வட்டக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. 805 கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள சார்புச் சங்கங்களாகும். அடிப்படை வசதிகளுடன்கூடிய வீட்டுமனைகள் சங்க உறுப்பினர்களுக்குக் கிடைக்க, மனைப் பிரிவுகளை உருவாக்குதல் மற்றும் புதிய வீடுகள் கட்டுவதற்கு நிதி உதவி வழங்குதல் போன்றவை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் நோக்கங்களில் ஒன்றாகும்.

[2006 ஆகஸ்ட் 18

**4.2. கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் சாதனைகள்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், 15-7-1959-ல் தொடங்கப்பட்டது. இணையம் தொடங்கப்பட்ட நாள் முதல் இதுவரை தொடக்கநிலை கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் உறுப்பினர்களுக்கு 11,53,707 வீடுகள் கட்டுவதற்காக ரூ.4,556.26 கோடி அளவிற்குக் கடனுதவி அளித்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 31-07-2006 வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | ஊரகப் பகுதியில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரகத் திட்டம், வீட்டு வசதித் திட்டம் | 6,27,108 | 413.25 |
| 2. | நகர்ப்புறங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான சிறப்பு வீட்டுவசதித் திட்டம் | 28,145 | 68.61 |
| 3. | கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான திட்டம் | 92,086 | 567.10 |
| 4. | நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் | 3,22,238 | 3,245.83 |
| 5. | சமத்துவபுரம் திட்டம் | 8,257 | 7.73 |
| 6. | வாம்பே திட்டம் | 9,669 | 33.71 |
| 7. | விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல் திட்டம் | 59,150 | 52.14 |
| 8. | அடைமானக் கடன் | 7,054 | 167.89 |
| | மொத்தம் | 11,53,707 | 4,556.26 |



2006 ஆகஸ்ட் 18]

**4.3. 2006-2007 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

2006-2007 ஆம் ஆண்டில் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 6,000 புதிய வீடுகள் கட்ட, முதன்மைக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்கு ரூ.100 கோடி கடனுதவி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்மூலம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**5. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம்**

5.1. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் கீழே குறிப்பிட்டுள்ள வீட்டு வசதி அமைப்பு இனங்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கப்படுகிறது:-

1. வீட்டுமனை வாங்கி அதில் வீடு கட்டுதல்.
2. புதிதாக வீடு கட்டுதல்.
3. தனியாரால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/வீடு வாங்குதல்.
4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/வீடு வாங்குதல்.
5. தற்போதுள்ள வீட்டை விரிவாக்குதல்.
6. தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துதல்.

5.2. இத்திட்டத்தின்கீழ், வீடு கட்ட முன்பணம், மாநில அரசு அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.6.00 இலட்சமும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.7.50 இலட்சமும் வழங்கப்படுகிறது. அதேபோன்று தற்போதுள்ள வீட்டை விரிவாக்க மற்றும் மேம்படுத்த முன்பணத் தொகை ரூ.3 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

5.3. 2006-2007 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.102.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 18

## 6. வாடகைக் கட்டுப்பாடு

6.1 தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் 1960 மற்றும் திருத்திய சட்டம் 23/1973–இன்படி, வீடுகளை முறைகேடாக வாடகைக்கு விடுவதை சீர் செய்து, வாடகையினை முறைப்படுத்துவதும் மற்றும் வாடகை வீட்டில் வசிப்பவர்களை முறையற்ற வழியில் வெளியேற்றம் செய்வதைத் தடுப்பதும் முக்கிய நோக்கங்களாகும்.

6.2 சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை, சென்னை மாவட்ட ஆட்சியர், இடவசதிக் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பானவர் ஆவார். அவர் வீடுகளை வாடகைக்கு விடுவதற்கான சட்ட வழிவகைகளைக் கவனிப்பதற்கு, மேற்படி சட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆவார். இதர மாவட்டங்களைப் பொறுத்தவரை, அந்தந்த மாவட்டத்தின் கோட்ட வருவாய் அலுவலர்கள், இந்தப் பணிகளைக் கவனிக்கின்றனர்.

6.3 அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளுக்குச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்/கோட்ட வருவாய் அலுவலர் சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்பதால் வீட்டிற்கான வாடகையைச் செலுத்துவது, வீடுகளைப் பராமரிப்பது ஆகிய பொறுப்புகள் இவர்களையே சார்ந்தன ஆகும். தற்போது சென்னையில் மட்டும் அரசுக் கட்டுப்பாட்டில் 32 வீடுகள் உள்ளன. இந்த வீடுகள் மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டு, உரிமையாளர்வசம் ஒப்படைக்கப்படும் வரை, அரசே இந்த வீடுகளின் குடியிருப்புதாரர்கள் ஆவார்கள். தற்போதுள்ள தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு கட்டடங்கள் குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை இரத்து செய்துவிட்டு, மத்திய அரசு அனுப்பிய வாடகைக் கட்டுப்பாடு மாதிரிச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையிலும் வாடகை கட்டுப்பாட்டுச் சட்டம் குறித்து மாநில சட்ட ஆணையம் அளித்த அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையிலும் புதிய சட்டம் ஒன்றை இயற்ற அரசு ஆய்வு செய்து வருகிறது.

## 7. நகர்–ஊரமைப்பு இயக்ககம்

7.1. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி நகர்மயமாதலில் நாட்டிலேயே மகாராஷ்டிராவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது மாநிலமாக இருந்த தமிழ்நாடு, 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மகாராஷ்டிராவைக் கடந்து முன்னிலை வகிக்கிறது. மிகச் சிறிய மாநிலங்களான கோவா (49.77 விழுக்காடு) மற்றும் மிசோரா



2006 ஆகஸ்ட் 18]

(49.50 விழுக்காடு) ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக 43.86 விழுக்காடு நகர்ப்புற மக்கள்தொகையுடன் தமிழ்நாடு மூன்றாம் இடம் வகிக்கிறது. தமிழகத்தில் 2.72 கோடி மக்கள், 832 நகர்ப்புற மையங்களில் (2001 கணக்கெடுப்பு) வசித்து வருகின்றனர்.

7.2. 1991 ஆம் ஆண்டில் 18.80 விழுக்காடாக இருந்த நகர்ப்புற மக்கள் தொகையின் வளர்ச்சி விகிதம், 2001 ஆம் ஆண்டில் 17.65 விழுக்காடாகக் குறைந்துள்ளது. தமிழ்நாட்டின் நகர்ப்புற மக்கள் தொகையில் 56.35 விழுக்காடு மக்கள், 29 முதல் தர (1,00,000 மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள) நகரங்களில் குவிந்துள்ளனர். தரம் 2 (50,000-லிருந்து 1,00,000 வரை மக்கள் தொகை), தரம் 3 (20,000-லிருந்து 50,000 வரை மக்கள் தொகை), மற்றும் தரம் 4 (10,000-லிருந்து 20,000 வரை மக்கள் தொகை), ஆகிய நகரங்களில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் அதிகரித்து காணப்படுகிறது. அதேசமயத்தில், தரம் 5 (5,000-லிருந்து 10,000 வரை மக்கள் தொகை) நகரங்களில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் குறைவடைந்து காணப்படுகிறது. இவ்வாறான வளர்ச்சி விகிதத்தின் போக்கு, மக்கள் கிராமப்புறப் பகுதிகளிலிருந்து நகர்ப் பகுதிகளுக்கு வெவ்வேறு காரணங்களினால் இடம்பெயர்வதைத் தெளிவாகக் குறிக்கிறது.

7.3. நகரங்கள் அதிகப்படியான உற்பத்தித் திறனை அடையும்போது நகர்மயமாக்கல் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற சாதகமான நிலையினை ஏற்படுத்துகிறது. நகர்ப்புற வளர்ச்சிக்கான நிலைப்பாடு (Strategy) என்பது, நகர்ப்புறப் பகுதிகள் பொருளாதார ரீதியில் வலுவுள்ளதாக அமையும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். மூலப்பொருள் குறைவாக உள்ள நிலையைச் சமாளித்து நகர்ப்புற குடியிருப்புகள் பொருளாதார ரீதியாக மேம்படுவதற்கு திறம்பட முதலீடு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

7.4. நகர்ப்புறங்களின் இத்தகைய மிக விரைவான பெருவளர்ச்சியின் விளைவு, உள்கட்டமைப்பு சேவைகளை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கிறது. இந்நிலை நகர்ப்புற தேவைக்கும், தற்போதுள்ள சேவைக்குமான இடைவெளியை அதிகரிக்கிறது. இதன் பாதிப்பு மாசுபடுதல், சுற்றுச்சூழல் சீர்கேடு, வேலையில்லாத் திண்டாட்டம், நகர்ப்புற வறுமை, நிதி குறைபாடு, மோசமான நிர்வாகம் போன்ற விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

## முக்கிய கொள்கைக் கோட்பாடுகள்

7.5. எந்த ஒரு நகரத்தையோ அல்லது பகுதியையோ ஒழுங்குமுறைப்படுத்த, முன்னரே தீர்மானிக்கப்பட்டபடியும், திட்டமிட்டபடியும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–இன்படி நகர் ஊரமைப்புத் துறை செயல்பட்டு வருகிறது. நிலத்தின் முழுமையான பலனை அடையவும், மேலும் உறைவிடத்திற்கான முறையான வளர்ச்சிகள், வாகனப் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக இணைப்புச் சாலைகள் அமைத்தல், குடியிருப்புப் பகுதிகள், தொழிற்சாலைப் பகுதிகள், வணிக வர்த்தகப் பகுதிகள் மற்றும் பொழுதுபோக்கு வகைகள் ஆகியவற்றை முறைப்படுத்துவதன்மூலம் எந்த ஒரு நகரத்தையோ அல்லது பகுதியையோ சீராக்க, மேற்காணும் சட்டப்படி மேம்படுத்தலாம்.

7.6. தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ஐ நிர்வகிக்கும் பொறுப்பு, நகர்–ஊரமைப்பு இயக்ககத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியான திட்டங்கள் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்துதல், மேலும் மக்கள் வாழும் இடங்களில் தூய்மையான, சுற்றுச் சூழலுக்கு வழிவகுக்கும் இதர திட்டங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் உள்ளூர் திட்டக் குழுமங்களுக்கு நகர்–ஊரமைப்பு இயக்ககம் உதவிபுரிந்து வருகிறது. நகர்–ஊரமைப்புச் சட்டத்தை அமல்படுத்துவது நகர்–ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் பொறுப்பாக இருந்து வருவதுடன், தொழில், குடியிருப்பு மற்றும் இதர நோக்கங்களுக்கான தனியார் நில மற்றும் கட்டட மேம்பாட்டுப் பணிகளையும் நகர்–ஊரமைப்பு இயக்ககம் ஒழுங்குபடுத்துகிறது.

7.7. மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் இதர சிறப்புத் திட்டங்கள் தயாரித்தல் தமிழ்நாடு நகர்– ஊரமைப்புச் சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகத் திகழ்கின்றன.

## முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம்

7.8. முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஒரு பெரிய அளவிலான திட்டமாகும். குறிப்பிட்ட நகருக்கென தயாரிக்கப்படும் முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டத்தின்படி அந்நகரின் வளர்ச்சி ஒழுங்குபடுத்தப்படுகிறது. இதுகாறும் 115 நகரங்களுக்கு முழுமைத் திட்டங்கள்/புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசால் ஒப்புதல்/இணக்கம் வழங்கப்பட்டுள்ளது. 2006–07 ஆம் ஆண்டில் ஆறு நகரங்களுக்கு முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித்



திட்டம் தயாரிக்க/மறுஆய்வு செய்ய உத்தேசிக்கப்படுகிறது. இதைத் தவிர, வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்க ஏதுவாக, புதிய கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகள்/புதுநகர் வளர்ச்சித் திட்டப் பகுதிகள் அறிவிப்பு செய்யப்படுகின்றன. 2006–07 ஆம் ஆண்டில் மேலும் மூன்று புதிய கூட்டு உள்ளூர் திட்டப் பகுதிகள்/புதுநகர் வளர்ச்சித் திட்டப் பகுதிகள் அறிவிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள்

7.9. விரிவு மேம்பாட்டுத் திட்டம் என்பது ஒரு நுண்ணிய அளவிலான திட்டமாகும். நகரின் ஒட்டுமொத்த அதிவேக வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு தயாரிக்கப்படும் முழுமைத் திட்டத்திற்கு ஏற்ட, நகரில் விரைவான வளர்ச்சி அடைய வாய்ப்புள்ள குறிப்பிட்ட பகுதிகளுக்கு எனத் தனியே நுண்ணிய அளவிலான விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. குறிப்பான நில உபயோகம், சிறிய இணைப்புச் சாலைகள், பூங்கா மற்றும் விளையாடுமிடம் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் விரிவு மேம்பாட்டுத் திட்டத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகின்றன. விரிவு மேம்பாட்டுத் திட்டம் அதன் திட்டப் பகுதியில் தயாரிக்கப்படுகிறது. இதுகாறும் 1,625 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அவற்றைத் தயாரிக்கும் பணி பல்வேறு நிலைகளான வரைவு, இணக்கம் மற்றும் ஒப்புதல் போன்ற நிலைகளில் உள்ளன. தரம்–1 மற்றும் 2 நகரங்களின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தும்வகையில், 2006–07 ஆம் ஆண்டில் 100 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்படுகிறது.

## நடைமுறையில் உள்ள திட்டங்கள்

## புராதன நகர வளர்ச்சித் திட்டங்கள்

7.10. புராதன தலங்களைப் பாதுகாப்பதும், அவற்றின் சுற்றுப்புறத்தை அனைத்து வகையான மாசுபடுதலிலிருந்து பாதுகாப்பதும் மிகவும் அவசியமாகிறது. இந்நோக்கத்தை நிறைவேற்ற அறிவிப்பு செய்யப்பட்ட 38 பாரம்பரிய நகரங்களுக்கு வளர்ச்சித் திட்டங்களை இவ்வியக்ககம் தயாரித்துள்ளது. புராதன தலங்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்த, நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ஒவ்வொரு நகரத்திற்கும் அதிகபட்சமாக ரூ.50.00 இலட்சம் வீதம் மானியமாக நிதியுதவி வழங்கப்படுகிறது. இதுகாறும் 25 புராதன நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திட்டச் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் உள்ளன.

2006–07 ஆம் ஆண்டிலும், மேலும் 10 புராதன நகரங்களுக்காக இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, 2006–07 ஆம் ஆண்டில் 9 நகரங்களைப் புராதன நகரங்களாக அறிவிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம்**

7.11. மாநகரங்கள் மற்றும் நகரங்களில் தற்போதுள்ள போக்குவரத்து நடைமுறைகளை ஆராய்ந்து, நீண்டகாலத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, போக்குவரத்து நெரிசலை நீக்கி, சீரான முறையில் போக்குவரத்தை ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, இத்துறையால் போக்குவரத்து நெரிசல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ஒவ்வொரு மாநகராட்சிக்கும் (சென்னையைத் தவிர) ரூ.50.00 இலட்சம் மானியமாகவும், ஒவ்வொரு நகராட்சிக்கும் ரூ.25.00 இலட்சம் மானியமாகவும் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கி, திட்ட மதிப்பீட்டில் 75 சதவீதம் மானியமாகவும் மற்றும் உள்ளாட்சியின் பங்காக 25 சதவீதமும் அமையும்வகையில் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் மேலும் பத்து நகராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**துவக்க முதலீட்டுத் திட்டம்**

7.12. முழுமைத் திட்டம்/புதுநகர் வளர்ச்சித் திட்டம்/விரிவு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களைச் செயல்படுத்த, திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு தொகையை மானியமாக நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து வழங்கியும், எஞ்சிய 50 விழுக்காடு தொகையை, அந்தந்த உள்ளாட்சி/உள்ளூர் திட்டக் குழுமம்/புதுநகர் வளர்ச்சிக் குழுமம் தனது பங்காக வழங்கியும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் ரூபாய் ஒரு கோடி அளவிற்கு ஐந்து நகரங்களில் திட்டங்கள் செயல்படுத்த ஒவ்வொரு நகரத்திற்கும் அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2006–07 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இத்திட்டத்தின்கீழ் மொத்த மானியத் தொகை ரூபாய் ஒரு கோடி அளவிற்கு மேலும் ஐந்து நகரங்களில் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்படுகிறது.



**பூங்கா மேம்பாட்டுத் திட்டம்**

7.13. நெரிசல் மிகுந்த நகர்ப் பகுதிகளுக்கு காற்றைச் சுத்திகரிக்கும் சுவாசப் பைகளாகவும், பொதுமக்களுக்குப் பொழுதுபோக்கு இடங்களாகவும் பூங்காக்கள் அமைந்துள்ளன. பூங்காக்கள் உள்ளாட்சி அமைப்புகளால் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். கவனம் செலுத்தப்படாத, இந்த நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்திப் பராமரிக்க, உள்ளாட்சிகளுக்கு ஒருமுறை மானியமாக நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ், பூங்கா மேம்பாட்டுத் திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு தொகை அதிகபட்சம் ரூ 1.25 இலட்சம் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படுகிறது. எஞ்சிய 50 விழுக்காடு தொகை அல்லது அதற்குக் கூடுதலான செலவுத் தொகை உள்ளாட்சி அமைப்பு, தனது பங்காகச் செலவிட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வருடமும் பத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, மொத்தம் ரூ.12.50 இலட்சம் மானியம் வழங்கி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பூங்காக்களை மேம்படுத்தும் ஒரு சிறப்புத் திட்டமாக 2006–07 ஆம் ஆண்டில், ரூ.62.50 இலட்சம் மொத்த செலவில் 50 பூங்காக்களை மேம்படுத்த உத்தேசிக்கப்படுகிறது.

**புவியியல் தகவல் முறையில் மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்தல்**

7.14. புதிய தொழில்நுட்பங்களான புவியியல் கணினி தகவல் முறை மற்றும் தொலையுணர்வு போன்றவற்றைப் பயன்படுத்தி, மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்க இத்துறை உத்தேசித்துள்ளது. கோயமுத்தூர் மற்றும் திருப்பூர் இடையேயான முக்கிய சாலையை ஒட்டி அமைந்துள்ள பகுதிகளுக்குப் புவியியல் கணினி தகவல் முறை மற்றும் தொலையுணர்வு போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உள்கட்டமைப்புக்கான மேம்பாட்டுத் திட்டங்களை நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.10.00 இலட்சம் வழங்கி தனியார் ஒத்துழைப்புடன் 2006–07 ஆம் ஆண்டில் தயாரிக்க உத்தேசிக்கப்படுகிறது.

**தேசிய நகர்ப்புற தகவல் முறை (NUIS)**

7.15. நாட்டிற்கான ஒருங்கிணைந்த நகர்ப்புற தகவல் புள்ளி விவரம் உருவாக்கும்வகையில், தேசிய நகர்ப்புற தகவல் முறையைக் கணினி வாயிலாக ஏற்படுத்த, மத்திய அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், தமிழகத்திலுள்ள 6 நகரங்களான கோயமுத்தூர், மதுரை திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் திருப்பூர் ஆகியவற்றிற்கான வரைபடங்களைக்

[2006 ஆகஸ்ட் 18

கணினிமயமாக்கவும், புவியியல் கணினி தகவல் முறையிலான புள்ளி விவரங்கள் உருவாக்குவதற்கும் 70 விழுக்காடு செலவினை மத்திய அரசின் பங்காகச் செலவிட உத்தேசித்துள்ளது. இந்தப் புள்ளிவிவரம் நகரங்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்க மிகவும் பயனுள்ளதாக அமையும். மறுஆய்வு செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டின்படி மொத்தம் ரூ.44.75 இலட்சத்தில் மாநிலத்தின் பங்களிப்பாக ரூ.13.44 இலட்சம் மட்டும் தேவைப்படுகிறது. இத்திட்டம் குறித்த முறையான அனுமதி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டவுடன் மாநிலத்தின் பங்குத் தொகை விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. ஆதலால், இத்திட்டத்திற்காக 2006–07 ஆம் ஆண்டில் ரூ.13.44 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள்**

7.16. 2006–07 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கான (சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதி தவிர) வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பகுதி 2 திட்டங்கள் (2006–07)**

7.17. மின்னணு ஆளுகை முறையை இத்துறையின் பணிகளில் புகுத்தும் திட்டத்திற்கு ஏற்கெனவே ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இணைய வலைதளம் வாயிலாக இத்துறையின் சார்நிலை அலுவலகங்களைத் தலைமை அலுவலகத்துடன் இணைக்கவும் மற்றும் கட்டட வரைபட ஒப்புதல்/மனைப் பிரிவு ஒப்புதல் கோரும் விண்ணப்பங்களுக்கு இத்துறையால் ஒப்புதல் வழங்கும் நிலையினைப் பொதுமக்கள்/விண்ணப்பதாரர் இணைய வலைதளம்வாயிலாக அவ்வப்போது அறிந்துகொள்ளும்வகையிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டத்திற்கான கணினி வன்பொருட்கள், மென்பொருட்கள் மற்றும் அவற்றைச் சார்ந்தவற்றைக் கொள்முதல் செய்வதற்காக ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குக் கூடுதலாக ரூ.10.00 இலட்சம் 2006–07 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.18. ஏற்கெனவே முற்றிலுமாகப் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ள சிவகங்கை மற்றும் திருச்சி மண்டல அலுவலகங்களுக்கான ஜீப் மற்றும் கார் வாகனங்களுக்குப் பதிலாக, புதிதாக இரண்டு வாகனங்கள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்படுகிறது. அதற்காக ரூ.8.50 இலட்சம் 2006–07 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 18]

7.19. தற்சமயம் தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் உள்ள இருக்கைகள் மிகவும் பழுதடைந்த நிலையிலும் உபயோகப்படுத்த இயலாத நிலையிலும் உள்ளதால் நாற்காலி, மேசை, கோப்பு வைக்கும் பீரோ, இரும்பு அலமாரிகள் போன்றவற்றைத் தலைமை அலுவகத்திற்கும் மற்றும் 8 மண்டல அலுவலகங்களுக்கும் 2006–07 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் செலவில் வாங்க உத்தேசிக்கப்படுகிறது.

**8. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

8.1. நகர ஊரமைப்புத் திட்ட சட்டம் 1971–இன்படி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், ஒரு சட்டமுறை ஆணைக் குழுவாக அமைக்கப்பட்டதாகும். ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை அரசாணை எண் 2380, நாள் 13–11–1972–ன்படி ஓர் இடைக்கால அமைப்பாக உருவாக்கப்பட்ட இந்தக் குழுமம், 7–3–1975–ல் சட்டமுறை ஆணைக் குழுவாக உருவெடுத்தது. இக்குழுமம் தனது எல்லையாக சென்னைப் பெருநகர் பரப்பினைக் கொண்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ள சென்னைப் பெருநகர் பகுதி 1,189 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டதாகும் இதில் சென்னை மாநகராட்சி, 16 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 214 கிராமங்கள் உள்ளடங்கிய 10 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கும். சென்னைப் பெருநகர் பகுதியைச் சுற்றி வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் உயிர் தொழில்நுட்பங்களைக் கருத்தில்கொண்டு அரசானது நகர்ப்புற கட்டமைப்புகளையும், நகர சேவைகளையும் மேம்படுத்த உத்தேசித்துள்ளது. சென்னைப் பெருநகர் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையினைச் செம்மைப்படுத்தவும், சமச் சீரான நகர அபிவிருத்தி செய்யவும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமப் பல மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

**8.2 சென்னைப் பெருநகர் பகுதியின் இரண்டாம் முழுமைத் திட்டப் தயாரித்தல்**

தற்போது நடைமுறையில் உள்ள முதல் முழுமைத் திட்டம் 5-8-197. முதல் அமலாக்கத்தில் உள்ளது.

வரைவு இரண்டாம் முழுமைத் திட்டம், புதிய நில அளவைகள் செய்து தயாரிப்பதற்கான பணியை, சென்னைப் பெருநகா வளர்ச்சி குழுமம் 1990–ஆம் ஆண்டு துவக்கத்தில் மேற்கொண்டது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் அரசுக்கு 1995 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரைவுத் திட்டத்திற்கு அரச 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இசைவு அளித்தது. இந்த வரை

[2006 ஆகஸ்ட் 18

இரண்டாவது முழுமைத் திட்டத்தை, சென்னைப் பெருநகா வளர்ச்சிக் குழுமம், பொது மக்களிடமிருந்து மறுப்புகள் / ஏற்புகள் பெற்ற பிறகு, 1995 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசிற்கு சமர்ப்பித்தது. இந்த இரண்டாவது வரைவு முழுமைத் திட்டத்தை எதிர்த்து, சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப் பேராணை 1995 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு இடைக்காலத் தடை பெறப்பட்டதால், இந்த இரண்டாவது முழுமைத் திட்டத்தில் மேல் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. உயர்நீதிமன்றம் இந்த வழக்கை 2001 ஆம் ஆண்டு தள்ளுபடி செய்தது.

நகர்ப்புறத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின் திருத்தங்கள் மற்றும் சென்னைப் பெருநகரப் பகுதியின் எதிர்காலத் தேவைகள் போன்றவற்றைக் கருத்தில்கொண்டு, இரண்டாம் முழுமைத் திட்ட வரைவினைத் திருத்தங்கள் செய்வதற்கு அரசு 2001 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் திருப்பி அனுப்பியது. அதனிடையில் விதிகளை மீறிய வளர்ச்சிகளை வரன்முறைப்படுத்துவதற்காக, வரன்முறைப்படுத்தும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதால், இவ்வரைவுத் திட்டத்தின்மேல், 2004 ஆம் ஆண்டு வரை மேல் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. அதன் பின்னர் தற்போதைய மக்கள் தொகை கணக்கெடுப்பு, பல்வேறு துறைகளின் தேவைகள் மற்றும் போக்குவரத்து, குடிநீர், வீட்டு வசதி மற்றும் ஏனைய உள்கட்டமைப்பு தேவைகள், பொருளாதார மற்றும் வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் பல்வேறு உபயோக வளர்ச்சிக்கான நிலத் தேவைகள் ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு, கால அளவை 2026 ஆம் ஆண்டுவரை நீட்டித்து, வரைவு இரண்டாம் முழுமைத் திட்டத்தை மாற்றம் செய்யும் பணி துவங்கப்பட்டது. நில உபயோக பகுப்பாய்விற்கு தேசிய தொலையுணர்வு மையத்திடமிருந்து வாங்கப்பட்ட, துல்லியமான ஐகனாஸ் செயற்கைக்கோள் புகைப்படங்கள் பயன்படுத்தப்பட்டன. வரைவு இரண்டாவது முழுமைத் திட்டத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய, அனைத்துத் துறைகள் மற்றும் மக்களின் தேவைகளைக் கருத்தில்கொண்டு நில உபயோகத் திட்டம் மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகள் மறுஆய்வு செய்யப்பட்டு, திருத்திய நில உபயோகத் திட்டம் மற்றும் வளர்ச்சி விதிமுறைகள் தயாரிக்கப்பட்டன. இப்பெரிய பணியினை எந்தவொரு கலந்தறிதற்குரியவரையும் நியமிக்காமல் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமமே தயாரித்து முடித்துள்ளது. இந்தத் திருத்தப்பட்ட வரைவு இரண்டாம் முழுமைத் திட்டம் 30-12-2005 அன்று அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.



2006 ஆகஸ்ட் 18]

**8.3. சென்னை உள்கட்டமைப்பு மேம்பாடு**

சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளோடு கலந்தாலோசித்து உருவாக்கப்பட்ட சென்னைப் பெருநகர் பகுதிக்கான முதலீடு திட்டம் சென்னை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் என அழைக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. எந்தெந்தத் துறைகளில் அடிப்படை வசதிகள் தேவை என்பதை அறிந்து அதற்கான திட்டங்களை வகுத்தல்.
2. அத்திட்டத்தினைச் செயற்படுத்த தேவைப்படும் நிதியினை அறிதல்.
3. நிதிகளைப் பெறுவதற்கான வழிகளை அறிதல்.

திட்டங்களின் தன்மையைப் பொறுத்து ஆண்டுத் திட்டம், இடைக்காலத் திட்டங்கள் மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் என முதன்மைப்படுத்தல்.

உடனடியாக முதலீடு தேவைப்படும் திட்டங்கள், ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும். தேவைப்படும் அடிப்படை வசதிகளைப் பூர்த்திசெய்ய செயல்படவுள்ள திட்டங்கள் இடைக்காலத் திட்டங்களாகவும், அதிக முதலீடு கொண்டு நீண்ட நாட்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் நீண்டகாலத் திட்டகளாகவும் சேர்க்கப்படும்.

பெருநகர அடிப்படை வசதிகளை மேம்படுத்த தேவைப்படும் திட்டங்களைத் தகுந்த துறையிடமிருந்து சேகரித்து முதலீடு திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆண்டுத் திட்டம், இடைக்காலத் திட்டங்கள் (மூன்று ஆண்டுகள்) மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் (10 ஆண்டுகள்) என திட்டங்கள் பிரிக்கப்பட்டு செயற்படுத்தப்படவுள்ளன. 2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் 2,096 கோடி செலவில் உள்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜவஹர்லால் தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ், ஏறக்குறைய ரூ.35,000 கோடி திட்ட மதிப்பீட்டில் பல்வேறு உள்கட்டமைப்புகள், வசதிகள் மற்றும் குடிசைவாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை 7 ஆண்டு காலத்திற்குள் ஏற்படுத்த திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 18

**8.4 தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III**

சென்னைப் பெருநகர் பகுதிகளில் பெருகிவரும் போக்குவரத்துப் பிரச்சினைகளை மட்டுப்படுத்துவதற்காக, உலக வங்கியின் உதவியுடன் சுமார் ரூ.675 கோடி மதிப்பீட்டில், 2005 முதல் 2010 வரையிலான ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை, தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி, அதன் செயலாக்க முறைகளை நிர்மாணிக்கவும், பாதசாரிகளுக்கான சுரங்க வழிப்பாதையைக் கட்டுவதன்மூலம் சாலைப் போக்குவரத்து மற்றும் தரவாயுவைச் செம்மைப்படுத்தவும், மேல்வழிப்பாதைகள்/சுரங்க வழிப்பாதைகள் அமைப்பதன்மூலம் இரயில் சந்திக் கடவுகளை நீக்கியும், சென்னைப் பெருநகர் வளாகத்தின் புறவெளியில் உள்ள பெருநகர அதிவேக சாலைகளின் இணைப்புகளை வலுப்படுத்தி மற்றும் அகலப்படுத்துவதோடு புறநகர்ச் சாலை மற்றும் இரயில் வழிகளில் உள்ள பெரிய முடக்குகளை நீக்கியும், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் நடுத்தர திட்ட முறையின் குறிக்கோளாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும்பாலான திட்டங்களுக்கு விரிவான தொழில்நுட்பத் திறனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவை பல்வேறு முன்னேற்றக் கட்டங்களில் உள்ளன.

**8.5 (அ) திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்-II**

சென்னைக் கடற்கரை முதல் திருமயிலை வரையிலான திரளான துரித இரயில் போக்குவரத்து (நிலை-I)-ஆனது ஏற்கெனவே செயல்பாட்டில் இருக்கிறது. சுமார் ரூ.733 கோடி மதிப்பீட்டுச் செலவில் திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான 11.17 கி.மீட்டர் தூரத்திற்கான திட்டம்-II, முழு வேகத்தில் செயல்படுத்தப்பட்டு திருவான்மியூர் வரையிலான 5 கி.மீ. தூரத்திற்கு, ஜனவரி 2004-ல் முதல் பகுதியாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 67 சதவிகித செலவினை தமிழக அரசும், மீதமுள்ள 33 சதவிகித செலவினை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழக அரசு தன் பங்காக, இதுவரை ரூ.473.16 கோடியை மானியமாக அளித்துள்ளது.

**(ஆ) துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்-நிலை-II-ன் நீட்டிப்பு**

இந்தத் திட்டத்தை, புனித தோமையர் மலை வரை நீட்டித்து ஒரு இரயில் பாதையொன்றினை முடித்தால்தான் திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் முழுப் பயனை உணரமுடியும் என்பதைக் கருத்தில்கொண்டு, ரூ.416 கோடி செலவில் 5 கி.மீட்டர் தூரத்திற்கு



2006 ஆகஸ்ட் 18]

வேளச்சேரி முதல் புனித தோமையர் மலை வரை திரளான துரித போக்குவரத்துத் திட்டத்தை நீட்டுவித்து அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை இந்திய அரசுடன் கூட்டாக 67 சதவிகித செலவினை தமிழக அரசும், 33 சதவிகித செலவினை இந்திய அரசும் பகிர்ந்துகொள்ளும் முறையில் செயல்படுத்த தமிழக அரசு ஏற்கெனவே இந்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

**8.6 பெருநகர இரயில் திட்டம்**

சென்னை மாநகரின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்காக மற்ற நகரங்களில் உள்ளது போல் சென்னைப் பெருநகரத்திலும் பெருநகர இரயில் திட்டத்தைக் குறைந்த செலவில் செயல்படுத்துவதன்மூலம் அதிக அளவில் பிரயாணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என்பதால், சென்னைச் பெருநகரத்தில் திரளான துரிதப் போக்குவரத்துத் திட்டத்தை அரசு செயல்படுத்த ஆணையிட்டுள்ளது. தில்லிப் பெருநகர இரயில் கழகத்திடம் விரிவான திட்ட அறிக்கையை இறுதி செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.300 இலட்சங்களைத் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

**8.7. வெளிவட்டச் சாலை**

உள்வட்டச் சாலை பணிகள் ஒரு குறுகிய நீளத்தைத் தவிர மற்ற பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது உபயோகத்தில் உள்ளன. இடை வட்டச் சாலையின் பெரும்பாலான பணிகள் முடிவடைந்துள்ளன. இதர பகுதியில் தேசிய நெடுஞ்சாலைத் துறைமூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. தற்பொழுது பெருநகர உட்பகுதியில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, வெளிவட்டப் பாதை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட தேவை உருவாகி உள்ளது. தெற்கில் வண்டலூரையும், வடக்கில் மீஞ்சூரையும் இணைக்கும் 62 கி.மீட்டர் தூரமுள்ள வெளிவட்டச் சாலை அமைக்கும் திட்டத்திற்கு அரசானது 1993-இல் ஒப்புதல் அளித்துள்ளது.

ஜி.எஸ்.டி. சாலையில் இருந்து சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை வரை உள்ள 29 கி.மீ. நீளமுள்ள வெளிவட்டப் பாதை அமைக்கத் தேவையான நிலத்தை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கையகப்படுத்தியுள்ளது. மற்றும் மீஞ்சூர் வரையுள்ள 33 கி.மீ. நீளத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. இச்சாலை, இரு வழித் தடத்திலும் சேர்த்து, 6 வழிப்பாதை மற்றும்

சேவைப் பாதையைக் கொண்டதாக அமையும். இத்திட்டத்தின் முதல் கட்டமாக, இச்சாலை மொத்த நீளத்திற்கும் 4 வழிப்பாதை ரூ.500 கோடி முதலீட்டில் அமைக்கப்படும். விரிவான சாத்திய அறிக்கை (Detailed Feasiblity Report) தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) விரைவில் தயாரிக்கப்பட்டு அதன் பிறகு பணி துவங்கப்பட உள்ளது.

### 8.8. கோயம்பேடு மொத்த வணிக வளாகத்தில் மொத்த உணவு தானிய அங்காடி அமைக்கும் திட்டம்

மத்திய வணிகப் பகுதியில் (வள்ளலார் நகர்) நெரிசலைக் குறைக்க வேண்டும் என்ற, முதல் முழுமைத் திட்டத்தின் கோட்பாடுகளின் ஒன்றினைச் செயல்படுத்தும்பொருட்டு, கோயம்பேடு மொத்த வணிக வளாகம் உருவாக்க திட்டமிடப்பட்டு, அழுகும் பொருட்கள் (காய், கனி மற்றும் மலர்), ஜவுளிகள் மற்றும் உணவு தானியங்கள் ஆகியவற்றுக்கான மொத்த அங்காடியும் அமைக்க திட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கான பணி 1977 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக, அழுகும் பொருட்களுக்கான மொத்த அங்காடியில், 2,334 கடைகள் அதாவது மலர் அங்காடியில் 456 கடைகளும், பழ அங்காடியில் 456 கடைகளும், காய்கறி அங்காடியில் 1,422 கடைகளும் கட்டி முடிக்கப்பட்டன. இவற்றைத் தவிர, 72 சேவைக் கடைகள், 62 சிறிய கடைகள் மற்றும் 39 சிற்றுண்டி விடுதிகள் கட்டப்பட்டன. மேலும் 306 நடைபாதை கடைகளும் இவ்வங்காடிக்குள் தெரிவு செய்யப்பட்டன. மேலும் வாழைப்பழ வியாபாரத்திற்காக 321 கடைகள் கூடுதலாகக் கட்டப்பட்டன. இம்மொத்த அங்காடி 28–8–1996 அன்று துவக்கப்பட்டு அழுகும் பொருள் மொத்த விற்பனையாளர்கள், வள்ளலார் நகரிலிருந்து (ஜார்ஜ் நகர் பகுதி) மேற்கூறிய புதிய இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு பழைய இடத்தின் நெரிசல் குறைக்கப்பட்டது. பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அழுகும் பொருட்களின் விற்பனை வளாகம் செயல்பட்டு வருகிறது.

இரண்டாவது கட்டமாக உணவு தானிய மொத்த அங்காடி அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. வடிவமைப்பு வல்லுநரால் இத்திட்டத்திற்கான வடிவமைப்பு உருவாக்கப்பட்டு வியாபாரிகளின் இசைவோடு முடிவு செய்யப்பட்டது. அரசானது 15 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.61.85 கோடியில் 500 கடைகள் கட்டுவதற்கான நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.



### 8.9. தகவல் தொழில்நுட்பத் துறைக்கான அடிப்படை விரிவாக்கத் திட்டம்

தகவல் தொழில்நுட்பத் துறைக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும்பொருட்டு, தகவல் தொழில்நுட்பத் துறைக்கான அடிப்படைத் திட்டத்தினை, திருப்பூர்வரை செயல்படுத்த, ஒரு செயலாக்கத் திட்டத்தினைத் தயாரிக்குமாறு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினை அரசு பணித்துள்ளது.

தொழில்நுட்பத் துறை மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளின் தேவைகளைக் கணிப்பது மற்றும் அடிப்படை வசதிகள் மற்றும் சமுதாய வசதிகளைப் பூர்த்தி செய்யும்வகையில் பகுதி செயலாக்கத் திட்டத்தினைத் தயாரிப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். தொழில்நுட்பத் துறைக்கான ஒரு செயலாக்கத் திட்டத்தினை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தயாரித்து அரசுக்குச் சமர்ப்பித்தது. இதுகுறித்து அரசு பல்வேறு துறைகளோடு கலந்து பரிசீலித்த பின்னர், இத்திட்டத்தினை நாளதுவரை சரிசெய்யும் வகையில் சமீபத்திய முன்னேற்றக் கூறுகளைக் கருத்திற்கொள்ளுமாறு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினை அரசு அறிவுறுத்தியுள்ளது.

சமீபகாலத்தில், இப்பகுதிகளில் துரிதமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சமீபத்திய முன்னேற்ற நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு, ஆய்வின் பகுதி மற்றும் எல்லைகளை விரிவாக்கி, தகவல் தொழில்நுட்பத் துறைக்கு ஒரு புதிய செயலாக்கத் திட்டத்தினை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான அடிப்படை வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 8.10. உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானிய நிதி உதவி செய்தல் மற்றும் சமுதாய சுற்றுச் சூழல் மேம்பாட்டுத் திட்டம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் வசூலிக்கப்படும் வளர்ச்சிக் கட்டண நிதியிலிருந்து உள்ளாட்சி நிதி உதவித் திட்டத்தின்கீழ் சாலை மேம்பாடு, தெருவிளக்கு அமைத்தல், கால்வாய் அமைத்தல், மயான மேம்பாடு, குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர் அகற்றல், குப்பைக் கூளங்கள் அகற்ற வாகனங்கள் வாங்குவது போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும்பொருட்டு, திட்ட மதிப்பீட்டில் 90 விழுக்காட்டினைச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,

சென்னைப் பெருநகரப் பகுதிக்குள் அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆண்டுதோறும் வளர்ச்சிக் கட்டண நிதியிலிருந்து மானியமாக நிதி உதவி அளித்து வருகிறது.

இதைப்போன்று, சமுதாய சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பூங்கா சீரமைப்பு, குளம், குட்டைகள் தூர் வாருதல், மரம் நடுதல், பள்ளிக்கூடங்களின் சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற பணிகளுக்காக, 80 விழுக்காடுவரை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மானியமாகவும், மீதமுள்ள 20 விழுக்காட்டில் 10 விழுக்காடு உள்ளாட்சி அமைப்பிடமிருந்தும் 10 விழுக்காடு சமுதாயத்தினரிடமிருந்தும் பெறப்படுகின்ற நிதிகள்மூலம் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

மேற்சொன்ன திட்டங்களின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், 2006–2007 ஆம் நிதி ஆண்டில் ரூ.4.20 கோடி நிதி உதவியாக விடுவிக்க உத்தேசித்துள்ளது.

### 8.11. பல அடுக்கு வாகன நிறுத்துமிட வளாகங்கள்

சென்னைப் பெருநகரப் பகுதிக்குள் வாகனம் நிறுத்துவதற்கான ஆய்வு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி பல இடங்களில் வாகன நிறுத்த தட்டுப்பாட்டைக் குறைக்க பல பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அதன் ஒரு பகுதியாக தியாகராயநகர், பாரிமுனை, அண்ணா சாலை, நுங்கம்பாக்கம் மற்றும் பல இடங்களில் பல அடுக்கு வாகன நிறுத்த வளாகங்களை கட்ட பரிந்துரைத்தது. தேர்வு செய்யப்பட்ட 6 இடங்களில் விளக்கமான சாத்திய அறிக்கை தயாரிக்கும் பணியினை திருவாளர்கள் மெக்கான் லிமிடெட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பனகல் பார்க், பிராட்வே பஸ் ஸ்டாண்ட் பகுதி மற்றும் அரசுத் தோட்டம் ஆகிய பகுதிகளுக்கான விளக்கமான சாத்திய அறிக்கை தயாரிக்கப்பட்டது. மற்ற இடங்களுக்கான அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. விளக்கமான சாத்திய அறிக்கை மற்றும் விளக்கமான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டபிறகு, பல அடுக்கு வாகன நிறுத்த வளாகங்கள் கட்டும் பணி தொடங்கப்படும்.



## இணைப்பு II

(425 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 47

## தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் துறை–இந்து சமய அறநிலையத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007

### முன்னுரை

"நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயின்
படமாடக் கோயில் பரமற்கு அது ஆமே"

- திருமூலர்

என்பதற்கேற்ப மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற மாமந்திரத்தை மதித்து, இந்த அரசு அயராது பாடுபட்டு வருகிறது.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் திருமந்திரச் சொற்களை நினைவுகூர்ந்து, அந்த ஒருவனாகிய தேவனையும் ஏழையின் சிரிப்பில் காண முடியும் என்ற உயர்ந்த அறிவுரைகளை நெஞ்சில் நிறுத்தி, அவற்றைத் திருக்கோயில் நிருவாகத்திலும் இத்துறை கடைப்பிடித்து வருகிறது.

பழமையும் பெருமையும் மிக்க நம் தமிழ்ப் பண்பாட்டிற்கு முடிமணியாகவும், தமிழர்தம் கூரிய அறிவு, ஆற்றல், கலைத்திறன், அறவுணர்வு, அருள்நெறித் தெளிவு ஆகியவற்றிற்கு நிலைக்களமாகவும் திகழ்வன நம் திருக்கோயில்களாகும்.

இத்திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து, குடமுழுக்கு விழாக்களை நடத்தவும், திருக்கோயில் சொத்துக்களைப் பாதுகாக்கவும், மீட்கவும், மற்றும் சொத்துப் பதிவேடுகளை உருவாக்கவும், திருக்கோயில்களின் வருவாயை உயர்த்தவும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொள்ளும். இவ்வகையில்.

[2006 ஆகஸ்ட் 18

*"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"*

என்ற குறள் நெறியைப் பின்பற்றி, இந்து சமய அறநிலையத் துறையும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**இந்து சமய அறநிறுவனங்களின் நிருவாகம்**

தமிழகத்திலுள்ள திருக்கோயில்களின் அன்றாட நிருவாகம், அவற்றின் சொத்துகளைப் பராமரித்தல் ஆகியவற்றைக் கண்காணிப்பதற்காக 1927 ஆம் ஆண்டு "இந்து சமய அறநிலைய வாரியம்" அமைக்கப்பட்டு அதன்மூலம் இந்து சமய அறநிறுவனங்களின் நிருவாகம் ஒருமுனைப்படுத்தப்பட்டது. 1951 ஆம் ஆண்டில் இந்து சமய அறநிலைய வாரியம் கலைக்கப்பட்டு, இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் ஏற்படுத்தப்பட்டு இந்து சமய அறநிறுவனங்களின் அமைப்பு சீரமைக்கப்பட்டது. திருக்கோயில் அறங்காவலர்களின் செயல்பாட்டை மேற்பார்வையிட, வட்டாரக் குழுக்கள் அமைக்கப்பட்டன. எனினும், திருக்கோயில்களில் முழுமையான பயனுள்ள நிருவாகக் கட்டுக்கோப்பினை இச்சட்டம் கொண்டுவர இயலாததால், குறிப்பிடத்தக்க மாறுதல்களுடன் 1959 ஆம் ஆண்டில் தற்போதுள்ள இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம் கொண்டுவரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்த அரசு 1968 ஆம் ஆண்டில் வட்டாரக் குழுக்களை நீக்கிவிட்டு, முழுப் பொறுப்புகளையும் ஆணையரிடமும் அவரது சார்நிலை அலுவலர்களிடமும் ஒப்படைத்து ஒரு சட்டம இயற்றியது. அதற்கடுத்து 1971 ஆம் ஆண்டில் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் பரம்பரை முறையில் நியமனம் செய்யப்பட்டு வந்ததை, ஒரு சட்டத் திருத்தத்தின்மூலம் நீக்கம் செய்து, அர்ச்சகர்கள் மற்றும் பூசாரிகள் நியமனங்கள் நெறிப்படுத்தப்பட்டன. திருக்கோயில்களில் இந்து மதத்தைச் சார்ந்த அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற உயரிய சமூகச் சீர்திருத்தச் சிந்தனைச் செயலாக்கம் பெற இது வித்தாக அமைந்தது.

1996 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்த அரசு, அதற்கு முன்பிருந்த திருக்கோயில் நிருவாக வாரிய அமைப்பை நீக்கி, இந்து சமய அறநிலைய ஆணையரிடமும், அவரது சார்நிலை அலுவலர்களிடமும் முழுப் பொறுப்புகளையும் ஒப்படைத்தது.



2006 ஆகஸ்ட் 18]

மேலும் மாநில அளவில் அரசுக்கும் ஆணையருக்கும் ஆலோசனை கூறி, வழி நடத்திட ஆலோசனைக் குழு ஒன்றையும் அமைத்தது. தற்போது ஆலோசனைக் குழு இல்லை. தக்க சான்றோர்களுடன் இந்தக் குழுவை அமைக்க இவ்வரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

13-5-2006 அன்று கலைஞர் அவர்கள் தலைமையில் பொறுப்பேற்ற இவ்வரசு, ஆண்டவன் முன்பு அனைவரும் சமம், ஆண்டவனை அர்ச்சிப்பதில் சாதிப் பாகுபாடு கூடாது என்ற சமத்துவக் கொள்கைக்குச் செயல்வடிவம் கொடுத்திட முடிவு செய்து, தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் இருந்த முள்ளை அகற்றிடும்வகையில் உரிய பயிற்சியும், தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் இந்து சமய திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்று ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையைச் செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்குவதற்காக நீதியரசர் உயர்திரு ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவை அரசு நியமித்துள்ளது. இக்குழுவில் கீழ்க்காணும் சான்றோர் பெருமக்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர், குழுவின் உறுப்பினர் / செயலராக இருப்பார்.

| | |
|---|---|
| 1. | **நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்கள், ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி–தலைவர்** |
| 2. | **தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி.** |
| 3. | **திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் கயிலை குருமணி சீர்வளர்சீர் சாந்தலிங்க ராமசாமி அடிகளார் அவர்கள், பேரூர்.** |
| 4. | **ஸ்ரீரங்க நாராயண ஜீயர் சுவாமிகள் அவர்கள், ஸ்ரீரங்கம்.** |
| 5. | **சிவநெறிச் செம்மல் முனைவர் பிச்சை சிவாச்சாரியார் அவர்கள், பிள்ளையார்பட்டி.** |
| 6. | **சிவாகம சிரோன்மணி திரு. கே. சந்திரசேகர பட்டர் அவர்கள், திருப்பரங்குன்றம்.** |

[2006 ஆகஸ்ட் 18

இரண்டு மாதங்களுக்குள் பரிந்துரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கும்படி இந்தக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் 29-6-2006 அன்று சென்னையில் நடந்துள்ளது.

ஏழையெளியோர், செல்வந்தர், பதவியில் உள்ளவர்கள், நலிந்தவர்கள் என்ற பாகுபாடு திருக்கோயில்களில் இறைவன்முன்பு கூடாது என்ற சீரிய கொள்கையின் அடிப்படையில் திருக்கோயில்களில் முக்கியப் பிரமுகர்களுக்குப் பட்டு, பரிவட்டம் கட்டும் மரியாதை முறையை நீக்குமாறு திருக்கோயில்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**சமய நிறுவனங்கள்**

இத்துறை நிருவாகத்தின்கீழ் இந்து மற்றும் சமண சமய அறநிறுவனங்கள் மொத்தம் 38,421 உள்ளன. 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள், செயல் அலுவலர்கள் ஆகியோரால் இந்து சமய நிறுவனங்கள் நிருவகிக்கப்படுகின்றன. செயல் அலுவலர்கள் பணியமர்த்தப்படாத பெரும்பாலான திருக்கோயில்கள் அறங்காவலர்களின் நிருவாகத்தில் இருந்து வருகின்றன.

இத்துறை நிருவாகத்தின்கீழுள்ள இந்து மற்றும் சமண சமய அறநிறுவனங்கள் விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 36,381 |
| 2. | திருமடங்கள் | 56 |
| 3. | திருமடங்களின் நிருவாகத்தின்கீழ் உள்ள திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | மொத்தம் | 38,421 |



2006 ஆகஸ்ட் 18]

**இந்து சமய நிறுவனங்களின் வகைப்பாடு**

இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தில், சமய நிறுவனங்கள், அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:—

| வ. எண் | சட்டப் பிரிவு | நிருவாகத்தின் ஆண்டு வருவாய் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பட்டியலைச் சாரா நிறுவனங்கள் சட்டப் பிரிவு 49 | ரூ. 10,000/-க்குக் குறைவாக வருவாய் உள்ளவை | 34,433 |
| 2. | பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள் சட்டப் பிரிவு 46(i) | ரூ. 10,000/-த்திலிருந்து ரூ. 2,00,000/-வரை ஆண்டு வருவாய் உள்ளவை | 3,397 |
| 3. | சட்டப் பிரிவு 46(ii) | ரூ. 2,00,000/-த்திலிருந்து ரூ.10,00,000/-வரை ஆண்டு வருவாய் உள்ளவை | 438 |
| 4. | சட்டப் பிரிவு 46(iii) | ரூ.10,00,000/—அல்லது அதற்கு மேலும் ஆண்டு வருவாய் உள்ளவை | 153 |
| | | மொத்தம் | 38,421 |

**இந்து சமய அறநிலையத் துறையின் நிருவாக அமைப்பு**

இத்துறையின் நிருவாகத்தில் ஆணையர், அலுவலர்கள், சார்நிலை அலுவலர்கள், செயல் அலுவலர்கள், அயற்பணியாளர்கள், அலுவலக உதவியாளர்கள், காவலர்கள், துப்புரவாளர்கள் ஆகிய பணியிடங்கள் மொத்தம் 2,359 அனுமதிக்கப்பட்டு, தற்போது 1,698 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.

**தலைமையிட நிருவாக அமைப்பு**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிருவாகத் தலைவர் ஆணையர் ஆவார். இப்பதவியில் இந்திய ஆட்சிப் பணி நிலையில் அலுவலர் இருந்து செயல்படுகின்றார்.

[2006 ஆகஸ்ட் 18

இவரது பணிகளில் உதவிட, தலைமை அலுவலகத்தில், கூடுதல் ஆணையர் ஒருவரும், தலைமையிட இணை ஆணையர் ஒருவரும், திருக்கோயில்களில் திருப்பணிகளை விரைவுபடுத்திட இணை ஆணையர் (திருப்பணி) ஒருவரும், உதவி ஆணையர் நிலையில் நேர்முக உதவியாளர் இருவரும், நீதிமன்றப் பணிகளைக் கண்காணிக்க உதவி ஆணையர் ஒருவரும், சமய நிறுவனங்களில் விலை உயர்ந்த பொருட்கள், பொன், வெள்ளி இனங்கள் ஆகியவற்றை மதிப்பிட உதவி ஆணையர் (சரிபார்ப்பு) ஒருவரும் பணிபுரிகின்றனர்.

திருக்கோயில்களில் திருப்பணித் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரித்தல், மேற்பார்வையிடுதல், அறநிறுவனங்களின் கட்டுமானப் பணிகளை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளில் ஆணையருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் கண்காணிப்புப் பொறியாளர், கோட்டப் பொறியாளர், உதவிப் பொறியாளர்கள், வரைவாளர்கள் அடங்கிய பொறியியல் பிரிவு ஒன்றும செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் உள்ள அலுவலர்கள், பொதுப் பணித் துறை அல்லது நெடுஞ்சாலைத் துறையிலிருந்து மாற்றுப் பணிஅடிப்படையில் வந்து பணியாற்றுகின்றனர்.

அறநிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களைக் கண்டறியவும் அவற்றை ஆய்வு செய்யவும் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர் ஒருவரைக் கொண்ட வருவாய்ப் பிரிவு இயங்கி வருகிறது. ஆலயங்களின் நிலங்களைப் பார்வையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள் ஆகியோருடன் தொடர்புகொண்டு ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் தொடர்பான அடிப்படைப் பதிவேடுகள் தயாரிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொண்டுள்ளது. பணிப்பளு அதிகமானதன் காரணமாகக் கூடுதலாக ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடம் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கருவூலம் மற்றும் கணக்குத் துறையைச் சேர்ந்த முதுநிலைக் கணக்கு அலுவலர் ஒருவர் மற்றும் உதவிக் கணக்கு அலுவலர் ஒருவர் ஆகியோர் கணக்குகள் பிரிவிற்குப் பொறுப்பு வகிக்கின்றனர். சமய நிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கைச் செய்ய மாநில நிதித் துறையிலிருந்து அலுவலர் ஒருவரைத் தலைமைத் தணிக்கை அலுவலராகக் கொண்டு தணிக்கைப் பிரிவு இயங்கி வருகிறது.



2006 ஆகஸ்ட் 18]

**மண்டல/கோட்ட நிருவாக அமைப்பு**

இத்துறை மாநில அளவில் 11 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் ஒரு இணை ஆணையரின் நிருவாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் இத்துறை மாநில அளவில் 22 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு உதவி ஆணையர் நிருவாகத்தின்கீழ் இயங்கி வருகிறது. இதன் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | அதிகார எல்லை |
|---|---|---|---|
| 1. | இணை ஆணையர், சென்னை. | 1. உதவி ஆணையர், சென்னை. | சென்னை மாவட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர், பொன்னேரி, திருவள்ளூர், ஊத்துக்கோட்டை வட்டங்கள். |
| 2. | இணை ஆணையர், வேலூர். | 2. உதவி ஆணையர், காஞ்சிபுரம். | காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி, பூந்தமல்லி, திருத்தணி வட்டங்கள். |
| | | 3. உதவி ஆணையர், வேலூர். | வேலூர் மாவட்டம் |
| 3. | இணை ஆணையர், சேலம். | 4. உதவி ஆணையர், தருமபுரி. | தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| | | 5. உதவி ஆணையர், சேலம். | சேலம், நாமக்கல் மாவட்டங்கள். |
| 4. | இணை ஆணையர், கோயம்புத்தூர். | 6. உதவி ஆணையர், கோயம்புத்தூர். | கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள். |
| | | 7. உதவி ஆணையர், ஈரோடு. | ஈரோடு மாவட்டம் |

[2006 ஆகஸ்ட் 18

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | அதிகார எல்லை |
|---|---|---|---|
| 5. | இணை ஆணையர், தஞ்சாவூர். | 8. உதவி ஆணையர், தஞ்சாவூர். | தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, பாபநாசம், பேராவூரணி, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, திருவையாறு வட்டங்கள், திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி, நீடாமங்கலம், வலங்கைமான், வட்டங்கள். |
| | | 9. உதவி ஆணையர், நாகப்பட்டினம். | நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர், நாகப்பட்டினம், திருக்குவளை, வேதாரண்யம் வட்டங்கள், திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர், திருத்துறைப்பூண்டி, குடவாசல், நன்னிலம் வட்டங்கள். |
| 6. | இணை ஆணையர், மயிலாடுதுறை. | 10. உதவி ஆணையர் கும்பகோணம். | தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், திருவிடைமருதூர் வட்டங்கள்; நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை, சீர்காழி, தரங்கம்பாடி வட்டங்கள். |
| | | 11. உதவி ஆணையர், கடலூர். | கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார்குடி வட்டங்கள். |



2006 ஆகஸ்ட் 18]

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | அதிகார எல்லை |
|---|---|---|---|
| 7. | இணை ஆணையர், விழுப்புரம், | உதவி ஆணையர், கடலூர். | கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி, கடலூர், விருத்தாசலம், திட்டக்குடி ஆகிய வட்டங்கள் மட்டும். |
| | | 12. உதவி ஆணையர், விழுப்புரம். | விழுப்புரம் மாவட்டம். |
| | | 13. உதவி ஆணையர், திருவண்ணாமலை. | திருவண்ணாமலை மாவட்டம். |
| 8. | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | 14. உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம் வட்டங்கள். |
| | | 15. உதவி ஆணையர், அரியலூர். | பெரம்பலூர் மாவட்டம் |
| | | 16. உதவி ஆணையர், புதுக்கோட்டை. | புதுக்கோட்டை மாவட்டம்; கரூர் மாவட்டத்தில் குளித்தலை வட்டம், திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை வட்டம். |
| 9. | இணை ஆணையர், மதுரை, | 17. உதவி ஆணையர், மதுரை. | மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்கள். |

[2006 ஆகஸ்ட் 18

| வ. எண் | மண்டலம் | கோட்டம் | அதிகார எல்லை |
|---|---|---|---|
| 10. | இணை ஆணையர், சிவகங்கை. | 18. உதவி ஆணையர், விருதுநகர். | விருதுநகர் மாவட்டம். |
| | | 19. உதவி ஆணையர், பரமக்குடி. | சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்கள். |
| 11. | இணை ஆணையர், திருநெல்வேலி. | 20. உதவி ஆணையர், திருநெல்வேலி. | திருநெல்வேலி மாவட்டம். |
| | | 21. உதவி ஆணையர், தூத்துக்குடி. | தூத்துக்குடி மாவட்டம். |
| | | 22. உதவி ஆணையர், நாகர்கோயில். | கன்னியாகுமரி மாவட்டம். |

இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்களுக்கு உதவியாக களப்பணியில் ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர். பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் இணை ஆணையர்/செயல் அலுவலரின் நேர்முக உதவியாளராக ஒரு உதவி ஆணையரும், துணை ஆணையர் ஒருவரும் பணிபுரிகின்றனர். அறநிலையங்களுக்குரிய பொன், வெள்ளி இனங்கள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை மதிப்பீடு செய்திட, துணை ஆணையர் நிலையில் 6 சரிபார்ப்பு அலுவலர்கள் பணியில் உள்ளனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான தினசரி பூசை மற்றும் வழிபாட்டில் இல்லாத உலோகத் திருமேனிகளைப் பாதுகாத்திட, திருவாரூரில் அமைக்கப்பட்ட உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையத்தில் உதவி ஆணையர் ஒருவர் பொறுப்பாளராகப் பணியாற்றி வருகிறார். அறநிலையங்களின் நிலங்கள் தொடர்பான அடிப்படைப் பதிவேடுகள் தயாரிக்கும் பணியில், வருவாய்த் துறை வட்டாட்சியர்கள் பணிபுரிகின்றனர். அறநிறுவனங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்ய மண்டல தணிக்கை அலுவலர்களும், உதவித் தணிக்கை அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர். திருப்பணிகள் தொடர்பான மதிப்பீடுகள் தயாரித்தல். மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளைச் செய்திட



2006 ஆகஸ்ட் 18]

ஒவ்வொரு இணை ஆணையர் பிரிவில், ஒரு உதவிக் கோட்டப் பொறியாளரும், ஒவ்வொரு உதவி ஆணையர் பிரிவில் ஒரு உதவிப் பொறியாளரும் பணிபுரிகின்றனர்.

**செயல் அலுவலர்கள்:**

திருக்கோயில்களின் முக்கியத்துவம், வருமானம், சொத்துக்கள் அவற்றின் செயல்பாடுகள ஆகியவற்றின் அடிப்படையில், செயல் அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு திருக்கோயில்கள் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. அனுமதிக்கப்பட்டுள்ள செயல் அலுவலர்கள் பணியிடங்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நிலை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் | 6 |
| 2. | துணை ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் | 14 |
| 3. | உதவி ஆணையர் நிலை செயல் அலுவலர்கள் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை–1 | 66 |
| 5. | செயல் அலுவலர் நிலை–2 | 112 |
| 6. | செயல் அலுவலர் நிலை–3 | 250 |
| 7. | செயல் அலுவலர் நிலை–4 | 154 |
| | மொத்தம் | 629 |

**திருமடங்கள் நிருவாகம்:**

தமிழகத்தில் அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் தற்போது 56 திருமடங்களும், அவற்றுடன் இணைந்த 19 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. இவற்றின் நிருவாகம் முறையாக நடைபெறுவதை உறுதி செய்ய ஒரு மண்டலத் தணிக்கை அலுவலர், ஒரு கண்காணிப்பாளர், இரு தணிக்கை ஆய்வாளர்கள், மூன்று உதவியாளர்கள் அடங்கிய ஒரு ஆய்வுப் பிரிவு ஆணையருக்கு உதவியாகத் தலைமையிடத்தில் இயங்கி வருகிறது.

[2006 ஆகஸ்ட் 18

**அறங்காவலர்கள் நியமனம்**

திருக்கோயில்களின் நிருவாகத்தை இந்து சமயம் மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின்கீழ் நிருவகிக்க ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் அறங்காவலர்கள் நியமிக்கப்பட வழி செய்யப்பட்டுள்ளது.

இந்து சமயம் மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 7A-இன் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலைவர் மற்றும் 4 உறுப்பினர்கள் அடங்கிய மாவட்டக் குழு அரசால் அமைக்கப்பட்டிருந்தது. இந்த மாவட்டக் குழுக்கள் பரிந்துரைக்கும் பெயர்களிலிருந்து ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் மூன்று அறங்காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும். மேலும் இரண்டு அறங்காவலர்களை அரசு நியமிக்க வேண்டும்.

மேற்கண்ட அடிப்படையில் இதுவரை சட்டப் பிரிவு 46(iii) திருக்கோயில்கள் 93-க்கும், சட்டப் பிரிவு 46(ii) திருக்கோயில்கள் 217-க்கும், சட்டப் பிரிவு 46(i) திருக்கோயில்கள் 1507-க்கும், சட்டப் பிரிவு 49(1) திருக்கோயில்கள் 11,431-க்கும் பாரம்பரை முறைசாரா அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த மாவட்டக் குழுக்கள் முறை, சரிவரச் செயல்படாததால் அரசு இதை மாற்றியமைக்க முடிவு செய்தது. அதேபோல, அறங்காவலர்கள் நியமிக்கப்படுவதற்கான அதிகபட்ச வயது வரம்பை நீக்கவும், அறங்காவலர் குழுவில் மகளிர் நியமிக்கப்படுவதைச் சட்டப்பூர்வமாக ஆக்கவும் அரசு முடிவு செய்தது. இதையடுத்து மேதகு ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு அவசரச் சட்டம் 5/2006, 16-7-2006 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன்படி மாவட்டக் குழுக்கள் கலைக்கப்பட்டு, அவற்றின் அதிகாரம் அரசுக்கும், ஆணையருக்கும், இணை ஆணையர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அறங்காவலராக நியமிக்கப்படுபவரின் பதவிக் காலமும் ஓராண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்கள்:**

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாகத் தமிழ்நாடு முழுமையும் 4,78,961.46 ஏக்கர் நிலங்கள் உள்ளன. அவற்றில் நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்கள் கீழ்க்காணும் விவரப்படி உள்ளன:



2006 ஆகஸ்ட் 18]

**நிலங்கள் விவரம்:**

| நிலத்தின் தன்மை | திருக்கோயில்களுக்குச் சொந்தமானவை | | திருமடங்களுக்குச் சொந்தமானவை | | மொத்தப் பரப்பளவு | |
|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர் | சென்ட் | ஏக்கர் | சென்ட் | ஏக்கர் | சென்ட் |
| நன்செய் | 1,83,768 | 68 | 21,282 | 05 | 2,05,050 | 73 |
| புன்செய் | 2,18,612 | 68 | 34,543 | 15 | 2,53,155 | 83 |
| மானாவாரி | 20,754 | 90 | -- | -- | 20,754 | 90 |
| மொத்தம் | 4,23,136 | 26 | 55,825 | 20 | 4,78,961 | 46 |

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1,23,729 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான 22,599 கட்டடங்களும், 33,627 கிரவுண்டு மனைப் பகுதிகளும் முறையே 25,187 மற்றும் 59,390 பேர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

**வருவாய் நீதிமன்றம்:**

நிலக் குத்தகையில் நிலுவைத் தொகைகளை வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும், நிலுவைகளை வசூலிக்கவும், நியாய வாடகை நிர்ணயம் செய்யவும், குத்தகைதாரர்களை வெளியேற்றவும் தனித் துணை ஆட்சியர் தலைமையில் வருவாய் நீதிமன்றங்கள் கீழ்க்காணும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன:

**முழு நேர நீதிமன்றம்:**

1. தஞ்சாவூர்
2. திருச்சிராப்பள்ளி
3. மயிலாடுதுறை
4. திருவாரூர்
5. கடலூர்
6. மதுரை

[2006 ஆகஸ்ட் 18

**முகாம் நீதிமன்றம்**

1. மன்னார்குடி
2. கும்பகோணம்
3. சேலம்
4. தென்காசி

ரூ.35.09 கோடி குத்தகைத் தொகை நிலுவைக்காக வருவாய் நீதிமன்றங்களில் மொத்தம் 32,885 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, 15,764 வழக்குகளில் மொத்தம் ரூ.13.05 கோடிக்கு வசூல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுத் தொகையை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் ரூ.22.04 கோடி குத்தகைப் பாக்கி குறித்த 17,121 வழக்குகள், வருவாய் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

**திருப்பணி**

தமிழ்நாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்றதும், நாயன்மார்களால் பாடப் பெற்றதுமான புகழ்மிக்க புராதன புனிதத் திருத்தலங்கள் உள்ளன. இத்தகைய புராதனமும், வரலாற்று முக்கியத்துவமும், தொல்பொருள் முக்கியத்துவமும் உடைய திருக்கோயில்களை நன்முறையில் பேணிப் பாதுகாத்துவரத் திருப்பணி இன்றியமையாததாகும். இத்தகைய திருக்கோயில்கள் முன்னுரிமை அடிப்படையில் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஆகம விதிப்படி கும்பாபிஷேகம் நடத்த வேண்டிய திருக்கோயில்கள் மற்றும் உடனடியாகத் திருப்பணி மேற்கொள்ளவேண்டிய அவசியமுள்ள திருக்கோயில்கள் பட்டியலிடப்பட்டுத் திருப்பணிக்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவையன்றி, கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய திருக்கோயில்களிலும் ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளில் உள்ள சிறிய திருக்கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கீழ்க்காணும் நிதியாதாரங்களின் அடிப்படையில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

1. பொது மக்கள் அளிக்கும் நன்கொடை
2. அந்தந்தத் திருக்கோயில்களின் நிதி



2006 ஆகஸ்ட் 18]

3. நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி
4. அரசு மானியம்
5. ஆணையர் பொது நல நிதி
6. ஆலய மேம்பாட்டு நிதி
7. கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி நிதி
8. திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி
9. உபயப் பணி

**அ. நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து வழங்கப்படும் நிதி**

நிதி வசதியற்ற திருக்கோயில்களில் திருப்பணி செய்திட இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 36-இன்கீழ் நிதிவசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி மாற்றம்மூலம் நிதி பெற்றுத் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஆ. அரசு மானியம்**

ஒவ்வோரு ஆண்டும் திருக்கோயில்களின் திருப்பணிக்காக அரசு நிதியிலிருந்து மானியமாக இத்துறை வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 45 இலட்சமாக வழங்கப்பட்டு வந்தது. இது 1998-1999 ஆம் ஆண்டு முதல் ரூ. 75 இலட்சமாக உயர்த்தப்பட்டு, ஆண்டுதோறும் தொடர்ந்து ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுத் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**இ. ஆணையர் பொது நல நிதி**

இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 97-இன்படி சமய நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடைத் தொகையைக் கொண்டு, ஆணையரின் பதவிப் பெயரில் பொது நல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து திருப்பணி மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்வதற்கு நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 18

### ஈ. ஆலய மேம்பாட்டு நிதி

நிதி வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 5 கோடி பெற்று ஒரு மூல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மூல நிதியை வைப்பு நிதியாகக் கொண்டு, அதன்மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, அரசின் முன் அனுமதியுடன் பழைமையும், சரித்திர கலை முக்கியத்துவமும் வாய்ந்த திருக்கோயில்களுக்கும், ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடல் பெற்ற திருக்கோயில்களுக்கும் திருப்பணி செய்வதற்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

### உ. கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணி நிதி

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூ. 2 கோடி பெறப்பட்டு வைப்பு நிதியாக முதலீடு செய்யப்பட்டுள்ளது. இம்மூலநிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து, ஒவ்வொரு ஆண்டும், கிராமப்புறங்களிலும், இத்துறையின் கட்டுப்பாட்டிலும் உள்ள 100 சிறிய திருக்கோயில்களின் திருப்பணிக்குத் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ. 25,000/- வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

### ஊ. திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

தொண்டுள்ளம் கொண்ட நன்கொடையாளர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும், நன்கொடைகள் பெற்றுத் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி என்ற ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டது. பாடல் பெற்ற, வரலாற்றுப் பெருமை வாய்ந்த, தொன்மை வாய்ந்த, கலைச் சிறப்பு மிக்க திருக்கோயில்களில் திருப்பணி செய்வதற்கும், ஒருகால பூஜைத் திட்டத்திற்கும் இந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கப்படுகின்றது.

### எ. ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணி

ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதியில் உள்ள சிறிய கோயில்களுக்கும், பிற்படுத்தப்பட்டோர் வசிக்கும் பகுதிகளில் இத்துறையினர் ஆளுகையின்கீழ் உள்ள சிறிய திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்யுதா, நிதி வசதி மிக்க கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதியைப் பெற்று இத்திட்டம் தொடங்கப்பட்டது.



2006 ஆகஸ்ட் 18]

### தங்க ரதத் திருப்பணி

கீழ்க்காணும் 25 திருக்கோயில்களின் தங்க இரதங்கள் செய்யப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன:

1. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி.
2. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை.
3. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.
4. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம்.
5. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மருதமலை.
6. அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலை.
7. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், வைத்தீஸ்வரன் கோயில்.
8. அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில், சங்கரன் கோயில்.
9. அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்.
10. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.
11. அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில், மயிலாப்பூர்.
12. அருள்மிகு கந்தசாமி திருக்கோயில், பூங்கா நகர், சென்னை.
13. அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி.
14. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், மாங்காடு.
15. அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம்.
16. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி.
17. அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், ரத்னகிரி.
18. அருள்மிகு விநாயகர் திருக்கோயில், ஈச்சனாரி.
19. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சிவன்மலை.

[2006 ஆகஸ்ட் 18

20. அருள்மிகு தெய்வநாயகப் பெருமாள் திருக்கோயில், நாங்குனேரி.

21. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி.

22. அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை.

23. அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர்.

24. அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர்.

25. அருள்மிகு வேலாயுத சுவாமி திருக்கோயில், திண்டல்மலை, ஈரோடு.

கீழ்க்காணும் திருக்கோயில்களில் தங்க இரதத் திருப்பணி நடைபெற்று வருகிறது:

1. அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், கோவை.

2. அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல்.

3. அருள்மிகு முண்டகக்கண்ணியம்மன், திருக்கோயில், மயிலாப்பூர்.

4. அருள்மிகு நரசிம்ம சுவாமி திருக்கோயில் உபகோயில் அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில், நாமக்கல்.

5. அருள்மிகு ஜம்புகேஸ்வரர் மற்றும் அகிலாண்டேஸ்வரி திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சி.

6. அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயில், சேலம்.

7. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்.

8. அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், திருச்செங்கோடு.

9. அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில், தேக்கப்பட்டி.

10. அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை.



2006 ஆகஸ்ட் 18]

**திருத்தேர் திருப்பணி**

நின்றுபோன தேர்த் திருவிழாக்களை நடத்தவும், பழுதடைந்த திருத்தேர்களைப் பழுதுபார்த்துப் பாதுகாக்கவும், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. திருக்கோயில்களுக்குச் சொந்தமான மரத் திருத்தேர்களில் சுமார் 309 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளன. இவற்றுள் முதற்கட்டமாக, 16 தேர்களை அந்தந்தத் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ. 83.85 இலட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்துச் செப்பனிடவும், நிதி வசதி பெற்ற திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று ரூ. 10.84 கோடி மதிப்பீட்டில் 225 தேர்களைப் புதுப்பிக்கவும் அரசு ஆணையிட்டுள்ளது.

**திருக்குளங்கள் திருப்பணி**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் உள்ள 1552 திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 2235 திருக்குளங்கள் உள்ளன. இத்திருக்குளங்களைச் சீரமைத்துத் திருப்பணி செய்து தெப்பத் திருவிழா நடத்துவதற்கு ஏதுவாகவும், மழைநீரைச் சேகரித்து வறட்சியை எதிர்க்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1665 திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. எஞ்சியுள்ள திருக்குளங்களை எதிர்வரும் ஆண்டுகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலமாகவும், மாவட்ட வளர்ச்சி நிதியை ஒதுக்கீடு செய்வதன்மூலமும் செப்பனிட நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**ஒருகால பூஜைத் திட்டம்**

ஒருகால பூஜையைக்கூட செய்திட இயலாது நிதி வசதியற்ற திருக்கோயில்களில், ஒருகால பூஜை நடைபெறுவதற்கு உதவும் வகையில், இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பொதுமக்களையும் ஈடுபடுத்தும் நோக்கில், பொதுமக்கள் நன்கொடையாகத் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ. 2,500 அளித்தால், நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 20,000, திருக்கோயில் திருப்பணி மற்றும அறப்பணிகள் நிதியிலிருந்து ரூ. 1,300, ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 1200 வழங்கிட அத்திருக்கோயிலின் பெயரில் மொத்தம் ரூ. 25,000 நிரந்தர முதலீடு செய்யப்படுகிறது. இம்முதலீட்டின்மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து குறிப்பிட்ட திருக்கோயிலில் ஒருகால பூஜை நாள்தோறும் நடைபெற வழிவகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 10,447 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

[2006 ஆகஸ்ட் 18

## திருக்கோயில்களில் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள்

பெருவாரியான பக்தர்கள் வருகைபுரியும் திருக்கோயில்களில் தங்குவதற்குத் தேவையான குடில்கள், அறைகள் மற்றும் பொருள்களைப் பாதுகாத்திட, பாதுகாப்பு வசதிகள் ஆகியவற்றைச் செய்துதரவும், இருக்கும் வசதிகளை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு நவீனக் கழிப்பறை வசதிகள் ஆண்கள்/பெண்களுக்கெனத் தனித் தனியாக ஏற்படுத்தித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் கழிப்பிட வசதியும், காலணிப் பாதுகாப்பு வசதியும் இலவசமாக்கப்பட்டுள்ளது.

## உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் பாதுகாப்பு

திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைப் பாதுகாத்திட, கள்வர் எச்சரிக்கை மணி, கோள்சொல்லிக் கடிகாரம், தொட்டிப் பூட்டுகள் மற்றும் இரும்புக் கதவுகள் நிறுவுதல், இரவுக் காவலர்கள் நியமனம், திருக்கோயில்கள் பாதுகாப்புப் படை நியமனம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விலை மதிக்க இயலாத உலோகத் திருமேனிகளைப் பாதுகாக்க, கீழ்க்காணும் இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, பாதுகாப்பு வசதிகள் குறைவாக உள்ள திருக்கோயில்களில் உள்ள உலோகத் திருமேனிகள், இப்பாதுகாப்பு மையங்களில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. திருவிழாக் காலங்களில் இவற்றை எடுத்துச்சென்று, விழா முடிந்ததும் மீண்டும் பாதுகாப்பு மையத்தில் ஒப்படைப்பு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு மையங்களில் உள்ள உலோகத் திருமேனிகளுக்கு நாள்தோறும் பூஜைகள் செய்யப்பட்டு வருகின்றன.



2006 ஆகஸ்ட் 18]

## செயல்பாட்டில் உள்ள பாதுகாப்பு மையங்கள்

1. திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம், (அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்)
2. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.
3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.
4. அருள்மிகு காந்திமதி உடனுறை நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.
5. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம்.

கும்பகோணம், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கடலூர் ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு விரைவில் செயல்பட உள்ளன.

கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்புக் கட்டடங்கள் முடிவுறும்தறுவாயில் உள்ளன. திருநெல்வேலியில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம் இவ்வாண்டில் கட்டி முடிக்கப்படும்.

## கருணை இல்லங்கள்

ஆதரவற்ற சிறுவர், சிறுமியரைப் பேணுவதற்குத் திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 31 திருக்கோயில்களில், 34 கருணை இல்லங்கள் செயல்பாட்டில் உள்ளன. இவற்றில் 668 சிறுவர்களும், 330 சிறுமியர்களும், ஆக மொத்தம் 998 சிறார்கள் பயன்பெற்று வருகின்றனர். இக்கருணை இல்லங்களுக்கான செலவினைத் திருக்கோயில் நிருவாகங்களே ஏற்று வந்தன. 1998-1999 ஆம் ஆண்டு முதல், கருணை இல்லச் செலவில் சிறார் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.467 வீதம் (உணவு ரூ.200 நிருவாகச் செலவு ரூ.267) அரசு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## திருக்கோயில்கள் சார்பாக நடத்தப்படும் கல்வி மற்றும் பிற நிறுவனங்கள்

தமிழகத் திருக்கோயில்களில் ஆன்மீகப் பணிகள் வளர்ச்சி பெற்றுவரும் அதே நேரத்தில், ஏழை எளிய நடுத்தர மக்களின் நலன்களுக்காகச் சமூகப் பணிகளிலும், இத்துறையைச் சார்ந்த

[2006 ஆகஸ்ட் 18

திருக்கோயில்கள் தம்மை ஈடுபடுத்தி வருகின்றன. கல்வி, மருத்துவம், இசை, ஊனமுற்றோர் மேம்பாடு, முதியோர் நலன் ஆகியவற்றிற்காகப் பல அரிய பணிகளைத் திருக்கோயில்கள் ஆற்றி வருகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | கல்லூரிகள் | 5 |
| 2 | தொழில்நுட்பப் பயிலகங்கள் | 1 |
| 3 | மேல்நிலைப் பள்ளிகள் | 12 |
| 4 | உயர்நிலைப் பள்ளிகள் | 10 |
| 5 | நடுநிலைப் பள்ளிகள் | 3 |
| 6 | ஆரம்பப் பள்ளிகள் | 10 |
| 7 | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 8 | நாதசுரம் மற்றும் தவில் பள்ளிகள் | 3 |
| 9 | வேத ஆகமப் பாடசாலைகள் | 2 |
| 10 | தேவாரப் பாடசாலைகள் | 5 |
| 11 | திவ்வியப் பிரபந்தப் பாடசாலை | 1 |
| 12 | காது கேளாதோர் – பேச இயலாதோர் பள்ளி | 1 |
| 13 | சித்த வைத்தியசாலைகள் | 8 |
| 14 | ஆங்கில மருத்துவமனைகள் | 2 |
| 15 | கருணை இல்லங்கள் | 34 |
| 16 | முதியோர் இல்லங்கள் | 2 |
| | மொத்த நிறுவனங்கள் | 100 |

**தமிழில் வழிபாடு**

ஆழ்வார்களும், நாயன்மார்களும் தாம் சென்று வழிபட்ட திருத்தலங்களில் தமிழ் மொழியிலேயே பாடல்களைப் பாடித் தமிழில் அர்ச்சனை புரிந்து இறைவனை வழிபட்டுள்ளனர். தமிழில் இறைவனை வழிபடுவதே அன்பிற்கு இயைந்த வழிபாட்டு நெறி என்பதைத் தமிழ்



2006 ஆகஸ்ட் 18]

மக்கள் உணர்ந்து, தெளிந்து, தாய் மொழியின் வாயிலாக இறைவனை வழிபட மிகவும் ஆர்வம்காட்டி வருகின்றனர். தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தமிழ் மக்கள் தம் தாய் மொழியாம் தமிழிலேயே இறைவனுக்கு வழிபாடு நிகழ்த்துவது இயற்கை நெறிக்கு உகந்த ஒன்றாகும். பொதுமக்களின் விருப்பத்திற்கேற்பத் திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை நெறிப்படுத்துவதற்கு 1997 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு, கீழ்க்காணும் தமிழ் அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டன. அதன் விவரம் பின்வருமாறு:

1. அருள்மிகு விநாயகர் போற்றி
2. அருள்மிகு முருகவேள் போற்றி
3. அருள்மிகு சிவன் போற்றி
4. அருள்மிகு திருமால் போற்றி
5. அருள்மிகு உமையம்மை போற்றி
6. அருள்மிகு நடராஜர் போற்றி
7. அருள்மிகு தென்முகக் கடவுள் போற்றி
8. அருள்மிகு கோதண்டராமர் போற்றி
9. அருள்மிகு தாயார் போற்றி
10. அருள்மிகு துர்க்கையம்மன் போற்றி
11. அருள்மிகு காளியம்மன் போற்றி
12. அருள்மிகு மாரியம்மன் போற்றி
13. அருள்மிகு அனுமன் போற்றி
14. அருள்மிகு நவகோள்கள் போற்றி

(1–14) — 108 போற்றி

15. அருள்மிகு விநாயகர் போற்றி — 1008 போற்றி

மேற்கண்ட நூல்கள் திருக்கோயில்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டன. இப்போற்றி நூல்களைப் பொதுமக்களுக்குக் குறைந்த விலைக்கு அளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த 108 போற்றி மற்றும் 1008 போற்றி நூல்களை மீண்டும் அச்சிட்டு வெளியிடவும், திருக்கோயில்களில் தமிழ் மக்களின் விருப்பத்திற்கேற்பத் தமிழ் அர்ச்சனை நடைபெறுவதை ஊக்கப்படுத்தி உறுதி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 18

**அருளாளர்கள் விழா**

**(1) சேக்கிழார் விழா**

தெய்வச் சேக்கிழார் விழா, அவர் பிறந்த இடமான சென்னை குன்றத்தூரில் அரசு விழாவாக அறநிலையத் துறை சார்பில் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூ. 15,00,000/- வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, இவ்வைப்பு நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையைக் கொண்டு சேக்கிழார் விழா ஆண்டுதோறும் சேக்கிழார் பிறந்த நாளன்று நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழாவினைக் குன்றத்தூரில் மட்டுமின்றி, சென்னையில் ஆண்டுதோறும் விமரிசையாக நடத்திட அரசு ஆணையிட்டுள்ளது.

**(2) திருஞானசம்பந்தர் இசை விழா**

சமயக் குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் நினைவைப் போற்றும்வகையில், திருஞானசம்பந்தர் இசை விழா, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்று வருகிறது. இவ்விழாவிற்கான செலவுத் தொகை, ஆணையர் பொதுநல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

**(3) ஔவை விழா**

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாப்பட்டினம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஔவையார் மற்றும் விசுவநாதசுவாமி திருக்கோயிலில் ஔவை விழா ஆண்டுதோறும் சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது.

**(4) தாயுமானவர் விழா**

பக்தி நெறியில் தத்துவங்களுக்கு முதலிடம் தந்து பாடிய தாயுமான அடிகள், மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயிலில் உள்ள தட்சிணாமூர்த்தியை வணங்கித் திரும்பும்போது, திருமூலர் மரபில் வந்த மௌன குருவைக் கண்டு அவரால் ஈர்க்கப் பெற்றார். நல்ல தமிழ் ஞானப் பாடல்களைத் தமிழ் உலகிற்கு அளித்த தாயுமான அடிகளுக்குத் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் தாயுமானவர் விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டு வருகிறது.



2006 ஆகஸ்ட் 18]

**தல வரலாறு மற்றும் தல புராணம்**

திருக்கோயில்களின் வரலாறு, புராணச் சிறப்பு, கட்டடக் கலை, கல்வெட்டுச் செய்திகள், வழிபாட்டுச் சிறப்புகள் ஆகியவற்றை மக்கள் அறிந்திட ஏதுவாகத் திருக்கோயில்களில் தல வரலாறு மற்றும் தல புராணங்கள் வெளியிடப்படுகின்றன. வரலாறு மற்றும் புராணச் சிறப்புகள் இல்லாத திருக்கோயில்களுக்கு அதன் வழிபாட்டுச் சிறப்புகளை அறிய ஏதுவாகக் கையேடுகள் அச்சிட்டு வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழில் ஆகம நூல்**

திருக்கோயில் தொடர்பான ஆகம விதிகள் வடமொழியில் உள்ளதைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடத் திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக உத்தரகாமிக ஆகமம் என்ற நூல், 1999 ஆம் ஆண்டில் தமிழில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலய நிர்மாண பிம்பலட்சண சிற்பநூல், குமார தந்திரம் ஆகியன தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், திருக்கோயில் தொடர்பாக வடமொழியில் உள்ள நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அன்னதானத் திட்டம்**

அன்னதானத் திட்டம் 23-3-2002 அன்று 63 திருக்கோயில்களில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் பின்பு படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, தற்போது இத்திட்டத்தின்கீழ் 360 திருக்கோயில்களில் பக்தர்களுக்கு மதிய வேளையில் நாள்தோறும் உணவு வழங்கப்படுகிறது.

அன்னதானத் திட்டத்திற்கென ஆணையர் பதவிப் பெயரில் வங்கிக் கணக்கு ஒன்று தொடங்கப்பட்டு, ரூ.3.27 கோடி நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென நிதி வசதிமிக்க திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.21.83 கோடி பெறப்பட்டு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வைப்புத் தொகையிலிருந்து கிடைத்த வட்டித் தொகை ரூ.6.16 கோடியிலிருந்து பற்றாக்குறையுள்ள திருக்கோயில்களுக்கு ரூ.2.78 கோடி வழங்கப்பட்டது.

[2006 ஆகஸ்ட் 18

**சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து**

விடுதலைத் திருநாள் மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் நிதி வசதியுடைய திருக்கோயில்களில் ஆண்டுதோறும் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத்தாழ்வின்றிப் பங்குபெறும் வகையில் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப்பட்டு வருகின்றது.

**புத்தொளிப் பயிற்சி**

திருக்கோயில்களில் நாள்தோறும் நடைபெறும் வழிபாடுகளும், சிறப்பு வழிபாடுகளும், திருவிழாக்களும் நம் முன்னோர்கள் அமைத்துக் கொடுத்துள்ள நெறிமுறைகளின்படி அமைந்துள்ளன. இவற்றை நம் இந்து சமய ஆகம நூல்களும், சாத்திர நூல்களும் விவரிக்கின்றன.

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், உள்துறைப் பணியாளர்கள், செயல் அலுவலர்கள், சார்நிலை அலுவலர்கள், ஓதுவார்கள் ஆகியோர் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்ய, குறுகியகாலப் புத்தொளிப் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்துக்கு புத்தார்வம் கொடுத்து, சைவ சமயத்திலும், வைணவ சமயத்திலும் தலைசிறந்து விளங்கும் தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்ச் சான்றோர்களைக் கொண்டு இக்குறுகிய காலப் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் கீழ்க்காணும் தலைப்புகளில் நடத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:

1. சைவ ஆகமங்கள்
2. சிவாலயங்களில் திருவிழாக்கள்
3. சைவ சமய வரலாறு
4. சைவ சித்தாந்தம்
5. பன்னிரு திருமுறை
6. சாக்தம்
7. கௌமாரம்
8. வைணவ ஆகமங்கள், திருவிழாக்கள்
9. வைணவ சமய வரலாறு
10. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் அமைப்பும், சிறப்பும்
11. தலபுராணச் சிறப்பு
12. திருக்கோயில் அமைப்பும், வழிபாட்டு முறையும்



2006 ஆகஸ்ட் 18]

**திருக்கோயில்களில் நாகசுர இசைப் பணியாளர்கள் நியமனம்**

பாடல்பெற்ற, மங்களா சாசனம் செய்யப்பெற்ற, சரித்திரப் புகழ் வாய்ந்த, பழமையான திருக்கோயில்களில் காலப் பூசைகள் மற்றும் திருவிழாக்களின்போது, "மங்கள இசை" எனச் சிறப்பிக்கப்படும் நாகசுர இசை இசைக்கப்படுவது மரபு. ஆனால், பல திருக்கோயில்களில் நிதி வசதி இல்லாத காரணத்தினால், நாகசுர இசை முழங்கவில்லை. எனவே நாகசுரம், தவில் மற்றும் தாள இசைக் கலைஞர்களை நியமனம் செய்து, முறையே ரூ. 1,500/-, ரூ. 1,000/-, ரூ. 750/- வீதம் மாத ஊதியம் துறைமூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தனியாக ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு அதில் கிடைக்கும் வட்டித் தொகைமூலம் நாகசுர இசைக் கலைஞர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் பணியாளர்கள் நலன்**

தமிழ்நாடு முழுவதும் உள்ள இந்து சமய அறநிலையங்களில் பணியாளர்கள் பல்வேறு பதவித் தாங்களில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு ரொக்கம் மற்றும் தானியமாகச் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியாளர்களுக்குக் கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. குடும்ப நல நிதி
2. சிறப்பு வருங்கால வைப்பு நிதி மற்றும் பணிக்கொடை
3. ஆலய ஊழியர் நல நிதி
4. ஓய்வூதியம் (அர்ச்சகர், ஓதுவார், இசைக்கலைஞர் & வேதபாராயணர் மட்டும்)
5. சிறப்பூதியம் வழங்குதல்
6. திருமண முன்பணம்
7. வாகன முன்பணம்
8. மருத்துவப்படி
9. சீருடை சலவைப்படி
10. பண்டிகை முன்பணம்

11. விடுப்புச் சலுகை
12. வீட்டு வாடகைப்படி
13. தட்டச்சர்களுக்குச் சிறப்பூதியம்
14. தொகுப்பூதியப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு
15. நகர ஈட்டுப்படி
16. தெரிவுநிலை மற்றும் சிறப்பு நிலை ஊதிய நிர்ணயம்
17. கருணை அடிப்படையில் பணி நியமனம்
18. அகவிலைப்படி உயர்வு

**குடும்ப நல நிதி:**

திருக்கோயில்களில் பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளரது குடும்பத்தாருக்கு உதவும்பொருட்டு, இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்படி, சட்டமுறை வாரிசுதாரருக்கு ரூ. 75,000/- உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கென, உபரி நிதி மிக்க திருக்கோயில்களிலிருந்து, ஐந்து கோடி ரூபாய் மைய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்மைய நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு, இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்:**

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் வருமானம் வரக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென, திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் எட்டு இலட்சம் மைய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பணியாளர் ஓய்வு பெறும்போது அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை, திருக்கோயில்மூலம் வட்டியுடன் வழங்கப்படுவதுடன், துறைமூலம் ரூ. 1,000/- பணிக்கொடை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.





**ஆலய ஊழியர் நல நிதி:**

ஆண்டு வருமானம் ரூ. 40,000/-க்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில், மாத ஊதியம் ரூ.400/-க்கும் குறைவாகப் பெறும் பணியாளர்களுக்குச் சம்பள நிலுவை ஏற்படின், அப்பணியாளர்களுக்குத் துறைமூலம் சம்பள நிலுவைத் தொகை வழங்கிட ஆலய ஊழியர் நல நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென உபரி நிதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஐந்து கோடி மைய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு, இத்திட்டம் ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், 31-12-2004 வரையான சம்பளப் பாக்கி நிலுவைகள் வழங்கப்பட்டுள்ளன.

**கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு:**

திருக்கோயில்களில் பணியாற்றும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளர்களின் சட்ட பூர்வ வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் உதவிடும்வகையில் திருக்கோயில்களில் காலியிடம் ஏற்படும்போது வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் செயற்பாட்டில் உள்ளது.

**ஓய்வூதியத் திட்டங்கள்:**

**அர்ச்சகர், ஓதுவார், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்வியப் பிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம்**

திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வு பெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்வியப் பிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்கள் போன்றோருக்கு அரசு நிதியிலிருந்து இத்துறைமூலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 750/- ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மொத்தம் ஆயிரம் பேருக்கு அனுமதி உள்ள நிலையில், இதுவரை 767 பேருக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 18

**கிராமப்புறப் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்:**

இத்துறையின் நேரடி ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்களில், 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை அடைந்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு, நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.750/- வீதம் 4,000 கிராமப் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 2,621 கிராமக் கோயில் பூசாரிகள் அரசு நிதியிலிருந்து பயன்பெற்று வருகின்றனர்.

**திருக்கோயிலில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம்:**

திருக்கோயில் பணியாளர்களுக்குப் பங்குத் தொகை வைப்பு நிதித் திட்டம் (Contributory Provident Fund) ஏற்படுத்தப்பட்டு, ஆண்டு வருமானம் ரூ. 10,000/-த்திற்கு மேல் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஊதியத்தில் 12% பிடித்தம் செய்து, பிடித்தம் செய்த தொகைக்கு இணையான தொகையினைத் திருக்கோயில் நிதியிலிருந்து இத்திட்டத்திற்கென வங்கிக் கணக்கில் வரவு வைத்து, பணியாளர் ஓய்வு பெறும் தேதியில் இத்தொகை வட்டியுடன் சேர்த்து வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, இத்திட்டத்தில் பயனடைந்த பணியாளர்களுக்கும், நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் தகுதியுள்ள பணியாளர்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் முழுநேர/ நிரந்தரப் பணியாளர்களுக்கும், மத்திய அரசின் திட்டமான பணியாளர் சேமநலநிதித் திட்டத்தைச் (Employees Provident Fund) செயற்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தகுதியுள்ள திருக்கோயில் பணியாளர்களைப் பணியாளர் சேமநலநிதித் திட்டத்தில் (EPF) சேர்த்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும்போது, ஓய்வூதியம் பெற்றுப் பயனடையும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் பணிபுரியும் முழுநேர/நிரந்தரப் பணியாளர்களில் இ.பி.எப். திட்டத்திற்குச் சந்தா செலுத்த இயலாத நிதி வசதி குறைந்த நிலையில் உள்ள திருக்கோயில்களின் பணியாளர்கள், இ.பி.எப். சந்தா செலுத்துபவராக இருந்தும் இ.பி.எப். திட்டத்தில் சேர்ந்தபின், 10 ஆண்டுகளுக்கும் குறைவாகப் பணிக்காலம் உள்ள பணியாளர்கள் ஆகியோருக்குத் "துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டம் என்ற ஒரு திட்டம்" (Departmental Pension Scheme) வகுக்கப்பட்டு, 1-1-2006 முதல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் திருக்கோயில் பணியாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ. 750/- வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 18]

**பகுதி-II திட்டங்கள்**

நடப்பு நிதியாண்டில் 2006-2007-ல் பகுதி-II திட்டத்தின்கீழ் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்குப் பின்வருமாறு திட்டப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| வரிசை எண் | திட்டப் பணி விவரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தஞ்சாவூர் இணை ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டி முடித்தல் மற்றும் கூடுதல் கட்டடம் கட்டுதல். | 35.00 |
| 2. | ஆணையர் அலுவலகம், 8 இணை ஆணையர் அலுவலகங்கள் மற்றும் மண்டல தணிக்கை அலுவலகம் ஆகியவற்றிற்கு 19 புதிய கணினிகள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குதல். | 13.30 |
| 3. | ஆணையர் அலுவலகம், 9 இணை ஆணையர் அலுவலகங்கள் மற்றும் 18 உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு 28 புதிய நிகரி மற்றும் உதிரி பாகங்கள் வாங்குதல். | 4.00 |
| 4. | ஆணையர் அலுவலகம் மற்றும் இணை ஆணையர் அலுவலகங்கள், உதவி ஆணையர் அலுவலகங்கள் மற்றும் மண்டல தணிக்கை அலுவலகங்களுக்கு 30 புதிய ஜெராக்ஸ் இயந்திரம் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குதல். | 18.00 |
| 5. | ஆணையர் அலுவலகத்திற்குப் புதிய மின் உற்பத்தி சாதனம் (ஜெனரேட்டர்) வாங்கிப் பொருத்துதல். | 16.50 |
| 6. | ஆணையர் அலுவலகத்திற்குப் புதிய குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம் வாங்கிப் பொருத்துதல். | 1.10 |
| 7. | இத்துறையின் நிருவாகத்திற்குத் தொடர்புடைய மதம், சட்டம் மற்றும் பிற பொருட்கள் பற்றிய இதழ்கள்/ புத்தகங்கள், நாளேடுகள், குறுந்தகடுகள்/வெளியீடுகள் முதலியவற்றை ஆணையர் அலுவலகப் பயன்பாட்டிற்கும் மற்றும் இதர திருக்கோயில்கள் மற்றும் சேவார்த்திகள் பயன்பாட்டிற்கும் வாங்குதல். | 3.00 |
| | மொத்தம் | 90.90 |

**முடிவுரை:**

மேலே விவரித்துள்ளபடி பல்வேறு சீரிய செயற்திட்டங்களை வகுத்து, அருளாளர்களும், ஆன்றோர்களும் காட்டிய நல்வழியில் தொடர்ந்து, வீறு நடைபோட்டு, எதிர்வரும் காலத்தில் எல்லாத் திருப்பணிகளும், திருக்கோயில்களின் செயல்பாடுகளும் சிறப்புற அமையப்பெறும் வகையில் செயற்பட, அறநிலையத் துறை உறுதிபூண்டுள்ளது.



## இணைப்பு III

*(478 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 47– தமிழ் வளர்ச்சி – பண்பாடு மற்றும் அறநிலையத் துறை– இந்து சமய அறநிலையத் துறை

## அறிவிப்புகள்

1. பழனிமலை அடிவாரத்திலிருந்து மலைமேல் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்குச் செல்ல தற்போது உள்ள ஒரு கம்பிவட ஊர்தி திருவிழாக் காலங்களில் போதுமானதாக இல்லாததால், பக்தர்கள் நீண்டநேரம் காத்திருக்க நேர்கிறது. இதனைத் தவிர்க்க மேலும் ஒரு கம்பிவட ஊர்தி ரூ.6 கோடி செலவில் அமைக்கப்படும்.

2. இத்திருக்கோயிலில் தற்போது இயங்கிவரும் கம்பிவட ஊர்தியில் பயணியர் அமர்ந்து செல்லும் பெட்டிகள் பழுதடைந்துவிட்டமையால், அவை சுமார் ரூ. 3.5 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

3. பழனி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக பழனி நகரில் உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான தங்கும் விடுதிகளும், மருத்துவமனையும் ரூ.1 கோடி செலவில் சீரமைக்கப்படும்.

4. பழனி மலைக் கோயிலுக்கு யானைப் பாதை வழியாகச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக நிழல் மண்டபத் தொடரும், கழிப்பறை வசதியும் அமைக்கப்படும்.

5. பழனி என்றாலே பஞ்சாமிர்தம்தான் நினைவுக்கு வரும். இந்த பஞ்சாமிர்தத்தை மிக்க சுகாதாரமான முறையில் தயார் செய்து, நவீன தானியங்கி இயந்திரம்மூலம் டப்பாக்களில் அடைத்து, பக்தர்களுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

6. பக்தர்களுக்குச் சுத்தமான விபூதியும், குங்குமமும் இத்திருக்கோயிலிலேயே தரமாகத் தயாரித்து அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7. பக்தர்களின் வசதிக்காக இடும்பன்மலையில் ரூ.12 இலட்சம் செலவில் நான்கு நிழல் மண்டபங்கள் அமைக்கப்படும்.

8. பழனி திருக்கோயில் நிர்வாகத்தால் நடத்தப்படும் ஆடவர் கல்லூரி, மகளிர் கல்லூரி, பல்தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பள்ளிகள் ஆகியவற்றிற்குத் தேவையான கலைக்கூடம், நூலகங்கள், ஆய்வகங்கள், ஆய்வக உபகரணங்கள், வகுப்பறைகள், கணினிகள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் சுமார் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைத்துத் தரப்படும்.

9. மலைமீது அமைந்துள்ள சோளிங்கர் அருள்மிகு இலட்சுமி நாசிம்ம சுவாமி திருக்கோயிலுக்கு பக்தர்கள் சென்றுவர, மலை அடிவாரத்திலிருந்து சுமார் ரூ.5 கோடி செலவில் கம்பிவட ஊர்தி அமைக்கப்படும்.

10. பெரம்பலூர் அருகே உள்ள சிறுவாச்சூர் அருள்மிகு மதுரகாளியம்மன் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக ரூ.26 இலட்சம் மதிப்பீட்டில் ஓர் ஓய்வு இல்லமும், ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திருமண மண்டபமும் கட்டப்படும்.

11. நாமக்கல் நகரில் அமைந்துள்ள அருள்மிகு நாசிம்ம சுவாமி மற்றும் ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக சுமார் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தங்கும் விடுதி கட்டப்படும்.



12. திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காகக் கட்டப்பட்டுள்ள அறைகள், குடில்கள் முதலியன மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளன. இவற்றை ரூ.1.48 கோடி மதிப்பீட்டில் பழுதுபார்த்து, நவீன வசதிகளுடன் முழுமையாகப் புதுப்பிக்கப்படும்.

13. இத்திருக்கோயிலைச் சுற்றியுள்ள கிரிப்பிரகார தளம் பக்தர்களின் வசதியைக் கருத்தில்கொண்டு, ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் கருங்கல் தளமாக மாற்றி அமைக்கப்படும்.

14. திருவில்லிப்புத்தூர் அருள்மிகு நாச்சியார் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருப்பாற்கடல் பகுதியில் உள்ள சுமார் 9 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் பக்தர்களின் வசதிக்காகவும், அப்பகுதிவாழ் மக்களின் நன்மைக்காகவும், பத்தாயிரம் சதுர அடி பரப்பளவுள்ள ஒரு திருமண மண்டபம் சுமார் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

15. திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் பயன்பாட்டுக்காக அங்கு தங்கும் விடுதிகள், குடில்கள், உணவகம் போன்ற கூடுதல் வசதிகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

16. திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் ஆண்டுக்கு இரண்டு முறை மட்டுமே அருள்மிகு நடராஜர் எழுந்தருளுவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இதர நாட்களில் பயன்பாடற்ற நிலையில் உள்ள இவ்வாயிரங்கால் மண்டபத்தை நல்ல முறையில் பயன்படுத்தும் வகையில், அப்பகுதியில் உள்ள திருக்கோயில்களின் பயன்பாடற்ற அருங்கலைப் பொருட்களைக் கொண்ட அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும்.

17. திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் நிர்வாகத்தில் உள்ள இராமானுஜர் திருமடத்திற்கென, திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தின்மூலம் திருமலையில் 5,000 சதுர அடியில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்விடத்தில் சுமார் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டி, அதில் இராமானுஜர் திருமடமும், தமிழகத் திருக்கோயில்களின் தகவல் அறிய "தகவல் மையமும்" அமைக்கப்படும்.

18. திருவரங்கத்தில் திருக்கோயில் பணியாளர்களுக்கென ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியாளர் குடியிருப்பு கட்டப்படும்.

[2006 ஆகஸ்ட் 18

19. திருவரங்கத்தில் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்கென சுமார் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தங்கும் விடுதி அமைக்கப்படும்.

20. சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குப் பெருந்திரளாக பக்தர்கள் வருவதைக் கருத்தில்கொண்டு, சுமார் ரூ.10 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். திருக்கோயில் பிரகாரத்தை விரிவாக்கி ஒரே மண்டபமாக அமைத்தல், பல்வேறு வசதிகள் அடங்கிய பேருந்து நிலையம் அமைத்தல், ஓய்வு இல்லம், தங்கும் குடில்கள் கட்டுதல், குடிநீர் வசதி, குளியல் மற்றும் கழிப்பறை வசதிகள் போன்றவை இந்தத் திட்டத்தில் அடங்கும்.

21. பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக ரூ.1.1 கோடி மதிப்பீட்டில் வெளிப்பிரகார மண்டபம் அமைக்கப்படும்.

22. கோயம்புத்தூர் நகரில் உள்ள அருள்மிகு கோனியம்மன் திருக்கோயிலில் ரூ.94 இலட்சம் மதிப்பீட்டில் 7 நிலை இராஜகோபுரம் அமைக்கப்படும்.

23. கோயம்புத்தூர் நகரில் உள்ள ராம் நகர், அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலில் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் 5 நிலை இராஜகோபுரம் அமைக்கப்படும்.

24. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், அருள்மிகு திருத்தளிநாத சுவாமி திருக்கோயிலிலுள்ள தேர்கள் ரூ.12.6 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்த்துச் சீரமைக்கப்படும்.

25. குன்றக்குடி, அருள்மிகு சண்முகநாதர் திருக்கோயிலிலுள்ள தேர்கள் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்த்து சீரமைக்கப்படும்.

26. பிரான்மலை, அருள்மிகு மங்கைபாகநாத சுவாமி திருக்கோயிலிலுள்ள தேர்கள் ரூ.12.48 இலட்சம் மதிப்பீட்டில் பழுதுபார்த்துச் சீரமைக்கப்படும்.

27. தாயமங்கலம், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலின் நுழைவுவாயிலில் சுமார் ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் நிழல் மண்டபம் அமைக்கப்படும்.



[2006 ஆகஸ்ட் 18]

28. திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை ஊக்குவிக்க 1996–2001 ஆம் ஆண்டுகளில் தமிழில் போற்றி நூல்கள் இத்துறையால் அச்சிடப்பட்டு, அர்ச்சகர்களின் பயன்பாட்டுக்காக இலவசமாக வழங்கப்பட்டன. அப்போற்றி நூல்களை மீண்டும் அச்சிட்டு அனைத்துத் திருக்கோயில்களுக்கும், திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

29. தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தரும் முக்கிய வழிபாட்டு மற்றும் சுற்றுலாத் தலங்களான பழனி மற்றும் கொடைக்கானல் நகரங்களிடையே பழனி திருக்கோயில் நிர்வாகத்தால் கம்பிவட ஊர்தி (Rope Car) திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட ஆய்வு மேற்கொள்ளப்படும்.

30. தமிழகத்தில் மொத்தம் 22 நிர்வாக உதவி ஆணையர்கள் பணியிடங்கள் உள்ளன. ஏறத்தாழ ஒவ்வொரு மாவட்டமும் ஓர் உதவி ஆணையர் பொறுப்பில் வரும் வகையில், திருவாரூர், திண்டுக்கல், கரூர், நாமக்கல், திருவள்ளூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உதவி ஆணையர் பணியிடம் ஏற்படுத்தப்படும்.

31. வேலூர் அருகே உள்ள விரிஞ்சிபுரம், அருள்மிகு மார்க்கபந்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சுமார் ரூ.65.7 இலட்சம் மதிப்பீட்டில் 5 நிலை இராஜகோபுரம் நன்கொடையாளர்கள்மூலம் கட்டப்படும்.

32. அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் நிர்வாகத்தின்கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டப்படும்.

33. இராமேஸ்வரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் புதிதாக தெற்கு மற்றும் வடக்கு இராஜகோபுரங்களை நன்கொடையாளர்மூலம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, பணி நிறைவேறி; அதற்குமேல் கடந்த கல்காரம்வரை பணி நடைபெறாமல் உள்ளது. நின்றுபோன மூன்றாண்டுகளாகப் பணி இராஜகோபுரத் திருப்பணியை விரைவில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

34. பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் பிரகார மண்டபம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்படும்.

[2006 ஆகஸ்ட் 18

35. மேட்டுப்பாளையம் அருகே உள்ள தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் ரூ.20.7 இலட்சம் மதிப்பீட்டில் பிரகார மண்டபம் அமைக்கப்படும்.

36. சென்னை, அரும்பாக்கம், அருள்மிகு சத்தியவரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்குச் சுமார் ரூ.22.5 இலட்சம் மதிப்பீட்டில் 3 நிலை இராஜகோபுரம் நன்கொடையாளர்கள்மூலம் அமைக்கப்படும்.

37. திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலில் 100 ஆண்டுகளுக்கு மேலாக அம்மன் தேர் இன்றி சப்பரத்தில் தேரோட்டம் நடைபெற்று வருகிறது. ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் அம்மன் திருத்தேர் புதியதாகச் செய்யப்படும்.

38. இந்த நிதியாண்டில், ஆதி திராவிடர்கள் வாழும் 2,000 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவை ஒவ்வொன்றிலும் ஒரு திருக்கோயிலை பழுதுபார்க்கவோ அல்லது புதிதாகக் கட்டுவதற்கோ ரூ.25,000/- நிதி உதவி அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

39. ஒருகால பூஜைகூட செய்ய இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களில் ஒருகால பூஜை நடைபெறுவதற்கு உதவும் வகையில், "ஒருகால பூஜை திட்டம்" செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 10,447 திருக்கோயில்கள் பயன் அடைந்து வருகின்றன. இந்த நிதியாண்டில் மேலும் 500 திருக்கோயில்களில் ஒரு கால பூஜைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

40. திருக்கோயில்களின் சார்பில் ஐந்து கலைக் கல்லூரிகளும், ஒரு பல்தொழில்நுட்ப, கல்லூரியும் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் கன்னியாகுமரியில் உள்ள தேவி குமரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், குற்றாலம் பராசக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், பூம்புகாரிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் நிதி வசதி இன்றி மிகவும் இடர்ப்பாட்டில் உள்ளன. சாதி, மத வேறுபாடின்றி மாணவ, மாணவியர் சேர்க்கப்பட்டு, கல்வி கற்பிக்கப்படும் இக்கல்லூரிகளில் போதிய ஆசிரியர்களை நியமித்தல், தேவையான [illegible], நூலகங்கள், ஆய்வுக்கூடங்கள் கட்டுதல் போன்றவற்றிற்கு அரசின் நிதி உதவியைப் பெறுவதற்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



[2006 ஆகஸ்ட் 18]

41. எதிர்வரும் 2007 ஆம் ஆண்டில், 500 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்கு விழா நடத்தப்படும். குறிப்பாக,

1. மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.
2. அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்.
3. திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்.
4. சங்கரன்கோயில், அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில்.
5. திருவலஞ்சுழி, அருள்மிகு சுவேத விநாயகர் மற்றும் கபர்தீஸ்வரர் திருக்கோயில்.
6. வடபழனி, அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில்.
7. சென்னை, இராயப்பேட்டை அருள்மிகு சித்திபுத்தி விநாயகர் மற்றும் சுந்தரேஸ்வரர் திருக்கோயில்.

ஆகிய முக்கியத் திருக்கோயில்களும் இதில் இடம் பெறுகின்றன.

227427

அரசு மைய அச்சகம், சென்னை — 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.